# பாலைச் செல்வி

புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.,



# பாலைச் செல்வி

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.
முன்னாள் தலைவர்
தமிழ்நாடு சட்டப் பேரவை

தமிழ்த்தாய் பதிப்பகம்
8, மத்துவர் தெரு
சிட்லபாக்கம், சென்னை-600 064.

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாலைச் செல்வி |
| ஆசிரியர் | : | புலவர் கா. கோவிந்தன், எம். ஏ. |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு : 2001 |
| நூலின் உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூலின் அளவு | : | கிரவுன் 1 × 8 |
| பயன்படுத்திய தாள் | : | 10.5 கிலோ வெள்ளைத் தாள் |
| பக்கங்கள் | : | 256 |
| அச்சுப் புள்ளிகள் | : | 11 புள்ளிகள் |
| ஒளி அச்சு | : | எல். கே. எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை–17. |
| அச்சகத்தார் | : | பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை. |
| நூல் கட்டு | : | சாதா அட்டை |
| விலை | : | ரூ. 65–00 |
| பதிப்பாளர் | : | தமிழ்த்தாய் பதிப்பகம் சென்னை - 64 |

---

**PAALAI SELVI : PULAVAR K. GOVINDAN, M. A. :**
**PRICE Rs. 65-00**

---

**PUBLISHER : TAMIZHTHAI PATHIPPAGAM, CHENNAI - 64**

# முன்னுரை

**ச**ங்க இலக்கியம் பயிலத் தொடங்கிய நேரம். அதற்குத் துணை நிற்கும் என்பதால், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடாகிய தமிழ்ப் பொழிலைத் தொடர்ந்து படித்து வந்தேன். அதில், தோரமங்கலம் ஆசிரியர் வரத நஞ்சையப் பிள்ளையவர்கள் கலித் தொகைப் பாடல்களுக்கு அளித்து வந்த விளக்கப்பேருரை, அறிவுக்கு விருந்தளிக்கும் ஆழம் உடையதாய் அமைந் திருந்தது.

அதைப் படிக்கும் பொழுது, கலித்தொகையின் ஒவ்வொரு பாட்டின் கருப் பொருளும் எந்தச் சூழ்நிலையினைச் சுட்டி நிற்கிறது என்பதை விளக்கும் விரிவான உரையை முன்னுரையாக அளித்துப் பாடற் பொருளை விரித்துரைத்தால், ஒவ்வொரு பாட்டின் பொருளையும் தெளிவாக உணர முடியும். ஒவ்வொரு பாட்டின் விளக்கமும் ஒரு சிறு கதைபோல் அமைந்து படிப்பவர்க்குச் சுவையூட்டுவதாயும் அமையும் என உணர்ந்தேன்.

அவ்வகையில் எழுதப்பட்ட கலிப்பாக்களில் பாலை சார்ந்த கலிப்பாக்கள் முப்பத்து ஐந்தின் விளக்கம் பாலைச் செல்வி என்னும் பெயர் தாங்கி வெளிவருகிறது. இதை வெளியிடும் பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

அன்பன்,

**கா. கோவிந்தன்**

# பொருளடக்கம்

பக்கம்


1. அடங்கிய யானை . . . . . . . . . . . . . . . . . . 5
2. வாடிய தாமரை . . . . . . . . . . . . . . . . . . 18
3. அன்பு கண்டு அஞ்சினேன் . . . . . . . . . . . . . 26
4. பிரியின் இறப்பள் . . . . . . . . . . . . . . . . 36
5. துன்பத்தில் இன்பம் . . . . . . . . . . . . . . . 44
6. பொருள் உயிர் தருமோ? . . . . . . . . . . . . . . 50
7. மாண்புடைச் செல்வம் . . . . . . . . . . . . . . 57
8. இறந்த கற்பினாள் . . . . . . . . . . . . . . . . 67
9. செறிக நின் வளையே! . . . . . . . . . . . . . . . 77
10. இனநலம் உடைய கானம் . . . . . . . . . . . . . . 85
11. மறப்பர் மதியிலார்! . . . . . . . . . . . . . . . 91
12. நகை குறித்தனரே! . . . . . . . . . . . . . . . . 99
13. அறநெறியும் ஆக்கமும் . . . . . . . . . . . . . . 107
14. இளமையும் இன்பமும் . . . . . . . . . . . . . . . 114
15. கடவுளரும் அடிபணிவர் . . . . . . . . . . . . . . 124
16. மருந்தாகி மனன் உவப்ப . . . . . . . . . . . . . 131
17. ஒன்றினார் வாழ்க்கை . . . . . . . . . . . . . . . 139
18. என்திறம் வினவல் . . . . . . . . . . . . . . . . 146
19. கலையும் பிணையும் . . . . . . . . . . . . . . . 150
20. நின் இன்று வாழாள் . . . . . . . . . . . . . . . 157
21. புதுவது அன்றே! . . . . . . . . . . . . . . . . . 162
22. சூடி எறிந்த மலர்! . . . . . . . . . . . . . . . . 168
23. போயின்று சொல் என் உயிர்! . . . . . . . . . . . 174
24. நீநற்கு அறிந்தனை! . . . . . . . . . . . . . . . 179
25. வந்தது இளவேனில் . . . . . . . . . . . . . . . . 185
26. விரைந்தே துணை தந்தார் . . . . . . . . . . . . . 193
27. வேண்டா தூது! . . . . . . . . . . . . . . . . . . 200
28. வந்தனர் திரும்பி! . . . . . . . . . . . . . . . . 206
29. நடுங்கினள் பெரிது! . . . . . . . . . . . . . . . 212
30. கூடல் புகுந்தார் . . . . . . . . . . . . . . . . 219
31. தூது வந்ததன்றோ . . . . . . . . . . . . . . . . 226
32. குயிலைப் பழியேல் . . . . . . . . . . . . . . . . 232
33. நாள் வரை கடந்திலர் காதலர்! . . . . . . . . . . . 238
34. வாய்மை வழுவாது வந்து சேர்ந்தார் . . . . . . . . 244
35. வந்தது வேனில், வந்திலர் கணவர் . . . . . . . . . 251

# 1

## 'அடங்கிய யானை!'

**உ**லகெலாம் புகழ வாழும் வாழ்வே உண்மை வாழ்வாம்; உயர்ந்த வாழ்வாம்; உலகப் பெருஞ் செல்வர் ஒரு சிலருள், இவரும் ஒருவர்; உலகப் பேரறிஞர் அனைவரும் ஒருங்கே போற்றும் அறிவுடையார் இவர்; பல நாட்டு அரசியல் தலைவர்களும் பார்த்து வியக்கும் அரசியற் பெருந்தலைவர் இவர்; உலகில் அமைதி காண, அல்லும் பகலும் அயராது உழைத்த உத்தமர் இவர்; எவரும் ஏறிக் காணமாட்டா இமயத்தின் உச்சியை ஏறிக் கண்டவர் இவர்; அலை கடல் ஆழத்தை அளந்து கண்டவர் இவர்; என இவ்வாறு, தம்பால் காணலாம் செல்வம், கல்வி முதலாம் நலம் பல கண்டு, மக்கள் மகிழ்ந்து பாராட்டப் பெரும் புகழ் பெற்று வாழ்வார் உலகில் மிகப் பலராவர். ஒருவர்பால் கல்வியும், செல்வமும், பண்பும், பேராண்மையும் பிறர் கண்டு வாழ்த்துமளவு பெருகக் கிடப்பதால், அவர்க்கு அவற்றால் பயனும் புகழும் உண்டதால் உண்மை. ஆனால்,

அப்பயனும், புகழும் அவர் ஒழிந்த பிறர்க்குப் பயன்தருதல் இல்லை; ஆதலின், அவற்றைப் பெருகப் பெற்றமையால், அவர் பெற்ற புகழ் உண்மைப் புகழாகாது. அவர்க்குப் பயன் அளித்தல் போன்றே அவர் ஒழிந்த பிறர்க்கும் பயன் அளிக்க வரும் புகழே, உண்மைப் புகழாம். அத்தகைய புகழ் பெறும் வழியும் உலகில் உளது. நிற்க.

ஒருவர்க்குப் புகழ் பெற உதவுவன இவை மட்டுமாகா. தாம் ஈட்டிய பெரும் பொருளை, அஃது இல்லார்க்கு ஈந்து வாழ்வதாலும் ஒருவர்க்குப் புகழ் உண்டாம். அப்புகழ், அவர்க்குப் பல்லோர் பாராட்டைப் பெற்றுத் தருதலொடு, பல்லோர் பசித் துயரைப் போக்குவதும் செய்கிறது. ஆதலின், ஈகையால் உண்டாம் அப்புகழ், முன்னர்க் கூறிய புகழ் அனைத்தினும் நனிமிகச் சிறந்த புகழாம். “ஈதல், இசைபட வாழ்தல்” எனவும்; “உரைப்பார் உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்” எனவும், ஈகையால் உண்டாம் புகழே, உண்மைப் புகழாம் என இப்புகழை வள்ளுவரும் வாழ்த்தியுள்ளனர்.

கொடுத்துப் பெறும் இப் புகழின் சிறப்பையும், அப்புகழ் பெற்று வாழும் வாழ்வின் சிறப்பையும் உணர்ந்த உயர்ந்த உள்ளம் வாய்க்கப் பெற்ற ஒரு குடும்பம், தமிழ் நாட்டுச் சிற்றூர் ஒன்றில் இருந்தது. ஒரு காலத்தே பெரும் பொருள் பெற்று வாழ்ந்து, பின்னர் யாது காரணத்தாலோ வறுமையுற்று, அவ்வாழ்விழந்து போகப், பொருள் தருவாரைத் தேடிச் சென்று இரந்து நிற்பர் சிலர்; தோன்றிய நாள் தொட்டு, எவ்வளவோ முயன்றும், வயிறார உண்டற்காம் வழியினைக் காண மாட்டாமை

யால் வருந்தி வந்து இரப்பர் சிலர்; பெரும்பொருட்கு உடையராய் இருந்தும், அப் பொருளை அடைதற்காம் காலம் வாய்க்காமையாலோ, அப் பொருள் உள்ள இடத்தை விட்டு வேற்றிடம் வந்து வாழ்வதாலோ, அப் பொருளால் பயன் துய்க்கும் வாய்ப்பற்றுப் போக, இரத்தல் தொழிலை இடைக்கால ஏற்பாடாக மேற் கொள்வர் சிலர்; இவ்வாறு வந்து இரப்பார் பலர்க்கும் அவரவர்தம் நிலைநோக்கி, அவரவர்க்கு வேண்டும் பொருள் அளித்து அனுப்புவதே உயர்ந்த கொடையாம். அவ்வாறு கொடுப்பது உயர்ந்தோர் கடனாம்; அவ்வாறு கொடுத்து வாழும் கொடைக்குணம் உடையாரே, வாழ்வாங்கு வாழ்பவராவர்; ஆனால், அத்தகு வாழ்வு, பெரும் பொருள் உடையார்க்கே வாய்க்கும்; அப்பெரும் பொருளும், இடை விடாது கொடுத்துக் கொண்டே வருவதால் குறைந்து போகும்; ஆதலின் கொடைக் குணத்தினைக் குறைவறப் பெற்று வாழ விரும்புவார், தளரா முயற்சியுடையராதல் வேண்டும்; காடும் மலையும் கடந்து சென்று பொருள் ஈட்டிவரும் கடமை உணர்ச்சி உடையராதல் வேண்டும். இவ்வுண்மைகளை உணர்ந்த வன் அம்மனைக் கிழவன். அதனால், முன்னோர் ஈட்டிய பொருள், அவன் மனையில் மலை போல் குவிந்திருப்ப வும், காட்டையும், மலையையும், கடலையும் கடந்து சென்று பொருளீட்டும் முயற்சியினை அவ்வப்போது மேற்கொள்ளும் வழக்க முடையனாயினான்.

ஒருநாள், அவன், அத்தகைய முயற்சி மேற்கொண்டு செல்லுதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந் தான்; காட்டையும், மலையையும், காட்டாற்றையும்

கடந்து செல்லும் திண்மையுளதாமாறு தேரைச் செப்பனிட்டான். இடைவழியில், வழிக் கொடுமையால் தளர்ந்து விடாது, ஈர்த்துச் சென்று மீளவல்ல குதிரைகளைத் தேர்ந்தெடுத்தான். இடைவழியில் கள்வராலும், காட்டுக் கொடு விலங்குகளாலும் உண்டாம் இடையூறின்றி இனிது சென்று மீளப் பெருந்துணை புரியும் வில்லையும், வேலையும் பழுதிலவாத் தேர்ந்து கொண்டான். அவன் செயல்களைக் கூர்ந்து நோக்கினாள் அவன் மனைவியின் உயிர்த் தோழி ஒருத்தி. பொருள் தேடும் பணி மேற்கொண்டு தன் மனைவியைப் பிரிந்து செல்லத் துணிந்து விட்டான் அவன் என்பதை அச் செய்கை உணர்த்துவது அறிந்தாள். நாடும், கடலும் கடந்து, நாற்றிசையும் சென்று பொருளீட்டி வருவதால், அவன் வாழ்வில் வளம் பெருகும்; அதுவே, ஆடவர்க்கு அறத்துறையும் ஆகும் எனும் உலகியலையும் உணர்ந்தவள் அவள். அவளே, அவன் போக்கு அறிந்து அஞ்சினாள்.

அவன் அண்மையில் மணம் செய்து கொண்டவன். அவன் பண்புணர்ந்து அவனை மணந்து கொண்ட அவன் மனைவி, அவன்மீது பேரன்புடையள்; அவனை ஒருநாள் பிரிந்திருக்கவும் பொறாது அவள் உள்ளம்; அத்துணை மெல்லிய இயல்புடையாள் அவள்; கற்பிற் சிறந்தவள்; கண்கண்ட கடவுள் கணவன்; வாய்மை வழுவாதவன் கணவன் எனக் கருதுபவள் அவள். முதன் முதலாகக் கண்டு காதல் கொண்ட அன்று, "உன்னை என்றும் பிரியேன்!" என்று ஆணையிட்டுக் கூறிய அவன் சொல் அழியாது. ஆகவே, பிரிவறியாப் பெருவாழ்வு பெற்று, அவனோடு பேரின்பம் நுகரலாம் எனும் வேட்கை

கொண்டுள்ளாள். அவ்வேட்கை மிகுதியினாலேயே, பேரறம் பல பண்ணிப் பெற்றுப் பேரன்பு காட்டி வளர்த்த தாய் தந்தையரை மறந்து, புதியனாய இவன் பின்வந்து வாழ்கிறாள். அத்தகையாள், அவன் பிரிந்து விடுவன்; அவனைப் பிரிந்து, தனித்துப் பலநாள் வாழ வேண்டும் என உணர்வளேல், அந்நிலையே அவள் உயிர் அழிந்து விடும். மனைவியின் துணையின்றி மனையறம் சிறவாது; சிறவாது என்பது மட்டுமன்று, அது நிகழாது; என்றால், அவளை அறவே இழந்தவிடத்து, ஆங்கே, மனை, மனையறம் என்ற பேச்சுக்கே இடம் இன்றாம். ஆகவே, வாழ்க்கையை வளம் ஆக்குதல் வேண்டும் எனும் ஆர்வத்தால், அவன் மேற்கொள்ளும் பொருள்வயிற் பிரிவு, அவ்வாழ்க்கையை வறண்ட பாலையாக்கிவிடுமோ எனும் அச்சவுணர்வே, அவன் போக்கறிந்து, அவள் அஞ்சுதற்குக் காரணமாம்.

"மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினை விழைவார் வேண்டாப் பொருளும் அது" எனும் குறள்நெறி உணராதவள் அல்லள் அத்தோழி. அதை அறிந்தே, பொருள் தேடிச்செல்லும் அவன் முயற்சியினை வெறுத்தாள். அவனும் அவன் மனைவியும் இளமைப் பருவத்து இன்ப உலகில் அப்பொழுதுதான் அடியெடுத்து வைத்துள்ளார்கள்; அதற்கு இந்த நிலையில் இடையூறு உண்டாதல் கூடாது; இளமை வாழ்வு இறவா இயல்புடைத்தன்று; கண்டு கொண்டிருக்கும்போதே கழிந்துவிடும் இயல்புடையது அது; இன்பம் நுகர்தல் இளமைக் காலத்திற்கே இயலும்; அவ்விளமை கழிந்த பின்னர், வாழ்க்கை இன்பம் தருவது இல்லை; இழந்தால்,

மீண்டும் பெறலாகா அவ்விளமைக் காலத்தைப் பயன்கொண்டு இன்பம் துய்க்கத் தவறியவர், பின்னர், அவ்வின்பவுலகை எட்டிப் பார்த்தலும் இயலாது. இன்பம் துய்க்க வேண்டிய இளமைக் காலத்தை, அது வாய்க்காது வறிதே கழித்தார் வாழ்நாள், விரைவில் முடிந்து போதலும் உண்டு. ஆனால், பொருள் ஈட்டி அறம் புரிதற்கு, இன்ப நுகர்ச்சிக்கு இருப்பது போலும் இத்தகைய காலத்தடை யேதும் இல்லை; அதை இளமையிலும் மேற்கொள்ளலாம்; முதுமையிலும் மேற்கொள்ளலாம்; அதுமட்டுமன்றி; பொருளீட்டு முயற்சியினை இளமையில் மேற்கொண்டவர், 'இன்பம் துய்க்க வேண்டிய இளமையைக் கொன்னே கழித்துவிட்டோம்!' எனும் கவலை உள்ளிருந்து அலைப்ப தால், பொருளீட்டு முயற்சியினை முட்டின்றி முடிக்க மாட்டாது, கலங்குவதும் செய்வர்; அதற்கு மாறாக, இளமையை இன்ப நுகர்ச்சியில் கழித்துப் பொருளீட்டு முயற்சியினைப் பின்னர் மேற்கொண்டவர், அத்தகைய மனக்குறையேதும் இலராய்த் தம் எண்ணம் முழுவதையும் பொருளீட்டும் முயற்சியில் செலுத்துவர் ஆதலின், பெரும் பொருளீட்டிப் பெருங்கொடை வள்ளலாய் வாழ்தல் அவர்க்கே எளிதில் வாய்க்கும். இளமையில் இயற்ற வேண்டுவன இவை; முதுமையில் முடிக்க வேண்டுவன இவை என வரையறை வகுத்துக் கொண்டு வினையாற்று பவரே, மூதறிவாளராவர். அதை அதை, அந்த அந்தக் காலத்தில் முடித்தல் வேண்டும்; ஆடும் பருவத்தை ஆடிக் கழித்தல் வேண்டும்; பாடுபடும் பருவத்தைப் பாடுபட்டுக் கழித்தல் வேண்டும்; இதை முறை பிறழக் கொள்வதால், எதிலும் வெற்றி காணல் இயலாது; எடுத்த வினை

யெதுவும் விழலுக்கு இறைத்த நீராய் வீணாம், என்ற இத் தெளிந்த உணர்வு அத் தோழிக்கு இருப்பதால், அவன் போக்கறிந்து அஞ்சினாள்.

அவள் அச்சத்திற்குப் பிறிதொரு காரணமும் இருந்தது. அவன் செல்லும் காலமும், கடந்து செல்ல வேண்டிய வழியும் செல்லத் தகுதியற்றிருந்தன. கோடையின் கொடுமை மிக்க காலம் அது. பொன்னாலும், வெள்ளியாலும், இரும்பாலும் கோட்டைகள் அமைத்து, அமரர்க்கு அழிவு தந்து வந்த அவுணர்களை அழிக்கத் திருவுளம் கொண்ட சிவன், அவ்வவுணர்க்கு ஆற்றலும், ஆணவமும் தருவன அக் கோட்டைகளே; அவை அழிந்து விடின், அவரும் அழிவர் என அறிந்து, அவற்றை அழிக்கத் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டியக்கால், அக்கோட்டைகளை இருந்த இடம் தெரியாவாறு எரித்துச் சாம்பராகிய, அந்நெற்றிக்கண் கக்கிய தீயினும் கொடிதாக, ஞாயிறு நின்று காயும் கொடுமை மிக்கது அக்காலம். அந் நெற்றிக் கண் கக்கிய தீயின் வெம்மையால் வெந்து சாம்பராகிய அக் கோட்டைகள் அழிவுற்றக்கால், தூள் தூளாகப் பிளவுண்டு சிதறி வீழ்ந்து கிடந்ததுபோல், கோடை ஞாயிற்றின் கொடுமை தாளாது, மலைகள் வெடித்து வீசிய பாறைகள் சிறியவும் பெரியவுமாய்ச் சிதறி வீழ்ந்து, வழியடைத்துக் கிடக்கும் கொடுமையுடையது அவன் செல்லும் வழி. அத்தகைய கொடிய கோடை காலத்தில், கடத்தற்கரிய கொடுமை மிக்க அவ்வழியில், செல்வார் எவரும், இடைவழியில் ஏதும் உறாது சென்று, இனிதே மீண்டு வருதல் அரிதினும் அரிதாமன்றோ என அவள் அச்சம், பொருள் தேடிச் செல்லுதல் அக் காலத் திற்குப் பொருந்தாது என்ற முடிவை வலியுறுத்திற்று.

இவ்வெண்ணங்களால், அவனைப் போக விடாது தடுத்து விடத் துணிந்த தோழி, போதற்காம் ஏற்பாடுகளை மேற்கொள்வதில் முனைந்திருந்த அவன்பால் சென்றாள். இழந்தால் மீண்டும் பெறலாகா இளமையின் இயல்பு; இளமை இழந்துவிடத் துன்பமாய் மாறிப் பயனற்றுப் போகும் வாழ்வின் இயல்பு; அவ்வின்பம் போலாது, இளமை கழிந்தவிடத்தும், மேற்கொள்ளுதற்காம் ஈகையின் இயல்பு ஆகிய இவற்றை முறையாக எடுத்துக் கூறிப் பொருள் தேடும் முயற்சியினை அப்போது மேற்கொள்ளா வாறு வேண்டிக் கொண்டாள். ஆனால், புகழ் தருவதில் பெருந்துணை புரிய வல்லதாய பொருள் தேடும் ஆர்வத்தில் ஆழ்ந்து போன அவன் உள்ளம், அவள் கூறுவனவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. அவள் அத்துணை கூறியும், போக்கிற்காம் வினைமேற் கொள்வதை அவன் கைவிட்டானல்லன்.

பொருள் கொடுத்துப் பெறும் புகழின்பால் பேராசை கொண்டிருக்கும் அவனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல், தன் அறிவுரைக்கில்லை என்பதை உணர்ந்ததும், அவள், அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனும் தன் துணிவினைக் கைவிட்டாளல்லள். புகழின்பால் சென்ற அவன் உள்ளம், அவன் மனைவியின் அன்பிற்கும் கட்டுப்பட்டதே என்பதை உணர்ந்தவள் அவள். தானும், தன் மனைவியும், தன்னேரில்லாப் பெருவாழ்வு பெறுதல் வேண்டும் எனும் வேட்கையினாலேயே, அவன் பொருளீட்டி வரத் துணிந்துள்ளான்; தான் பிரியின், தன் பிரிவுத்துயர் தாளாது தன் மனைவி இறந்துபடுவள்; பொருள் தேடி மீண்டவிடத்து அவளைக் காண்டல்

இயலாது; எவள் இன்ப வாழ்விற்காக இத்துணைப் பாடுபடுகின்றனனோ, அவளை இழந்துவிட நேரிடும்; அவள் அழிவிற்குத் தன் பொருள்தேடு முயற்சியே காரணமாம் என்பதை அவன் உணர்ந்துவிடின், ஒருபோதும் பிரிய எண்ணான் என்பதையும் அவள் உணர்வாள். அதனால், அவனுக்கு அறிவுரை கூறுவதை விடுத்தாள்.

"அன்ப! நின் மனைவி மனையறம் மேற்கொள்ளும் மனையாளின் கடமைகள் இன்னின்ன என நீ கூறிய அந்நெறியில் பிறழாது நிற்கும் கற்புடைவளேயெனினும், அவள் நின்னைப் பிரிந்து வாழ்ந்து அறியாளாதலின், நீ அவளைத் தனித்திருக்க விடுத்து, வேற்றூர் சென்றுவிடின், அவள் உயிர் வாழாள். நீ அவளை முதன் முதலாகக் கண்டு காதல் கொண்டபொழுது 'பிரியேன்' என்று கூறித் தேற்றிய நின் சொல் பிறழாது என்ற உறுதியினாலேயே, நின்னை வாழ்க்கைத் துணையாக வரித்துக் கொண்டுள்ளாள். அத்தகையாள், நீ, இப்போது பிரிந்து செல்வை என்பதை அறியின், உயிர் வாழாள். கணவனே எல்லாம் என்ற உணர்வினால், பிறந்த ஊரையும் பெற்ற தாய் தந்தையரையும் மறந்து வந்து வாழும் அவள் கற்பு நெறி கண்டு, 'உலகு புகழ் அருந்ததியாம் இவள்!' என ஊரார் போற்ற வாழும் அவள், தனக்கு ஒரே பற்றுக் கோடாகக் கொண்டுள்ள உன்னை ஒருநாள் காணாளா யினும் கலங்கி உயிர் விடுவள். இதை நீ அறிதல் வேண்டும். ஆகவே, இமைப் பொழுதும் பிரியாதிருந்து இவளைப் பேணிக் காத்தல் நின் கடனாம். மேலும், நீ தேடிக் கொணரும் பொருள், இவளை இழத்தற்கு வழியாதல்

கூடாது. வந்து நம் வாயிற்கண் நின்று, தம் வறுமை நிலை காட்டி வருந்தி இரப்பார்க்கு, வாரி வழங்க, நீ சென்று தேடித் தரும் பொருள் சிறப்புடையதே என்றாலும், அது, அவளை இழவாமல் பேணுதற்குத் துணை புரியும் இயல்பும் உடையதாதல் வேண்டும்; அப்பொருள், நின் வாழ்க்கையைப் பயன் நிறைந்த தாக்குதல் வேண்டும்; அதுவே பொருட்பயனாம். ஆனால், புகழ் கருதி நீ தேடிக் கொணரும் பொருள், நின் மனையாளை இழத்தற்குத் துணை புரிதல் கூடாது; மனையாளை இழந்து நீ மாண்புறுதல் இல்லை; மனையாளை இழக்கப் பண்ணி, நின்னை மாளாத் துயர்க்கு உள்ளாக்கும் பொருள், உண்மையில் பொருளாகாது; அது நின் வாழ்வைக் கெடுக்கும் மருளாம். ஆகவே, மனையாளைப் பிரியா திருந்தே பொருளீட்டும் வழியுண்டேல், அதை அறிந்து மேற்கொள்வதல்லது, பிரிவுத் துயர் பொறாது, அவள் இறந்துபோமாறு, தனித்திருக்க விடுத்துப் பிரிந்து சென்று பொருளீட்டும் முயற்சியினை மேற்கொள்வது மாண் புடைத்தன்று!" என்று கூறிப் பிரிந்தவழி, அவன் மனைவி படும் பெருந்துயரை அவனுக்கு நினைப்பூட்டினாள்.

புகழ்மீதும், அப்புகழைத் தரும் பொருள்மீதும் கொண்ட ஆர்வமே, தன் அகக்கண் முன் நிற்க, தோழி கூறிய அறிவுரை எதையும் ஏற்றுக் கொள்ளாது, மதங் கொண்டவிடத்துப் பாகனுக்கோ, குத்துக்கோலர்க்கோ அடங்காது திரியும் யானைபோன்று, பொருள் தேடி வரப் புறப்பட்டே தீர்வன் எனத் துணிந்து நின்ற அவன், அம்மதமிக்க யானை, தன்முன் நின்று ஒருவர் யாழ் இசைக்கக் கேட்ட அக்கணமே, ஆசிரியனுக்கு அடங்கிப்

பணிந்தொழுகும் மாணவன் போல், மதம் அடங்கி மண்டியிடுவது போன்று, "நீ பிரியின், நின் மனைவி உயிர் வாழாள்! பிரிவுத் துயர் அவளுக்கு அத்துணைக் கொடிதாம்!" என்று தோழி கூறிய தன் மனைவியின் துயர்நிலைக் காட்சியைத் தன் அகக்கண்ணால் கண்ட அக்கணமே, பொருள் தேடிச் செல்லும் தன் முயற்சியை அறவே கைவிட்டான்.

அவன் முடிவு கண்டு மகிழ்ந்தாள் தோழி. மகிழ்ச்சி தரும் அச் செய்தியை, அவன் மனைவிக்கும் ஓடி உரைத்தாள். அதுகேட்ட அப்பெண், "இத்துணையும் கூறி, இவ்வளவும் எடுத்துக்காட்டி, என் உள்ளத்தில் இன்பம் சுரக்க வழி செய்த நின்னை எங்ஙனம் வாழ்த்துவன்!" எனக் கூறி அவளைப் பாராட்டினாள். அது கேட்ட தோழி, "இதில் என்னை வாழ்த்துதற்கு என்னுள? அவன் போகாது நின்றது, என்னாலோ, என் அறிவுரைகளாலோ அன்று. நான் அவ்வளவு கூறியும், தன் முயற்சியைக் கைவிட மறுத்த அவன், 'உன் பிரிவால், அவள் வருந்துவாள்; வாழாது உயிர் விடுவள்!" என்று கூறிய நின் துயர்நிலை கேட்டன்றோ போகாமைக்கு இசைந்தான். ஆகவே அவனைப் போகாது தடுத்தது உன் அன்பே. என் அறிவுரையன்று. ஆகவே வாழ்த்துதற்கு உரியது, நீவிர் இருவீரும், ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள அன்பே. வாழ்க அவ்வன்பு!" என வாழ்த்தித், தன் தொண்டின் சிறப்புக் கண்டு, செருக்குக்கொள்ளாது, அதை மறைத்துக் காட்டி மாண்புற்றாள். அம் மாண்பினை உரைப்பது இப்பாட்டு:

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல்சாய, அமரர்வந்து இரத்தலின்,
மடங்கல்போல் சினைஇ, மாயம்செய் அவுணரைக்
கடந்துஅடு முன்பொடு முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்,

சீறும் கணிச்சியோன் சினவலின், அவ்எயில்
ஏறுபெற்று உதிர்வனபோல் வரைபிளந்து இயங்குநர்
ஆறுகெட விலங்கிய அழல்அவிர் ஆரிடை
மறப்பரும் காதல் இவள்ஈண்டு ஒழிய,
இறப்பத் துணிந்தனிர்; கேண்மின் மற்று ஐஇய!

தொலைவாகி இரந்தோர்க்கு ஒன்றுஈயாமை இளிவுஎன
மலைஇறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ?
நிலைஇய கற்பினாள், நீ நீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;
இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இளிவுஎனக்

கல்இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ?
தொல்இயல் வழாஅமைத் துணைஎனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;
இடன்இன்றி இரந்தோர்க்கு ஒன்றுஈ யாமை இளிவுஎனக்
கடன்இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ?

வடமீன்போல் தொழுதேத்தும் வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை;
எனஇவள்,
புன்கண் கொண்டு இனையவும், பொருள்வயின் அகறல்

அன்புஅன்று என்று யான்கூற, அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்

யாழ்வரைத் தங்கியாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி, என்
சொல்வரைத் தங்கினர் காதலோரே."

*இல்வாழ்க்கையை அறநெறியில் நடத்துதற்கு இன்றியமையாது வேண்டும் பொருளினை ஈட்டிவருதற் பொருட்டுப் பிரியக் கருதிய தலைவனுக்குத் தலைமகளது இயல்புகூறிச் செல்லாது நிறுத்திய தோழி, அதைத் தலை மகளுக்குச் சொல்லியது இது. இதற்கு விதி-தொல்-பொருள்: 41.*

1. தொடங்கற்கண்—உலகம் தோன்றிய காலத்தில்; முதியவன்—முன்தோன்றிய நான்முகன்; 2. அடங்காதார்—பகைவர்; மிடல்—வலி (ஆற்றல்). அடங்காதார் மிடல்சாய, முதியவன் முதலாக அமரர் வந்து இரத்தலின் என மாற்றிப் பொருள் கொள்க. 3. மடங்கல்—எமன்; எடுத்த வினையை இடையே விடாது முடித்தலின் அவனுக்கு அப்பெயர்; அவுணர்—அரக்கர்; 4. கடந்து அடுமுன்பு—எதிர்நின்று அழிக்கின்ற ஆற்றல்; மூஎயில்—இரும்பு, பொன், வெள்ளியாலாய மூன்று கோட்டைகள்; 5. உடன்றக் கால்—சினந்து நோக்கிய பொழுது; ஒண்கதிர்— தீயைக் கக்கும் ஞாயிறு; தெறுதலின்—சுடுவதால்; 6. கணிச்சியோன்—மழுவேந்திய சிவன்; 7. ஏறுபெற்று—அழிந்து; வரை—மலை; 8. அழல் அவிர் ஆர்இடை—அழல் வீசும் செல்லுதற்கரிய வழி; 10. இறப்ப—பொருள் கருதிப் பிரிய; 11. இறந்து—கடந்து; இவளைப் பிரியாமையே பொருளாவதல்லது, பிரிந்து தேடும் பொருள், பொருளாகுமோ? ஆகாது எனக் கொள்க. 16. கல்—மலைநாடு; 13. புல்ஆகம்—புல்லுதற்கு இனிய மார்பு; 20. கடன்—காடு சேர்ந்த நிலம்; 21. வடமீன்—அருந்ததி; வயங்கிய—பிறரால் போற்றுதற்குரிய; 22. தடமென்தோள்—பெரிய மெல்லிய தோள்; 24. புன்கண்—துன்பம்; இனையவும்—வருந்தவும்; 26. காழ்வரை—குத்துக் கோலாரின் ஆணைக்கு; கடுங்களிற்று ஒருத்தல்—மதம் மிக்க யானைத் தலைவன்.

# 2

## வாடிய தாமரை

அண்மையில் மணம் முடித்து, மனையறம் மேற்கொண்ட இளங் காதலர்கள் இருவர் ஓருயிரும் ஈருடலுமாய் இணைந்து வாழ்ந்திருந்தனர். கனிந்த காதல் உள்ளம் வாய்க்கப் பெற்ற அவர்கள், கடமையுணர்வும் வாய்க்கப் பெற்றிருந்தனர். அதனால், தம் வீடும் நாடும் வளம் பெற்று வாழத் துணை புரியவல்ல சில கடமைகளை மேற்கொண்டு, அவன் வெளியூர் செல்ல வேண்டிய தாயிற்று. அதற்கு ஆவன மேற்கொண்ட அவன், வெளி யூர்க்குச் செல்ல வேண்டிய இன்றியமையாமையினைத் தன் மனைவியின் தோழிக்கு மெல்ல அறிவித்தான்.

தான் அறிந்த ஒன்றைத் தன் தோழிக்கு மறைப்பது கூடாது எனும் மனம் உடையவள் அத்தோழி. அதனால் அவள் அச் செய்தியை, அவன் மனைவிக்கு அறிவித்தாள். அது கேட்ட அப்பெண் மனம் கலங்கினாள். கடமை மேற் கொண்டு வெளியூர் செல்ல வேண்டுவது கணவனுக்கு

இன்றியமையாததே என்பதை அவள் அறிவாளாயினும், அவன் செல்ல நினைக்கும் காலம், அதற்குத் தகுதி யுடையதன்று. ஆகவே, அவள் வருந்தினாள். உரிய கடனாற்ற ஊர்விட்டுச் சென்று வாழ்வது உயரிய அறமாம் என்பது உண்மை. ஆனால், அவ்வுண்மையை உலகில் வாழும் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கவில்லையே! "இவ்வளவு அழகும் இளமையும் உடையாளைப் பிரிந்து செல்கின்ற இவனை என்னென்பது! கடமையுணர்ச்சி யளவு, காதல் உணர்ச்சி இவனுக்கு இல்லையே! பொருளின்மீதும் புகழின்மீதும் உள்ள அளவு, இவள்மீது இவனுக்குப் பற்று இல்லை போலும்!" என்பனபோலும் பழியுரைகளைக் கூறுவோரும் உலகில் வாழ்கின்றனர். அவர் தொகையே, ஏனையோர் தொகையினும் பெரிதாம். தன்னையும், தன் கணவனையும் புகழ்ந்துரைக்கும் புகழ் உரைகளையே விரும்பும் அவள், அவன் பிரிந்து சென்றக்கால், இவை போலும் பழியுரைகளைப் பலர் அறியக் கூறித் திரியும் அறம் அறியா மக்களும் இவ்வூரில் வாழ்கின்றனரே என்பதறிந்து அஞ்சினாள். அவ்வச்சத் தோடு, விரைவிற்கடந்து சென்று மீளலாகாத் தொலைவும், மழைபெறா வறட்சியால் கண்ணீரும், கானல் நீருமல்லது, உண்ணுநீர் பெற மாட்டாக் கொடுமையும் உடைய வழியில் செல்லும் அவனுக்கு, ஆங்கு என்னென்ன கேடுண்டாமோ என்ற எண்ணத்தால் எழுந்த அச்சமும் உடன் கலந்து கொள்ளவே, அவள் துயர் மிக்கது. அந்நிலையே அவள் உடல் நலம் குன்றிற்று; தோள்கள் மெலிந்தன; கைவளைகள் கழன்று ஓடின; கண்கள் கடலாயின. அகத் துயரால் புறத்து அழகும் அழிந்தது.

முழுத் திங்கள் போல் ஒளி வீசிய அவள் முகம், மாசு படர்ந்து மாண்பிழந்தது. இந்நிலையினைக் கண்டாள் தோழி. பிரிந்து செல்வன் என்பதைக் கேட்டே இவ்வாறு வருந்தும் இவள், அவன் சென்றுவிடின் உயிர்வாழாள் என உணர்ந்தாள். அதனால், அவனைப் போகாவாறு தடுத்து நிறுத்தி விடுதல் வேண்டும் எனத் துணிந்தாள். உடனே அவன்பால் விரைந்து சென்றாள்.

"அன்ப! நின் மனைவிக்கு உயிர் நீ. உயிர் அற்று உடல் வாழ்வதில்லை. நீ பிரியின், அவள் வாழாள். நீவிர் மணந்து கொண்டு நெடுநாள் ஆகவில்லை. அதற்குள்ளாக, இத்துணை விரைவில், அவளைத் தனியே விடுத்துப் பிரிந்து செல்வாயேல், நின்னை மணந்து கொள்ளப் பெற்றமையால் பெருநலம் பெற்று விளங்கும் அவள் உடல் நலன் முற்றும் அழியும். உன் அன்பின் ஆதரவு உண்டு. அவ்வன்புத் தளை என்றும் அழியாது என்னும் உறுதியால் உயிர் வாழ்கிறாள் அவள். அத்தகையாள், அன்பிலாதான் போல், தன்னைத் தனித்திருந்து தவிக்க விடுத்துச் செல்வையெனின், அந்நிலையே இறந்துபடுவள். ஆகவே, அன்ப! இவளை இந்நிலையே விடுத்துப் பிரிந்து செல்லுதல் பொருந்தாது. அது அன்போ, அறமோ ஆகாது. ஆகவே பிரிந்து செல்வதைச் சிறிது காலம் மறந்துவிடுக!" என மன்றாடி வேண்டிக் கொண்டாள்.

ஆனால், 'வினையே ஆடவர்க்கு உயிரே!' என்ற உணர்வில் ஊறிப்போன அவன் உள்ளத்தை மாற்றும் ஆற்றல், தோழிக்கு இல்லாது போயிற்று. காதலையும், கடமையையும் ஒரு சேர மதிப்பவன் அவன். காதலுக் காகக் கடமையை மறந்து வாழ்வது மாண்புடைமை

யாகாது என உணர்ந்தவன். அதனால், 'காதலை எண்ணிக் கடமையைச் சிறிது காலம் மறந்து வாழ்க!' என வேண்டிய தோழியின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாது, வினை மேற் செல்வதிலேயே விருப்பம் காட்டினான்.

கடனாற்றத் துணிந்து நிற்கும் அவன் உள்ள உறுதியை உணர்ந்தாள் தோழி. அவ்வுறுதி கண்டு ஒருபால் அவனைப் போற்றினாள். ஆனால், அவ்வுறுதியின் விளைவால், அவன் மனைவி அழிவளே என அஞ்சினாள். மேலும், கடமையுணர்ச்சி மேலோங்க நிற்கும் அவன், காதலின் இயல்பறியாக் கொடியன் அல்லன். வினைமேற் கொண்டு செல்லும் அவன், காதலர் இருவர் இணைந்து வாழ வேண்டிய இன்றியமையாமையினை, ஒருவர் பிரிய, ஒருவர் உயிர் வாழாக் கொடுமையினை, இடைவழியில் உணர்ந்துவிடின், மேற்கொண்டு சென்ற கடமையினையும் ஆற்ற மாட்டாது கலங்குவன் என்பதையும், அவன் செல்லும் நீண்ட வழியில், அத்தகைய நினைப்பூட்டும் நிகழ்ச்சிகள் மிகப் பலவாம் என்பதையும் உணர்ந்த அவள், அவன் அஃதறியாது சென்று, இவளை இழப்பதோடு, எடுத்த வினையினை முடிக்க மாட்டாது இடைவழியில் மீண்டு, மீளாப் பழியும் பெறுவனே என்றும் அஞ்சினாள். அதனால், மீண்டும் அவனை நோக்கி, "அன்ப! பிரிவுத் துயர் பொறாது இவள் வருந்தி வாட, விடுத்துப் பிரிந்து போதல் பொருந்தாது என்பதைப் பணிவாகப் பலப்பல முறைகளில், உன் உள்ளம் ஏற்கும் வகையில், பன்னிப்பன்னிக் கூறினேன். அதை நீ ஏற்றுக்கொண்டிலை; நின்னைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் என் சொற்களுக்கு இல்லாது போயிற்று. நான் எவ்வளவு கூறியும் நீ ஏற்றுக்

கொண்டிலை. ஆனால், நீ செல்லும் வழியுண்டே அது, நின்னை மேலே செல்லாவாறு தடுத்து நிறுத்திவிடும். தம்மோடு நட்புக் கொண்டு வாழ்வார் ஒருவர், நெறி பிறழ்ந்து, நிலை திரிந்து விடுவராயின், அவர் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட நல்லோர் அவரை அடுத்து, அவர் விரும்பாது போயினும், இடித்துக் கூறி, அறிவுரை பல வழங்கி, அவரை நன்னெறிக்கண் நிறுத்துவர். அத்தகைய நல்லோர்போல், நினக்கு அறிவுரைத்து, நின்னை மேலே செல்லாவாறு நிறுத்தி, இவள்பால் மீளச் செய்யும் காட்சிகள் ஆங்குப் பல உள. வாய் திறந்து அறிவுரை வழங்கும் ஆற்றல் அவற்றிற்கு இராதாயினும், அவை, தம் காட்சி நலம் ஒன்றினாலேயே, நின் உள்ளத்தில் அவ்வறிவுரைகளைப் புகுத்திவிடும்."

"அன்ப! நான் பலப்பல கூறித் தடுக்கவும் கேளாது, வினை ஆற்றும் வேட்கைமிக்க நின் நெஞ்சம் நின்று துரத்த, நீ செல்லும் வழியில் உள்ள சுனைகள், தாம் நீர் வற்றிப் போயினமையால், தம்கண் வளர்ந்து வனப்புத் தந்த தாமரை மலர்கள் இலைகளோடு ஒருங்கழிந்த காட்சியைக் காட்டி, மகளிர்க்குத், தாமரை மலர்க்குத் தண்ணீர்போல் இருந்து காக்கக் கடமைப்பட்ட கணவர், அவரைப் பிரிந்து சென்றுவிடின், தண்ணீர் அற்ற தாமரை வாடி அழிந்ததே போல், அவரும் அழிவர் என்ற உண்மையினை நின் உளங்கொள்ளச் செய்யும். அக் காட்சியைக் காணும் நீ, அவ்விடத்தைக் கடந்து செல்லுதல் இயலாது. அதைக் கடந்து செல்லும் உறுதி ஒருவாறு பெற்று மேலே செல்வையாயின், ஆங்குக் கோடையின் கொடுமையால் வாடிய மரம் ஒன்று, தன்னைப் பற்றுக் கோடாகக்

கொண்டு, படர்ந்த மெல்லிய கொடி, தன்னைப் பற்றிப் படர மாட்டாது தரையில் வீழ்ந்து வாடுவதைக் காட்டி, 'இதைப் போன்றே, நின்னையல்லாது வேறு பற்றுக் கோடறியா நின் மனைவி, நீ பிரியின் இக் கொடியைப் போன்றே, பற்றுக்கோடற்று வாடித் துயர் உறுவள்!' என்ற உணர்வினை நின் உள்ளத்தில் ஊட்டும். அவ்வுணர்வு வரப்பெற்ற உனக்கு, அவ்விடத்தைக் கடந்து மேலே செல்ல வல்ல உரம் உண்டாகாது. ஒருகால், அதையும் பொருட்படுத்தாது மேலே செல்லத் தொடங்கின், அம்மரம், தான் வற்றியதால், தன் கிளைகளில் அழகு பெறத் தளிர்த்திருந்த இளந்தளிர்கள் வாடி வதங்கிப்போன காட்சிகளைக் காட்டி, 'மனைவியின் உயிராய், அவள் மனை வாழ்க்கையின் முழுமுதலாய் விளங்கிய நீ பிரியின், அவள் மரம் வாட வாடும் தளிரேபோல் வாடுவள்' என்பதை நினைப்பூட்டி, நின்னைப் போகாது தடுக்கும். அதையும் கண்டு இவள் நிலையை எண்ணிப் பாராது வினைமேற்கொண்டு செல்வது நினக்கு இசையாது. எடுத்த வினையை இடைவழியில் கைவிட்டு மீண்டுவருதல் உறுதி.

"அன்ப! ஒரு வினையைத் தொடங்கியவர், இடையே கைவிடுதல் கூடாது. அவ்வாறு இடையே கைவிடுவதினும், அதைத் தொடங்காதிருத்தலே நன்றாம். கேளாது சென்று, சென்ற வினையையும் முடிக்காது வருதலைவிடச் செல்லாமையே நன்று. தன் நலத்தில் நாட்டம் உடைய தன் போலும் மக்கள் கூறிய அறிவுரை கேட்க மறுத்துச் சென்றவன், இடைவழியில் மரமும், செடியும் கூறியன கேட்டு மனம் திருந்தினான் என்ற பழியாவது எஞ்சும்!" என்று கூறினாள். தோழி கூறிய

*அழகிய அறிவுரைகளைப் பாடற் பொருளாகக்கொண்டு எழுந்தது இப்பாட்டு:*

"அறன் இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்,
வறன் நீந்தி நீசெல்லும் நீள்இடை நினைப்பவும்,
இறைநில்லா வளைஓட, இதழ் சோர்வு பனி மல்கப்,
பொறைநில்லா நோயோடு புல்என்ற நுதல்இவள்,
விறல்நலன் இழப்பவும் வினைவேட்டாய்! கேளினி;

உடைஇவள் உயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
விடைகொண்டு யாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன;
வல்லைநீ துறப்பாயேல் வகைவாடும் இவள்என

ஒல்லாங்கு யாம்இரப்பவும் உணர்ந்தீயாய் ஆயினை;
செல்லும் நீள் ஆற்றிடைச் சேர்ந்து எழுந்த மரம்வாடப்
புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி தகைப்பன;
பிணிபு நீ விடல்சூழின் பிறழ்தரும் இவள்எனப்
பணிபுவந்து இரப்பவும் பலசூழ்வாய் ஆயினை;

துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்து
அணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன;
அதனால்,
யாம் நிற்கூறவும் எமகொள்ளாய் ஆயினை,
ஆனாது, இவள்போல் அருள்வந் தவைகாட்டி

மேல்நின்று மெய்கூறும் கேளிர்போல் நீசெல்லும்
கானம் தகைப்ப செலவு."

*தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, அதைத் தலைமகட்கு உரைத்து, அவள் ஆற்றாமை கண்டு,*

*தலைமகற்கு உணர்த்தவும், மேலும் பிரிதலையே எண்ணி இருந்த அவனை, நீர் செல்லும் கானமே, நும்மைத் தடுத்து நிறுத்தும் என, அவன் போதலைத் தவிர்க்குமாறு கூறியது இது.*

1. அயல்—அயலில் உள்ளார்; அம்பல்—ஒருவரைப் பழித்து இழிவாகக் கூறுவனவற்றைப் பலர் அறியக் கூறுவதன் முன்னர்த் தமக்குள்ளே மெதுவாகக் கூறிக் கொள்ளுதல். 2. வறன்—நீர் அற்ற தன்மை; 3. இறை—முன்கை; இதழ்—கண்ணிதழ்; பனி—கண்ணீர்; 4. புல் என்ற—அழகு இழந்த 5. விறல்நலன்—பேரழகு; 6. உடை இவள்—உன்னை உயிராக உடைய இவள்; 7. எம—யாம் கூறியனவற்றை; 8. கடைஇய—செலுத்திய; ஆற்றிடை—வழியில்; 9. அடை—இலைகள்; தகைப்பன—தடுத்து நிறுத்தவல்லன; 10. வல்லை—விரைந்து; வகை—அழகு; 11. ஒல்லாங்கு—பொருந்தும் வகையில்; உணர்ந்தீயாய்—உணர்ந்து கொள்ளாதவன்; 13. புல்லுவிட்டு—பற்றிப் படர்தலை விடுத்து; இறைஞ்சிய—தாழ்ந்து போன; 14. பிணிபு—அன்பால் பிரியாதிருத்தலை; பிறழ்தரும்—இறந்து போவாள்; 15. பணிபு—பணிந்து; பல சூழ்வாய்—போதற்கு வேண்டுவனவற்றையே எண்ணுகின்றனை; 20. ஆனாது—அமையாது; அருள் வந்தவை—அருள் நிரம்பிய காட்சிகளை; 21. மெய்—உண்மை உரைகளை; கேளிர்—உறவினர்; கானம் செலவு தகைப்ப—காடு நின் போக்கைத் தடுக்கும்.

# 3

## அன்பு கண்டு அஞ்சினேன்!

அழகும் இளமையும் அரும்பெருங் குணங்களும் உடையாள் ஒரு பெண்ணைக் கண்டு, காதல் கொண்டு மணந்து மனையற வாழ்வு மேற்கொண்ட ஓர் இளைஞன், இல் வாழ்க்கை இனிது நடைபெறுதற்குத் துணை புரிய வல்லது பொருள் என உணர்ந்து, அப் பொருட் செல்வத்தைப் பெரும் அளவில் சேர்த்து வைக்க விரும்பினான். தாம் பிறந்து வாழும் நாட்டைக் கடந்து பிறநாடு புகுந்து பொருள் ஈட்டி வருவார், தம் மனைவியரையும் உடன் கொண்டு செல்வது பண்டைக் காலத்தில் இல்லை. அக்காலம் நல்ல வழிகள் அமையாத காலம்; காடுகளையும், மலைகளையும், காட்டாறு களையும், மணல் வெளிகளையும் இடையிடையே பெற்றி ருந்த அவ்வழிகள், கொடுவிலங்குகளையும், கொள்ளைக் காரர்களையும் கொண்டிருந்தன. மேலும், அவ்வழிகளை விரைந்து கடக்க வல்ல ஊர்திகளும் அக் காலத்தில் இல்லை. அதனால், வாணிபம் முதலாயின கருதி

வெளிநாடு சென்ற அக்கால ஆடவர் தம் வாழ்க்கைத் துணைவியரை உடன் கொண்டு செல்ல அஞ்சினர். "முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை!" என விதி வகுத்து வாழ்ந்தனர்.

மேற்கூறிய காரணங்களால் தன்னைப் பிரிந்து ஒரு சிறு பொழுதும் வாழ்ந்து அறியா—வாழமாட்டாப் பேரன்பு வாய்ந்த தன் மனைவியை, மனையகத்தே தனித்திருக்க விடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. பொருள் இன்றியமையாதது எனும் உணர்வு, இல்லக் கிழத்தி தனித்திருந்து வருந்தினும், பிரிந்து செல்க எனப் பின்னின்று துரத்தினும், 'என்னைக் காணாளாயின் எல்லையிலாத் துயர் உறுவள்!' என அவள் துயர் காரணமாகவும், இன்று பிரிந்து செல்லும் நான், இனி எத்துணைக் காலம் கழித்து வந்து இவளைக் காண்பனோ!' எனத் தன் துயர் காரணமாகவும், பெரிதும் வருந்திற்று அவன் உள்ளம். இவ்வாறு, அவள்பால் காட்டும் இரக்கமும், தன் ஆற்றாமையும், அவள்பால் அதுகாறும் காட்டாத அன்பை யெல்லாம் காட்டச் செய்தது. அதனால், அவளை இமைப் பொழுதும் பிரியவிடாது பற்றிக் கிடந்து நனிமிகப் பாராட்டலை மேற்கொண்டான்.

கழுத்தை அணி செய்து கிடக்கும் கலங்களாலும், அக் கலங்களைச் சுற்றிக் கிடந்து தொங்கும் முத்து வடங்க ளாலும் பேரழகு பெற்றுத் தோன்றும் அவள் மார்பைப் பல கால் அணைத்து மகிழ்ந்த அவன், அம்மட்டோடு அமையாது, அவளை ஆரத் தழுவிய காலத்தே, கலைந்து பரக்கும் அவள் தலைமயிரைத் தன் கைகளால் பலகால்

கோதி அழகு செய்வானாயினன். முட்களைப்போலும் கூர்மையும், வெண்மையும் வாய்ந்து, வெளிப்படும் அவள் பற்களைப் பார்த்து, 'நாணல் முளை நாணும் வெண் பற்கள்' எனவும், அப்பற்களிடமாகச் சுரக்கும் உமிழ்நீரை உண்டு, 'தேனும் நாணும் தெவிட்டாத் தீ நீர்' எனவும் பாராட்டியவன், அம்மட்டோடு நில்லாது, அவளைத் தழுவியக்கால் நிலைகுலைந்த அவள் அணிவகைகளை, அவையவை இருக்க வேண்டும் இடங்களில் இருக்குமாறு, செப்பம் செய்வானாயினான். மாமை நிற மேனியில் பொன்னிறச் சுணங்கு பெற்றுப் பேரழகு வாய்ந்து விளங்கும் அவள் உடலழகை, வைத்த கண் வாங்காதும், விழித்த விழி இமையாதும் பார்த்துப் பார்த்துப் பேரின்பம் கொண்டவன், அம்மட்டோடு நில்லாது, அவள் நெற்றி யிடத்து அரும்பும் வியர்வைத் துளிகளைத் துடைப்பான் போல், அந்நுதலை அன்பு சுரக்கத் தடவிக் கொடுப்பா னாயினான்.

அவன் நிலை இதுவாக, அவன் அன்பில் புதுமையினைக் கண்டாள் அவன் மனைவி. 'வழக்கத்திற்கு மாறாக அவன் காட்டும் பேரன்பிற்குக் காரணம் யாதோ? அவ் அன்பு நிகழ்ச்சிகளுக்கிடையே மறைந்து கிடக்கும் உண்மை யாதோ? இவ்வாறு பேரன்பு காட்டும் அவன் உள்ளம் எதைக் கருதுகிறதோ? அவன் காட்டும் மிக்க தலையளியின் பின்னால் மறைந்து கிடப்பது யாதோ? புயலுக்கு முன் உண்டாம் அமைதிபோல், பின்னால் வற்றப் போகும் அவ் அன்பின் வெள்ளப் பெருக்கோ இப்பேரன்பு? இன்று காட்டும் அன்பு, நாளை இல்லை

யாய் விடுமோ?' என்றெல்லாம் எண்ணித் துணுக்குற்றது அவள் உள்ளம். அவன் அன்பு குறைந்து விடுமோ என்று எண்ணிய அக்கணமே அவள் கலக்கம் பெரிதாயிற்று.

கண்ணீர் கசியக் கலங்கி நிற்பாளைக் கண்டாள் தோழி. 'கண்ணிற்கும், கருத்திற்கும் ஏற்ற கணவன் அருகிருந்து அன்பு காட்ட அக மகிழ்ந்து வாழ வேண்டியவள், விம்மி விம்மி அழக்கண்டு வியப்புற்றாள் தோழி. தாய் வீட்டாரால் இவள் துயர் உறுதற்கு இல்லை. அவர் தன்னேரில்லாப் பெரு வாழ்வும், இவள் மாட்டுத் தனியன்பும் உடையர். காதல் கொண்டு கைப்பிடித்த கணவன் வீட்டாரோ, கண்ணின் மணியெனக் காத்து வருகின்றனர். மகிழ்ந்து மணந்து கொண்ட கணவனும், அன்பு, ஆற்றல், பண்பு, பொருட்செல்வங்களால் குறை யுடையானல்லன்; அங்ஙனமாகவும் இவள் அழுவா னேன்? அழக் காரணம் யாது?' என்ற சிந்தனையில் சென்றது அவள் உள்ளம்.

அவள் துயர்க் காரணம் அறியும் அவாவோடு அவளை அணுகினாள் தோழி. தன்பால் வந்து, தன் துயர்நிலை கண்டு தானும் துயர் உற்று நிற்கும் தோழிபால், தன் கணவன் தன்பால் காட்டும், வழக்கத்திற்கு மாறான பேரன்பையும் பெருந் தலையளியையும் விளங்கக் கூறித், "தோழி! அவர் பொருளீட்டி வரத் துணிந்து விட்டார்; இன்றோ, நாளையோ போவது உறுதி; இதைச் சின்னாட்களாக, அவர் என்னிடம் நடந்து கொள்ளும் முறைகளே உணர்த்துகின்றன. தோழி! அவரைப் பிரிந்து எவ்வாறு தனித்திருந்து வாழ்வேன்? அவர் என்னை

என்றும் பிரியார் என்ற துணிவினாலன்றோ, என் தாயை மறந்தேன்; தந்தையை மறந்தேன்; சீரும் சிறப்பு மளித்து வளர்த்த செவிலியை மறந்தேன்; ஊரை மறந்தேன்; உடன் ஆடும் தோழியரை மறந்தேன்! இவ்வளவையும் மறந்து வந்துள்ள என்னை, இங்கு வாழ்விப்பது அவர் அன்பு ஒன்றேயன்றோ? அவ்வன்பும் இல்லாயின், யான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்!" என்று கூறி வருந்தினாள்.

கணவன் பிரியின் தான் இன்புற்று வாழமுடியாதே, தனித்துக் கிடந்து துயர்உற வேண்டுமே என்பது மட்டும் அவள் கவலைக்குக் காரணமாகாது. பொருளீட்டிவரச் செல்லும் அவன் போக வேண்டிய வழியின் கொடுமையே அவள் துயர்க்குப் பெருங்காரணமாம். பருத்துத் திரண்ட உடலும், கருத்துச் சுருண்ட மயிரும், புலிப் பார்வையொடு பொருந்தும் கண்களும் உடையராய் ஆறலைக் கள்வர், கொடுமையே உருவாய்க் கையில் வில்லேந்தி, வழியில் வருவாரைக் கொன்று கொள்ளையிடற்காம் வாய்ப்பினை எதிர்நோக்கி நிற்கும் கொடுமையுடையது அவ்வழி. வழிச் செல்வாரின் பொருள்களைக் கொள்ளையிடுவது மட்டுமே அவர் குறிக்கோள் அன்று; கண்ணிற் காணும் மக்கள், தம் கையம்பு தைக்கப் பெற்றுத் துள்ளி வீழ்ந்து துடித்து உயிர் விடும் காட்சியைக் கண்டு உள்ளம் உவப்பதே அவர் குறிக்கோளாம். அதனால், வழியில் வருவாரிடத்தே, தாம் கைப்பற்றிப் பயன் கொள்ளத்தக்க பொருளேதும் இல்லை என்பதை அறிந்த பின்னரும், அவரைப் போகவிடாது அவர் மீது அம்பு ஏவித் துயர் விளைத்து அவர் துயர்நிலை கண்டு மகிழ்ந்து வாழ்வர். வழியில் வரும் ஏழை எளியவரையும், இவ்வாறு,

இரக்கமற்றுக் கொன்று வீழ்த்தும் கொடியோர் வாழும் கொடுமையுடைமையால், பிணந்தின்று வாழும் இயல்பினவாய பறவைகளும், அவண் செல்ல அஞ்சும். அத்தகைய கொடுமை யுடையது அவ்வழி. அவ்வழியில் செல்லும் தன் கணவன், தன்னேரில்லாப் பேராண்மை யுடையனே யெனினும், பலர் கூடி எதிர்க்கும் அக் கள் வரைத் தனித்திருந்து வெல்ல மாட்டாது வருந்துதலும் உண்டாம். மேலும் பொருளற்ற வறியோர்களையே வாட்டி வருத்தும் வன்கண்மையுடையராய் அவ்வாற லைக் கள்வர், பெரும் பொருள் கொண்டு மீளும் தன் கணவனை வறிதே விடார். வளைத்துத் துயர் செய்யவே துணிவர். ஆகவே, இன்று செல்லும் கணவன், வழியில் ஏதம் உறாது மீள்வன் என எதிர்பார்த்தல் இயலாது. இந்த எண்ணமே, அவளைப் பெருந்துயர்க்கு உள்ளாக்கிற்று. தோழிபால் அதையும் கூறித் துயர்உற்றாள் அப்பெண்.

அப் பெண்ணின் துயர்நிலை யறிந்தாள் தோழி. கணவன் உடனிருந்து அன்பு காட்டும்போதே அவள் நிலை இதுவானால், அவள் அவனைப் பல நாள்காறும் காணாது கலங்குமாறு விடுத்துப் பிரிந்து சென்று விடு வானாயின், அவள் உயிர் தரித்திராள் என்பதை உணர்ந்தாள். அதனால், பொருளீட்டும் முயற்சி மேற் கொண்டு வெளிநாடு செல்ல விரும்பி நிற்கும் அவன்பால் சென்றாள்.

ஆங்கு அவன் வெளியூர்க்குச் செல்வதற்காம் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தான். எல்லா வற்றையும் முடித்துவிட்டு இறுதியாகச் செல்வார்க்கு இடைவழியில் உண்டாம் ஏதத்தை விலக்கும் வழித்

துணையாக வேல் ஒன்று வேண்டும் என்பதை உணர்ந்து, தன் வேலை எடுத்துச் செப்பம் செய்து கொண்டிருந்தான். பயனுறுதல் இன்றிக் கிடந்தமையால் படிந்திருந்த மாசு முற்றும் போக, வெண்ணிறம் பெற்று விளங்கிய அவ்வேலை வலக்கையில் ஏந்தி நிற்கும் அவனைக் கண்டாள்.

"வேல் துணையாக வழியைக் கடந்து வேற்றூர் சென்று பொருளீட்டி வரத் துணிந்து நிற்கும் அன்ப! புறப்படுவதன் முன்னர் யான் கூறுவனவற்றைக் கேட்டுப் பின்னர்ப் போவதும் தவிர்வதும் புரிவாயாக. விளங்கக் கூறி விடை பெற்றுச் செல்வது இயலாது என்பதை உணர்ந்து எமக்கு அறிவியாதே போகத் துணிந்தனை! பொருள் தேடிப் போகும் நின் போக்கு எமக்குத் தெரியாது என எண்ணி விட்டனை போலும். பிறவிப் பயனாம் புகழைத் தேடித் தருவது பொருள் என அப் பொருள்மீது கொண்ட பெருங்காதலால், கூறிச் செல்வதாயின், அம் முயற்சிக்குக் கேடு வந்துறுமே என அஞ்சிச், சொல்லாதே செல்லத் துணிந்த நின் ஆர்வம் கண்டு அகமகிழ்கின்றேன். ஆனால், அன்ப! நீ அறிவித்திலை யெனினும், அதை யாம் உணர்ந்து கொண்டோம். பேரன்புடையாளைப் பிரிந்து, 'சேணெடுந் தூரம் செல்கின்ற யான், என்று வந்து இவளைக் காண்பேனோ!' எனும் ஏக்கத்தால், நீ அவள்பால் காட்டிய அளவிற்கு மிஞ்சிய பேரன்பு, நின் பிரிவை எமக்கு உணர்த்திவிட்டது. என்றேனுமொரு நாள் நீ பிரிந்து போய்விடுவாய் என்பதை உணர்ந்து கொண்டாள் நின் காதலி; அதனால் பெருந்துயர் கொண்டாள். அவள்

*உள்ளம் படும் பாட்டினை நீ அறிந்திலை. தன் உயிர், உடல், உடைமை யெல்லாவற்றையும் ஒருங்கே இழந்தவள்போல் பெருந்துயர் கொள்கிறாள் அவள். பிரிந்து விடுவாய் என்பதை உணர்ந்தே, இவ்வாறு துயர்உறுபவள், நீ பிரிந்து சென்றுவிட்ட பின்னர் உயிர் வாழ்வள் என எதிர் நோக்கல் இயலுமோ? அந்நிலையில் அவள் உயிர் வாழாள். நீ பிரிந்த அந்நிலையே, அவள் உயிர் அவள் உடலில் நில்லாது, நின்னைத் தொடர்ந்து போய்விடும். இது உறுதி. ஆகவே, அன்ப! அவளோடு கூடி மேற் கொள்ளும் இல்லற வாழ்வே இன்பம் நிறைந்ததாகும். இறவாப் புகழ் உடையதாக்கும் பொருளை ஈட்டி வைத்தல் வேண்டும் எனும் ஆர்வத்தில், அவ்வில் வாழ்க்கைத் துணையாம் அவளை இழந்துவிடும் அறியாச் செயலை மேற்கொண்டு விடாதே; பொருள் கருதிச் செல்லும் நின் போக்கினை, இப்போது கைவிடுவாயாக!" என வேண்டிக் கொண்டாள். அவள் வேண்டுகோளை அழகுற எடுத்துக் கூறுவது இப்பாட்டு:*

"வலிமுன்பின், வல்லென்ற யாக்கைப், புலிநோக்கின்,
சுற்றமை வில்லர், சுரிவளர் பித்தையர்,
அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர், தாம்
கொள்ளும் பொருளிலராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார்; தொடர்ந்து உயிர்வெளவலின்;

புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை
வெள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்
உள்ளினர் என்பது அறிந்தனள் என் தோழி,
'காழ்விரி வகையாரம் மீவரும் இளமுலை
போழ்துஇடைப் படாஅமல் முயங்கியும் அமையார், என்

தாழ்கதுப்பு அணிகுவர் காதலர்; மற்றுஅவர்
சூழ்வதை எவன்கொல்? அறியேன்!' என்னும்;
'முள்உறழ்முளை எயிற்று அமிழ்து ஊறும்தீ நீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனஉரைத்தும் அமையார்; என்
ஒள்இழை திருத்துவர் காதலர்; மற்றுஅவர்
உள்ளுவது எவன்கொல்? அறியேன்!' என்னும்;
'நுண்எழில் மாமைச் சுணங்கு அணிஆகம் தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார்என்
ஒள்நுதல் நீவுவர் காதலர்; மற்றுஅவர்
எண்ணுவது எவன்கொல்? அறியேன்!' என்னும்;

எனவாங்கு,
'கழிபெரும் நல்கல் ஒன்று உடைத்து' என என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள்; ஒருநாள்நீர்
பொழுது இடைப்பட நீப்பின், வாழ்வாளோ?
ஒழிகினிப் பெரும! நின்பொருட்பிணிச் செலவே."

*பொருள்வயின் பிரியக் கருதிய தலைவனுக்குத் தோழி, தலைவி, அவன் செல்வதை அறிந்தவாறும், அவள் ஆற்றாமையும் உணர்த்திச் செலவு ஒழிவாயாக என வேண்டிக் கொண்டது இது.*

1. முன்பு—வலியை; வல்லென்ற—திண்ணிய; 2. சுரி வளர் பித்தை—சுருண்டு வளர்ந்த மயிர்; 3. அற்றம்—ஏற்ற காலம்; அல்கும்—காத்திருக்கும்; 4. வம்பலர்—வழியில் புதியராக வருவார்; 5. காண்மார்—காணுதற் பொருட்டு 6. புள்—பறவை; புலம்பு—துன்பம்; ஆர்இடை—கடத்தற்கு அரிய வழி; 8. உள்ளினிர்— எண்ணங் கொண்டுள்ளாய்; 9. காழ்—முத்துமாலை; மீவரும்—கிடந்து அசையும்; 10. முயங்கியும்—தழுவியும்; 11. கதுப்பு—தலை மயிர்; அணிகுவர்—செப்பம் செய்து அழகு படுத்துவர்; 12. சூழ்வது— எண்ணுவது; 13. உறழ்—ஒத்த (வடிவால் அதனை வென்ற); எயிறு—பற்கள்; 15.

இழை—அணிகள்; 16. உள்ளுவது—எண்ணுவது; 17. நுண் எழில்—பேரழகு; மாமை—மகளிர் மேனிக்கு அழகுதரும் பொன்னிறம்; சுணங்கு—அம்மேனியில் ஆங்காங்கே தோன்றும் அழகுத் தேமல்; 22. கழிபெரும் நல்கல்—மிக்க பேரன்பு; ஒன்று உடைத்து—தனக்குப் பின்னால் நிகழ்த்துவதொரு செயலை உடைத்து; 23. அழிவு—உள்ளத் துயர்; எவ்வம்—வருத்தம்; எவ்வத்தள்—வருத்தத்தை உடையள்; போழ்து இடைப்படாமல் முயங்கியும் வருந்துவாள், பொழுதிடைப்பட நீப்பின் வாழ்வாளோ? எனக் கூறும் நயம் அறிக.

# 4

## பிரியின் இறப்பன்

காதல் பெரிதா கடமை பெரிதா என்பதைத் துணிந்து முடிவு செய்யமாட்டாத பருவம் உடையான் ஓர் இளைஞன். மனம் விரும்பி மணந்து கொண்ட மனைவியோடிருந்து, இல்லறப் பயனாம் இளமை இன்பத்தை நுகரத் தொடங்கியவன்; அவ்வின்பத்தை ஆரத் துய்த்து மனநிறைவு பெறாத இளமையுடையவன்; அதே சமயத்தில் பொருள் ஈட்டி இரவலர்க்கு ஈதலால் பெறும் புகழாற் பெறலாம் பேரின்பப் பெருமையினையும் உணர்ந்தவன். இளமைக் காலத்து இன்ப உணர்வு ஒருபால் ஈர்க்க, இறவாப் புகழின்பால் சென்ற பற்றுள்ளம் பிறிதொரு பால் ஈர்க்க, காதலைக் கருதுவதா? கடமையை மதிப்பதா? இன்பத்தில் திளைப்பதா? புகழ் பெற முயல்வதா? என்பனவற்றுள் எதையும் துணிய மாட்டாது தடுமாறும் நிலை, அவன் நிலை.

அவன் இளைஞனே ஆயினும், அவ்விளமைக் காலத்திலேயே கற்க வேண்டிய நூல்களைக் கற்றும், கேட்க வேண்டிய அறவுரைகளைக் கேட்டும் நிறையறிவு பெற்றிருந்தானாதலின், காதலும், அக் காதற்பயனாம் இன்பமும் தன்னலம் குறுகிய நோக்குடைய, கடமையும், அதைக் குறைவற ஆற்றிப் பெறும் பொருளால் பெறலாம் புகழும் தன்னலத்தோடு பிறர் நலனும் ஒருங்குடைய; பரந்த நோக்குடைய என்பதை உணர்ந்திருந்தான். அதனால் காதலை ஒரு சிறிது மறந்து, கடமையினை மேற்கொள்ளத் துணிந்தான்; இன்பம் தரும் இல்லாளினும், இறவாப்புகழ் தரும் பொருளே சிறந்தது எனக் கருதினான். கருதியதோடு நில்லாது, அப் பொருளை விரைந்து பெறுவான் வேண்டி, அது கிடைக்கும் வெளியூர்க்கு அப்போதே செல்லத் துணிந்தான்.

அஃதறிந்தாள் அவன் மனைவியின் தோழி. அவள், அவன் மனைவியின் இயல்பறிந்தவள். அவனையும் அவளையும் தொடர்பு படுத்தும் அன்பின் பெருமை யறிந்தவள். அவள், கணவன் உடனிருந்து அன்பு காட்ட அகமகிழ்ந்து வாழ்பவள்; அந்நிலையில், அவளுள்ளம் கொள்ளும் ஆர்வம் மிகுதியால், அவள் உருவத் தோற்றம், முன்னினும் பேரழகு பெற்றுத் தோன்றும். அத்தகையாள், அவன், அவளை விடுத்து, ஒருநாள் பிரிந்திருப்பனாயினும், அந்நிலையே உள்ளம் உடைந்து போவாள்; தான் பண்டு பெற்றிருந்த-அவன் தொடர்பறியாக் காலத்தே பெற்றிருந்த-இயல்பான அழகினையும் இழந்து விடுவாள்; அவனைப் பிரிந்து அவள் வாழ்தல் இயலாது; அவன் பிரியின், பிரிந்த அந்நிலையே, ஞாயிறு மறைய, மறையும்

ஒளியேபோல், அவள் உயிர், அவள் உடலை விட்டுப் பிரிந்து விடும். இவ்வுண்மையை உணர்ந்தவள் தோழி. மேலும் அவ்விருவர்தம் நல்வாழ்வில் நாட்டமுடைய அவள், அவர்கள் வாழ்வு வாழ்வற்றுப் போக, அவர்கள் வாழ்வில் அவலம் அடியெடுத்து வைக்கக் காணப்பொறாள். அதனால் பொருளீட்டும் முயற்சி மேற்கொண்டிருந்த அவன்பால் சென்றாள்.

"அன்ப! கொற்றவன் வெற்றி குறித்தும், அவன் பிறந்த பெருநாள் குறித்தும், அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் கடவுளர் குறித்தும், இளவேனிற் காலத்து இன்பம் குறித்தும், புதுப்புனல் புகுந்து விளையாடல் குறித்தும் விழா மேற்கொள்ளும் பேரூர்களின் அழகு, அவ்விழா நடைபெறும் நாட்களில், விழா முன்னிட்டு நிகழும் ஆடல் பாடல்களால், அழகிய ஒப்பனைகளால், அவற்றைக் கண்டும் கேட்டும் மகிழ வரும் பல நாட்டு மக்கள் வெள்ளத்தால், என்றும் எங்கும் எழும் பல்வேறு பேரொலிகளால் பன்மடங்காகித் தோன்றும். அத்தகைய பேரூர்கள், ஆங்கு விழாத் தொடங்கி நிகழ்ந்து முடிந்து போயிற்றாக, அது கழிந்த மறுநாள், விழாக் குறித்துச் செய்த சிறப்பெல்லாம் மறைய, விழாக் காண வந்து கூடிய மக்கள் எல்லாம், தத்தம் நாடுகட்குச் சென்றுவிட்டாராக, அந்நிலையில், பண்டு இயல்பாகப் பெற்றிருந்த அழகினை யும் இழந்து பொலிவு குன்றித் தோன்றும். அத்தகு அவல நிலையினை நீயும் கண்டிருப்பை.

"ஆளும் அரசர், தாமும் அறம் அறிந்தவராய், அவ்வறமே உரைக்கும் அமைச்சரையும் உடன் கொண்டு நாடாளும் காலத்தில், பசியும் பிணியும் பகையும் அற்று,

வனப்பும், வளனும், பண்பும் பாராட்டும் பெற்று விளங்கும் நாடுகள், அவ் அரசர் அறம் திரிந்து, கெடுவழி காட்டும் கொடியோர் நெறிநின்று, குடிபொன்றக் கோல் புரியும் கொடுங்கோலராய் மாறியவிடத்து, நாட்டு மக்கள், 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிற் கடும்புலி வாழும் காடே நன்று', எனக் கருதித், தாம் பிறந்து வாழ்ந்த நாட்டை மறந்து, பிற நாடுகட்குச் சென்றுவிடவே, வாழும் மக்களையும், அவரை வாழ வைக்கும் ஆக்களையும் ஆனேறுகளையும் இழந்து, ஆறலைகள் வரும், அவர் கொன்று குவித்த பிணந்தின்று மகிழும் பேயும் திரியும் பாழிடமாய் மாறிவிடும்; நாடு காடாகும் அக்கொடுங் காட்சி நினக்குப் புதிதன்று.

"தண்ணீர் நிறைந்து விளங்கும் தாமரைக் குளமொன்றில், இலைகளும், மலர்களும் எங்கும் நிறையத் தழைத்துப் படர்ந்த தாமரைக் கொடியில் மலர்ந்து, மணந்து, மனம் நிறை மகிழ்ச்சி தந்த மலர்கள், அக் குளத்தில் நீர் வற்றியவுடனே வாடி, வனப்பிழந்து போய்விடும். இக்காட்சியையும் நீ கண்டது உண்டு.

"ஊருக்கு அழகளிப்பது விழா; நாட்டிற்கு வாழ் வளிப்பது நல்லரசு; தாமரை மலர்க்கு உயிர் அளிப்பது தண்ணீர்; அதைப்போல் நின் காதலிக்கு அழகும், அரிய வாழ்வும், உடற்கு உரம் ஊட்டும் உயிரும் அளிப்பவன் நீ. விழா அற்ற ஊர் வனப்பிழக்கும்; நல்லரசிழந்த நாடு வாழ்விழக்கும்; தண்ணீர் அற்ற தாமரை மலர் உயிர் இழக்கும். அதைப் போல், நின் அருள் இழப்பின், நின் காதலியின் வனப்பு வாடும்; வாழ்வு பாழாகும்; அவள் உயிர் இழப்பள். வாழ்விழந்து வனப்பிழக்கும் ஊர்கள்,

மீண்டும் விழாப் பெற்று, அவ் வனப்பினைப் பெறுதலும் உண்டு. நல்லரசிழந்து தம் நலன் இழந்த நாடுகள், பின்னர் நல்லரசு பெற்று, இழந்த தம் நலனை மீட்டுப் பெறலும் உண்டு. தண்ணீர் வற்றிய குளத்தில் தழைத்த தாமரை மலர், ஓர் இராப் பொழுதளவும் வாடாமல், வனப் பிழக்காமல் விளங்குவதும் உண்டு. ஆனால், நீ பிரிந்து சென்றுவிடின், நின் அன்பினைப் பெற மாட்டாது வருந்தும் நின் மனைவியின் உயிர், நீ பிரிந்த அன்றே, அவள் உடலை விட்டுப் பிரிந்து போய்விடுமாதலின், நின் அருளை இழந்தமையால் இழந்த அவள் வனப்பையும், வாழ்வையும் மீண்டும் பெறுதல் இயலாது. இதை நீ உணர்தல் வேண்டும்.

"இதை உணராது, இளமைக் காலத்தில், இவளைப் பிரியாதிருத்தலால் பெறும் இன்பத்தினும், பிரிந்து போய்த், தேடிப்பெறும் பொருளே சிறந்தது என நீ எண்ணி விடுவையெனின், அந்நிலையில் யாங்கள் செயலாற்று வருந்துவதல்லது, செய்யக் கூடியது ஏதும் இல்லை. வாணிபம் கருதி வங்கம் ஏறிச் செல்வார், கடல் இடையே, கொடிய பேய்க் காற்றுத் தோன்றித், தம் கலத்தை நிலை குலைத்து அலைக்கழித்த வழி, அம்மக்கள், தாம் மேற் கொண்டு வந்த முயற்சி முற்றுப்பெறாது முடிந்துபோவது கண்டு, அக்காற்று ஈர்த்துச் செல்லும் திசைகளிலெல்லாம் ஓடி ஓடி உருக்குலையும் அக்கலத்தில் செயலற்றுக் கிடப்பதல்லது, அந்நிலையில் செய்யக் கூடியது ஏதும் இல்லை என்பதைக், கடல் வாணிபம் கருதிக் கலம் ஊர்ந்து சென்று பழகிய நீ அறிந்திருப்பாயன்றோ? அதைப் போல், எம் வாழ்க்கைத் தோணியை, நின் பிரிவெனும்

பேய்க்காற்றுத் தோன்றி மோதுங்கால், யாமும் அப்பேய்க் காற்றால் அலைப்புண்டு, இறுதியில் உடைந்து கவிழப் போகும், அத்தோணியில் செயலற்றுக் கிடந்து, அத் தோணியோடு உடன் அழிவதல்லது வேறு எதையும் செய்யக்கடவேமல்லேம். இதையும் நீ உணர்தல் வேண்டும்.

"மேலும், நீ கடந்து செல்ல வேண்டிய அப்பாலை வழி, ஏதம் ஏதும் இன்றி, விரைந்து சென்று மீளலாம் வழிநலம் வாய்ந்ததன்று. பனைபோல் பருத்த கால்களை யுடையவாய யானைக்கூட்டமும், பிற காட்டு விலங்குகளும், அக்காட்டு விலங்குகளினும் கொடியராய், அக்காட்டுவழி வருவாரை அலைத்து உயிர் வாழும் மறவர்களும் திரிந்து திரிந்து, அப்பாலை நிலத்துப் புதர்களெல்லாம், இடையிடையே அழிந்து போக, ஆங்குப் பலப் பல வழிகள் தோன்றிக், கடந்து செல்ல வேண்டிய கருதிய இடத்திற்கு இட்டுச் செல்லும் நல்ல வழி எது என்பதை அறிய மாட்டாது மயங்க வைக்கும் கொடுமையுடையது அந்நிலம்; ஆண்டுச் செல்லும் நீ, காதல், கடமைகளில் சிறந்தது எது, இன்பம் தரும் இளமை, புகழ் தரும் பொருள் இவற்றுள் சிறந்தது எது என்பதை அறியமாட்டாது ஈண்டு மயங்கிய நீ, ஆண்டும் நல்லவழி எது என்பதை அறிய மாட்டாது மயங்கிக், காற்று ஈர்த்துச் செல்லும் திசைகளிலெல்லாம் ஓடி உழன்று அழியும் கலம் போல், அக்காட்டில் காணும் வழியிலெல்லாம் திரிந்து திரிந்து கலங்குவதும் உண்டாம். இதையும் நீ உணர்தல் வேண்டும்.

"அவ்வாறன்றிப் பொருளினும் இளமையே சிறந்தது; கடமையினும் காதலே சிறந்தது; ஆகவே, அக்காதற் பயன்

*அளிக்கும் இவளே சிறந்தவள் என்னும் உண்மை உணர்வு, நின் உள்ளத்தின் ஒருபால் உண்டாமாயின், அந்நிலையில் செல்லும் நின்னை, யான் கூறும் இதுபோலும் உண்மை உரைகள் தடுத்து நிறுத்தாவாயினும், நாள்மீன், கோள்மீன் போலும் நிமித்தங்கள், பொருள் தேடிச் செல்லும் பணிக்குப் பொருந்தாதனவாகி, நின்னைப் போகாவாறு தடுத்து நிறுத்துவனவாக!" என்பன கூறிப், பொருள் கருதிப் பிரியக் கருதிய அவன் எண்ணத்தைக் கெடுத்து, அவர் வாழ்வின் துன்பம் துடைத்துத் துணை புரிந்தாள் தோழி. அதைக் காட்டுவது இச்செய்யுள்:*

"பாஅல் அம்செவிப் பணைத்தாள், மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறு அதர்பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்,
இறந்து நீர்செய்யும் பொருளினும், யாம்உமக்குச்
சிறந்தன மாதல் அறிந்தனி ராயின்,

நீள்இரும் முந்நீர் வளிகலன் வெளவலின்,
ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதைக்,
கேள்பெருந் தகையோடு எவன்பல மொழிகுவம்?
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே;
கல்எனக் கவின்பெற்ற விழவு ஆற்றுப் படுத்தபின்

புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ?

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவாளோ?

ஓர்இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ?
எனவாங்கு,

பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந்நாளோ நெடுந்தகாய்! நீ செல்வது?
அந்நாள்கொண்டு இறக்கும் இவள் அரும்பெறல் உயிரே.”

*தலைவன், பொருள் தேடிப் பிரியக் கருதியுள்ளான் என்பது அறிந்த தோழி, அவன்பால் சென்று, நீ பிரிந்த அன்றே இவள் இறந்து படுவள், ஆகவே, நின்னை நாளும் கோளும் தடுத்து நிறுத்துமாக எனக் கூறிச் செலவழுங்கு வித்தது இது.*

1. பால்—பகுதி, 2. மால்—மதமயக்கம்; செவியும் தாளும், மதமும் உடைய யானையொடு, மாநிரையும், மறவரும் மயங்கி என மாற்றுக. 3. தூறு—புதர்; அதர்பட்ட—வழியாகிய; 5. முந்நீர்—கடல்; வளி—புயல். 7. ஆள்வினைக்கு அழிந்தோர்—முயற்சி பாழாதல் கண்டு மனம் உடைந்தவர்; 8. கேள்—பெருந்தகை; கணவனாகிய பெரிய தகுதிப்பாடுடையான்; எவன்பல மொழிகுவம்—எவ்வாறு பல சொல் வழங்கித் தடுக்க வல்லோம்; 9. தகைத்தல்—தடுத்தல்; தகைமே—தகையும் தடுத்தலைச் செய்யும்; நாள் மீனும், கோள்மீனும் என மாற்றுக. நாள்—அசுவனி; பரணி முதலாயின; கோள்—ஞாயிறு திங்கள் முதலாய ஒன்பது; 10. கல்என— கல்லென்னும் பேரொலி எழ; ஆற்றுப்படுத்த பின்—நடந்து கழிந்த பின்னர்; 11. புல்லென்ற—பொலிவு இழந்த; புலம்பு—தனிமைத் துன்பம்; 12. அலைபெற்ற—அழிந்த; 13. பைதல்—துன்பம்; ஓர் இராவைகல்—ஓர் இராக் காலத்தில்; 17. பொய்ந்நல்கல் புரிந்தனை— அன்பு காட்டுவான்போல் பொய்யே நடித்தனை; புறந்தரல்— பாதுகாத்தல்; பொய்ந்நல்கல் புரிந்தனையாய், புறந்தரலைக் கைவிட்டுச் செல்வது எந்நாளோ? என்க.

# 5

## துன்பத்தில் இன்பம்

**க**ணவன் பொருளீட்டும் முயற்சி மேற்கொண்டு, வெளிநாடு செல்ல விரும்பியுள்ளான் என்பதை உணர்ந்தாள் ஒரு பெண். அவன்பால் பேரன்புடையாள் அவள்; அவன் அன்பே தன்னை வாழ்விக்கும் வழித்துணையாம் எனக் கொண்டவள்; அதனால், அவனை இமைப் பொழுதும் பிரியாது, என்றும் அவன் அண்மையில் இருப்பதையே விரும்புவாள்; ஆனால், அவ்வாறு விரும்பும் அவள், தன் கணவன் தனக்கே உரியவன்; அவனால் பயனுறுவாள் தான் ஒருத்தியேயாதல் வேண்டும்; தன் நலன் ஒன்றே அவன் குறிக்கோளாதல் வேண்டும்; தனக்கு இன்பம் அளிப்பது தவிர அவனுக்கு வேறு வினையில்லை-இருத்தல் கூடாது எனக் கருதும் கருத்திழந்தவளல்லள். மாறாகத் தன் கணவன் உலகெலாம் போற்ற வாழும் உயர்ந்தோனாதல் வேண்டும்; உலகத்தில் துயர் உறுவார் ஒருவரும் இலராதல் வேண்டும் எனக் கருதும் உயர்ந்த உள்ளமும், அவர் துயர்

துடைத்து அந்நிலையை அளிக்கவல்ல பெரும்பொருளும், அப் பெரும் பொருளை ஈட்டவல்ல பேராற்றலும் உடையனாதல் வேண்டும்; அதுவே தன்னுடையவும், அவனுடையவும் வாழ்வின் பயனும், குறிக்கோளுமாதல் வேண்டும் எனக் கருதும் பண்புடையாள் அப்பெண். அதனால், தன் கணவன் செல்வம் சேர்க்கும் சிந்தையனாய், அது கிடைக்கும் அயல் நாடு நோக்கிப் போகத் துணிந்ததும், அவன் பிரிவு தன்னைப் பெருந்துயர்க்கு உள்ளாக்கும் என்பதை உணர்ந்தும், அவனைத் தடுத்திலள்; அதற்கு மாறாக, வருவார்க்கு வரையாது வழங்கி வாழும் தம் வளமார் வாழ்விற்கு வேண்டும் பெரும் பொருளை ஈட்டிவர, அவன் பிறநாடு செல்லுதலை விரும்பி வரவேற்றாள். ஆனால், அவ்வாறு விரும்புவாள் அவன் அன்பினையும் இழவாது பெறுதற் பொருட்டுத் தன்னையும் உடன் கொண்டு செல்லுதலை விரும்பினாள். அதனால் புறப்படுதற்காம் முன்னேற் பாடுகளை மேற்கொண்டிருந்த அவன்பால் சென்று, "அன்ப! பொருள் தேடிப் போங்கால், அடியாளையும் உடன் கொண்டு செல்வாயாக!" என வேண்டிக் கொண்டாள்.

அவள் வேண்டுகோள் அவனுக்கு வியப்பினைத் தந்தது. 'தனித்திருந்து யான் வருந்த,' நீ பிரிந்து போவது பொருந்தாது!' எனக் கூறித் தடுத்தற்கு மாறாகப், போக உடன்படும் அவள் மனப்பண்பு கண்டு மகிழ்ந்தான். ஆனால், அவள் வேண்டுகோளினை அவ்வாறே ஏற்று, அவளையும் உடன் கொண்டு செல்ல அஞ்சினான். இதனால், அவனுக்கு அவள்மீது அன்பில்லை என்பது

கருத்தன்று. அவளைப் போன்றே, பிரிந்து வாழும் வாழ்வை அவனும் வெறுத்தான்; பிரிவுத் துயரைப் பொறுத்தல் அவனாலும் இயலாது. ஆயினும் பொருளின் இன்றியமையாமை அவனை வெளிநாட்டிற்குத் துரத்திற்று. வெளியூர் செல்லத் துணிந்த அவன், அவளை விடுத்துத் தனித்துச் செல்வதைப் பெரிதும் வருந்தியே மேற்கொண்டான். அங்ஙனமாகவும் அவள், அவன் போக்கினைத் தடுக்காது, அவனோடு உடன்வந்து, அவனுக்கு இடையறா இன்பம் ஊட்ட முன்வருதலை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக, மறுத்தான். அவள்மீது உள்ள வெறுப்பன்று அதற்குக் காரணம். அவள்மீது கொண்டுள பேரன்பு காரணமாகவே அவள் உடன் வருவதை வெறுத்தான்.

அவன் செல்லும் நாட்டிற்கு இடையில் உள்ள வழிகள் நனிமிகக் கொடுமை வாய்ந்தவை. ஒருபால் உயர்ந்த மலைகளும், ஒருபால் அடர்ந்த காடுகளும் கிடக்க, இடையே சிறுமலைகளும் குறுங்காடுகளும் கலந்து தோன்றும் அவ்வழி, கடத்தற்கு அருமை வாய்ந்தது. மேலும் தான் செல்லும் காலமோ கோடைகாலம். பசும்பல் மேய்ந்து பழகிய மரையாக்கள், கோடையின் கொடுமையால் புல் அற்றுப் போகவே வருந்தித் தம் வயிற்றுப் பசி தீரக் கற்றாழை இனத்தைச் சேர்ந்தனவும், தமக்கு உணவாகும் தகுதியற்றனவுமாய பரல்களைத் தின்று உயிர் வாழும் கொடுமையுடையது அக்காலம். அவ்வழியினைக் கடந்து செல்வார் ஆங்கு வாழ் ஆறலைக் கள்வர், தாம் கொண்டு செல்லும் கைப்பொருளைக் கவர்வான் வேண்டி ஏவிய அம்பேறுண்டு ஒருபால் உடல்

வருந்த, கோடையின் கொடுமையாலும், அக்கொடி யோரின் கொடுஞ்செயலாலும் மயங்கி வீழ்ந்து நீர் வேட்கையுற்று, அவ்வேட்கை தணிக்கும் தண்ணீர் ஆங்கு யாண்டும் கிடைக்கப் பெறாமையால், துயர் தாளாது துளிர்த்து வீழும் தம் கண்ணீர்த்துளிகளையே தம் நாவால் சுவைத்துத் தம் நாவறட்சியை ஒருவாறு அடக்கி உறுதுயர் கொள்ளும் கொடுமையுடையது அக்கானற் பெருவழி.

அக்கொடிய வழியைக் கடந்து செல்வது, தன்னைப் போலும் ஆடவர்க்கே இயலாது என்றால், இவள் போலும் மகளிரால் இயலுமா? மனையகத்தே, மனம் விரும்பும் தோழியர் உடன் இருந்து பணிபுரிய, மகிழ்ந்திருக்க வேண்டிய மெல்லியலாளாய இவள், ஆங்கு வந்து அத்துன்பத்தைத் தாங்குவாளல்லள்; அவள் ஒருவாறு அதைத் தாங்கிக் கொள்ளினும், அக்காட்சியை, ஆங்குத் தண்ணீர் பெறமாட்டாது தளரும் கொடுமையைக் கண்டு வினைமேற் செல்வது தன்னால் இயலாது. அதனால், காட்டின் கொடுமையினையும், காலத்தின் கொடுமை யினையும் அவளுக்கு எடுத்துக் கூறினான்.

அக்கொடுமையை எடுத்துக்காட்டி, 'ஆகவே, ஆங்கு உன்னை அழைத்துச் செல்வது தகாது!' எனக் கூற எண்ணினான் அவன். ஆனால், அதை அவன் கூறுதற்கு முன்னரே, காட்டின் கொடுமைகளைக் கூறி வரும்போதே, அவன் கருத்து அதுவாதல் அறிந்து கொண்டாள் அப்பெண். அதனால், அவனை மேலே பேசவிடாது வாயடைத்துவிட்டு, "அன்ப! நின்னோடு வரின், ஆங்கு அக்கொடுமை தாளாது யானும் வருந்துவன், நின்னையும் வருத்துவன் என்று கருதுகின்ற நீ, என்னோடு

இந்நாள்வரை பழகியும் என் இயல்பினை முற்றும் அறிந்திலை என்றே யான் எண்ணுகின்றேன். நின்னோடு வாராது, நின்னைப் போகவிடுத்துத் தனித்துக் கிடக்கும் யான், வளமும், வசதியும் மிக்க பெருமனையுள் வாழினும், நின் பிரிவுத் துயர் பொறாது உயிர் இழப்பன்; அதை நீ அறிவை; அறிந்திருந்தும் அறியாதான் போல், 'பிரிந்து வாழும் மனைவாழ்வு பேரின்பமாம்; உடன்வந்து மகிழும் பாலைநில வாழ்வு பெருந்துன்பமாம்; ஆகவே உடன் வருதல் நன்றன்று!' என்று கூறுகின்றனை. அவ்வாறு கூறுதல், பேரன்பு வாய்ந்த நின் பண்பிற்குப் பொருந்துவ தன்று. அன்ப! நின் அன்பினைப் பெற மாட்டாது தனித்திருந்து துயர் உறுதற்காம் விட்டுப் பிரிதலைக் கருதாது, செல்லும் வழியில், காலக் கொடுமையாலும் காட்டின் கொடுமையாலும் துயர் உறும் நினக்குத் துணையாய் நின்று, நின் துன்பத்தில் பங்கு கொண்டு நின் துயர் துடைப்பதே எனக்குப் பேரின்பமாம். அதுவே, கணவனுக்கு மனைவியாற்றும் கடனுமாம். நீ ஆங்குத் துயர் உற, யான் மட்டும், மனையகத்தே மகிழ்ந்து வாழ்வதில் எனக்கு இன்பம் இல்லை; மாண்புடைய மனையாளுக்கு அது மரபுமாகாது. ஆகவே, அன்ப! நின்னோடு என்னையும் உடன் கொண்டு செல்ல உளங்கொள்வாயாக!" என வேண்டிக் கொண்டாள். அம்மனையாளின் மாண்பினை உரைப்பது இப்பாட்டு:

"மரையா மரல்கவர; மாரி வறப்ப,
வரைஒங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரைஅம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உள்நீர் வறப்பப் புலர்வாடும் நாவிற்குத்

தண்ணீர் பெறாஅத் தடுமாற்றத்து அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு என்றால்,
என்நீர் அறியாதீர்போல, இவைகூறின்
நின்நீர அல்ல நெடுந்தகாய்! எம்மையும்
அன்பு அறச் சூழாதே, ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின், அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு?"

*தலைவன் செலவுக் குறிப்பறிந்த தலைவி, என்னையும் உடன் கொண்டு செல்க எனக் கூறியது இது.*

1. மரைஆ—காட்டுப்பசு; மரல்—கற்றாழை இனத்தைச் சேர்ந்த ஒருவகைச் செடி; 2. வரை—மலை; சுரம்—காடு; ஆர் இடை—கடத்தற்கு அரிய வழி; 3. சுரை அம்பு—சுரையோடு கூடிய அம்புகள்; மூழ்க—அழுந்த; சுருங்க—உடல் தளர்ந்து; புரையோர்—குற்றமே புரியும் கொடிய ஆறலைக்கள்வர்; செல்வோர், புரையோர்தம் சுரையம்பு மூழ்கச் சுருங்கி என மாற்றுக; 4. உள்நீர்—வயிற்றகத்து நீர், புலர்வாடும்—நீர்வேட்கை மிக்க, வறட்சி கொண்ட; 7. என் நீர்—என் நீர்மை, பிரிந்து உயிர் வாழா என் இயல்பு; நின் நீர—நின் இயல்பிற்கு ஏற்ற; 9. அன்பு அறச் சூழாது—அன்பு அறும்படி விட்டுப் பிரிதலைக் கருதாது; 10. நாடின்—உடன் கொண்டு செல்வதை நினைப்பின்.

# 6

# பொருள் உயிர் தருமோ?

ஓர் ஆவிற்கு இருகோடு தோன்றினாற் போல், ஓர் உயிரும் ஈர் உடலுமாய் இணைபிரியாது அன்பால் ஒன்றி வாழும் இளங்காதல் இருவர், தமிழகத்துப் பேரூர் ஒன்றில் பெருவாழ்வு வாழ்ந்திருந்தனர். அவர்கள் வாழ்வில் வறுமையில்லை; பிரிவறியாப் பேரன்புடைமையால், இன்பம் நிறைந்த இல்லற வாழ்வு மேற்கொண்ட அவர்கள், சிறந்த பல பண்பாடும் பெற்றிருந்தார்கள். கணவன் காதற் சிறப்புணர்ந்தவன்; ஆனால், அக் காதல் மயக்கத்தால் கடமையை மறப்பவனல்லன். மனைவி மகிழ மனையகத் திருந்து வாழும் வாழ்க்கையில் மகிழ்ச்சியுளது எனினும், அஃதொன்றே வாழ்வின் பயனாகி விடாது. அரண் போலும் அழகிய பெரிய மனையில், முன்னோர் ஈட்டி வைத்துள்ள மலை போலும் மாநிதிக்கிடையே, மனைவி யோடிருந்து வாழும் வாழ்வு, சிறந்த பேறுடையதே யெனினும், அது விழுமிய வாழ்வு என வாழ்த்துதற்கு உரியதாகிவிடாது. தான் மகிழ்ந்து வாழ்தலைப் போன்றே,

ஏனையோரும் மகிழ்ந்து வாழ்வதற்கு வழி செய்து வாழும் வாழ்வே விழுமிய வாழ்வாம். அவ்வாழ்வு, வறுமையால் வாடித் தன் வாயிற்கண் வந்து இரந்து நிற்பார்க்கு வரையாது வழங்குவதால் வருவதாம். அவ்வாறு வழங்கி வாழ்வதற்கு வற்றாப் பெருஞ்செல்வம் வேண்டும். அத்தகு பெருஞ் செல்வத்தைத் தேடிப் பெற வேண்டிய நிலை இன்றாக, முன்னோர் ஈட்டி வைத்துச் சென்றிருப்பினும், அப்பொருளால் தான் பயன் துய்த்தல் புகழாகாது; அஃது அவர்க்குப் புகழும், தனக்குப் பழியுமாம். ஆகவே, தானே பொருளீட்டித் தக்கார்க்கு வழங்கித் தன்னேரில்லாப் புகழ் பெறுதல் வேண்டும்; அதுவே வாழ்வின் பயனாம், என்று எண்ணும் உயர்ந்த உள்ளம் உடையான் அவ்விளைஞன். அதனால், தான் அரிதின் முயன்று அடைந்த, தன் ஆருயிரனைய மனைவியைப் பிரிந்து பொருள் தேடிவரத் துணிந்தான்.

துணிந்த அவன், தன் கருத்தினைத் தன் காதலிக்கு உரைத்தானல்லன்; உரைத்துச் செல்வது இயலாது. தான் பிரிதலை அறியின், அது பொறாது, அழும் அவளை, அந்நிலையில் விட்டுச் செல்லும் துணிவு தனக்கு வாராது. ஆகவே சொல்லாது செல்வதே நன்று என எண்ணினான். அதனால், போதற்கு வேண்டும் ஏற்பாடுகளை, அவள் அறியாவாறே மேற்கொண்டான். எல்லாம் முடிந்த பின்னர், வழியில், கள்வராலும், காட்டு விலங்குகளாலும் உளவாகும் கொடுமைகளைப் போக்கவல்ல, படைத் துணை இருப்பின் நன்று என உணர்ந்தான். உடனே, தன் கையால் தானே பண்ணி வைத்திருக்கும் வலிய வில்லை எடுத்து, அவ்வில் நாணின் உறுதிப்பாட்டினை உணருமாறு

அதைப் பலமுறை தடவிப் பார்த்துக் கொண்டான். அவ் வில்விற்கேற்ற அம்புகளை ஆராய்ந்து எடுத்துக் கொண்டான். வில்வீரர், தம் கைகளின் பாதுகாப்புக் குறித்து, அணிந்து கொள்ளும் கையுறைகளை அணிந்து கொண்டான். இறுதியாக எதிர்த்தார் உயிரை இழக்கச் செய்யும் வெற்றிச் சிறப்பு வாய்ந்த ஆழிப்படையை, அதன் மீது படிந்திருக்கும் மாசு போகத் துடைத்து எடுத்து வைத்துக் கொண்டான்.

தன் மனைவிக்குத், தான் பொருளீட்டும் முயற்சி மேற்கொள்வது குறித்து ஏதும் அறிவியா அவன், இடை வழியில் உண்டாம் ஏதம் போக்கும் வழித் துணையாகுக என அம்பையும், வில்லையும், ஆழிப்படையையும் எடுத்துக் கொள்வதையும் அவள் அறியாவாறே மேற் கொண்டான். ஆயினும், தன் கணவனை இமைப் பொழுதும் பிரியாது இணைந்து வாழும் அவன் மனைவி, படைக்கலங்களைப் பழுது போக்கி எடுத்து வைப்பதைப் பார்த்து விட்டாள். அவன் படை தொடுவது ஏன் என்ற ஐயம் அவள் உள்ளத்தில் அன்றே இடம் பெற்றது. அவ்வினாவைத் தொடர்ந்து சென்ற அவள் சிந்தனை, வெளிநாடு செல்லத் துணிந்துள்ளான் தன் கணவன்; இன்றோ அல்லது நாளையோ, தன்னைத் தனியே விடுத்துப் பிரிந்து போய்விடுவான் என்ற உண்மையை உணர்த்தியது.

அவன் பிரிந்து போய்விடுவன்; அவன் அன்பு அருகிவிடும்; தான் தனித்திருந்து துயர் உறுதல் வேண்டும் என்ற உணர்வு அவள் உள்ளத்தில் இடம் பெற்ற அந்நிலையே, அவள் உள்ளம் பெருந்துன்பத்திற்

குள்ளாயிற்று. உள்ளத் துயர்க் கொடுமை அவள் உடல் நலனையும் கெடுத்தது. அவள் உடல் தளர்ந்தது; உருக்குலைந்தது; அழகு அழிந்தது; மறுவறச் செய்யப்பெற்ற முழுமதிமீது கருமேகம் படிந்தாற்போல், மாசிலாப் பேரொளி வீசும் அவள் முகம் பசலை படர்ந்து ஒளி குன்றி அழகிழந்தது; சுனையிடத்தே மலர்ந்து, மழைநீரை எதிர்நோக்கி நிற்கும் கருநீல மலர் நீர் சொரிவதுபோல், அகத்துயரைப் புறத்தே காட்டவல்ல துயர் நோக்குடைய வாகிய அவள் கருவிழிகள், இடைவிடாது நீர் சொரியத் தொடங்கிவிட்டன. காற்றால் அசைகின்ற வெண்காந்தள் மலர், காம்பற்று இதழ்களைச் சொரிவது போல், காண்பார் கண்களைப் பறிக்கும் பேரழகு வாய்ந்த அவள் கைவளைகள், அக்கைகள் தளர்ந்து போகவே, ஆங்கு நில்லாது கழன்று ஓடத் தொடங்கிவிட்டன.

பொருள் தேடிப் போகத் துடித்துக்கொண்டிருக்கும் அவனையும், 'அவன் பிரிந்து விடுவனே! பிரிந்துவிடின் அப் பிரிவுத் துயரை யான் எவ்வாறு ஆற்றுவன்?' என எண்ணித் துயர்உறும் அவளையும் கண்டாள் தோழி. அவன் பிரிவன் என எண்ணியபோதே இவள் நிலை இதுவாயின், அவன் பிரிந்து போய்விடின், இவள் அத்துயர் பொறுக்க மாட்டாது உயிரிழப்பள். ஆகவே, அவனைப் போகாவாறு தடுத்து நிறுத்துதல் வேண்டும் எனத் துணிந்தாள்.

அதனால், வெளிநாடு செல்வார்க்கு வேண்டும் பொருள்களை எடுத்து வைக்கும் பணி மேற்கொண்டிருந்த அவன்பாற் சென்றாள்; சென்று, "அன்ப! புகழின்பால் கொண்ட ஆசை அதிகமாய் விட்ட காரணத்தால்,

ஆராயும் அறிவிழந்துவிட்டனை. அதனால், அண்மையில் மணந்து கொண்ட, அன்புடைய மனைவியோடு, மனையகத்தே பிரியாதிருந்து மகிழ்ந்து வாழ்வதே பேரின்பமாம் என்பதை உணராது, அவள் அழுது அழுது அழியுமாறு விட்டுப் பிரிந்து போய்ப் பொருள் தேடி உழல்வதிலேயே இன்பம் உளது எனப் பிறழ உணர்ந்த பிழையறிவுடையானாயினை!" எனப் பழிக்க நாவெடுத்தவள், அதை அவ்வாறே வெளிப்பட உரைக்காது, "கோடையின் கொடுமையால் உடல் நலனும், உள்ள ஊக்கமும் ஒருங்கே அழிந்த யானை, மழை மறுத்தற்குக் காரணமாய கொடுமைகள் மிக்க பாலை நிலத்தில் தோன்றும் கானல் நீரை உண்ணும் நீர் எனப் பிறழக் கொண்டு, அது பெற அவாவி, அக் கானல் நீரின் பின் ஓடி ஓடி இளைக்கும் காட்டைக் கடந்து செல்லும், அன்ப!" என, அவன் அறியாமையினை, அவன் செல்லும் கானத்தின் யானை மீது ஏற்றிக் கூறினாள். அவ்வாறு அவனைப் பழித்தவள், பின்னர், அவன் மேற்கொள்ளும் வினைமுயற்சியினையும், அதுகண்டு அவள் படும் துயர்க் கொடுமையினையும் அவனுக்கு எடுத்துக் கூறி, "அன்ப! எமக்குத் துயர் தருவதாய நின் செலவு முயற்சி கண்டே இவ்வாறு வருந்துவாள், நீ சென்றுவிட்ட பின்னர், இறந்துபடுதல் உறுதி. ஆதலின் செல்வம் கொழிக்கும் நாடு என நீ கருதிச் செல்லும் அந்நாட்டில், நீ தேடிச் சேர்க்கும் செல்வம், நினக்குப் புகழ் தேடித் தருதலோடு, இறக்கும் இவளின் இனிய, கிடைத்தற்கரிய உயிரையும் தேடிக் கொணர்ந்து தரவல்லதாமோ? அவ்வாற்றல் அச் செல்வத்திற்கு உண்டேல், நீ செல்வதில் எமக்குத் தடையில்லை!" எனக்

*கூறி, "நீ பிரியின் இவள் உயிரும் பிரியும். மனைவியை இழந்து பெறும் பொருள் மாண்புடைத்தன்று; அது அவள் இறந்த பின்னர்ப் பயன் அளிப்பதும் இல்லை. ஆகவே பயனில் முயற்சி மேற்கொண்டு, வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளும் மக்கட்பதடி ஆகிவிடாதே!" எனக் கூறித் தடுத்து நிறுத்தினாள். அது இது:*

"வேனில் உழந்த வறிது உயங்கு ஒய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்கத்தேர் நீர்க்கு அவாஅம்
கானம் கடத்திர் எனக் கேட்பின், யான் ஒன்று
உசாவுகோ ஐய சிறிது ;

நீயே, செய்வினை மருங்கில் செலவு அயர்ந்து யாழநின்
கைபுனை வல்வில் ஞாண் உளர்தியே :
இவட்கே, செய்வுறு மண்டிலம் மையாப்பதுபோல்
மையில் வாள்முகம் பசப்புஊரும்மே ;

நீயே, வினைமாண், காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே ;
இவட்கே, சுனைமாண் நீலம் கார் எதிர்பவைபோல்
இனைநோக்கு உண்கண் நீர்நில் லாவே ;

நீயே புலம்பில் உள்ளமொடு பொருள்வயின் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே ;
இவட்கே, அலங்குஇதழ்க் கோடல் வீஉகு பவைபோல்
இலங்குஏர் எல்வளை இறை ஊரும்மே ;

எனநின்,
செல்நவை அரவத்தும் இனையவள் நீநீப்பின்
தன்நலம் நடைகொளப் படுதலின், மற்றுஇவள்

இன்உயிர் தருதலும் ஆற்றுமோ,
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே?"

*தலைவன் பிரிவுக் குறிப்பறிந்த தோழி, அவன் பிரியின் அவன் மனைவி உயிர் வாழாள் என்பது உரைத்துச் செலவழுங்குவித்தது இது.*

1. வேனில்—கோடை; உழந்த—வருந்திய; வறிது உயங்கு—உடல் சுருங்க வருந்தும்; ஒய்—ஊக்கம் கெட்ட; 2. வான்—மழை; வைப்பு—ஊர்கள்; வழங்காத்தேர்—பேய்த்தேர் என வழங்கும் கானல்நீர்; மணல் பரந்த இடங்களில் கோடை காலத்தில் நீர்போல் தோன்றும் கானல்; அவாஅம்—அவாவும்; 4. உசாவுகோ—கேட்கட்டுமா?; 5. அயர்ந்து—விரும்பி; யாழ—அசை; 6. உளர்தி—தடவி நோக்குகின்றனை; 7. மண்டிலம்—திங்கள்; மையாப்பது—மேகம் பரவுவது; 9. காழகம்—கையுறை; 10. தெரிதல்—ஆராய்தல்; 11. கார் எதிர்தல்—மழையை எதிர் நோக்கி நீர் சொரிதல்; 12. இனைநோக்கு—வருந்தும் பார்வை; 13. புலம்பு இல் உள்ளம்—பிரிகின்றோம் என எண்ணி வருந்தாத உள்ளம்; 14. திகிரி—ஆழிப்படை; நீவுதி—துடையா நின்றாய்; 15. கோடல்—வெண்காந்தள்; வீ—இதழ்கள்; ஏர்—அழகு; எல்—ஒளி; இறை—முன்கை; ஊரும்—ஓடும்; 18. செல்நவை அரவம்—செல்லும், துயர் தரும் ஆரவாரம்; இனையவள் —துயர்கொள்வாள்; தன்நலம் கடைகொள்ளப்படுதல்— இறத்தல்; இறக்கும் காலமே, ஒருவரின் நலம் முடியும் காலமாம். ஆதலின் இவ்வாறு கூறினார்.

# 7

# மாண்புடைச் செல்வம்

பொருட் செல்வம் என்பதற்குப் பழந்தமிழ் மக்கள் கொண்ட பொருளே வேறு. மண்ணையும், பொன்னையும், மனையையும், நாட்டையும் குறிப்பதே பொருள் என அவர்கள் எண்ணினாரல்லர். செல்வம் என்ற இனத்தில் அவையும் சேர்ந்தனவே யாயினும், அவை மட்டுமே செல்வங்களாகா. சிந்தை நிறைந்த வாழ்வே செல்வமாம். அவ்வாழ்வு, மனையாளோடு மனையகத்தே யிருந்து, வருவிருந்து ஓம்பி வாழும் மாண்புடைய வாழ்வால் வரும். நாட்டின் வாழ்வு, நாட்டு மக்களின் அக வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. அம் மக்கள் நன்கு வாழின், நாடும் நன்கு வாழும். அவர் அகவாழ்வு துன்பம் நிறைந்ததாயின், அந்நாட்டிலும் துன்பம் தொடரும். ஆகவே, நாடாளும் அரசன் நல்லரசு மேற்கொள்வதை வேண்டின், அந் நாட்டு மக்கள் நல்வாழ்வுடையராதல் வேண்டும். அவ்வாறு தாமும் நல்வாழ்வு வாழ்ந்து, தம் நாட்டு அரசனையும் நல்லரசனாக்கும் நிலையே நிறைந்த

செல்வமாம். அவ்வாறன்றி, மன்னவன் கோலும், அதற்குக் காரணமாய மனையற வாழ்வும் மாண்பிழந்து போமாறு, மனைவியைத் துயர்க்கு உள்ளாக்கி விட்டுப் பிரிந்து போய் ஈட்டி வரும் பொன்னும், மணியும் போலும் பொருள்கள், உண்மைப் பொருட் செல்வங்களாகா. பொருட் செல்வம் குறித்துப் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த கருத்து இதுவே.

இதை உணர்ந்திருந்தாள் ஒரு பெண். அவள் தான் உணர்ந்த இவ்வுண்மையினை, அஃது உணராது மயங்கிய ஓர் இளைஞனுக்கு உரைப்பாள் போல், உலகத்தார்க்கு உரைத்துள்ளாள் ஒரு கலிப்பாவில். அவள் வாழ்ந்திருந்த பழந்தமிழ் நாட்டுச் சிற்றூர் ஒன்றில், அவள் மனையை அடுத்துள்ளதொரு மனையில், இளங் காதலர் இருவர் வாழ்ந்திருந்தனர். அவர்கள், ஒன்றி வாழும் அன்றில்கள் போல், ஒருவரை யொருவர் பிரிந்தறியாப் பேரன்பு கொண்டு, வளம் பெருக வாழ்ந்திருந்தனர். அவர்தம் வாழ்க்கை நலம் கண்டு வாயார வாழ்த்தி, மனமாரப் பாராட்டிய அப் பெண், ஒரு நாள் அவ்விளைஞனின் மனைவி, கண்ணில் நீர் மல்கக் கலங்கி நிற்கக் கண்டாள். அக் காட்சி அவளைத் துணுக்குறப் பண்ணிற்று. அவள் ஆடற் பருவம் தொட்டே அவளைப் பிரியாது, அவளோடு ஆடிப்பாடி அக மகிழ்ந்தவள் அப்பெண். அவள் ஆருயிர்த் தோழியும் அவளே. அதனால் அவள்பால் உரிமையோடு சென்று, உற்றது யாது என வினவினாள். தோழியைக் காணவே, அவள் துயர் முன்னினும் மிக்கது. ஆயினும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "தோழி! அவர்–என் கணவர் என்னைப் பிரிந்து எங்கோ செல்ல எண்ணி யுள்ளார்போல் தோன்றுகிறது. அதை அவர் என்னிடம்

உரைத்திலராயினும், சின்னாட்களாக அவர் செயலைக் கூர்ந்து நோக்கிய எனக்கு அவர் கருத்துப் புலனாகி விட்டது. தோழி! அவரைப் பிரிந்த பின்னர்த் தனித்திருந்து உயிர் வாழ்தல் எவ்வாறு இயலும்?" என வாய் விட்டுக் கூறி அழுது வருந்தினாள்.

அவள் நிலை அறிந்து, ஆறுதல் உரைத்த தோழி, பின்னர் அவள் கணவனைச் சென்று கண்டாள். அவனும் அவள்பால் பெருமதிப்புடையன். ஆதனால், அவளை அன்போடு வரவேற்று, "வந்தது ஏனோ?" என வினவினான். அவள், அவன் மனைவியைக் கண்டதும், அவள் வருத்தமும் கூறி, "அவளை வருந்த விடுத்துப் பிரிந்து போவது பொருந்தாது!" எனக் கூறினாள். அது கேட்ட அவன், "தோழி! தோன்றின் புகழோடு தோன்றுக என்பர். அதுவே பிறவிப் பயனுமாம். அப்புகழ் வறியார்க்கு வழங்கி வாழும் வள்ளன்மையால் வரும். அவ் வள்ளன்மையை வாழ்விப்பது பொருள். ஆகவே, அப் பொருளீட்டிப் புகழ் தரும் பணி மேற்கொண்டேன்," எனப் புகழின் சிறப்பையும், அப்புகழ் பெறப் பெருந்துணை புரியும் பொருளின் சிறப்பையும் எடுத்துக்கூறி, "அப்பொருள் பெறுவான் வேண்டிப் பிரிந்து செல்லத் துணிந்துள்ளேன். ஆதலின், அதுகாறும் அவள் பொறுத் திருப்பாளாக. அதுவே அவள் பெண்மைக்குப் பெருமையாம்!" எனக் கூறினன்.

அவன் கூறிய சொற்களால், பொருளின்பால் சென்ற பற்றுள்ளமே, அவனைத் தன் மனைவியை விடுத்துப் பிரியச் செய்தது என்பதை உணர்ந்து 'பகைமண்ட தோழி, அப் பொருளின் நிலையா இயல்பினை எடுத்துக்காட்டின்,

அதை வெறுத்து, அதைத் தேடிச் செல்லும் தன் முயற்சியினைக் கைவிடுவன் எனக் கருதினாள். அதனால், அப் பொருளின் நிலையாமைப் பண்பினைப் பல்வேறு நிலைகளில் நின்று விளக்கத் தொடங்கினாள்.

"காதுக்கினிய இசையினைத் தருவது யாழ். ஏழிசையின் இயல்பறிந்து நரம்புகளைத் தெறித்து இசை யெழுப்ப வல்ல கைத்திறம் பெற்றான் ஒருவன், யாழுக் குரிய குற்றம் எதுவும் இல்லாமல், ஏழ் நரம்புகளும் இனிதே அமைந்த யாழை இசைத்து, இன்னிசைத் தேனைப் பொழிந்து கொண்டுள்ளான். மக்களும், அவ்விசை இன்பத்தில் ஆழ்ந்து, அறிவு மயங்கிக் கிடக்கின்றனர். அந்நிலையில், அவ்யாழின் நரம்புகளின் இடைநின்ற நரம்பொன்று, திடுமென அறுந்து விட்டது. அந்நிலையே ஏனைய நரம்புகளும் தம் தொழிலாற்றாவாயின. இசை இன்பம் எங்கோ சென்று அழிந்தது. அவ்விசை இன்பம் போன்றது பொருள். ஒரு நரம்பு அற, ஏனை நரம்புகளும் பயனிழந்து போவது போல், பொருள் நிலைகளுள் - பொருள்தரு வாயில்களுள், ஒன்று அழியின், அந்நிலையே ஏனையவும் அழிந்து, அப்பொருளும், அப்பொருளால் பெறலாம் இன்பமும் அறவே மறைந்துபோம். இவ்வியல் பால், யாழும், பொருளும் ஒத்த இயல்புடைய போல் தோன்றினும், பொருள் யாழினும் இழிந்ததாம். யாழ் நரம்பு இசைக்கத் தொடங்கியபோதே அறுந்து போவதில்லை. யாழ் இசைப்போன், இசைக்கத் தொடங்குவதன் முன்னர், யாழின் கோல், அக் கோலில் பிணிப்புண்டு கிடக்கும் நரம்புகள் ஆகியவற்றின் உறுதிப்பாட்டினை உணர்ந்தே தொடங்குவனாதலின்,

அது இறுதியிலோ, அல்லது இடையிலோ அறுதலல்லது, தொடக்கத்திலேயே அறுந்து விடுவதில்லை. ஆனால், பொருள் அத்தகைய தன்று. அது வரும் வழிகளின் வன்மை மென்மைகளை வகுப்பார் யாரும் இலர். ஆதலின், அது, ஒருவனை அடையத் தொடங்கிய தொடக்க காலத்திலேயே, அடைவது போல் அடைந்து அழிந்து போவதும் உண்டு. ஆதலின், அப் பொருளின் நிலையாமை, யாழின் நிலை யாமையாயினும் இழிவுடைத்து; விரைவுடைத்து.

"ஒருவர்க்கு ஆகூழ் உண்டாக உண்டாகி, அது அழிய அழியும் இயல்புடையது செல்வம். அவ்வாறு ஒருவனுக்கு ஆகூழால் செல்வம் உண்டாய காலத்து, அச் செல்வம் "அவன் இடைவிடா முயற்சியின் பயனாய் வந்துற்றது!" என, அச் செல்வத்தைச் சேர்க்க அவன் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டாது, 'அவனுக்கு ஆகூழ் உண் டாயிற்று. அதனால், அளவிறந்த செல்வம் வந்து குவிந்தது!' எனக் கூறிய உலகோர், அவ்வாகூழ் அழிய, அவன் செல்வம் அழிந்த காலத்தில், அவன் செல்வ அழிவிற்கு அவ்வாகூழ் அழிந்ததைக் காரணம் காட்டாது, அவன் செய்த தவறுகளை—அளவிற்கு மீறிய செலவினங் களைக் காரணம் காட்டி, அவனைப் பல்லாற்றானும் பழிப்பர். இவ்வாறு, உலகம் பழிக்க அவனை விட்டு நீங்கும் இயல்புடையது செல்வம். மேலும், ஆகூழ் ஒருவனை அடையும், நீங்கும். அதுவல்லது, அவனுக்கு வேறு கேட்டினைத் தருவதில்லை. ஆனால், அவ்வாகூழால் அவனை அடைந்த செல்வம், அவ்வாகூழ் அவனை விட்டு நீங்க, அவ்வாகூழோடு தானும் நீங்குங்கால், தான் மட்டும்

நீங்காது, தான் அவனை அடைவதன் முன், அவன் பெற்றிருந்த பழஞ் செல்வத்தையும் பெருமையையும் உடனழித்துச் செல்லும். அம்மட்டோ! செல்வம் ஒருவனை அடையுங்கால், ஆகூழ் அவனை அடைந்த பின்னரே மெல்ல வந்து அடையும். ஆனால், அவனை விட்டு நீங்கும் காலத்தோ எனின், அவ்வாகூழ் அவனை விட்டு நீங்குவதற்கு முன்னரே, விரைந்து நீங்கிவிடும். இவ்வாறு, ஆகூழ் அடைந்த பின்னர் அடைந்து, அது நீங்குவதன் முன்னரே, அவனை விட்டு நீங்கும் செல்வம், அவன்பால் பழிநிற்க, பண்டு அவன் பெற்றிருந்த செல்வத்தையும் அழித்துச் செல்லும் இயல்புடைமையால், அது அவன் ஆகூழினும் இழிவுடையதாம்.

" 'பொருளாலும் நிலையாலும் ஆம் தம் உயர்வைச் சிறிதும் கருதாது, யாண்டும் என் நல்வாழ்வையே நினைந்து உழைத்த அமைச்சர் இவர்!' என அவ்வமைச்சர் தம் பெருமையைப் பாராட்டாது, அவர் தனக்குச் செய்த நன்மைகளை நினைந்து அவர்பால் அருள் புரிவதும் செய்யாது, அவ்வமைச்சர்களையும் கொன்று குவிக்கும் கொடுங்கோலன் ஆட்சி, நாட்டில் நெடிது நாள் நிற்பதில்லை. அவ்வரசு அழிவது உறுதி. அந்நாட்டு மக்கள், அவ்வரசை அழித்து, விரைவில் வேறு அரசு அமைத்து விடுவர். அத்தகைய கொடுங்கோல் அரசின் அழிவும் சின்னாள் கழித்தே நிகழும். ஆனால் செல்வ அழிவு அப்பொழுதே நிகழ்ந்துவிடும். அவ்வரசை அழிக்க, மக்கள் திட்டமிட்டுக் காரியமியற்றும் வரையாவது, அவ்வரசு வாழும். ஆனால், செல்வ அழிவு மிக மிக விரைந்ததாம். வெள்ளம், வெந்தணல், கள்வர், காவலன் என அச்

செல்வத்தை அழிக்கும் படைகள் பலவும், பலம் மிக்கவும் உள. இவற்றால், அதற்கு அழிவு எந்நேரத்தினும் உண்டாம். ஆகவே, கொடுங்கோல் ஆட்சியினும், குறைபாடுடையது செல்வம்.

"இவ்வாறு யாழின் கேட்டினும், ஆகூழ் நீக்கத்தினும், கொடுங்கோல் அரசின் அழிவினும் விரைந்து அழியும் இழிவுடையதாய செல்வத்தைச் சிறந்தோர், சிறந்ததெனச் சிந்திப்பரோ? உயர்ந்த பல பண்பாடு நிறைந்த பெரியோனாய நீ, அப்பொருளை மதித்து, மாண்புடைய நின் மனையாளைப் பிரிந்து, மனையற இன்பத்தை இழத்தல் நின் பெருந்தன்மைக்கு அழகாமோ?

"மேலும் இவளைப் பிரிந்து நீ செல்லக் கருதும் இக்காலமும் அதற்கு ஏற்றதன்று. உலகத்து உயிர்களை உய்விக்க வந்தது ஞாயிறு. அது நீதி தவறாது நாடாள வேண்டிய அரசன், அநீதியால் தான் கெட்டதோடு, மறம் அல்லது அறம் அறியாக் கொடியோன் ஒருவனை அமைச்சனாகக் கொண்டு, அவன் காட்டும் கெடுவழி நின்று நாடாளத் தொடங்கிய கொடுங்கோல் ஆட்சி போல், விரைந்து தோன்றிக் கதிர்களை விரித்து, வெப்பத்தை வாரி இறைத்துச் சுடும் கொடிய கோடை காலமன்றோ நீ செல்லக் கருதும் இக்காலம்? விலங்கினங் களுள் வலியால் மிக்கது யானை. எத்தகைய கொடுமை யையும் தாங்க வல்லது அது. வண்டுகள் வந்து மொய்க்குமாறு ஒழுகும் மதநீரும், காண்டற்கினிய உடல் வனப்பும் வாய்ந்த அவ்யானை ஞாயிற்றின் நிலைபிறழ்ச்சி யால் விளைந்த கோடையின் கொடுமை தாள மாட்டாது வருந்தி, நிற்கவும் மாட்டாது நிலை தளர்ந்து, வறண்ட

*நிலத்தை உழும் பெரிய நாஞ்சில் போல், கோடுகள் நிலத்திற் புகுந்து கிடக்க, தொங்கும் தன் கையினை உயர்த்தி நிலங்கவிழ்ந்து வருந்தும் கொடுமை மிக்க பாலை வழி, நீ செல்ல எண்ணியுள்ள வழி. நீர்மல்கு சுனைகளும், நிழல்தரு மரங்களும் நிறைந்து, வெற்றிச் சிறப்பு விளங்க நின்ற அந்நிலத்து மலைகள், அக்கோடைக் கொடுமை யால், சுனைநீர் சுருங்கவும், மரங்கள் கருகிப் புகையவும், பாறைகள் வெடித்துப் பொடியாகவும் வருந்தும். அவ்வழி யில், நிலை கலங்காமைக்கு நல்ல எடுத்துக் காட்டுக்களாய மலைகளையும், யானைகளையும், தம் வெப்பத்தால் வாட்டும் ஞாயிறு போல், அறத்திற் பிறழ்ந்து, மறமே விரும்பும் கொடியரன்றோ செல்வர். உன்னைப் போலும் உயர்ந்தோர் ஒருபோதும் செல்லார். அன்புடைய மனைவியைப் பிரியாது, என்றும் அவள் அண்மையில் இருந்து, காக்கக் கடமைப்பட்ட நீ, நின் கடமையில் தவறி, ஞாயிறு போல் கொடுமை செய்து கழிவையேல், இவள், அந் நிலத்து யானை போல் உறுதிப்பாடு இழப்பள். அந்நிலத்து மலைபோல், இவள் நலன் கெடும். இவள் அழிவள். ஆகவே, அன்ப! 'இவள் அழிவிற்குக் காரண மாயினான் இவன்!' எனும் பழிச்சொல் உன்னைப் பற்றாமை வேண்டின், பொருள் தேடிச் செல்லும் நின் எண்ணத்தைக் கைவிடுக!" என வேண்டிக் கொண்டாள். அவ் வேண்டுகோள் இது:*

"நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு, கதிர்மூட்டிக், காய்சினம் தெறுதலின்,
உறல் ஊறு கமழ் கடாஅத்து, ஒல்கிய எழில்வேழம்

வறன்உழு நாஞ்சில்போல் மருப்பு ஊன்றி, நிலம்சேர,
விறல்மலை வெம்பிய போக்குஅரு வெஞ்சுரம்
சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒருபொருள்
சொல்லுவது உடையேன்; கேண்மின்; மற்று ஐஇய!

வீழுநர்க்கு இறைச்சியாய் விரல்கவர்பு இசைக்கும் கோல்
ஏழும் தம்பயன்கெட இடைநின்ற நரம்பு அறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

மரீஇத் தாம்கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறர்எள்ளப் பீடின்றிப் புறம் மாறும்
திருவினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

புரைதவப் பயன்நோக்கார் தம்ஆக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதில் கண்ணோடாது உயிர் வௌவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

எனவாங்கு,
நச்சல் கூடாது பெரும! இச் செலவு
ஒழிதல் வேண்டுவல்; சூழின் பழியின்று;
மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப! அது மனும் பொருளே."

*பொருள்வயின் பிரியக் கருதிய தலைவனுக்குப் பொருளின் நிலையாமையினையும், இல்லற வாழ்க்கையின் இன்பத்தினையும் கூறித் தோழி செலவழுங்குவித்தது இது.*

1. நடுவு — நீதி; இகந்து — கைவிட்டு; ஒரீஇ — நீங்கி; நயன் — அறம்; வினைவாங்க — ஏவ; 2. ஓர்த்த — விரும்பிய; 3. சினம் —

வெப்பம்; தெறுதல் – சுடுதல்; 4. உறல் – வண்டுகள் வந்து மொய்க்கும்; ஒல்கிய – தளர்ந்த; 5. நாஞ்சில் – கலப்பை; 6. விறல் – வெற்றி; வெம்புதல் – கருகிப்புகைதல்; 7. இறப்ப – கடந்துசெல்ல; 9. வீழுநர் – விரும்புவார்; இறைச்சி – இன்பம்; கவர்பு –வாசிக்கப்பட்டு; கோல் – யாழின் கோல்; 10. ஏழும் – நரம்புகள் ஏழும்; 12. மரீஇ – அடைந்து; 13. பீடு – பற்றுக்கோடு; புறமாறும் – நீங்கும்; 14. திரு – நற்பேறு, அதாவது ஆகூழ்; 15. புரை – உயர்வு; தவ – மேன் மேலும் உயர; 16. செறுதல் – கோபித்தல்; கண்ணோடல் – கருணை காட்டல்; 20 ஆழின் – ஆராய்ந்து பார்க்கின்; 21. புறந்தரல் – காத்தல்; 22. தன் நகர் – தன் மனைவி; விழைய – விரும்ப; மனும்பொருள் – மன்னும் பொருள் என்பது சுருங்கி வந்தது; அழியாச் செல்வம்; மனும்பொருள் அது என மாற்றுக.

# 8

# இறந்த கற்பினாள்

உலகில் தோன்றிய ஒவ்வொரு பொருளும், யாதேனும் ஒரு வகையில் பிறர்க்குப் பயன் தருவனவாதல் வேண்டும். பொருள்கள் தோன்றுவது பிறர்க்குப் பயன் தருதற்கேயாம். பொருள்கள் அவ்வாறு பயனளித்த வழி, தோன்றிய பயனை அது அடைவதோடு, தன்னைத் தோற்றியவர்க்கும், தான் தோன்றக் காரணமாய் இருந் தார்க்கும், தான் தோன்றிய இடத்திற்கும் பெருமை யுண்டாம். அதற்கு மாறாகத் தோன்றிய பயனை அது தாராதாயின், அப்பொருள் தோன்றியதினும் தோன்றா திருத்தலே நன்றாம். பிறர்க்குப் பயன்படா ஒரு பொருளைத் தோற்றுவிப்பதினும், தோற்றுவியாதிருத்தலே நன்றாம் என அப் பொருளும், அப் பொருளைத் தோற்றுவித்தவரும் பழிக்கப் பெறுவர். பொருளின் தோற்றமும் பயனும் என்ற இது போலும் உண்மைகளை உணர்ந்த பெரியார்கள், பழந்தமிழ் நாட்டில் பலர் இருந்தனர். இவ்வுண்மையை உணரமாட்டாமையால்,

தோன்றிய பொருள்களை, அவை தோன்றியதன் பயனைப் பெற வொட்டாது பாழாக்க முயன்றோர்க்கு, அவர்கள், இவ்வுண்மைகளை எடுத்துக் காட்டி, அப் பொருள்களைப் பயனுடையன வாக்கியதோடு, அப்பொருளுக்கு உரியார் புகழ் பெறவும் துணை புரிந்துள்ளனர். அத்தகைய பெரியார் ஒருவர், இவ் வுண்மையை, அஃதறியாப் பெண் ஒருத்திக்கு, உரைக்கும் திறத்தை உணர்த்துகிறது ஒரு கலிப்பா.

உருவாலும் திருவாலும் உயர்ந்த பெண் ஒருத்தி, அறிவு, அழகு, அன்பு, ஆண்மைகளிற் சிறந்த ஓர் இளைஞனைக் கண்டு காதல் கொண்டாள். அவனும் அவளைக் காதலித்தான். ஆனால், அக்காதல் உறவினைப் பெற்றோர் அறியார்; அதனால், பலர் அறியக் கூடி மகிழ்தல் அவர்க்கு இயலாது போயிற்று. அப்பெண், பெருஞ் செல்வர்க்குப் பிறந்த ஒரே பெண். மேலும் மணப் பருவம் வாய்க்கப் பெற்றவள். அதனால் தன் வீட்டை விட்டு வெளிவர இயலாத நிலையில் உள்ள அவளை, அவள் வீட்டிற்குச் சென்றே காணுதல் வேண்டும். ஆனால் அவள் பெற்றோர் அறியாவாறு, ஆங்குச் சென்று காண்பது அத்துணை எளிதன்று. பலமுறை முயன்றும் அவனால் முடியவில்லை. அதனால், அவள் தன் அன்பனைக் காண மாட்டாது வருந்தினாள் பலநாள். அம்மனக் கவலையால் அவள் உடல் நலம் கெட்டது. தன் மகளின் உடல் நலக்கேடறிந்த தாய், அது அணங்கால் வந்தது எனக் கொண்டு, அது நீங்க வெறியாட்டு விழா மேற்கொண்டள். வெறியாடிய பின்னரும் அந்நோய் நீங்காமையால், தன் மகளின் ஒழுக்கத்திற்குக்

குறையுளதோ என அஞ்சினாள். ஊரிலும், அப் பெண்ணின் காதல் உறவு குறித்து அலர் எழத் தொடங்கி விட்டது. அதனால், அவள் பெற்றோர், அவள் மணத்திற்காம் ஏற்பாடுகளை மேற்கொள்வாராயினர். தன் பெண்மையால் தன் காதல் உறவினைப் பெற்றோர்க்கு உணர்த்த இயலாது வருந்திய அப்பெண் தன் பெற்றோர், தன்னை வேறு ஒருவனுக்கு மணம் செய்து விடுவரோ என அஞ்சினாள். அந்நிலை உண்டாயின், தன் கற்பிற்கு இழுக்காம். கற்பிழந்து வாழ்தல் காரிகையர்க்கியலாது. ஆகவே, தாயையும், தாயினும் சிறந்த நாணையும் மறந்து, பெற்றோர் அறியாவாறு, அவ்விளைஞனோடு அவனூர் சென்று, ஆங்கு அவனை மணந்து வாழத் துணிந்தாள். ஒருநாள், இருள் நீங்கும் விடியற்காலத்தே, இருவரும் திட்டமிட்டவாறே, வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டனர். காலையில் தன் மகளைக் காணாது கலங்கினாள் தாய். அந்நிலையில் ஊரார் வழியாகத் தன் மகளின் காதல் வாழ்வை உணர்ந்து, அதை அப்போதே அறிந்து அவள் அவனை மணக்கத் துணை புரியாது போனேனே எனப் புலம்பினாள். தாய் புலம்புவது கண்டாள் செவிலி. அப் பெண்ணை உணவு ஊட்டி, அவள் உடலையும் உணர்வூட்டி, அவள் அறிவையும் வளர்த்தவள் அச்செவிலி. அவள், பெற்ற நற்றாயைப் பார்த்து, "நம் மகளும், அவள் காதலனும் யாண்டும் சென்றுவிடார். நாடுதோறும், ஊர்தோறும், குடிதோறும் சென்று தேடிக் கொணர்வேன். ஆற்றியிரு!" எனக் கூறி விட்டு, அவர்களைத் தேடிக் கொண்டு, அவர்கள் சென்ற பாலை நிலத்துப் பெருவழியே சென்றாள்.

அவ்வாறு தேடிச் சென்ற செவிலி, எதிரே அந்தணர் சிலர் வருவதைக் கண்டாள். ஒரு கையில், காயும் ஞாயிற்றின் கதிர்களைத் தடுத்து நிழல் செய்யும் குடை பிடித்துக் கொண்டு, கமண்டலம் தாங்கிய உறியை, முத்தீ வணங்கும் முனிவர் என்பதை உணர்த்தும் முக் கோலுடனே தோளில் தாங்கிக் கொண்டு, காடென்றும், மலையென்றும் அவை இரண்டுங் கலக்கும் பாலை யென்றும் பாராது, எங்கும் திரிந்து வாழும் இயல்பினராய அவ்வந்தணர், வழியில் தன் மகளைக் கண்டிருத்தலும் கூடும் எனக் கருதினாள். அவர்கள் அண்மையில் வந்ததும், அறத்தைத் தவிர மறத்தை மனதாலும் நினையாத் தூய்மை, ஐம்பொறிகள் ஏவுமாறு தாம் ஆடாது, தாம் ஏவுமாறு அவற்றை ஆட்டி அடிமை கொள்ளும் ஆற்றல், இவை போலும் சிறந்த பல கொள்கைகளும், அக்கொள்கை வழி ஒழுகும் ஒழுக்கமும் வாய்ந்த அவர்கள் பண்பைப் பாராட்டி வணங்கி நின்று, 'ஐயன்மீர்! என் மகளாம் உரிமையுடையாள் ஒரு பெண்ணும், என்போல்வாள் ஒருத்தி பெற்ற ஓர் ஆண் மகனும், தந்தையும் தாயும் முன்னின்று முடித்து வைக்க மணந்து வாழக் கருதாது, எவரும் அறியாவாறு, தனிமையில் தாமே கண்டு காதல் கொண்டு, கந்தர்வ மணம் புரிந்து கொண்டனர். அவர்கள் அவ்வாறு, யாங்கள் அறியாவாறு மணங்கொண்டதோடு நில்லாது, தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரையும், பெற்று வளர்த்த தாய் தந்தையரையும் மறந்து, இப்பாலை வழியே வந்து, எங்கோ சென்று விட்டனர். அவர்களைத் தேடி வருந்துகின்றேன் யான். அவர்களை வழியில் யாண் டேனும் கண்டதுண்டோ? கண்டீராயின், அவர்கள்

நிலையினை யான் அறியக் கூறுமாறு, தங்களை வேண்டிக் கொள்கின்றேன்," என்று கூறி வேண்டினாள்.

இடைவழியில், தம் எதிரே சென்ற அவ்விருவரையும் கண்டு, அவருள், அவ்வாண்மகன், உலகில் ஆடவர்பால் அமைய வேண்டிய அழகை யெல்லாம் ஒருங்கே கொண்டான். அவ்வாடவர் குலத்திற்குத் தலைமை தாங்க வல்ல தகுதிப்பாடுடையான் என்பதையும், அப்பெண் அவனோடு செல்லும் உரிமையால், செல்லும் சுரத்தின் கொடுமையினைக் கருதாக் கற்பு மேம்பாடும், மடம் முதலாம் பெண்மைக் குணங்களைக் குறைவறப் பெற்ற பெருமையும் உடையாள் என்பதையும் அறிந்து, அக மகிழ்ந்து வந்த அவ் அந்தணர், சென்ற அவர்களைத் தேடிவரும் இவள், அவர்களை அறியக் காட்டிய ஆர்வத்தைக் கண்டு, இவள், சென்ற அப்பெண்ணின் தாய் என்பதை அறிந்து, "தாயே! தாங்கள் கூறிய அவ்விரு வரையும் இடைவழியில் பார்க்காமல் வரவில்லை; பார்த்தே வந்தோம். பார்த்து, அவர்கள் போக்கில் பிழை இல்லை, அவர்கள் செயல் அறனொடுபட்டதே என்பதை உணர்ந்து, அவரைத் தடுக்காது, மாறாக, வாழ்த்தி வருகிறோம்.

"தாயே! மலையில் பிறக்கிறது சந்தனம். ஆனால், அது என்றும் அம் மலையிலேயே இருந்து விடுவதில்லை; மலையிற் பிறக்கும் சந்தனம், முற்றிப் பயன்தரத் தொடங்கும் வரையே ஆங்கு இருக்கும். பயன்தரும் பருவம் வந்துற்றதும், தான் பிறந்த அம்மலைக்கு எவ்வகையிலும் பயன்படாது. அம்மலையை விட்டகன்று, தன்னைப் போல் நறுமணம் நாறும் பிற பொருள்களோடு

கலந்து, மக்கள் மார்பில், அம்மக்களால் பூசப்பெற்று அவர்க்குப் பயன் அளிக்கிறது. அந் நிலையில் அதன் நறுமணம் நுகர்ந்து, அதைப் பாராட்டும் அம்மக்கள், அது தோன்றிய மலையையும் மனதாரப் பாராட்டுவர். மக்கள், அம்மரத்தை அழித்து, அதைக் கொணராது விடுவரேல், அது காட்டிற் கிடையே கிடந்து, நாளடைவில், காற்றாலும், மழையாலும் அலைப்புண்டு கொன்னே அழிவுறும். அதனாற் பிறந்த மலைக்கும் மாண்பில்லை; அதற்கும் புகழ் இல்லை; அதன் நறுமணம் நுகர விரும்பும் மக்களும் நுகர்வதிலர்.

“கடலில் பிறக்கிறது முத்து. ஆனால், அது என்றும் ஆங்கேயே இருந்து விடுவதில்லை. கருவுற்று, உருப்பெறும் வரையே அது ஆங்கே கிடக்கும். உருவும் ஒளியும் பெற்றுப் பிறர்க்குப் பயன்படும் நிலை வந்துற்றதும், தான் பிறந்த கடலை மறந்துவிடுகிறது. பெற்று வளர்த்த அக்கடலுக்குப் பயனளித்து ஆங்கேயே இருக்க வேண்டும் என்றும் எண்ணுவதில்லை. அந்நிலை வந்தவுடனே, மக்களால் கொண்டு வரப்பட்டு, ஆரமாய் அவர் கழுத்திற் கிடந்து, அவர்க்கு அணியாய் அழகு தருகிறது. அந்நிலையில், அதன் உருவும் ஒளியும் கண்டு, அதைப் பாராட்டும் மக்கள், அது பிறந்த கடலையும் பாராட்டுகின்றனர். மக்கள் முயன்று மூழ்கிக் கடலடியிற் புகுந்து, அம்முத்துக் களை வாரிக்கொணராராயின், அவை ஆழ்ந்த அக்கடலடியின் இருண்ட இடத்திலே, சிப்பிகளுக்குள்ளே கிடந்து, மாசு படிந்து, மங்கி மாண்டுபோம். அதனால் அது தோன்றிய கடலுக்கும் பயன் இல்லை; அதற்கும் புகழ் இல்லை; அதை அணிந்து அழகு பெறுதலை மக்களும் இழப்பர்.

"ஏழு நரம்புகளும் கூடப் பிறக்கும் இன்னிசை, யாழில் பிறக்கிறது; யாழில் பிறக்கும் அவ்விசை, என்றும் அவ் யாழின் உள்ளேயே அடங்கி யிருப்பதில்லை. அவ்இசை, ஒலி பெற்று எழத் தொடங்கும்வரையே, அது, அவ்யாழுள் அடங்கியிருக்கும். யாழிசைப்போன் கை விரல்கள், அந்நரம்புகளைத் தெறிக்கத் தொடங்கியதும், ஒலியும், உருவும் பெற்றுப் பிறக்கும் அவ்விசை, தான் தோன்றக் காரணமாய் இருந்த அவ்யாழிற்குப் பயன் அளித்து, ஆங்கேயே இருக்க வேண்டும் என எண்ணாது, அவ்யாழின் நீங்கிக், காற்றோடு கலந்து எங்கும் பரவிக் காதுவழியே புகுந்து, மக்கள் கருத்தை மயக்கிப் பேரின்பம் தரத் தொடங்கி விடுகிறது. அந் நிலையில், அதன் இன்பத்தில் மயங்கி, அவ்விசையையும் அது தோன்றக் காரணமாய் இருந்த யாழையும் பாராட்டுவர் மக்கள். யாழ்வல்லான், ஏழிசையின் இயல்புணர்ந்து, நரம்புகளைத் தெறித்து, இசையை எழுப்பாது விடின், அது, அவ்யாழ் நரம்புகளுக்குள்ளேயே கிடந்து, காண்பாரும், கேட்பாரும் அற்று, அதுபோலும் ஒரு பொருள் அவ்யாழ் அகத்தே உளது என உணரவும் படாமல், மறைந்து போம். அந்நிலையில், அதைத் தோற்றுவிக்கும் யாழும் பயனற்றுப் போய், இசை கேட்டு இன்புறுதலை மக்களும் இழப்பர்.

"தாயே! கூறிய இவ்வுண்மைகள், நீவிர் அறிந்தனவே யன்றோ? அவற்றுள், சந்தனத்திற்கும், முத்திற்கும், இசைக்கும் உள்ள இயல்புகள் நும் மகளுக்கும், சந்தனம் பிறக்கும் மலைக்கும், முத்துப் பிறக்கும் கடலுக்கும், இசை பிறக்கும் யாழுக்கும் உள்ள இயல்புகள் அம்மகளைப் பெற்ற நுமக்கும் பொருந்தும். தாயே! நும் மகள் நும்

மனையில் பிறந்தவள் என்பது உண்மை. ஆனால், அவள் எப்போதும் நும் மனையிலேயே இருக்க உரியாள் அல்லள். வளர்ந்து, மணப் பருவம் வாய்க்கும்வரையே அவள் ஆங்கு வாழ உரியள். அப்பருவம் வந்துற்றதும், அவள் தான் பிறந்த இடத்தை மறப்பள்; பெற்ற தாய் தந்தையரை மறப்பள்; உடனிருந்து அவர்க்கு உதவ வேண்டும் என்பதையும் எண்ணிப் பாராள்; தான் காதலிக்கும், தன் அன்பிற்கு ஏங்கி நிற்கும், தன்னை மனைவியாகப் பெற மனம் துடித்து நிற்கும் இளையானைத் தேடிச் செல்வள். சென்று அவனை மணந்து, அவனோடு மனையறம் மேற்கொண்டு மாண்புறுவள். அந்நிலையில், அவள் பண்பு கண்டு பாராட்டும் உலகம், அவளைப் பெற்றுத் தந்த பெருமைசால் நும்மையும் பாராட்டும். தக்கான் ஒருவன், தன் காதலைக் காட்டிக் கைக்கொண்டு சென்று கடிமணம் புரிந்து கொள்ளானாயின், அவள் பிறந்த நும் மனையி லேயே கிடந்து, மகளிர்க்குரிய மாண்புகளை இழந்து மாண்டு போவாள்; அதனால், அவள் பிறந்த நும் குடிக்கும் பெருமை குன்றும். அவளைப் பெற மாட்டாது, அவள் காதலனும் அழிவன். ஆகவே, தாயே! தம்மிடத்தில் தோன்றிய சந்தனமும், முத்தும், இசையும் தம்மிடத்தி லேயே இருக்க வேண்டும் என எண்ணாத மலை, கடல், யாழ்களைப் போல், தாங்களும், நும் மனையிற் பிறந்த நும் மகள், நும்மை என்றும் பிரியாது, நும்மோடேயே இருத்தல் வேண்டும் என எண்ணுதல் கூடாது; அது அறமும் ஆகாது.

“மேலும் நும் மகள் கைப்பிடித்த அவ்விளைஞன் அறிவால், ஆண்மையால், அறநெறி ஒழுகும் ஒழுக்கத்தால்

*உயர்ந்த உரவோனாவன்; அவனை வழிபட்டு, அவன் பின் சென்ற நும் மகளும், கற்பு நெறி நிற்கும் காரிகையாவள்; அவர் மேற்கொண்ட நெறி, அறநெறிகள் பலவற்றுள்ளும் தலையாய அறநெறியாம். இம்மையிலும், மறுமையிலும் பிரிவறியாப் பெருவாழ்வு அளிக்கும் அற வழியும் அஃதே ஆம். ஆகவே, தாயே! சென்ற நும் மகள் குறித்து மனங் கலங்காது, மீண்டு நும் மனை புகுக!" எனக் கூறினர். அந்தணர் கூறிய அவ்வறம் விளக்கும் அழகிய பாட்டு இது:*

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்,
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் அசைஇ, வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல்மாலைக், கொளை, நடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை

என்மகள் ஒருத்தியும், பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்;
அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!
காணேம் அல்லேம்; கண்டனம் கடத்திடை;
ஆண்எழில் அண்ணலோடு அரும்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர் நீர் போறீர்?

பலவுறு நறும்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம்
என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;

எனவாங்கு,
இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்;
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலை; பிரியாஆறும் மற்று அதுவே."

*உடன்போக்கு மேற்கொண்டு சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலியை, இடைவழியில் அந்தணர் கண்டு, அறமும், உலகியலும் உணர்த்தியது இது.*

1. எறித்தரு — எறித்தலைச்செய்கின்ற; 2. கரகம் — கமண்டலம்; முக்கோல்—முத்தீ வணங்கும் முனிவர் என்பதை உணர்த்த அவர் ஏந்தும் முத்தலைக்கோல்; 3. நெறிட்பட — முறையாக; சுவல் — தோள்; வேறுஓரா — அறம் அல்லாத பிற மறங்களை மனத்தாலும் நினையாத; 4. குறிப்பு ஏவல் செயல்மாலை — ஐம்பொறிகளும் தமக்கு ஏவல் செய்தலை இயல்பாகப்பெற்ற; கொளை — கொள்கை; நடை — ஒழுக்கம்; 5. வெவ்விடை — கொடிய பாலைநிலம் போலும் இடங்கள்; செலல்மாலை ஒழுக்கம் — செல்லுதலை இயல்பாக உடைய ஒழுக்கம்; 9. கடம் — பாலைநிலத்து வழி; 10. ஆண்எழில் — ஆடவர்க்கு உரிய அழகு; முன்னிய — போகவேண்டும் என முன்கூட்டியே கருதிவந்த; 11. போறீர் — போல இருந்தீர்; நீர், தாயிர் போறீர் என மாற்றி; நீர் அவள் தாய்போலும் எனக் கொள்க. 12. பலஉறு — நறுமணப்பொருள்கள் பலவற்றோடு கலக்கும்; படுப்பவர் — பூசிக்கொள்வார்; அல்லதை — அல்லது; 15. சீர் — சிறப்பு; கெழு — பொருந்திய; 17. தேருங்கால் — ஆராயும்பொழுது; 18. ஏழ்புணர் — நரம்புகள் ஏழும் கூடப்பிறக்கும்; முரல்பவர் — பாடுவார்; 22. இறந்த — மிகஉயர்ந்த; எவ்வம் — வருத்தம்; படரன்மின் — கொள்ளற்க; 24. அறம்தலை — தலை அறம் என மாற்றித் தலையாய அறமாம் எனக் கொள்க; பிரியா ஆறு — இம்மை மறுமை ஆகிய இரண்டிடத்தும் பிரியாது வாழும் வழி.

9

# செறிக நின் வளையே!

இன்பம் நுகர வேண்டிய இளமைப் பருவம் உடையான் ஒருவன், பொருளீட்டும் முயற்சி மேற் கொண்டு, அண்மையில் மணந்து கொண்ட மனைவியைத் தனியே விடுத்து வெளிநாடு செல்ல விரும்பினான். ஆனால், தன் விருப்பத்தினைத் தன் காதலிக்கு உரைத்து, அவள்பால் விடைபெற்றுச் செல்வது இயலாது என்பதை உணர்ந்தான். அதனால், அவளுக்கு அறிவியாது, அவள் தோழியை அழைத்துத் தன் முடிவினைக் கூறினான். அவன் முடிவு கேட்டு அஞ்சினாள் தோழி. அவன் பிரியின், அவன் மனைவி, அப்பிரிவாலாய துயர் தாங்கி, உயிர் கொண்டிராள். அத்துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் அத்துணை வன்மை அவள் உள்ளத்திற்கில்லை என்பதை உணர்ந்த தோழி, அவனைப் பிரிந்து செல்லாவாறு, எவ்வாற்றானும் தடுத்து நிறுத்தி விடுதல் வேண்டும் என விரும்பினாள். உடனே, போக விடை கொண்டு நிற்கும் அவனை நோக்கி,

“அன்ப! இளமை இன்பம் நுகர்தற்குரிய காலம். ‘தம்மை வந்து அடைந்தார்க்கு அன்பு காட்டுவதே செல்வர்க்கு அழகு. எவர்க்கும் எவ்விதத்தினும் துயர் விளைக்காமையே இசை பெறும் வழியாம். அன்போடும், அருளோடும் வருவதே பொருளாம்!’ என்றெல்லாம் அற நூல்கள் கூறுகின்றன. அவ் அற நூல்களை ஐயம் திரிபு அறக் கற்றுத் தெளிந்த நீ அவ்வுண்மைகளை மறந்து விட்டனை போலும். இன்பம் நுகர வேண்டிய இளமைக் காலத்தைப் பாழ்செய்து விட்டுப் பொருள் தேடிப் போகின்றனை. நீயே எல்லாம் என நின்னை வந்தடைந்துள்ள நின் மனைவியைக் கைவிட்டுப் பிரியத் துணிந்தனை. நின்னைக் காதலித்துக் கைப்பிடித்த மனைவியையே துயர்க்கு உள்ளாக்குகின்றனை. அவள் அலறி அலறிக் கூவி அழுமாறு, அவளைப் பிரிந்து போவது அறம் அன்று என்று எண்ணாது, பொருளே எல்லாம் எனப் பிழைவழி காட்டும் நின் நெஞ்சம் கூறுமாறு, கெடுவழி நின்று பொருள் தேடிப் போயின், அவள் நின் அன்பற்று அழிவள். ஆகவே, பெரும! போகும் எண்ணத்தைக் கைவிடுவாயாக!” என அறிவுரை கூற விரும்பினாள்.

ஆனால், அதை அவ்வாறே கூறாது, “அன்ப! எண்ணிய இன்பத்தை எண்ணியாங்குத் துய்க்கத் துடிப்பது இளமையின் இயல்பு. அவ்வின்பம் பொருள் துணை இல்லார்க்கு வாய்ப்பது இல்லை. அப் பொருள் இளமையில் வாய்க்காது போயின், அவ் விளைஞன், அவ் விளமைக் காலத்து இன்பங்களை நுகர மாட்டாது மனங்கலங்குவன். அக்கலக்கத்தால் உடல் தளர்ந்து வாடி

வனப்பு இழப்பன். கைப்பொருள் இன்றிக் கலங்கும் இளைஞர்களின் உடல் தளர்ந்து வாடுவது போல், தம் கிளைகள் வாடி வதங்கவும்; பண்புமிக்க பெரியோர்கள் பால் செல்வம் உண்டாயின், அச் செல்வம், அவர்பால் நெடிதுநாள் நின்று, ஊருணியில் நிறைந்த நீர் போலவும், ஊர் நடுவே நின்ற மாமரத்தின் பழங்கள் போலவும், உலக மக்கள் அனைவர்க்கும் பயன்படும். ஆனால், அச்செல்வம் வாய்க்கப் பெற்றவன், இழிந்த குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாய சீரிலாச் சிறியோனாயின், அச்செல்வம் அவன்பால் நெடிது நில்லாது, அவனைச் சேர்ந்த சிலர்க்கும் பயன்படாது பாழாம். அச் சிறியோன்பால் சேர்ந்த செல்வம் போல், தம் அடியில் வந்து நிற்பார்க்குச் சிறிது நிழலும் தந்து உதவமாட்டாது, இலைகள் எல்லாம் உலர்ந்து உதிர்ந்து போகவும்; அளவிற்கு மீறிய கொடுமை உடையனாய் எவர்க்கும் கேடே புரியும் ஒருவனின் இறுதிக் காலத்தில், அவனேயன்றி, அவன் உற்றார் உறவினர்களும் அழிந்து போவர். அதைப் போல், அடிமரமும், அதன் கிளைகளும் அழிவதோடு நில்லாமல், அவற்றின் ஆணி வேர்களும் காய்ந்து கருகவும், ஞாயிறு, தன் வெப்பத்தை யெல்லாம் வாரி இறைத்துக் காய்வதால், மக்கள் மனம் கலங்கி, வாய்விட்டுப் புலம்ப, ஆறிலொரு பகுதி என்ற முறையைக் கைவிட்டு, அவர்பால் உள்ள எல்லாப் பொருள்களையும், கொலைத் தொழிலுக்கு அஞ்சாத கொடியோரை அரசியல் அலுவலராகக் கொண்டு, கொள்ளையடித்து வாழும் கொடுங்கோலன் ஆட்சியில், அவன் நாட்டு மக்களும் மாவும், பசியும் பிணியும் உற்று, உயிர் இழத்தல்போல், மரங்கள் எல்லாம்

உலர்ந்து போன உறுதுயர் மிக்கதன்றோ நீ செல்லும் பாலைநிலம்!'' என, அவன் செல்லும் காட்டின் கொடுமையினை எடுத்துக் காட்டும் நிலையிலேயே விளக்கியுரைத்தாள்.

ஆனால், அவள் உரைத்த அவ் அறவுரை கேட்டும், அவன் தன் முடிவினை மாற்றிக் கொண்டானல்லன். பிரிவதையே கருதி நின்றான். அவன் பிரிந்துவிடின், அவள் உயிர் பிரிந்து விடுமே என்ற அச்சம் தோழிக்கு. அதனால், அவனை எவ்வாறேனும் நிறுத்திவிட விரும்பினாள். அறவுரை கேட்டு நிற்க மறுக்கும் அவன், தன் மனைவியின் துயர்நிலை அறியின், தான் பிரியின், அப் பிரிவுத் துயர் பொறாது உயிர்விடும் அத்துணை மெல்லியள் என்பதை அறியின், தன் பிரிவினைக் கைவிடுவன்; அறிவுரையால் ஆகாதது, அவள் துயர் நிலையால் ஆகும்; தன் மனைவி மாண்டு போவள் என்பதை அறிந்தும், பிரிந்து போகும் அத்துணைக் கொடியவன் அல்லன் அவன்; அவன் உள்ளம் அந்நிலையைத் தாங்காது, அதனால், அவன் மனைவியின் மென்மைத் தன்மையின் இயல்பினை, அத்தகையாள், அவன் பிரியின் என்னாவள் என்பதனை, எடுத்துரைக்கத் தொடங்கினாள்.

"அன்ப! ஒரு நாள், அவளும் நீயும் துயில் கொண்டிருக்குங்கால், உன்மீது கிடந்த அவள் கையை விலக்கி விட்டுச் சிறிதே விலகினாய். அவ்வாறு விலகியது வேண்டுமென்று செய்ததன்று. அச்செயல் அவளுக்கு ஆற்றொணாத் துயர் தரும் என்பதை அறிந்து செய்த செயலன்று. ஆனால், அதற்கே, அவள் நனிமிகத் துயர் கொண்டு புலம்பினாள். அதை நீ மறந்திருக்க மாட்டாய்,

மற்றொரு நாள், இன்ப உணர்வை மிகுதிப் படுத்தல் வேண்டிய நீ, ஒரு விளையாட்டினை மேற் கொண்டனை. உண்மையில் அவள்பால் பேரன்பு கொள்ளும் நீ, அவளை ஓர் இமைப் பொழுதும் பிரியாது, அவள் அண்மையி லேயே இருக்கும் நீ, விளையாட்டாக அவளை விட்டுப் பிரிந்து, சிறிது நாழிகை, அவள் காணாவாறு மறைந்திருந்தனை. விளையாட்டின்பம் குறித்து, நிகழ்ந்த அச்சிறு பிரிவையும் தாங்கிக் கொள்ள மாட்டாது துயர் கொண்டாள்; அத்துணை மென்மையும், நுண்மையும் உடையது அவள் உள்ளம் என்பது உனக்கும் தெரியும். பிறிதொரு நாள், நீ அவளை விட்டுப் பிரிந்தாயும் அல்ல; அவளோடு, அவள் கண்ணெதிரிலேயே இருந்தனை. அப்போது, நின் முகத்தினை நோக்கியவள், அப் பார்வையில் அருட்டன்மை குறைந்திருக்கக் கண்டாள். அருள் நோக்கு இல்லையே ஒழிய, அதில் மருள் நோக்கோ, வெறுப்புக் குறிப்போ சிறிதும் இல்லை. அங்ஙனமாகவும், உன் பார்வையில் அருள் குறைந்திருப்பது கொண்டு, கலங்கிக் கண்ணீர் விட்டாள் அவள். அத்துணைப் பேரன்பும் மெல்லிய உள்ளமும் உடையாள் அவள். அத்தகையாள்பால், அன்ப! யான் சென்று, 'அன்புடையாய்! உன்னைப் பிரியாது வாழும் இல்வாழ்க்கைக்கு இடையே பிரிந்து போதலை விரும்பிப் பொருள் தேடி வெளிநாடு செல்லத் துணிந்து விட்டார் நின் காதலர். இத்துணை இளமையும், இனிய பண்பும் உடையாளைப் பிரிந்து போவதா என எண்ணிப் பாராமல், அரிதின் முயன்று தேடுவார்க்கே பெறலாகும் பொருளை விரும்பிப் புறப்பட்டு விட்டார். மாறா

இன்பமும், மகிழ்ச்சியும் தரும் நின்னை மதியாது, பொருளே எல்லாம் என அதை மதித்து, அப்பொருள் கொணர்வான் வேண்டிப் போய்விட்டார்' என்று கூறின், அவள் நிலை என்னாம்? உள்ளம் உடைந்து, உடல் நலம் இழப்பள்; கண்கள் நீர் மல்க, உறக்கம் ஒழிந்து உறுதுயர் கொள்வள்; காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்கும் அவள் பேரழகு பாழாம்; அவள் அறிவும் பிறிதாம்; அவள் உயிரும் பிரியும். ஆகவே, அன்ப! பிரிந்து போவது நின் பெருந்தன்மைக்குப் பொருந்தாது!" என்று கூறி முடித்தாள்.

தோழி கூறியன கேட்டான் அவ்விளைஞன். உடனே, தான் செல்லும் அந் நீண்ட வழியில், தனக்குத் துணை யாகுக எனக் கையில் ஏந்தியிருந்த, மாசுபோகத் துடைத்து, நிலவு போல் ஒளி வீசும் நீண்ட வேலை ஒருபால் வீசி எறிந்தான். தன் போக்கையும் மாற்றிக் கொண்டான். போகேன் என உறுதி கூறினான். அந்நல்ல செய்தியைச் சொல்ல, அவன் காதலிபால் விரைந்தாள் தோழி. ஆனால் அதற்குள்ளாகவே, அவன் பிரிவுச் செய்தியை எவ்வாறோ அறிந்து கொண்டு, அத்துயர் மிகுதியால், அப்பெண்ணின் உடல் தளரக், கைவளைகள் சுழன்று ஓடுவதைக் கண்டாள். உடனே அவள் அண்மையிற் சென்று, நிகழ்ந்தவற்றைக் கூறி, "நின் பொருட்டு நின் துயர் நிலை காண அஞ்சிப் பொருள் கருதிப் போவதை நிறுத்திக் கொண்டார் நின் கணவர். ஆகவே, கவலை ஒழித்துக் கவினுறுக நீ. நின் உடலும் வளை கழலாவாறு பருத்து வனப்புறுமாக!" எனக் கூறினாள். அதுவே இது:

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி,
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்,
அலவுற்றுக் குடிகூவ, ஆறுஇன்றிப் பொருள் வெஃகிக்,
கொலைஅஞ்சா வினைவரால் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்;

இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்,
உடைபு நெஞ்சுஉக ஆங்கே, ஒளி ஒடற்பாள் மன்னோ?
படையமை சேக்கையுள் பாயலின், அறியாய், நீ
புடைபெயர்வாய் ஆயினும் புலம்புகொண்டு இனைபவள்;

முனிவுஇன்றி முயல்பொருட்கு இறத்திநீ எனக்கேட்பின்,
பனியகண் படல்ஒல்லா படர்கூர்கிற்பாள் மன்னோ?
நனிகொண்ட சாயலாள், நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்பு அஞ்சிக் கலுழ்பவள்;

பொருள்நோக்கிப் பிரிந்துநீ போகுதி எனக் கேட்பின்,
மருள்நோக்கம் மடிந்து ஆங்கே மயல்கூர்கிற்பாள் மன்னோ?
இருள்நோக்கம் இடைஇன்றி, ஈரத்தின் இயன்ற நின்
அருள்நோக்கம் அழியினும் அவலம்கொண்டு அழிபவள்;

என வாங்கு,
'வினைவெஃகி நீசெலின், விடும்இவள் உயிர்' எனப்
புனையிழாய்! நின்நிலை யான்கூறப், பையென
நிலவுவேல் நெடுந்தகை; நீளிடைச்
செலவு ஒழிந்தனனால்; செறிக நின்வளையே!"

*தலைமகன் பிரிவுணர்ந்த தோழி, 'பொருள் காரணமாகப் பிரிந்து, இத்தகைய வழியிற் போவாய்*

*என்பதை அறியின், நின் தலைவியின் நிலை இவ்வாறாம்!' எனக் கூறிச் செலவழுங்கு வித்ததை, அவள் தலைவிக்குக் கூறியது இது.*

1. சினை—கிளை; 2. சிறியவன்—குணங்களால் சிறியவன்; 3. இகந்து—வரம்பு மீறி; இசை—புகழ்; 4. தெறுதல்—காய்தல்; 5. அலவுற்று—வருந்தி; 6. வினைவர்—அரசியல் அலுவலர்; கோல் கோடியவன்—கொடுங்கோலன்; 8. இடைகொண்டு— புணர்ச்சிக் கிடையே பிரிவு மேற்கொண்டு, இறத்தி—போவாய்; 9. உடைபு நெஞ்சு உக—நெஞ்சழிந்து கெட்டுப் போக; ஒளி ஓடற்பாள—அழகு கெடுவள்; 10. சேக்கை—படுக்கை; 11. புடைபெயர்தல்—சிறிதே விலகல்; இனைபவள்—வருந்துபவள்; 13. பனியகண்—நீர் நிறைந்த கண்கள்; படல் ஒல்லா—உறக்கம் கொள்ளா; படர்—துன்பம்; கூர்கிற்பள்—மிகுவள்; 15. துனி—பிரிவு; 18. இருள் நோக்கம்—வெறுப்புத் தரும் பார்வை; ஈரம்—அன்பு; ஈரத்தின் இயன்ற—அன்பு காரணமாகப் பிறக்கும்; 19. அவலம்—துன்பம்.

# 10

## இன நலம் உடைய காமம்

அருளும், ஆண்மையும், அன்பும், அறநெறி ஒழுக்கமும் உடையான் ஓர் அரசிளங் குமரன், தன் மனத்திற் கிசைந்தாள் ஒருத்தியை மணந்து, மகிழ்ந்து வாழ்ந்திருந்தான். ஒரு நாள், அவன், தன் அன்புடைய மனைவியை அழைத்து, "ஆருயிரனையாய்! நம் வாழ்க்கை உலகோர் போற்றும் உயர்வுடைய வாழ்க்கையாய், உலகத்தவர்க்கு உயர்நெறி காட்டும் வான் புகழ் உடையதாய் விளங்க வேண்டும். வாய்த்தற்கு அரிதாய அறவுள்ளம் வாய்க்கப் பெற்று, நம் மீது அருள் கொண்டு, நம் மனை நோக்கி வருவார் அனைவர்க்கும் வாரி வாரி வழங்குதல் வேண்டும். நம்மினும் படைபலம் பெற்று நம்மை அழிக்க அமயம் நோக்கி நிற்கும் பேரரசுகளை வென்றும், நம்மைப் பணியாது பகைத்து நிற்கும் சிற்றரசுகளை அழித்தும், நல்லரசு அமைந்து நாடாள வேண்டும். மனம் ஒன்றுபட்டு, நாம் இருவரும் மேற்கொண்ட நம் காதல் வாழ்வு, இறவா இன்பம்.

உடையதாதல் வேண்டும். அத்தகைய வாழ்வையே விழுமியோர் விரும்புவர். நம் வாழ்வும் அத்தகைய வாழ்வாதலையே நீயும் விரும்புவை. அவ்வாழ்வு பெற வேண்டுமாயின், நம்பால் கொள்ளக் குறையாக் குன்றனைய செல்வம் கொழித்தல் வேண்டும். அறத்தையும், ஆற்றலையும், இறவா இன்பத்தையும் தர வல்லது அச் செல்வம் ஒன்றே. ஆகவே, அச் செல்வம் சேர்க்கும் பணியினை யான் விரும்பி மேற்கொண்டு விட்டேன். பிற்பயக்கும் பேரின்பம் கருதிப் பிரிவுத் துன்பத்தைத் தாங்கிக்கொண்டு, பொருள் தேடிப் போக எனக்கு விடை தருவாயாக!" என வேண்டி விடை பெற்று வெளிநாடு சென்றான்.

சென்ற அவன், வருவதாகக் கூறிச் சென்ற காலம் வரவும் வந்திலன். அவனை இமைப் பொழுதும் பிரியாது வாழ்ந்தவள் அவன் மனைவி. அவள் பொருளின் பெருமை குறித்து அவன் கூறியன உண்மையாதல் உணர்ந்து, அதனால் ஒருவாறு உள்ளம் தேறி, அவன் பிரிந்து போவதற்கு இசைந்தாள். ஆனால், சென்ற தன் கணவன், அவன் கூறிச் சென்றவாறு விரைவில் வாராமையால் வருந்தினாள். அவன் விரைவில் வாரான் போலும் என ஐயுற்றாள். அதனால் அவள் துயர் மிகுந்தது. தன் துயர் நிலை கண்டு, தன்பால் வந்த தோழியைப் பார்த்துத் "தோழி! செல்வம் சேர்க்கச் சென்ற நம் அன்பர் விரைவில் வருவாரோ? அவர் கூறிச் சென்றவாறு, விரைவில் வாரார் என்றே யான் எண்ணுகின்றேன். அவ்வாறு எண்ணுதற்குக் காரணம் இல்லாமற் போக வில்லை. தோழி! அவர் சென்ற அக்காட்டு வழி,

செந்நெருப்புப் போல் சுடும் வெம்மையுடையமையால், ஆங்குச் செல்வார் அடி பொறுக்கலாகாது வருந்தும் கொடுமையுடையது. இலைகள் பசுமை இழந்து, உலர்ந்து உதிர்ந்து போயினமையால், தீய்ந்து போன கொம்புகளைக் கொண்ட மரங்களே நிறைந்து, இன்பநிலை இழந்து, சென்றாரைத் துன்புறுத்தும் தன்மையுடையது. மலையில் வளர்ந்த மூங்கில்களும் வாடி வறளுமாறு ஞாயிற்றின் கொடிய கதிர்கள் காய்தலால், ஆங்குச் செல்லச் சிந்தையால் சிந்திப்பாரையும் வருத்தும் வழிக் கொடுமை வாய்ந்தது. இச் செய்தியை நமக்கு அறிவித்தாரும் அவரேயன்றோ! அத்தகைய கொடுமை மிக்க வழியில் சென்றவர், எவ்வாறு விரைந்து மீளுதல் இயலும்? உறுதியாகக் கூறுகிறேன், அவர் விரைந்து இவண் வந்து சேரார். தோழி! அவரை இமைப் பொழுதளவும் விட்டுப் பிரிந்து வாழ்ந்தறியாத யான், எவ்வாறு அத்துணைக் காலம், அப் பிரிவுத் துயர் தாங்கி ஆற்றியிருப்பேன்?" என்று கூறி வருந்தினாள்.

காட்டு வழி கொடுமை நிறைந்தது எனத் தன் காதலன் கூறியது கொண்டே, அவன் விரைந்து வாரான் என்று எண்ணி வருந்துகிறாள் என்பதறிந்த தோழி, அவளை நோக்கித், "தோழி! நீ கருதுமாறு காதலர் வாராதிரார், அதற்கு மாறாக, அவர் விரைவில் மீள்வர். இது உறுதி. அவ்வாறு யான் துணிந்து கூறுவதற்கும் காரணங்கள் உள. தாம் சென்ற காடு கொடுமைகள் நிறைந்தது என்று கூறிய அவரே, 'அக்காடு, மனையகத்தே தாம் விட்டுப் பிரிந்து வந்த மனைவியரை நினைப்பூட்டி, மனைவியரைப் பிரியாதிருந்து மகிழ்ந்து வாழ வேண்டிய

காதல் வாழ்வின் சிறப்பினை அறிவூட்டி, அவர்களை வந்த வினைமுடித்து, விரைவில் வீடு திரும்புமாறு செய்யவல்ல காட்சிகளையும் கொண்டுள்ளது என்றும் கூறியுள்ளார். காடு கொடுமை உடைத்து என்று கூறிய அவர், தம் கன்றுகள் புகுந்து உண்டு, பின்னர்த் தம் தாயும் தந்தையும் உண்ண வேண்டும் என்பதைத் தம் இளமையால் மறந்து கலக்கிச் சேறாக்கிய நீரும் சிறிதே இருப்பது கண்டு, முதலில், தாம் விரும்பும் தம் பிடிகளுக்கு ஊட்டிவிட்டு எஞ்சிய நீரைப் பின்னர்த் தாம் உண்ணும் களிறுகளையும், தாம் விரும்பும் தம் பெடைகள், வெய்யிற் கொடுமை தாளாது வருந்துவது கண்டு, தம் சிறகுகளை விரித்து, அவற்றின் நிழலால், அப்பெடைகளின் வருத்தத்தைப் போக்கும் அழகிய ஆண் புறாக்களையும், காயும் ஞாயிற்றின் கொடுமையின் நீங்கி நிற்கத் தக்க நிழலைக் காணாது, வருந்தும் தம் பிணைகளின்மீது வெய்யில் வீழா வண்ணம் அவற்றின் அணித்தே நின்று, அவ் வெய்யிற் கொடுமையைத் தாம் தாங்கிக் கொண்டு, தம் நிழலை அவற்றிற்குத் தந்து, அவற்றின் துயர் போக்கும் அன்புடைய கலைமான்களையும் உடையது அக்காடு!' என்று உரைத்ததை நீ மறந்து விட்டனையோ? இத்தகைய இன்பக் காட்சிகளைக் காண்பார் உள்ளத்தில் காதற் கனலை மூட்டிவிடும் அழகிய காட்சிகளைக் கொண்ட அக்காட்டு வழியைக் கடந்து செல்வார், ஆங்கு அவற்றைக் கண்டும், நெடிது நாள் நிற்பரோ? களிறும், கலையும், புறாவும் தாம் விரும்பும் தம் பிடியும், பிணையும், பெடையும் வருந்தும் வருத்தம் போக்கி வாழ்வளிக்கும் காட்சிகளைக் காணும் அவர், தம் மனைவியர் வருந்த

*வாராதிருப்பரோ? தாம் காதலிக்கும் உயிர்களின் உறுதுயர் போக்கத் தாம் துயர் ஏற்றலைத் தயங்காது மேற்கொள்ளும் அக் காட்சிகளைக் காண்பார், காட்டு வழியின் கொடுமைக்கு அஞ்சித், தாம் வாராதிருந்து, தம் மனைவியரை வருத்துவரோ? விரைந்தோடி வீடு அடையாதிருப்பரோ? ஆகவே, தோழி! அவ்வழியில் சென்ற நின் காதலனும் விரைவில் வந்து சேர்வன். மேலும், நம் மனையில் பல்லியும் நற்சொல் கூறுகிறது. நம் இடக் கண்களும் துடிக்கின்றன. ஆகவே, அவன் விரைந்து வந்து சேர்வன். நீ வருந்துவது ஒழிக!" என்று கூறித் தேற்றினாள். தேற்றிய தோழியின் தெளிவுரையினைக் கூறுகிறது இப்பாட்டு:*

"அரிதாய அறன்எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று, பேணாரைத் தெறுதலும்,
புரிவுஅமர் காதலிற் புணர்ச்சியும் தரும் எனப்
பிரிவுஎண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்;
வருவர்கொல்? வயங்கிழாஅய்! வலிப்பல்யான்,
கேஎள்இனி;

'அடிதாங்கும் அளவின்றி, அழலன்ன வெம்மையால்
கடியவே, கனங்குழாஅய்! காடு,' என்றார், அக்காட்டுள்
'துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்உண்ணும் களிறு' எனவும் உரைத்தனரே;

'இன்பத்தின் இகந்துஒரீஇ, இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடு!' என்றார், அக்காட்டுள்
'அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை,
மென்சிறகரால் ஆற்றும் புறவு!' எனவும் உரைத்தனரே;

'கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரும் தகையவே காடு!' என்றார், அக்காட்டுள்
'இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்தளிக்கும் கலை!' எனவும்
உரைத்தனரே;

என வாங்கு,
இனைநலம் உடைய கானம் சென்றோர்,
புனைநலம் வாட்டுநர் அல்லர்; மனைவயின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன;
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே."

*பொருள்வயின் பிரிந்த தலைவன், காடு கடுமைய வாதலின், விரைவில் வாரான் எனக் கொண்டு தலைவி வருந்தக் காடு காதற் காட்சிகள் நிறைந்த கவின் உடையது. ஆகவே, விரைந்து வருவன் எனத் தோழி ஆற்றுவித்தது இது.*

2. பேணார்—பணியாதார்; தெறுதல்—அழித்தல்; 3. புரிவு அமர்—உள்ளம் ஒன்றுபட்ட; 5. வலிப்பல்—உறுதியாகக் கூறுவேன்; 8. துடி அடி—துடிபோலும் அடி; கயந்தலை—மென்மையான தலையினை உடைய யானைக்கன்று; சின்னீர்—சிறிது நீர்; 10. இகந்து—நீங்கி; ஒரீஇ—நீங்கி; தீந்த—தீய்ந்து உலர்ந்த; உலவை—கொம்பு; 12. அசை இய—வெய்யிற் கொடுமை தாளாது வருந்திய; 13. சிறகர்—சிறகு (இறக்கர்) வண்டு, வண்டர் என வருதல்போல், அர் எனும் ஈற்றுப் போலி பெற்று வந்தது; புறவு—புறா; 14. வேய்—மூங்கில்; கனைகதிர்—ஞாயிற்றின் நிறைந்த கதிர்கள்; 15. துன் அரும் தகைய—செல்லுதற்கும் அரிதாய தன்மை; துன்னுதல்—அடைதல்; 16. இன்னிழல்—இனிய நிழல்; பிணை—பெண்மான்; 17. கலை—ஆண்மான்; 19. இனைநலம்—இளையநலம்; இவைபோலும் நன்மைகள்; 20. புனைநலம்—பண்ணிய அழகு; 21. பாங்கு ஒத்து இசைத்தன—நல்ல இடத்தே இருந்து ஒலித்தன.

# 11

## மறப்பர் மதியிலார்!

பழந்தமிழ் மக்கள் தம் மக்களை வளர்ப்பதில் பெரிதும் விழிப்புடையராய் விளங்கினர். தம் மக்கள், 'இவனைப் பெற, இவன் தந்தை என்ன தவம் செய்தானோ?' எனப் போற்ற வாழும் பெருமைசால் குணங்களைப் பெற்றவராதல் வேண்டும் என விரும்பினர். அவ்வாறு விரும்பிய அவர்கள், அம் மக்கள் அவர்கள் பிற்கால வாழ்வில் அவ்வாறு சிறந்து விளங்குதற்கு, அம்மக்களின் இளமைக்கால வாழ்வே வழித்துணையாதல் வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்கள். ஒருவர் நல்லோராய் வாழ வேண்டின், அவரோடு சேர்ந்து வாழ்வோரும் நல்லோராதல் வேண்டும். தீயோர் நல்லோராவதும், நல்லோர் தீயோராவதும், சேர்ந்து வாழும் வாழ்க்கையால் உண்டாம். நம்மோடு பழகுவார் தீயோராயின், அவர்கள், நாளடைவில், நம்பால் உள்ள நல்லியல்புகளைக் கெடுத்துத் தம்மையொத்துத் தீயோராக்கி விடுவர். அவர் நல்லோராயின், அவர்கள்

நம்பால் காணலாம் ஒரு சில தீமைகளையும் போக்கி நல்லோராக்கி விடுவர். சேர்ந்து பழகும் பழக்கத்தின் வன்மையினை உணர்ந்தவர் தமிழர், 'மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு', 'மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனந்தூய்மை தூவா வரும்' எனத் தாம் உணர்ந்த உண்மைகளை உலகிற்கு உரைத்தும் சென்றுள்ளனர்.

பழகும் இனத்தின் பண்பு இது என அறிந்த பழந்தமிழர், தம் மக்களின் விளையாட்டுத் தோழர்களும் பண்பால் நிறைந்தவராதல் வேண்டும் என விரும்பினர். விரும்பியதோடு நில்லாமல், அத்தகையாரையே தேடிக் கொணர்ந்து, அவரொடு சேர்ந்து விளையாடச் செய்தனர். பழந்தமிழ் மக்கள், இந்நெறியில், மிகவும் உறுதிப்பாடுடைய ராய், பெரிதும் விழிப்புடையராய் விளங்கினமையால், அவர்கள் பெற்றெடுத்த பெண் மக்களின் தோழியராய் வந்த பெண்களும், பேரறிவும், பிழையா ஒழுக்கமும் வாய்ந்த உயர்ந்தோராய்க் காணப்பட்டனர். ஆடவர்க்கும் அறிவூட்ட வல்ல அத்துணைத் தெளிந்த அறிவு அத் தோழியர்பால் அமைந்திருந்தது. அத்தகைய தோழி ஒருத்தி, தன் ஆடற் பருவம் தொடங்கித் தன்னைப் பிரியாது தன்னோடு ஆடிப்பாடி வளர்ந்தாளொருத்தியின் கணவனுக்கு உரைப்பாள்போல், உலகினர்க்கெல்லாம் உரைக்கும் ஓர் அறிவுரை, அத்தோழியரின் ஆழ்ந்த அறிவுடைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாம்.

அத் தோழியின் அன்பிற்கு உரியளாய ஒரு பெண்ணை மணந்து மகிழ்ந்து வாழ்ந்திருந்த ஓர் இளைஞன், ஒரு நாள், பொருளீட்டி வருதல் வேண்டும்

எனும் வேட்கையுடையனாய், மனைவியை மனையகத்தே விடுத்து வெளிநாடு செல்லத் துணிந்தான். அதை அறிந்தாள் தோழி. அவர்கள் வாழ்க்கைக்கு வற்றாப் பெருஞ் செல்வம் வேண்டும் என்பதை அவள் அறிவாளாயினும், அப்பொருளை ஈட்ட வேண்டிய காலம் அதுவன்று. அதை அத்துணை இளமையிலேயே ஈட்ட வேண்டுவதும் இல்லை. பொருளீட்டு முயற்சியினும், அவ்விளமைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டுவன வேறு எவ்வளவோ உள என்பதையும் உணர்ந்தவளாதலின், பொருளீட்டுவதற்காக, அவன் அப்போது பிரிந்து போவதை விரும்பவில்லை. அதனால், அவன்பால் சென்று, "அன்ப! உன்பால் ஒன்று உரைக்க வந்துளேன், அருள்கூர்ந்து கேட்டு, ஆவன செய்ய வேண்டுகிறேன். அன்ப! ஒருநாள் வழக்கத்திற்கு மாறாக, நீ சிறிது மிகுதியாக உறங்கி விட்டனை. அது கண்ட நின் மனைவி, 'இம்மாற்றத்திற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். யான் அறியா அக்காரணம் யாதோ? அதனால் எனக்கு, என்பால் அவர் காட்டும் அன்பிற்கு யாது கேடு வந்துறுமோ?' என அஞ்சினாள். இந்நிகழ்ச்சி நின் நினைவை விட்டு அகன்றிராது. அத்துணை நெகிழ்ந்த உள்ளம் உடைய இவளை விடுத்துச் சேணெடும் தூரம் செல்லப் பிரிதல் பொருந்தாது. மேலும் நீ செல்லும் வழியோ இடையூறு மிகுந்தது. இன்னல் பல நிறைந்தது. தன்னை அணுகுவாரை, வளைந்த தன் முட்களால் தைத்து வதைக்கும் முள்வேலி போல், வழியில் செல்வார் உயிரைக் கொள்ளை கொள்ள வல்ல வில்லேந்திய வீரர், தம் கைப்பட்டு இறந்து வீழ்ந்தார் உடல்கள் மீது, அவை

மறையுமாறு போட்ட இலைகள் குவியல் குவியல்களாய்ப் பரந்து கிடக்கும் கொடுமை மிக்கது. அவ்வழியில், கோடையின் கொடுமையால், நீர் வறண்டு கிடக்கும் சுனைகளைத் தேடி வரிசையாக வந்தடைந்த நீர் வேட்கை மிக்க யானைகள், நீர் உண்ண வேண்டி நீட்டிய தம் கைகளை, ஆங்குத் தேங்கிக் கிடக்கும் சிறிது நீரும், வெய்யிலின் வெப்பத்தால் வெந்நீராய் மாறிச் சுட்டதால், துன்புற்று, அத்துன்பமிகுதியால், வரிசையாகச் செல்லும் தம் வழக்கத்தை மறந்து, நாலா திசைகளிலும் சிதறி ஓடி மலைச் சாரல்களெல்லாம் திரிந்து உழலும். அவை அவ்வாறு திரிந்தமையால் ஏற்பட்ட புதுவழிகள் பல தோன்றும் பொல்லாங்கு நிறைந்தது நீ செல்லும் அப் பாலைவழி. நின் பிரிவால், நின் அன்பை இழந்து, அதற்கே வருந்தும் இவள், அப்பாலை வழியில் செல்லும் நீ, ஆங்கு அடையும் அல்லலையும் அறியின், எவ்வாறு உயிர் கொண்டு வாழ்வள்? அவள் வருந்துவாள் என்பதை அறிந்தும், அவளை விடுத்துப் பிரியத் துணியும் நின் உள்ளம் என்ன, கல்லினும் வலிதோ?

"அன்ப! அவள் வருந்துவள், வாழ்விழப்பள் என்பது ஒருபுறம் கிடக்க, நீ இப்போது பிரிந்து போவது அற நெறியும் ஆகாது. பொருள் தேடிப் போகும் நின் போக்கு பொருந்துவதுமாகாது. 'திரைகடல் ஓடித் தேடிப்பெற வேண்டிய செல்வத்தைத் தேடிப் பெறுவதிலேயே இன்பம் உளது. அவ்வாறு தேடிக் கொணரும் பொருளே இன்பம் தரவல்லது!' என்று கருதுகின்றனை நீ. ஆனால், உண்மை அதுவன்று. இடையறவு இல்லா இன்பம் வேண்டின், அதற்குப் பொருள் வேண்டும். ஆகவே, அத்தகு

பொருளைப் பெரும் அளவில் ஈட்டிய பின்னரே, இன்ப நுகர்வில் நாட்டம் கொள்ளுதல் வேண்டும்!' எனக் கருதும் நின் கருத்து பிழைபட்டது. அன்ப! நீ கருதுமாறு பொருள் தேடிப் போகும் நீ, அப்பொருளைத் தேடிக் கொணரும்வரையும், இளமையும், இன்ப உணர்ச்சியும் நின் ஆணைக்கு அடங்கி, நினக்காகக் காத்திருக்கும் என எண்ணுவையாயின், அவ்வெண்ணம் நின் அறியாமை வயப்பட்டதாம். இளமையும் இன்பமும் உறவுடைய; இளமை இன்றேல் இன்பம் இல்லை; இன்பம் இல்லா இளமை, இளமையாகாது. ஆனால், இன்பத்திற்கும் பொருளிற்கும் அத்தகைய தொடர்பேதும் இல்லை. இளமையும், அக்காலத்தே பெறலாம் இன்பமும், பொருள் வரும் காலத்தை எதிர் நோக்கிக் காத்திரா. அவை நாள்தோறும் கழிந்து கொண்டேயிருக்கும். பல ஆண்டு முயன்று, பெரும் பொருள் தேடிக் கொணர்ந்தார் ஒருவர், அப்பெரும் பொருளாலாம் இன்பப் பயனை நுகர்தற்குரிய இளமையழிந்தமை காணின், கண்ணீர் விட்டுக் கலங்குவர். அந் நிலையில், அவர் ஈட்டிய குன்றனைய பெருநிதி, ஈட்டிய அவர்க்கு எள்ளளவும் பயனுடையதாகாது பாழாம்.

"மேலும், அன்ப! பொருள் தேடி முடிந்த பின்னர், இன்பம் நுகர எண்ணின், அதுகாறும் இறவாது வாழ்ந்திருப்போம் என்பதற்கு எவ்வித உறுதிப்பாடும் இல்லை. நம்முடைய வாழ்நாள் இத்தனை ஆண்டுகள் வரை உளது என, அதன் எல்லையை அறிந்தார் எவரும் இலர். இறப்பு எந்நேரத்திலும் ஒருவரை வந்தடையும். பொருள் தேடிப் போகும் வழியிலேயே, இறப்பு அவரை

அடைதலும் உண்டு. பொருள் தேடி வந்து, போகம் நுகர்வதற்கு முன்னரே, அவர் உயிர் போயினும் போம். மேலும் இளமையில் இன்ப நுகர்வு இல்லாத மனம், பிற்காலத்தில் அமைதி இழந்து, எதிலும் ஆழ்ந்து நிற்காது அலையும் ஆதலின், அவ்வின்பத்தை நுகர வேண்டிய நாட்கள் அதை நுகராது, பயனற்றுப் போகாவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது, பெருநோக்குடைய பெரியோர்கள் கடனாம்.

"ஆகவே, அன்ப! காதல் இன்பம் கெட்டுப்போமாறு, அவ்வின்ப நுகர்வில் கருத்தைச் செலுத்தாது, பொருள் தேடிப் போகும் நின் போக்கு நன்றன்று. அது இளமை கழிதலும், முதுமை பெறுதலும், பிறந்தவர் இறத்தலும் உலகியற்கை என்பதை மறந்து, உலக ஒழுக்கத்தோடு மாறுபட்ட மாண்பிலாச் சிறியோர் செல்லும் வழி. அது நினக்குப் பொருந்தாது. இளமை கழியும். முதுமை வந்தடையும். பிறப்புண்டேல் இறப்புண்டு என்பதை உணர்ந்து, அவ்வப் பருவத்தில் ஆற்ற வேண்டும் கடமை களை, அவ்வப் பருவத்தில் ஆன்றோர் காட்டும் அறநெறி நின்று, இன்பம் நுகர வேண்டிய இளமைக் காலத்தை, இல்லின்கண் நின் மனைக் கிழத்தியோடிருந்து, இன்பம் நுகர்ந்து கழிக்கக் கருதுவாயாக. இன்பம் நுகர வேண்டிய இப் பருவத்தைப் பொருள் தேடிப் போகும் முயற்சியில் கழித்து, வளங் கொழிக்க வேண்டிய நின் வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கிப் பாழ்செய்து விடாதே. இது அடியாள் விழையும் வேண்டுகோளுமாம்!" என அறிவுரை கூறி, வாழ்க்கையில் வழுக்கி வீழ இருந்த அவனுக்கு விழுமிய கருத்துக்களை அளித்து வழித்துணை புரிந்தாள். வாழ்க அத் தோழி!

"இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவையார் ஆற்று அறுசுனை முற்றி,
உடங்குநீர் வேட்ட உடம்பு உயங்கு யானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு,
வெறிநிரை வேறாகச் சாரல் சாரல் ஓடி
நெறி மயக்குற்ற நிரம்பா நீடுஅத்தம்,
சிறுநனி நீதுஞ்சியேற்பினும் அஞ்சும்
நறுநுதல் நீத்துப் பொருள்வயின் செல்வோய்!
உரனுடை உள்ளத்தை; செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள்இது என்பாய்!
இளமையும் காமமும் நின்பாணி நில்லா;
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை;
கடைநாள்இது என்று அறிந்தாரும் இல்லை;
போற்றாய் பெரும! நீ, காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயின் போகுவாய்!
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி."

*தலைமகன் பொருள்வயிற் பிரிவன் என்பது அறிந்த தோழி, காட்டின் கொடுமை, தலைவியின் மென்மை, நாளது சின்மை, இளமையது அருமை முதலாயின கூறிச் செலவழுங்குவித்தது இது.*

2. கொடுமரம்—வில்; தேய்த்தார்—கொல்லப்பட்டவர்; பதுக்கை—பிணக்குவியல் மறையுமாறு போட்ட இலைக்குவியல்; 3. கடுநகை—கொடிய குற்றம்; ஆர்— நிறைந்த; அறுசுனை—நீர் அற்ற சுனை; முற்றி—சூழ நின்று; 4. உடங்கு—வருந்திய; உயங்கு—

வருந்தும்; 5. கடும் தாம் பறிபாங்கு—விரைவாகப் பதித்தவிடத்து; தெறப்பட்டு—சுடப்பட்டு; 6. வெறிநிரை—வெறிகொண்ட யானை வரிசை; சாரல் சார ஓடி என மாற்றுக. 7. நெறி மயக்குற்ற—பலப்பல வழிகள் உண்டான; நிரம்பா—வழிக்குரிய இயல்புகளைப் பெறாத; அல்லது அவ்வியல்புகளை இழந்த; 12. நின் பாணி—நீ கூறுமாறு நின் ஆணைக்குள்; 14. கழிதல் உறாஅவைக் காண்டை—பயன் இன்றிக் கழிந்து போகாவாறு பார்த்துக்கொள். 15. கடைநாள்—வாழ்க்கையின் இறுதிநாள்; 16. புகர்பட—குற்றம்பட; பயனற்றுப்போமாறு; 17. வேற்றுமைகொண்டு—அக்காமத்தோடு வேறுபட்டு; 18. ஒராஅங்கு—ஒருபடிப்பட, அதாவது முழுதும்; மறந்தாரோடு மாற்றுமை கொண்ட வழி போற்றுவாய் என மாற்றுக; கூற்றமும் மூப்பும் மறந்து—காதல் இன்பத்தை இழந்து பொருள் தேடிப் போவாரோடு மாறுபட்டு, கூற்றமும், மூப்பும் உண்டென உணர்ந்து, பொருள்தேடிச் செல்லாது காதல் இன்பத்தைத் துய்க்கக் கருதுவாயாக என்க.

# 12

## நகை குறித்தனரே!

இல்லற வாழ்வு மேற்கொண்டு இன்ப உலகில் வாழ்ந்து வந்தனர் இளங் காதலர் இருவர். அவர் இருவருள், அவன் மனைவி அழகின் திருவுருவம். அவள் உள்ளம் அன்பின் உறைவிடம். தாமரை மலரின் நடுவில், அதன் கொட்டையைச் சூழ்ந்திருக்கும் பூந்தாதுகளையடுத் திருக்கும் இதழ் போலும் மென்மைய அவள் மலரடிகள். மழைத்துளி வீழ்ந்து மாசு நீங்கிய மாந்தளிர் போன்றது அவள் மேனி. அகநலத்தைப் புறங்காட்டும் பேரொளி யுடையது அவள் நெற்றி. வளை ஒலிக்கும் கைகள்; கேட்க இனிக்கும் கிளிமொழி அவள் வாய்ச் சொல். இத்தகு நலமுடையாள், சிங்கத்தின் வடிவம் சித்திரிக்கப் பெற்ற கால்கள் மேல், அமர்வார் அசைவிற்கேற்ப ஆடிக் கொடுக்குமாறு ஆக்கிய அழகிய கட்டில்மீது, அன்னத்தின் தூவியால் ஆய படுக்கையில் கிடந்து உறங்கும் உயர்ந்த நிலையுடையாள்.

ஒளி விசும் அவள் முகம் முதலாகத் தாமரை இதழ் போலும் தாள்வரையுள்ள அவள் மேனியின் நலங்களைக் கண்டும், அவள் வாய்மொழியையும், வளை ஒலியையும் கேட்டும் மகிழ்ந்து மனம் மயங்கியிருக்கும் இயல்புடையான் அவள் கணவன். அத்தகையான், ஒருநாள் அவளை அன்போடு அழைத்து, அருகில் அமர்த்தித் தங்கள் இன்ப வாழ்க்கை இடையூறின்றி இனிது நடைபெறுதற்கும், அவ் வாழ்க்கை அனைவராலும் பார்த்துப் பாராட்டத் தக்க புகழ் பெற்று விளங்குதற்கும், பொருளின் துணை இன்றியமையாதது என்பதை எடுத்துரைத்து, இறுதியாக, 'அப்பொருள் தேடி வரும் விருப்பம் உடையேன். ஆகவே, அது கிடைக்கும் வெளிநாடு சென்றுவர விடை கொடுப்பாயாக!" என்று வேண்டிக் கொண்டான்.

'வெளிநாடு செல்ல விரும்புகிறேன்!' என்ற அவன் சொல், அவள் உள்ளத்தின் அமைதியை அழித்துவிட்டது. ஆயினும் பொருளின் இன்றியமையாமை குறித்து, அவன் கூறிய சொற்கள் உண்மையாம் என்பதை உணர்ந்தமை யால், அவன் முயற்சியை மறுக்க அஞ்சினாள். அதனால், 'போகற்க' என்று அவனைத் தடுக்காது, "அவ்வாறாயின், என்னையும் உடனழைத்துச் செல்க!" என்று வேண்டிக் கொண்டாள்.

"என்னையும் உடனழைத்துச் செல்க!" என்ற அவள் சொல் கேட்டு நடுங்கிற்று அவ்விளைஞன் உள்ளம். பொருள் தேடிப் போவார் கடந்து செல்ல வேண்டிய காட்டின் கடுமையும், அவள் மென்மையும், அவன் மனக் கண்முன் மாறி மாறித் தோன்றி, அவனை மருட்டிற்று. போர் போர் போர் என, எப்போதும் போர் வெறி

கொண்டு அலையும் வேந்தன், தன்னைப் பணியாத நாடுகளைப் பாழாக்க மூட்டிய தீயால், அந்நாடுகள் வெந்து கரியாகும் காட்சியை நினைப்பூட்டுவதுபோல், கோடை ஞாயிற்றின் கொடுமை மிகுதியால் விளைந்த செந்தீ சுட்டுக் கரியாக்கிய அக்காட்டின் கொடுமையும், அவ்வாறு, அனைத்தும் வெந்து சாம்பராயினமையால், வாயிலிட்டு உண்ணலாம் பொருள் எதையும் காணாது கலங்கிய அந்நிலத்துப் பெண்மான், கானல் மிகுதியால் ஆங்குத் தோன்றும் பேய்த்தேரை, உண்ணுநீர் என்று எண்ணித் தான் விரும்பும் தன் கலைமானோடு, அப்பேய்த் தேரின் பின், ஓடி ஓடி ஏமாந்து இளைக்கும் கொடுமையும், மரஞ்செடி கொடிகளெல்லாம் மடியுமாறு, மழைமாறும் காலத்திலும் வற்றது வளர்ந்து, மானினம் கறிக்கும் உணவாய்ப் பயன்படும் மரலும் வாடவும், மலைகள் தம்பால் வளர்ந்துள மரங்கள் வெந்து சாம்ப லாகுமாறும், பாறைகள் பிளவுண்டு பொடியாகுமாறும் வெப்பம் உறவும், அம்மலை வாழ் மந்திகள் வருந்தவும், காயும் கோடையின் கொடுமை தாங்கமாட்டாது தளர்ந்த யானைகள், உண்ணுநீர்ச் சுனைகள் தோறும் சென்று, அவற்றில் நீரூற்று அற்றுவிட்டமையால், உண்ணலாம் நீர் இன்மை கண்டு, இறுதியில், போகும் தம் உயிரைப் போகவிடாது காத்தற் பொருட்டு, அச்சுனைகளிற் கலங்கிக் கிடக்கும் சேற்றினைச் சுவைக்கும் கொடுமையும், அவன் மனக்கண் முன் தோன்றி மருட்டின. இக்கொடுமை மிக்க அக்காட்டு வழியில் இவளை அழைத்துச் செல்வதா என எண்ணி, நடுங்கிற்று அவன் உள்ளம்.

இவளை அக்காட்டு வழியில் அழைத்துச் செல்லின், இவள் நிலை என்னாம் என்பதை அவன் அகக்கண்

கண்டு கலங்கிற்று. "அழகிய தாமரையின் அகவிதழ் போலும் அவள் மெல்லிய அடிகள், கோடையின் வெம்மையால் கொதிப்பேறிக் கிடக்கும் அப்பாலை நிலத்துப் பரற்கற்கள் மீது பட்டவுடனே, சாதிலிங்கத்தைப் பூசி வழித்தாற் போல் சிவந்து விடுமே! அதை யான் எவ்வாறு காண்பேன்? சிங்கக் கால்மேல், சிறப்புறப் பண்ணிய ஆடும் கட்டிலில், அன்னத்தின் தூவியால் ஆய படுக்கையில் படுத்து உறங்கும் மெல்லியளாய இவள், செல்லும் இடைவழியில், சிங்கத்தின் குரல் கேட்பின், சிந்தை கலங்குவளே! சிங்கத்தின் குரல் கேட்கவே நடுங்குவாள், அச் சிங்கமே எதிர்வரக் காணின், என்னாவளோ? மழை இன்மையால், இயல்பாகவே வாடிப்போன புதர்கள், வெய்யிலின் வெப்ப மிகுதியால், உயிர் அற்று உலர்ந்து போக, அதில் காட்டுத் தீப் பற்றிப் பேரொலியோடு பரவி எரியுங்கால், அவ்வெரியின் இடைபுகுந்து விரைந்து வீசும் அனற் காற்று, மழை பெய்யத் தளிர்க்கும் மாந்தளிர் போலும் இவள் மேனியிற் படின், அம்மேனியின் அழகு அழிந்து போகுமே!" என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினான். அதனால், அவள் அருகிற் சென்று, அன்போடு நோக்கிக், காட்டின் கொடுமை, அக்காட்டு வழியில் செல்லலாகா அவள் மேனியின் மென்மை, அத்தகையாள் ஆங்கு வரின் அடையலாகும் துயர்க் கொடுமை ஆகியவை, விளங்குமாறு விரிவாக எடுத்துரைத்து, "உடன் வருதல் ஒவ்வாது. ஆகவே வீட்டில் தங்கி, யான் போக விடை தருக!" என்று வேண்டிக் கொண்டான்.

இளைஞன் கூறியனவும், அவன் அதைக் கூறிய வகையும், தன்னை அழைத்துச் செல்வதோ, தானும்

போகாது நின்று விடுவதோ செய்வான்; அவன் போவது உறுதி; அதுவும், தன்னைத் தவிக்குமாறு தனியே விடுத்துப் போவது உறுதி என்பதைத் தெளிவாக்குவதாக உணர்ந்தாள் அப்பெண். தன்னைத் தனித்து விடுத்து அவன் மட்டும் பிரிவன் என்பதை அறியவே, அவள் மிகவும் வருந்தினாள். அம்மட்டோ! அவன் கூறிய அக்காட்டின் கொடுமை அவள் வருத்தத்தை மேலும் வளர்த்தது. செய்வதறியாது வருந்தினாள். அந்நிலையில் தனக்கு ஆறுதல் கூறுவாள், தன் துயர் போகும் வகை கூறித் துணை புரிவாள் தன் தோழியே என அறிந்து, அவள் பாற் சென்று, தன் காதலன் கருத்தைக் கூறிக் கண்ணீர் விட்டுக் கலங்கினாள்.

உலகியல் அறிந்தவள் அத் தோழி. அதனால், இளைஞன் முடிவு தவறன்று என உணர்ந்தாள். ஆனால், அப் பெண்ணோ உலகியல் உணராதவள். மேலும் அண்மையில் மணந்து கொண்டவள். காதலனோடு கூட இருந்து பெறலாம் பேரின்ப நுகர்ச்சியை வேண்டுமளவு பெற்று, அதனால் அதன்பால் வெறுப்புள்ளம் கொள்ளாதவள். அதற்கு மாறாக, அவ்வின்பத்தை ஆரத் துய்க்கத் துடித்துக் கொண்டிருப்பவள். அதனால், 'அவன் போக்கு நன்று! பொறுத்திருப்பதே நின் பெண்மைக்கு அழகு!' என எடுத்த எடுப்பிலேயே கூறிவிடின், அவள் துயர் முன்னினும் பெரிதாம். அந்நிலையில் அவ்வாறு கூறுவது பொருந்தாது அவன் பிரிவது உறுதியாயினும், பொய்யாகவாவது, அவன் போகான் எனக் கூறுவதே, அந்நிலைக்குப் பொருந்தும் என உணர்ந்தாள். அதனால், 'அவன் பிரிந்து போய்விடுவனே!' என அழுது ஏங்கி நிற்பாளை நோக்கிப், "பெண்ணே! அவன் உன்னை

உடனழைத்துப் போகாமை மட்டுமன்று; உன்னைத் தனியே விடுத்துத் தான் மட்டும் தனித்துப் போவதும் இல்லை. 'போவேன்' என்று அவன் கூறியது பொய்யேயல்லது உண்மையன்று. விளையாட்டிற்காகவே அவன் அவ்வாறு கூறினான். 'உன்னைத் தனியே விடுத்துப் பிரிந்து போகிறேன், கொடிய காட்டு வழியைக் கடந்து செல்லப் போகிறேன்!' என்று கூறியதெல்லாம், அதைக் கேட்டு, நீ அஞ்சி, ஆறாத்துயர் கொண்டு அழ, அக் காட்சியைக் கண்டு மகிழ்தற்கேயாகும். உண்மையில் அவன் போகான். போகும் எண்ணம் உடையனாயின், உன்னிடம் ஒன்றும் உரையாதே போயிருப்பன்; சொல்லிப் போவதாயினும், 'செல்லும் வழி, நல்ல வழி; ஏதம் இன்றிச் செல்லற்காம் இனிய வழி; ஆகவே, விரைந்திவண் வந்து சேர்வன். வருந்தற்க!' எனச் செல்லும் வழியின் பொல்லாங்கை மறைத்துப் பொய் கூறிப் போயிருப்பன். அதை விடுத்துப், போவதற்கே இசையாது வருந்தும் நின்பால், 'போகும் வழியின் நிலை தெரியுமா? அது எவ்வளவு கொடுமையுடையது தெரியுமா?' எனச் செல்லும் வழியின் அல்லல்களை, ஒன்று விடாது, அடுக்கிக் கூறியிருப்பனோ? மேலும் அவன் கூறுங்கால், 'அது போவதற்கு அரிய வழி—போக்கு அருவெஞ் சுரம்!' என்று குறிப்பிட்டான் என்று கூறிய நீ, அவன் அவ்வாறு கூறியதன் பொருள் யாது, அத் தொடரில் தொக்கி நிற்கும் அவன் கருத்து யாது என்பதை உய்த்துணர எண்ணாதது ஏனோ? வழி போவதற்கு அரியது என்றால், 'அவ்வழியில் யானும் போகேன்!' என்பதைக் குறிப்பால் உணர்த்திய தாகாதோ? இதை யெல்லாம் உணராது, அவன் போய் விடுவான் என்று வருந்துகின்றனையே! என்னே நின்

*பேதைமை! அவன் போகான். போவேன் என்று கூறிய அதுவும் ஒரு விளையாடல் குறித்தே! அதுவும் ஓர் இன்ப நிலைக்கே! அது கேட்டு வருந்தும் நீ, அவ்வருத்த நிலையில் எவ்வாறுள்ளாய் என்பதைக் காண்பதற்கே! நடுங்கும் நின் நிலை கண்டு நகைத்து மகிழ்தற்கே! ஆகவே, மனங் கலங்காதே!" என்று கூறித் தேற்றினாள். தேற்றிய தோழியின் தெளிவுரை இது:*

"செருமிகு சினவேந்தன் சிவந்து இறுத்த புலம்போல
எரிவெந்த கரிவறல் வாய்புகுவ காணாவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்,
திரிமருப்பு ஏறொடு தேர் அல்தேர்க்கு ஓட,
மரல்சாய, மலை வெம்ப, மந்தி உயங்க,

உரல்போல் அடிய உடம்பு உயங்கு யானை,
ஊறுநீர் அடங்கலின், உண்கயம் காணாது,
சேறு சுவைத்துத், தம் செல்லுயிர் தாங்கும்
புயல்துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்;

எல்வளை! எம்மொடு நீவரின், யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆய்இதழ் அரக்குத் தோய்ந்தவை போலக்,
கல்லுறின், அவ்வடி கறுக்குந அல்லவோ?

நலம்பெறு சுடர்நுதால்! எம்மொடு நீ வரின்
இலங்குமாண் அவிர்தூவி யன்ன மென் சேர்க்கையில்
துலங்குமான்மேல் ஊர்தித் துயில் ஏற்பாய், மற்றுஆண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை அல்லையோ?

கிளிபுரை கிளவியாய்! எம்மொடு நீ வரின்,
தளிபொழி தளிரன்ன எழில்மேனி கவின்வாட

முளிஅரில் பொத்திய முழங்கு அழல் இடைபோழ்ந்த
வளிஉறின், அவ்வெழில் வாடுவை அல்லையோ?

என வாங்கு,
அனையவை காதலர் கூறலின், வினைவயின்
பிரிகுவர் எனப் பெரிது அழியாதி; திரிபு உறீஇக்
கடுங்குவரை அருமைய காடெனின் அல்லது
கொடுங்குழாய்! துறக்குநர் அல்லர்;
நடுங்குதல் காண்மார், நகை குறித்தனரே."

*தன் மென்மையும், காட்டின் கொடுமையும் கூறித் தன்னை உடனழைத்துச் செல்ல மறுத்துப், பிரிந்து செல்கிறான் தலைவன் என்பதறிந்து, தலைவி வருந்த, தலைவன் நகையாடிக் கூறியதல்லது போகான் எனக் கூறித் தோழி ஆற்றுவித்தது இது.*

1. சிவந்து—கோபித்து; இறுத்த—தாங்கிய; புலம்—பகைவர் நாடு; 2. கரிவறல்—கரிகளைக் கொண்ட, வறண்ட அந்நிலத்தில், 3. பொரி—புள்ளி; 4. தேர் அல்தேர்—பேய்த் தேர் என வழங்கப்பெறும் கானல் நீர், ஓடும் தேரை நீக்குதற்குத், தேர் அல்லாத தேர் என்றார்; 5. உயங்க—வருந்த; 10. யாழ—அசை; 11. மேவந்த—பொருந்திய; சீறடி—சிறிய அடி; 12. அல்லி—தாமரையின் அகத்தே கொட்டையைச் சூழ்ந்துள்ள தாதுக்களை அடுத்திருக்கும் அவ்விதழ்கள்; அரக்கு—செவ்வாக்கு; 15. மாண் அவிர்—மாட்சிமை மிக்க; தூவி—இறகு; 17. விலங்குமான்—விலங்காகிய சிங்கம்; வெருவுதல்—அஞ்சுதல்; 18. புரை—ஒத்த; கிளவி—மொழி; 19. தளி—மழைத்துளி; 20. முளி—உலர்ந்த; அரில்—புதர்; பொத்திய—மூண்ட; 21. வளி—காற்று 25. குரை—இசை நிறை பொருள் இல்லை; கடுமையும் அருமையும் உடைய காடு என்க; 27. காண்மார்—காண்பதற்காக.

## 13

# அறநெறியும் ஆக்கமும்

**கா**தலையும் கடமையையும் ஒருசேர மதிக்கும் உயர்ந்த உள்ளம் வாய்க்கப் பெற்ற ஓர் இளைஞன், தன் மனம் விரும்பும் மாண்புடையாள் ஒருத்தியை மணந்து, மனையற வாழ்வு மேற்கொண்டான். சின்னாட்கள் வரை அவள் பேரழகிற்கும் பெருகிய அன்பிற்கும் அடிமையாகி, அவளை இமைப்பொழுதும் பிரியாது அவள் அழகையும் அரிய குணங்களையும் பாராட்டிப் பேரின்பம் பெற்று மகிழ்ந்திருந்தான். ஒருநாள், தானும், தன் மனைவியும் ஒன்று கூடி மேற்கொண்டுள்ள இல்லற வாழ்வு இன்ப யிடையறவு அற்று, இனிது நடைபெற வேண்டின், அதற்குப் பெரும் பொருட்டுணை வேண்டும் என உணர்ந்தான். அவள்பால் கொண்ட காதல் மயக்கத்தால், தன் கடமையை மறந்துவிடின், மனையற வாழ்வு மாண்பிழந்து போம் எனவும் உணர்ந்தான். உணர்ந்ததன் பயனாய்த் தன் மனைவிபால் சென்றான். முதலில் மென்மையால் தலையணையையும், வடிவு வனப்புக்

களால் மலைவளர் மூங்கிலையும் தோற்கப் பண்ணும் தோள், அழகிய கருநீல மலர்கள் இரண்டு இணைந் திருந்தாற் போலும் பேரழகு வாய்ந்த கண்கள், தேனும், மணமும் நிறைந்து வண்டுகளை வாவென வரவேற்கும் முல்லை அரும்புகளை ஒத்த பற்கள், காதல் ஒழுக்கம் உடைமையால் நறுமணம் நாறும் நெற்றி, கார்மேகமும் ஆசை கொள்ளும் கருநிறம் வாய்ந்த கூந்தல், வளைகளை அளவாக அணிந்து, அழகு தரும் முன்கை, செந்நிறமேனி ஆகிய அவள் உறுப்பு நலன்களை உவந்து பாராட்டினான்; பாராட்டி முடித்து விட்டு, முடிவில், பொருள் தேடிப் போகும் தன் முடிவினை மெல்ல வெளியிட்டான்.

அவன் முடிவினைக் கேட்டாள் அப் பெண். அது அவள் எதிர்பாராதது. பிரிவு என்ற ஒரு பொருள் உளது என்பதையே, அவள் அதுகாறும் உணர்ந்திலள். அதனால் அவன் கருத்தறிந்து கலங்கினாள். சற்றுமுன்னர் அவ்வாறு பாராட்டிய அந்நாவால், 'பிரிந்து செல்வேன்' என்று கூற எவ்வாறு இயன்றதோ? சிறிது நாழிகைக்கெல்லாம் பிரிந்து போகும் அத்துணைக் கொடியவனுக்கு, அவ்வாறு பாராட்டும் பக்குவம் எவ்வாறு வாய்த்ததோ? அப் பாராட்டு உண்மைப் பாராட்டாகும்கொல்? அது உண்மை உடையதாயின், தன்பால் அவன் காட்டும் உண்மையான அன்பை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதாயின், அவன் பிரிய எண்ணான். ஆனால், அவனோ பிரியத் துணிந்து விட்டான். ஆகவே, அப்பாராட்டு, அவன் விரும்பிப் பாராட்டியதன்று. அது, அவன் வெறுப்பின் விளைவால் அவ்வெறுப்பினை மறைக்க வந்ததேயாகும். அவன் இன்று அளவிற்கு மீறியன்றோ பாராட்டி விட்டான்! இவ்வாறு, என் உள்ளம்

இனிக்க, இன்னுரை வழங்கிப் பாராட்டியவன், அவ் வுள்ளம் வருந்தி அழியுமாறு, "பிரிந்து போய்விடுவேன்!" எனும் சொல் வழங்கவிட்டனனே! யான் என் செய்வேன்? அவனைப் பிரிந்து எவ்வாறு உயிர் வாழ்வேன்? என்றெல்லாம் எண்ணி வருந்தலாயினள்.

அவள் துயர்நிலை அறிந்தாள் தோழி. பொருள் எனப் படுவதன் உண்மை இயல்பினை நன்கு அறியாமையால், இன்ப நுகர்விற்குத் துணைபுரிய வருவதே பொருள்; அதற்கு மாறாக, அவ்வின்பம் அழிய வருவது பொருளாகாது என்ற பொருளின் உண்மை இயல்பை உணராமையால், அவன் அம் முடிவினை மேற்கொண்டுள்ளான். அவனை அவ்வுண்மையினை உணருமாறு செய்துவிடின், பிரிந்து போகும் தன் முடிவினை மாற்றிக்கொள்வன் என எண்ணினாள். உடனே அவ்விளைஞன் பால் சென்று, "அன்ப! உலகில் பொருள் என்பதன் உண்மை இயல்பை உணராதார் பலர். அவர்கள் பொருளினும் சிறந்தது உலகில் இல்லை எனக் கூறுவர். அவர் கொண்ட முடிவு அறியாமையின் விளைவு. அவ்வறியாமை நின்னையும் பற்றிக் கொண்டு விட்டதே என் அஞ்சுகிறேன் யான். உலகில் உயர்ந்தது பொருளே என நீ கருதுவதற்கு, அவ்வறியாமைதான் காரணம் போலும்! அன்ப! உலகில் சிறந்தது பொருளன்று. அப் பொருளினும் சிறந்தனவும் உலகில் உள. அவற்றை அப் பொருளின் துணையினைப் பெறமாலே பெறுதலும் இயலும். ஆகவே, பொருள் மேற் கொண்ட பற்றினால், அறிவிழந்து, பொருளே போகம்; பொருளே அனைத்தும் என்று கொண்டு, உண்மை இன்பத்தை இழந்து விடாதே.

"மேலும், அன்ப! 'எம் காதல் வாழ, வளர, அக்காதற் பயனைக் குறைவின்றிப் பெற, யாம் பொருள் தேடிச்

செல்கின்றேம்; காதல் கொண்டவர் பொருளற்ற வறியராயின், அவரால் அக்காதற் பயனைப் பெறுதல் இயலாது; பொருள் இல்லாதார் காதல் கொண்டு யாது பயன்? அவரால் அக்காதற் பயனைப் பெறுதல் இயலாதே!' என்று கூறும் உள்ளத் தெளிவற்றோரும் உலகில் உள்ளனர். அவர்கள் கூறுவனவற்றை நீயும் உண்மையென உணர்ந்து விட்டனையோ? அன்ப! உண்மையான காதலைவிட உலகில் சிறந்தது எதுவும் இல்லை. ஒருவர் கொண்ட காதல் உண்மையை உள்ளத் தூய்மையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தாயின், அக்காதல் உடையார்க்கு, உலகில், எவ்விதக் குறையும் இல்லை. அவர் வாழ்க்கையில் எது இல்லை யாயினும், அதனால் அவர் காதல் கருகிவிடாது. வறுமையால் வாடுவதோ, வாளால் வாழ்விழந்து போவதோ காதலுக்கு இல்லை. உலகெலாம் ஒன்று திரண்டு, அவர் காதல் வாழ்விற்கு உறுதுயர் விளைக்க முனையினும், அது, அவ்விடையூறுகளை யெல்லாம் இருக்கும் இடம் அறியாவாறு அழித்து, வெற்றி கொண்டு வாழும் வீறுடையது. ஆகவே, நிலையற்ற பொருளின் துணை அற்றுவிடுவதால், அது வாழ்விழந்து போய் விடாது. ஆதலின், 'பொருள் இல்லையேல், காதல் இல்லை! ஆகவே, அக்காதற் பயனை ஆரத் துய்க்கத் துடித்து நிற்கும் நான். அப் பொருளைத் தேடிச் செல் கின்றேன்!' என்று கூறுவது, கனியிருப்பக் காய் கவரும் கயவர் செயல் போலாம். நிற்க.

"உலகில் உயர்ந்தது பொருளே என்றும், காதற் பயன் அளிப்பதும் அப் பொருளே என்றும் கூறுவார் உரைகளை யும் உண்மையென்றே ஒப்புக் கொள்வதாயினும், பொருள்

தேடும் முயற்சி இப்போது பொருந்துவதன்று. பொருள் வேண்டும்; உலகில் உள்ளார் ஒவ்வொருவரும் பொருள் ஈட்டியே வாழ்தல் வேண்டும்; ஆனால், அப்பொருள், அற வழியில் வருதல் வேண்டும். பொருள் வேண்டும் எனும் பேராசையால், அப் பொருளை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்று எண்ணி, முறையல்லா முறைகளை மேற்கொண்டு, அறமல்லா வழிகளிற் சென்று, செல்வத்தைச் சேர்த்தல் செந்நெறியாகாது. பிறர் அழ அழத் தான் பொருளீட்டி, வாழ்வதோ, பிறர் பழிக்கத்தக்க பொருள்கள்மீது பற்றுக் கொள்வதோ கூடாது. வஞ்சனை யால் வந்த பொருள் வாழ்வளிக்காது. பொருள், பயனோடு புகழும் உடையதாதல் வேண்டும். புகழ்கெட வரும் பொருள் பொருளாகாது. துயர் உறும் காலம் வரினும், உள்ளத் தூயார், பழியொடு பட்ட பொருளை, அது எத்துணைப் பெரிதாயினும், அடைய எண்ணார். அவ்வாறு பிறர் வருந்தி அழ, பிறர் பழிக்க, வஞ்சனையால், அறநெறி கடந்து ஈட்டிய பொருள், அதை ஈட்டியவர்க்கு இன்பம் பயத்தற்கு மாறாக, இம்மை மறுமை ஆகிய இருநிலையிலும் எல்லையில்லாத் துன்பமே பயக்கும். அவர்க்கு அவர் ஈட்டிய அப் பொருளே பகைமையாம். இதை நீ உணர்தல் வேண்டும். பொருள் தேடும் முயற்சி மேற்கொண்டு, நீ பிரிந்து போய்விடுவையேல், நின் பிரிவுத் துயர் பொறாது, இவள் உயிர் இழத்தல் உறுதி. எவளுடைய இன்ப வாழ்விற்காக என்று நீ, பொருள் தேடிப் போக எண்ணுகின்றனையோ, அவள் இறப்பிற்கு அப்பொருளே காரணமாமாயின், அத்தகைய பொருளைத் தேடிப் போதல் பொருந்துமோ? அது அறிவுடையோர் செயலாமோ? ஆகவே, அன்ப! எவ்வழி நோக்கினும், பொருள் தேடிப் போகும் நின் போக்கு, இந்நிலையில் பொருந்தாது. நீயும் நின் மனைவியும் மேற்கொண்டுள்ள

அன்புத் தொடர்பு அற்ற வழியே, அவளை அத்துயர் தாளாது உயிரிழக்குமாறு விட்டுப் பிரிந்த வழியே பெறலாகும் பொருள், உண்மையில் பொருளாகாது. 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு; அல்கா நல்குரவு அவாவெனப்படும்; ஆரா இயற்கை அவா நீப்பின், அந்நிலையே பேரா இயற்கை தரும்!' என்றெல்லாம் கூறுவர் பெரியோர். உள்ள நிறைவே உயர்ந்த பொருளாம். ஆகவே, இவள் இறக்க, இவள்பால் பெறலாகும் பேரின்பத்தை நீ இழக்க, வரும் பொருளின்பால் கொண்ட பற்றை விடுதலே பெரும் பொருளாம். இவ் வுண்மையினை நீ யுணர்ந்து, காதலிக்கும் இவளை நின்பால் பிரிவறியாப் பேரன்பு கொண்டுள்ள இவளை மதித்துப் பொருள் தேடிப்போகும் நின் வேட்கையை விடுவாயாக!" என வேண்டிக் கொண்டாள். அறிவுரை வழங்கும் அவள் வேண்டுகோள் இது:

"அணைமருள் இன்துயில் அம்பணைத் தடமென்தோள்,
துணைமலர் எழில்நீலத்து ஏந்துஎழில் மலர்உண்கண்,
மணமௌவல் முகையன்ன மாவீழ் வான்நிரை வெண்பல்,
மணம் நாறு நறுநுதல், மாரிவீழ் இருங்கூந்தல்,

அலர்முலை ஆகத்து, அகன்ற அல்குல்,
சிலநிரை வால்வளைச் செய்யாயோ! எனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி,
இனிய சொல்லி, இன்னாங்குப் பெயர்ப்பது
இனி அறிந்தேன் அது துனி ஆகுதலே;

பொருள் அல்லால் பொருளும் உண்டோ? என யாழ நின்
மருளிகொள் மடநோக்கம் மயக்கப்பட்டு அயர்த்தாயோ?

காதலார் எவன்செய்ப, பொருள் இல்லாதார்க்கு? என
ஏதிலார் கூறும்சொல் பொருளாக மதித்தாயே!

செம்மையின் இகந்துஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப்
[பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ?

அதனால்,
எம்மையும் பொருளாக மதித்தீத்தை; நம்முள்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்து
அவவுக் கைவிடுதல் அது மனும் பொருளே."

*தலைமகன் பிரிவுக் குறிப்புணர்ந்து வருந்திய தலைவியின் நிலை கண்ட தோழி, தலைவன்பால் சென்று, காதற்பெருமையும், பொருளின் குறையும் கூறிச் செலவழுங்குவித்தது இது.*

1. அணை—தலையணை; மருள்—ஒத்த; இன்துயில் அணை என மாற்றுக; பணை—மூங்கில்; தட—பெருமை; 2. துணை மலர்—இரண்டாக இணைந்த மலர்; நீலத்து—நீல மலர் போலும், 3. மெளவல்—முல்லை; முகை—அரும்பு; மாவீழ்— வண்டுகள் விரும்பும்; மாவீழ் மண மெளவல் என மாற்றுக; வால்—வெண்ணிறம் வாய்ந்த; 4. இருங்கூந்தல்—கரிய கூந்தல்; 8. இன்னாங்குப் பெயர்ப்பது—துன்பத்திடத்தே துரத்துவது; 9. துனி—வெறுப்பு; 10. யாழ—இசைநிறை; 11. மருளிகொள்—மயக்கம் கொண்ட; அயர்ந்தாயோ—(அன்பை) மறந்தாயோ; 14. செம்மை—செந்நெறி, இகந்து ஒரீஇ—கைவிட்டு நீங்கி; 17. மதித்தீத்தை—மதிப்பாயாக, 18. கவவுக்கை—கூடிவாழும் வாழ்வு; விட—விடுதலால்; தான் அவள் எனும் வேற்றுமை இன்மையால், "எம்மையும்", "நம்முள்நாம்" எனத் தலைமகள் கூறுமாறே தோழி கூறினாள். 19. அவவு—அவா; பொருளிடத்து ஆசை; மனும்—நிலைபெற்ற.

# 14

# இளமையும் இன்பமும்

அரசராய்ப் பிறந்தார்க்குத் தம் நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு வேண்டும் பொருட் செல்வத்தை ஈட்டிக் கொணர்தலும், அந்நாட்டு மக்கள் அறவழியில் ஒழுகுதற்கு வேண்டும் அறிவினை ஊட்டவல்ல அறிவின ராதலும், அந்நாடு பகைவரால் பாழுறாவண்ணம் அந் நாட்டின் எல்லைப் பகுதிகளைக் காத்தலும் இன்றியமை யாதன என்பதையும், ஆனால், அரசரே ஆயினும், அவர் அக் கடமைகளை ஆற்ற வேண்டியவராதல் கருதி, அவர் என்றும் இளமை குன்றாது இருத்தல் வேண்டும் என எண்ணாது, அவர்க்கும் இளமையை அழித்து, முதுமையை அளித்து, இறுதியில் இறப்பினைத் தர வல்லது இயற்கை என்பதையும் உணர்ந்த ஒரு தமிழ் மகள், தான் உணர்ந்த அவ் வுண்மையினைத் தன் தோழியின் கணவனுக்கு உணர்த்தும் திறன் உணர்ந்து மகிழ்தற்குரியதாகும்.

ஓர் அரசிளங் குமாரன், ஒரு நாள், தன் நாட்டைக் கடந்து, வெளிநாடு நோக்கிச் செல்ல விரும்பினான். விரும்பியதோடு அதற்காம் ஏற்பாடுகளையும் விரைந்து மேற்கொண்டான். அதை அறிந்தாள் அவன் மனைவியின் ஆருயிர்த் தோழி. அரசிளங் குமாரன் அண்மையில் திருமணம் செய்து கொண்டவன். அவன் மனைவியாய் வந்து வாய்த்தவளோ, பெண்களின் திலகமாகத் திகழ்பவள். கண்ணிற்கு விருந்தளிக்கும் உடல் அழகும் கருத்திற்கு விருந்தளிக்கும் உளத் தூய்மையும் உடையவள். பெண்டிரும் போற்றும் பெருமை மிக்கவள். கணவனே எல்லாம் என எண்ணும் கற்புடையவள். அவனை இமைப் பொழுதும் பிரிந்து வாழ்ந்தறியாப் பேரன்பு கொண்டவள். அவள் இத்தகையள் என்பதை அத் தோழி அறிவாள். அதனால், அவன் பிரிந்து செல்லின், அவள் பெரிதும் வருந்துவள்; அவள் உடல் நலம் குன்றும்; அவள் அழகு அழியும்; இளமைப் பருவத்து இன்பத்தை நுகர மாட்டாது அவள் இளமை பாழாம், என அஞ்சினாள்; அவ்வவல நிலையினைத் தடுக்க வேண்டி அவனைப் போகாவாறு தடுத்தலை விரும்பினாள்.

உடனே, வெளிநாடு செல்லுதற்கு வேண்டும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த இளவரசனைச் சென்று கண்டாள். “ஐய! உனையல்லாது உற்ற துணையாக வேறு ஒருவரையும் உடையாள் அல்லள் உன் மனைவி. உன் பிரிவறியா அன்பையே பெருந்துணையாக் கொண்டு, பெற்றோரையும், பிறந்த ஊரையும் மறந்து இவண் வந்து வாழ்கின்றாள். அத்தகையாள், நீ பிரிந்து செல்வதால், நின் அன்பைப் பெற மாட்டா நிலை வந்து வாய்க்கக் காணின்,

பெரிதும் வருந்துவள்; அவள் கண்கள் கண்ணீரால் நிறையும்; அவள் கவின் அழியும். ஆதலின், இந்நிலையில், அவளைப் பிரிந்து போவது பொருந்துவதன்று; அவள் வருத்த நிலை கண்டும், அது கண்டு யான் கூறும் அறிவுரை கேட்டும், பிரிந்து போவதைக் கைவிடாது மேற்கொள்வதே நின் கருத்தாயின், யான் கூறுவனவற்றையும் கேட்டு அவற்றிற்கு விடை தந்துவிட்டுப் பின்னர்ப் பிரிவாயாக!

"ஐய! நின் பிரிவு எதைக் கருதியது என்பதை யான் அறியேன். நீ எது கருதிப் பிரியினும், நீ கண்டு கருத்திழத்தற்குக் காரணமாய் நிற்கும் அவள் கவின் அன்றே அழிந்து போம். 'அழகிய அசோகின் இளந்தளிர் போன்றது என் காதலியின் மேனி' என இன்று நீ பாராட்டும் அவள் பேரழகு பாழாம். அதை, மீட்டு வந்து, உன்னாற் காணல் இயலாது. பசலை படர்ந்து பாழான உடலையே அன்று நீ காண்பை. இன்று நீ மேற்கொள்ளும் இப்பிரிவு, பொருள் கருதிய்தாயின், நின் நாட்டம் அக வின்பத்தை மறந்து, புற வின்பத்திடத்ததாயின், ஐய! யான் ஒன்று வினவுவள்; பொருளீட்டி வருவதே நினைவாய்ச் சென்று, அளந்து காணலாகாவாறு, நீ ஈட்டிக் கொண்டு வரும், புதிது புதிதான பெரும் பொருள்கள், நின் பிரிவுத் துயரால் இழந்த அவள் மேனியின் பொன்னிறத்தைப் பெற்றுத் தரும் ஆற்றல் உடையகொல்? அவ்வாற்றல், அப் பெரும் பொருளுக்கு உண்டு என உணர்வையேல், நீ பிரிந்து செல்வதை யாம் தடை செய்யேம்.

"ஐய! 'உடலிற்கும் உள்ளத்திற்கும் இன்பந் தரும் இனிய ஒளி வீசும் முழுத் திங்கள் இவள் முகம்!' என நீ இன்று பாராட்டும் இவள் முகம், நீ பிரிந்து போன

பின்னரும் அவ்வாறே இருக்கும் என எண்ணற்க. நீ பிரிந்தாய் என்பதை அறிந்த அப்போதே, அம்முகம், பாம்பால் பற்றப் பட்ட திங்கள், தன் பேரொளி குன்றித் தோன்றுவது போல், பசலை படர்ந்து, கறுத்துக் கவின் இழந்து போம். அது அவ்வாறு அழகிழந்து போமாறு அவளை விடுத்துப் பிரியும் நின் கருத்து கல்விப் பொருட்டாயின், ஐய! யான் ஒன்று வினவுகோ? ஐயம் திரிபு அறக் கற்ற பேரறிவும், பரந்த கேள்வியும் ஒருங்கே உடைமையால், ஒழுக்கத்திற் சிறந்து உயர்ந்தோராய் விளங்கும் ஆசிரியர்களைத் தேடிச் சென்று, வணங்கி வழிபட்டு, அவர்பால் நீ பெற்ற தெளிந்த அறிவும், அவ்வறிவு வழி ஒழுகும் நின் ஒழுக்க நெறியும், அவள் முகத்திற்கு அப் பண்டைப் பேரொளியை மீட்டுத் தருமோ? அவள் முகத்தை மீண்டும் மாசற்ற மதிபோல் ஆக்கும் ஆற்றல் அவளைப் பிரிந்து சென்று நீ பெறும் அவ்வறிவு ஒழுக்கங்கட்கு உண்டேல், நீ இன்றே பிரிந்து செல்க. அதை யாம் தடை செய்யேம்.

“ஐய! மை தீட்டிய இவள் கருவிழிகளின் கவினைக் கண்டு, கருத்திழந்து, ‘அரும்பற மலர்ந்த நீலோற் பலங்களோ இவை!’ என, நீ இன்று பாராட்டும் இவள் கண்கள், நீ பிரிந்து செல்வதைக் காணின், காணும் அந்நிலையே, தம் அழகிழந்து அழத் தொடங்கி விடும். எரியும் திரியினின்றும் தெறித்துச் சிதறும் எண்ணெய்த் துளிகள் போல், கனல் தெறிக்கும் கண்ணீர் கசிந்து உருகும். இவள் கண் அவ்வாறு கலங்கிக் கவின் அழியும் என்பதை அறிந்தும், கலங்காது விடுத்துச் செல்லும் நின் வேட்கை மண்ணாசை மீதாயின், ஐயா! யான் ஒன்று வினவுகோ?

அறுத்து எறியலாகா அன்பாகிய சங்கிலி கொண்டு பிணித்த, இவள் தொடர்பினைக் கைவிட்டுப், பகைவர் நாட்டுள் புகுந்து, அப்பகைவரைப் பணி கொண்டு, அவர் பணிந்து தர, நீ பெறும் அப் பெரும் பொருள், அவள் கண்களின் கவினை மீட்டுத் தர வல்லதாமோ? அவ்வெற்றிப் புகழிற்கு, அவள் கருவிழியின் கண்ணீரை மாற்றிக் கவினளிக்கும் வல்லமை உண்டேல், நீ பிரிந்து இன்றே செல்க. யாம் அதைத் தடை செய்யேம். ஆனால், ஐய! நின் பிரிவால் பயனற்று அழிந்து போகும் இவள் இளமை அழகினை மீட்டுத் தரும் ஆற்றல், நீ தேடிக் கொணரும் செல்வத்திற்கோ, அரிதின் முயன்று பெறும் அறிவு ஒழுக்கங்களுக்கோ, பகைவரை வென்று பெறும் வெற்றிச் செல்வத்திற்கோ இல்லை. இழந்த இளமை இழந்ததே! அதை மீட்டுத் தரும் ஆற்றல், உலகில் எப்பொருட்கும் இல்லை. ஆனால், அவ்வாறு இழந்தால் மீண்டும் பெறலாகா இளமையை அழிந்து போக விடுத்துப் பிரிந்து போய்ப் பெறக் கருதும் செல்வத்தையோ, அறிவையோ, வெற்றிப் புகழையோ, வாழ்நாளின் எப்பருவத்தும் பெறலாம். அவற்றைப் பெற இளமையே ஏற்றது எனும் வரையறை இல்லை. ஆனால், இளமை இன்பம் அத்தகையதன்று. அதை, அவ்விளமைக் காலத்திலேயே பெறுதல் வேண்டும். அதை அக் காலத்தில் பெறாது கைவிடின், அதை மீட்டும் பெறுதல் இயலவே இயலாது. ஆகவே, ஐய! யான் கூறியனவற்றை நன்கு ஆராய்ந்து நோக்கிய பின்னர், நீ விரும்பியவாறே செய்க!" எனப் பலப்பல கூறி அவன் பிரியாமையினை வேண்டினாள்.

இவ்வளவு கூறியும், அவள் உள்ளம் அமைதி உற்றிலது. அவன் போக்கினைத் தடுக்க இவை போகா

என உணர்ந்தாள். இவள் வருந்த வரும் பொருள் பொருளாகாது. இவளை அழ விடுத்துச் சென்று அறிவினைப் பெற விரும்புவது அறிவுடையமையாகாது. மனைவியைப் பிரிந்து போய்ப் பகைவரைப் பணிய வைத்தல் பேராண்மையாகாது என்பதையும், அவன் உணருமாறு செய்யின், அவன் உள்ளம் மாறும்; தன் போக்கினை மாற்றிக் கொள்வன் என எண்ணினாள். அதனால் மீண்டும் அவனை நோக்கி, "ஐய! பொருள், தேடிப் பெற வேண்டியதே யாயினும், அதைப் பெறுதற்காகப் பிறரைத் துன்புறுத்தல் உயர்ந்தோர்க்கு ஒழுக்கமாகாது. நீ பொருள் தேடிப் புகழ் பெற, இவளை வருத்துவது நினக்குப் பொருந்தாது. அதை நீ விரும்புவை யாயின், நினக்கும், நீ செல்லும் வழியில், வழிப்போவாரை வதைத்துப் பொருள் கவரும் வஞ்சகர்க்கும் வேறுபாடு இன்றாம். மேலும், தேடிச் சேர்க்கும் பொருள் அறவழியில் வந்ததாதல் வேண்டும். அன்பும், அருளும் துணைசெய்ய வந்ததாதல் வேண்டும். அதை எவ்வழியிலாயினும் அடைதல் வேண்டும் எனும் ஆசையால், அன்பையும், அருளையும், அறநெறியையும் மறந்து விடுதல் கூடாது எனும் அறிவினைக் கைவிடுதல் அழகன்று. கற்பன கற்றுக் கற்ற வழி நிற்கும் ஒழுக்க நெறி உணரும் கருத்தோடு செல்லும் நீ, இவள்பால் காட்டலாம் அன்பையும், அருளையும் மறந்துவிடுதல் மாண்பன்று. அது அறிவுடையோர்க்கு அழகன்று. அவ்வறிவினை மதியாது இவளைப் பிரிந்து செல்வதே நின் கருத்தாயின், செல்லும் வழியில், பொருள் கருதி, அன்பையும் அருளையும் மறந்து, போவார் உயிரைப் போக்கும் ஆறலைக் கள்வர்க்கும்

நினக்கும் வேறுபாடு இன்றாம். மேலும் பகைவரைப் பணிய வைப்பதே நின் கருத்தாயின், அதற்கு, இவளைப் பிரிந்து, படையோடு சென்று போரிட வேண்டுவது கூடாது. அது ஆண்மை ஆகாது. நீ தம்மீது சினங் கொண்டுள்ளாய், தம்மை அழிக்கப் படை சேர்த்து விட்டாய் என்பதை அறிந்த அவ்வளவிலேயே, அப் பகைவர் நின்னைப் பணிந்து திறை தருதல் வேண்டும். அதுவே நின் பேராண்மைக்கு அழகாம். அதற்கு மாறாக, நீ பெரும் படையோடு அவர் நாட்டுட் புகுந்து போரிட்டு அழித்த பின்னரே, அவர் பணிவராயின், அது நினக்கு இழிவாம். அந்நிலையில், நீ செல்லும் வழியில், ஆறலைத்து வாழும் தம்மை அழிக்கப் பல படை துணை செய்யப் பேரரசர் திரண்டு வருகின்றனர் என்பதை அறிந்தும், அவரை அம்பேவி அழித்தல் ஆண்மையாகாது என்று எண்ணி, அம்பெடுக்க நாணித் தம் வில்லின் நாணைத் தெறித்து ஒலி எழுப்பி, அவ்வொலி கேட்டே அவ்வரசர் அஞ்சி ஓடச் செய்யும் கள்வர் செயலினும் நின் செயல் இழிவுடைத்து. ஆக, எவ்வழி நோக்கினும், நின் போக்கு பிழையுடைத்து. ஆகவே போவது தவிர்க!” எனக் கூறினாள்.

ஆனால், பின்னர்க் கூறிய அவ்வறிவுரையினை, அவ்வாறே வெளிப்படையாகக் கூறல், தன் பெண்மைக் கும், அவன் ஆண்மைக்கும் இழுக்காம் என உணர்ந்து, “ஐய! இவளைப் பிரிந்து போகும் நீ, கடந்து செல்ல வேண்டிய அக்காட்டு வழி, கலைமானின் முறுக்குண்ட கொம்பு போலும் தாடியை உடையராய், அவ்வழி வருவாரை, அருளையும், அன்பையும் மறந்து கொன்று,

அவர் கைப்பொருள் கவர்ந்துண்ணும் வாழ்க்கை உடையராய்த், தம் கொடுஞ்செயல் கண்டு, தம்மைக் கொன்று அழிக்க, அரசர் பலர், படைபல கொண்டு வந்து வளைப்பினும், அப்பெரும் படையினை அம்பேவி வேறல் ஆண்மையாகது, ஆதலின், அதற்கு வெட்கித் தம் வில்லின் நாணைத் தெறித்து எழுப்பும் பேரொலி கேட்டே, அவரை அஞ்சி ஓடச் செய்யும் ஆற்றல் உடையராய் வாழும் ஆறலைக்கள்வர் நிறைந்தது. நின் பிரிவு பொறாது வருந்தும் இவள், அவ்வழியின் இயல்பு இஃதாம் என்பதையும் அறியின், வருத்தம் மிகுந்து வாடி உயிர் இழப்பள். ஆகவே, அவளை விடுத்துப் போவது அறிவுடைமையாகாது!" எனக் காட்டின் கொடுமையினைக் கூறுவாள் போல், தான் கூறக் கருதிய அவ்வறவுரையினைக் கூறினாள். அத் தோழியின் அறிவுத் திறம் கண்டு அகம் மகிழ்வோமாக.

"அரிமான் இடித்தன்ன அஞ்சிலை வல்வில்
புரிநாண் புடையில் புறங்காண்டல் அல்லால்
இணைப்படைத் தானை அரசோடு உறினும்,
கணைத்தொடை நாணும், கடுந்துடி ஆர்ப்பின்,

எருத்து வலிய எறுழ்நோக்கு இரலை
மருப்பின் திரிந்து மறிந்துவீழ் தாடி,
உருத்த கடும் சினத்து ஓடா மறவர்
பொருள்கொண்டு புண்செயின் அல்லதை, அன்போடு
அருள்புறம் மாறிய ஆரிடை அத்தம்;

புரிபுநீ புறம்மாறிப், போக்குஎண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ?

செயலையும் தளிர்ஏய்க்கும் எழில்நலம்; அந்நலம்
பசலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால்

பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மைஅற்ற படிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ?
தீங்கதிர் மதிஏய்க்கும் திருமுகம், அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்

பின்னிய தொடர்நீவிப், பிறர்நாட்டுப் படர்ந்துநீ,
மன்னிய புணர்ச்சியான் மறுத்தரல் ஒல்வதோ?
புரிஅவிழ் நறுநீலம் புரைஉண்கண் கலுழ்பு ஆனாத்
திரிஉமிழ் நெய்யேபோல் தெண்பனி உறைக்குங்கால்;

என வாங்கு,
அனையவை போற்றி, நினைஇயன நாடிக்காண்;
வளமையோ வைகலும் செயலாகும்; மற்று இவண்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ இறந்த பின்னே."

*தலைமகன் பிரிவுணர்ந்த தோழி, தலைவியின் ஆற்றாமை, இழந்தால் பெறலாகா இளமையின் அருமை, எக்காலத்தும் பெறலாகும் பொருளின் சிறுமை ஆகிய வற்றைக் கூறிச் செலவழுங்குமாறு வேண்டியது இது.*

1. அரிமான்—சிங்கம்; சிலை—வில் செய்யப் பயன்படும் ஒரு மரம்; 2. புரிநாண்—முறுக்குண்ட நாண்; புடையில்—தெறித்து எழுப்பும் ஒலியால்; 3. இணைப்படை—ஒன்று சேர்ந்த பல படை; 4. கணைத்தொடை—அம்பேவுதல்; 5. எருத்து—கழுத்து; எறுழ்நோக்கு—வலிய பார்வை; இரலை—கலைமான்; 6. மருப்பு—கொம்பு; மறித்து—முறுக்குண்டு; 7. உருத்த—கொடிய; 9. புறமாறிய—இல்லாமற் போன; 10. புறம்புரிபு, நீ மாறி என மாற்றுக; புறம்புரிபு—புறப்பொருளை விரும்பி; 11. பெயர்த்தரல்—மீட்டுத்தரல்;

ஒல்வதோ—இயலுமோ? 12. செயலை—அசோகு; 13. நீர்—இயல்பு; 14. புரையோர்—உயர்ந்தோர்; படர்ந்து—சென்று வழிபட்டு; 15. படிவம்—ஒழுக்கநெறி; மறுத்தால்—மீட்டுத்தரல்; 18. பின்னிய தொடர்பு—அன்பால் பிணைத்த தொடர்பு; நீவி—அறுத்துவிட்டு; மன்னிய புணர்ச்சி—ஆங்குப் பெற்ற வெற்றியால் விளைந்த இறவாப் புகழ்; 20. புரிஅவிழ்—இதழ்கள் மலர்ந்த; புரை—ஒக்கும்; ஆனாக் கலுழ்பு என மாற்றுக. ஓயாது அழுது என்பது பொருள்; 21. தெண்பனி உறைத்தல்—தெளிந்த நீரைத் துளித்தல்; 23. அனையவை—கூறியவற்றை; நினை இயன—நினைந்து தேடுவன; 24. வளமை—செல்வம் முதலாயின; வைகலும்—நாள்தோறும்; 25. முளைநிரை முறுவலார்—முளைகளின் வரிசை போலும் பற்களை உடைய மகளிர்; 26. இறந்த பின்—கழிந்தபின்.

15

# கடவுளரும் அடிபணிவர்

ஒழுக்கம் குன்றிய இழுக்கம் உடையாரையும் உயர்ந்தோராக்குவது பொருள் அறத்தை வளர்ப்பது பொருள்; இன்பத்தைத் தருவது பொருள்; அருளையும், அன்பையும் வளர்ப்பதும் பொருள்; பகையை அறுப்பது பொருள்; நட்பை வளர்ப்பது பொருள்; புகழைத் தருவது பொருள்; பிழையை மறைப்பது பொருள் எனப் பொருளின் சிறப்பறிந்த ஓர் இளைஞன், அண்மையில் மணந்து கொண்ட தன் ஆருயிரனைய மனைவியையும் மறந்து, அப் பொருளீட்டிக் கொண்டு வரப் போய் விட்டான்.

அவன் பிரிவால் பெரிதும் வருந்தினாள் அவள் மனைவி. அவனையே நினைந்து அழுது அழுது அவள் கண்கள் உறக்கத்தை மறந்தன. அதனால் அவை மாசு படர்ந்து பார்வை குன்றின. அவள் மேனி வாடிற்று. கைவளைகள் கழன்று ஓடின. பிறர் கண்டு பாராட்டத்தக்க

அவள் பேரழகு பாழ்பட்டது. தான் பிரியின், அவள் இவ்வாறு ஆவள் என்பதை அறிந்தும் அவன் பிரிந்து விட்டான். அவள் நிலை கண்டு ஊரார் உறுதுயர் கொண்டனர். "இவளை இவ்வாறு அழிய விடுத்து, அவ்வழிவிற்கு அஞ்சாது பிரிந்து போன அவனை என்னென்பது! அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்பதை அறியாது பிரிந்து போன அவன் அறியாமை யினை என்னென்பது! தன்பால் அன்பு கொண்டு தன்னை அடைந்தார் கண்ணீர் விட்டுக் கலங்கக், கொடுமை செய்து போவாரைத் தெய்வம் துன்புறுத்தும் என்பர். இவளுக்குத் துயர் விளைத்து, அவ்வாறு துயர் உறச் செய்த தன் கொடுஞ்செயலுக்கு அஞ்சாது சென்ற அவனுக்கு, அத் தெய்வத்தால் யாது கேடு வந்துறுமோ?" என ஊரார் உரைப்பன கேட்டாள் அப்பெண்.

கற்பிற் சிறந்த அவள், அந்நிலையே தன் துயரினை மறந்தாள். தான் துயருறின், தன் துயர் நிலை காணும் தெய்வம், அத்துயர்க்குக் காரணமாயினான் இவன் எனத் தன் கணவனைத் தண்டிக்குமே என அஞ்சினாள். அதனால் தன் துயரினை மறைத்துக் கொண்டாள். அம்மட்டோ! தனக்குத் துயர் செய்தான் என்பதைக் காரணம் காட்டி, அவனைத் துன்புறுத்துவது ஒழிந்து அருள் புரியுமாறு அத் தெய்வங்களை வேண்டிக் கொள்ளவும் விரும்பினாள்.

அவ்வாறு விரும்பியவள், அப்போதே தன் ஆருயிர்த் தோழியை அழைத்துத், 'தோழி! நம் காதலர், நாம் நம் இயற்கை அழகும் இழந்து ஈங்குத் தனித்துக் கிடந்து, துயர் உறப், பொருள்மீது கொண்ட பேராசையால், அன்பைக்

கைவிட்டு, நம்மையும் அறவே மறந்து, பிரிந்து சென்று விட்டார். அவர் செய்த இவ்வறனல்லாச் செயலால், அவர்க்கு யாது கேடு வருமோ என அஞ்சுகிறது என் உள்ளம். மேலும், அவர் சென்ற வழி, கடந்து செல்ல லாகாக் கொடுமையுடையது என்ப. வெய்யிலின் வெப்பம் மிகுந்தது; மழைத்துளி பெறாதது; கடுங்காற்று வீசுவது என்றெல்லாம் கூறுவர். நம்மை வருந்த விடுத்துச் சென்ற பழிக்கு அஞ்சாத அவர் அறமில் செயல் கண்ட அவ்வியற்கைத் தெய்வங்கள், அவர்க்குத் தந்த தண்டனை யின் பயன்தானோ, அக்காட்டின் கொடுமையால் அவர் துயர் உறுவது என எண்ணி அஞ்சுகிறது என் உள்ளம். ஆகவே, தோழி! 'எம் கணவர் செல்லும் அப்பாலை நிலத்து வானவெளியில் உலாவி வரும் ஏ நீர்நிறை மேகமே! செல்லும் அவர் கால்களை, அந்நிலத்துப் பரற்கற்கள், காயும் ஞாயிற்றின் கதிர்களால் தாம் பெற்ற வெம்மையால் சுட்டுத் துன்புறுத்தாவாறு, பெருமழை பெய்து, அக்கற்களின் வெப்பத்தை மாற்றிக் குளிர்ச்சியைத் தாராயோ? அது தருமாறு நின்னை வேண்டுகிறேன்!' என்றும், 'செல்லும் அவர், சேர்ந்து நிற்க நிழலும் பெறாது வருந்துமாறு, ஆங்குள்ள மரங்கள் இலை உதிர்ந்து உலர்ந்து போமாறு கதிர்களை வீசிக் காயும் ஏ, ஞாயிறே! செல்லும் அவர், அல்லல் இன்றி அடைதற் பொருட்டு, மரங்கள் மடிந்து போமாறு காயும் நின் கொடுமையினை விடுத்துக் கருணை புரிவாயாக!' என்றும், 'கோடையின் வெம்மை யால் உள்நீர் வற்றி உலர்ந்து போன தூறுகளைப் பற்றி எரியும் பெருநெருப்பின் இடைநுழைந்து வீசி, அவ்வழிச் செல்லும் எம் கணவரை, நின் வெப்பத்தால் வாட்டும் ஏ,

வளியே! சற்றே நின் வெப்பம் தணிந்து வீசாயோ, அவ்வாறு வீசுமாறு நின்னை வணங்கி வேண்டிக் கொள் கிறேன்!' என்றும், அப்பாலை நிலத்துத் தெய்வங்களாய மழைதரு மேகத்தையும், ஞாயிற்றையும், காற்றையும் கைகூப்பி வணங்கி வேண்டிக் கொள்வோமா? அவ்வாறு வேண்டிக் கொள்வதால் பயன் வாய்க்குமா?" எனத் தன் வேட்கை மிகுதியால் வினவினாள்.

அப் பெண்ணின் உள்ள நிலையை, அவள் அன்பின் சிறப்பை, அவள் கற்பின் பொற்பைக் கண்டாள் தோழி. அவள் கூறிய மொழிகள், தேன்போல் இனித்தன அவட்கு. கோள்கள் தம் நிலை குலைந்து, உலகிற்கு மழை பெறா வறுமையை உண்டாக்கி விடுமாயின், அவற்றின் ஆற்றலை அழித்துத், தன் கற்பின் மேன்மையால், மழையினைத் தருவித்து மண்ணுலகைக் காக்கும் மாண்புடையாள் அவள். அத்தகு கற்புடையாள், தன் காதலன்பாற் கொண்ட அன்பின் மிகுதியால், அக்கற்பின் ஆற்றலை மறந்து, அக்கற்பின் ஆணைக்கு அடங்கிப் பணிபுரியும் பண்புடையவாய மேகத்தையும், ஞாயிற்றையும், காற்றை யும் கைகூப்பித் தொழ நினைக்கும் சிறப்பறிந்து போற்றி னாள். அந்நிலையில் பொருள் தேடிப்போன அவள் கணவனும் வந்து சேர்ந்தான். அவன் வரவினை, அவன் ஊர்க் கோடியில் வரும்போதே அறிந்து கொண்ட தோழி, அவளைப் பார்த்து, "நின் கணவர், நீ விரும்பியவாறே கேடொன்றும் இன்றி, அதோ வருகிறார் காண். வழியில் மழை, காற்று, ஞாயிறுகளால் அவர்க்கு எவ்வித ஊறும் நேர்ந்திலது என்பதை, அவர் நன்னிலை காணும் நீ எளிதில் உணர்ந்து கொள்வை. அவர், அவ்வாறு

*அவற்றால் கேடுறாது வந்தது, நீ அவற்றை வணங்கி வழிபட்டு வேண்டிக் கொண்டமையால் அன்று; அவை நின்பால் கொண்ட அச்சமே அதற்குக் காரணம். மறுத்து ஓடும் மழையையும் பிடித்துப் பயன் கொள்ளும் பெருமை சால் கற்புடையாள் நீ என்பதை அறிந்த அவை, நின் கணவன் பிரிவாலும், அவர்க்கு ஆங்குத் தம்மால் துயர் உண்டாமே எனும் அச்சத்தாலும் பிறந்த வருத்த மிகுதியால், உன் உடல் அதன் நிறம் கெட்டுப் பசலை பரந்துவிடின், தங்களுக்கு உன்னால் என்ன கேடு வருமோ என அஞ்சிய அச்சத்தின் காரணமாய்ப், பாலை நிலத்தைக் கடந்து வரும் நின் கணவர்க்குத் தம் கொடுமை யைக் காட்டாவாயின. அம்மட்டோ! அவர் அவ்வழியை விரைந்து கடந்து இவண் வந்து சேருமாறு, அவ்வழியை அதற்கு ஏற்றவாறு, மழை பெய்தும், வெப்பம் தணித்தும் இயைவாக மாற்றின. அதனால் அவரும் விரைந்து வந்து சேர்ந்தனர். வாழ்க நின் கற்பு! வளர்க நும் அன்பு வாழ்க்கை!" என வாழ்த்திச் சென்றாள்.*

"பாடின்றிப் பசந்தகண், பைதல பனிமல்க,
வாடுபு வனப்புஒடி; வணங்குஇறை வளைஊர;
ஆடுஎழில் அழிவு அஞ்சாது அகன்றவர் திறத்து, இனி,
நாடுங்கால், நினைப்பது ஒன்று உடையேன்மன்; அதுவுந்தான்

தொன்னலம் தொலைபுஈங்கு யாம்துயர் உழப்பத்துறந்து
துன்னி நம்காதலர் துறந்து ஏகும் ஆர்இடைக் [உள்ளார்
கன்மிசை உருப்புஇறக், கனைதுளி சிதறுஎன
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ?

புனையிழாய்! ஈங்குநாம் புலம்புஉறப், பொருள்வெஃகி
முனைஎன்னார் காதலர் முன்னிய ஆற்றிடைச்
சினைவாடச் சிறக்கும்நின் சினம் தணிந்து ஈகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ?

ஒளியிழாய்! ஈங்குநாம் துயர்கூரப், பொருள்வயின்
அளிஒரீஇக் காதலர் அகன்று ஏகும் ஆரிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மை தீர்ந்து உறுகென
வளிதரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ?

எனவாங்கு,
செய்பொருள் சிறப்புஎண்ணிச் செல்வர்மாட்டு, இனையன
தெய்வத்துத் திறன்நோக்கித் தெருமரல்; தேமொழி!
வறன்ஓடின் வையத்து வான்தரும் கற்பினாள்
நிறன்ஓடிப் பசப்பூர்தல் உண்டுஎன;
அறன்ஓடி விலங்கின்று அவர் ஆள்வினைத் திறத்தே."

*தலைவன் பொருள்வயின் பிரிந்தானாக, அவன் சென்ற காட்டில், அவனுக்கு ஊறு நேராவாறு காத்தற் பொருட்டுக் கடவுளை வழிபட எண்ணிய தலைவிக்கு, அவர் நின் கற்பின் ஆற்றலால் அவ்வாறே வந்து சேர்ந்தார் எனத் தோழி கூறியது இது.*

1. பாடு—உறக்கம்; பைதல—வருத்தம் உடையவாகி; 2. வாடுபு—கெட்டு; வனப்பு ஓடி—அழகு கெட்டு; வணங்கு இறை—வளைந்த முன்கை; 3. ஆடுஎழில்—பேரழகு; 3. தொலைபு—கெட்டு; உள்ளார்—நினையாராய்; 6. துன்னி—பொருள்மேல் ஆசை கொண்டு; 7. எழிலி—மேகம்; இரப்பவும்—வணங்கிக் கேட்பவும்; 9. புலம்பு உற—தனிமை உற்று வருந்த; 10. முன்னிய—போகக் கருதிய; 11. சினை—மரக்கிளைகள்; சிறக்கும்—மிகும்; தணித்துஈக, ஒருசொல், தணிக என்பது பொருள்; 12. கனலி—ஞாயிறு; 13. துயர்கூர—துயர்மிக; 14. அளி ஒரீ இ—அன்பைக் கைவிட்டு; 15. முளி—உலர்ந்த புதர்;

உறுக—அடைக; 16. வளி தரும் செல்வன்—காற்றுக் கடவுள்; 19. தெருமரல்—மனங்கவலற்க; 20. வறன்—மழை பெறா வறுமை, ஓடின்—சென்று பரவின்; வான்—மழை; 21. நிறன் ஓடின்— நிறம்கெடின்; பசலை படரின்; 27. அறன்—அறக்கடவுள்; ஓடி—விரைந்து சென்று; விலங்கின்று—காட்டின் கொடுமைகளை விலக்கிற்று.

## 16

# மருந்தாகி மனன் உவப்ப!

பேரரசர் வழிவந்த ஓர் இளைஞன், தன் மனம் விரும்பும் மங்கை யொருத்தியைக் கண்டு காதல் கொண்டான். அவளுக்கும் தன்பால் அன்பு உண்டு என்பதை அறிந்த பின்னர் அவளை மணந்து, மனையற வாழ்வு மேற்கொண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தான். அவள்பால் கொண்ட காதல் மிகுதியால் தன் அரசியற் பணிகளையும் ஓரளவு மறந்திருந்தான். ஆயினும், என்றும் அவ்வாறே வாழ்தல் அரசர் குலத்து வந்தார்க்கு ஆகாது. நாடு காத்தல், நட்டார்க்குத் துணை போதல் போலும் நல்ல வினைகளையே என்றும் மேற்கொண்டு வாழ வேண்டியவராய அரசர், அவ்வினைகளை மறந்து, மனையகத்தே மடிந்து கிடத்தல் பெரும் பிழையாம். அப் பிழையால் அவர் அழிதலோடு, அவர் ஆட்சிக் கீழ் வாழும் நாடும், அந்நாட்டு மக்களும் தம் நல்வாழ்வு இழப்பர். மனையகத்தே மகிழ்ந்து வாழ்ந்திருந்த

அவ்விளைஞன், ஒரு நாள், மறந்திருந்த அவ்வரசியற் கடமைகளை நினைத்துக் கொண்டான்.

அரசியல் நினைவு வரப்பெற்ற அவன், தன் காதலையும், தன் காதலியையும் ஒருவாறு மறந்து, பகை நாடுகளை வென்று, அவர் பணிந்து தரும் பொருள் பெற்று வரும் பணியினை மேற்கொள்ள விரும்பினான். தேரைச் செப்பனிடவும், தேரிற் பூட்ட வேண்டிய குதிரைகளைத் தேர்ந்தெடுக்கவும், பன்னாட்களாகப் பயனுறாமல், மாசு படிந்து கிடக்கும் படைக்கலன்களை அம்மாசு போகத் துடைக்கவும் தொடங்கினன். பகற்காலத்தை அப்பணி களிற் கழித்துவிட்டு, இரவு உறங்கச் சென்றவன் சிந்தனை சில நாட்களில் மேற்கொள்ளவிருக்கும் படையெடுப்புக் குறித்த ஆராய்ச்சியில் சூழ்ந்து கிடந்தமையால், மனைவி யோடு, அவள் அருகே துயில் கொள்ளுதலை மறந்து, ஒருபால் ஒதுங்கி உறங்கத் தொடங்கினான். ஆனால் உறக்கங் கொண்டானல்லன். படையெடுப்புக் குறித்த சிந்தனை ஒருபாலும், மணந்த நாள் முதலாக, இன்று வரையும், தன்னை ஒரு நாளும் பிரிந்து வாழ்ந்தறியாத தன்வாழ்க்கைத் துணைவி தான் பகைமேற் சென்று மீளும்வரை எவ்வாறு தனித்து வாழ்வளோ? இவளைப் பிரிந்து போய், யான் எவ்வாறு எடுத்த வினையை முடிப்பனோ? பிரிந்தால், பின்னர் மீண்டு வந்து காண எவ்வளவு காலம் ஆகுமோ? என்ற கலக்கம் ஒரு பாலுமாக நின்று வருத்தச், செய்வதறியாது நெட்டுயிர்த்துக் கிடந்தான்.

பகலில், படைக்கலங்களைத் தேர்ந்து கொண் டிருந்ததையும், இரவில், தான் அண்மையில் இருக்கவும்,

இவ்வாறு உறக்கம் அற்று, அமைதி இழந்து, நெட்டுயிர்ப்புக் கொண்டு உழல்வதையும் கண்டாள் அவன் மனைவி. அந்நிலை காணக் கலங்கிற்று அவள் உள்ளம். அவன் வாழ்க்கையில், வழக்கத்திற்கு மாறான, இந்நிலைக்குக் காரணம் யாதோ? அவன் உள்ளத்தை இவ்வாறு அலைக்கழிக்கும் உறுதுயர் யாதோ? அவன் யாது கருதி இவ்வாறு ஆயினன்? அவன்பால் காணலாம் இம்மாற்றத்தால், தங்கள் அன்பு வாழ்க்கைக்கு யாது கேடு வந்துறுமோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிற்று அவள் உள்ளம். அந்நினைவால் நடுங்கிற்று அவள் நெஞ்சம்.

தன் கணவனின் தடுமாற்றத்திற்காம் காரணம் யாது என்பதைக் காண அவள் உள்ளம் துடித்தது. அரசர் குலத்து வந்தவன் அவன். அரசர் நாடு காக்கும் தொழில் உடையர். அவனுக்கும் அஃது உரித்து. அதற்கேற்ப அவனும் காலையில் படைக்கலங்களைப் பழுது பார்க்கும் பணி மேற்கொண்டிருந்தான். இதுகாறும் இன்னுரை வழங்கி, இன்ப நினைவுகளால் மனத்தை மகிழ்விக்கும் அவன், இரவெல்லாம் மனத் தெளிவின்றி மடிந்திருந்தான். இவற்றைக் கண்டாள் அவள். நாளை அல்லது மறுநாள், நாடு காவல் கருதி, அவன் பிரிந்து போய்விடுவன் என்பதை உறுதி செய்ய இவை போதியவாம் என்பதை உணர்ந்தாள். உணர்ந்த அந்நிலையே, அவளைப் பிரிவுத் துயர் பற்றி அலைக்கத் தொடங்கி விட்டது. மணங் கொண்ட மகிழ்ச்சியால் அவள் பெற்ற புதுப்பொலி வோடு, பண்டு அவள் பெற்றிருந்த இயற்கை அழகும் அவளை விட்டு அகன்றது. காதற் பயன் கைவரப் பெறாது

கழிந்துவிடுமோ என்ற ஏக்கத்தால், அவள் உடல் தளர்ந்தது. உறுப்புக்கள் மெலிந்து தம் அழகிழந்தன. இன்பம் அவளை விட்டகன்றது. துன்பம் தொடர்ந்தது.

அந்நிலையில் அவளைக் கண்டு, அவள் துயர்க்காம் காரணம் இஃது என அறிந்து கொண்ட அப் பெண்ணின் தோழி, அவள் கணவனைத் தேடிச் சென்று கண்டாள். கண்டு, "அன்ப! பதினாறு கலைகளுள் ஒன்றையும் ஒழியாது பெற்றுப் பேரொளி வீசும் முழுத்திங்கள் என்றும் அந்நிலையிலேயே நிற்பதில்லை. அந்நிறைவு, பின்னர், நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து தேய்ந்து போக, இறுதியில் ஒளி குன்றி அழியும் என்பதை நீ உணர்வை. அதைப்போல, நின் கண்கள் கண்டு மகிழுமாறு, இவள் குறைவற நிறைந்து நிற்கும் இப்பேரழகு, என்றும் அவளைப் பிரியாது, அவ்வாறே பொருந்தி நிற்கும் என எண்ணற்க. நீ பிரியின், நின்னைக் காணாக் கலக்கத்தால், அவ்வழகு நாள்தோறும் குறைந்து குறைந்து இறுதியில் அறவே அழிந்து போய் விடும்.

"அன்ப! தண்ணீர் நிறைந்து விளங்கும் ஒரு தாமரைப் பொய்கையில், தாமரை அரும்புகள், இலைகளைப் போல் அத் தண்ணீர் அளவில் படிந்து கிடக்காது, அவ்விலைகளைக் காட்டிலும் சற்றே உயர்ந்து சிறந்து தோன்றும். ஆனால், அவற்றின் சிறப்பெல்லாம் அவை மலரும்வரையே. மலர்ந்தவுடனே, அழிவு அவற்றைப் பற்றிக் கொள்ளும். மலர்ச்சி, அவற்றிற்கு மாண்பு தருமாயினும், இறுதியில், அம் மலர்ச்சியே அவற்றின் கூற்றமுமாகிறது. அதைப் போல், களவொழுக்க இன்பத்தால், சிறிது சிறிதாக வளர்ந்து வந்த காதல் எனும்

அரும்பு, அண்மையில் மேற்கொண்ட திருமணத்தால் மலர்ந்து தன் முழுப் பலனையும் பெற்றது. இனிக் கல்வி, பொருள், காவல் முதலாயின கருதிக் கணவன் அவ்வப்போது பிரிந்து போய்விடுவதால், அப்பிரிவினைப் பொறாது, மனைவியின் வாழ்நாட்கள் சிறிது சிறிதாகத் தேய்ந்து போம். ஆதலின், அக் காதல் இனி வளர்தற்கு மாறாகக் குறைந்து போம். அதனால், நீ விரும்பி மேற்கொண்ட திருமணமே, இவள் வாழ்நாளைக் கொல்லும் கூற்றமுமாய் மாறிக் கொடுமை செய்ய, அதற்கு நின் பிரிவே பெருந்துணையாகி விடுமோ என அஞ்சுகிறது என் உள்ளம்.

"அன்ப! வண்டுகளை வா என அழைத்து விருந்தூட்ட வல்ல தாதுக்களை நிறையக் கொண்ட மலர்கள் பல மலருமாறு குறைவற நிறைந்த நீரைக் கொண்ட ஒரு நீர்நிலையில் நீர் என்றும் அந்நிலையிலேயே நிறைந்து நிற்பதில்லை. நாள்தோறும், சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து, அம்மலர்களையும் அழித்து, அந்நீர் நிலையின் அழகையும் அழித்து விடும். அதுபோலக், காதல் எனும் மலர், மலர்ந்து மாண்பு தருமாறு, இவள்பால் நிறைந்திருந்த இளமை உணர்ச்சிகள், என்றும் அவள்பால் குறைவறக் குடி கொண்டிருக்கும் எனக் கொள்ளற்க. அவள் காதலும், அக்காதலின் நிலைக்களனாம் அவள் மேனியும் தளர்ந்து மெலிய, அவ்விளமை, அவளை விட்டுப் போவது உறுதி. ஆகவே, அன்ப! அவள், தன் வாழ்நாள் வற்றி இறந்து போதலும், அவள் காதல் உணர்ச்சி கருகி விடுதலும், அவள் இளமையழகு அழிந்து போதலும் உறுதி. அவை நிலையற்றன. நீ சென்று, உன்

வினை முடித்து மீண்டு வருங்கால், அவற்றைக் காண்பதோ, அவற்றாலாம் பயனை நுகர்வதோ இயலாது. ஆகவே, நிலையாத அவை நிலை பெற்றிருக்கும் இக் காலத்தை அவற்றின் பயன் நுகரும் கருத்தில் கழிப்பா யாக!" என வேண்டுவன கூறி வேண்டிக் கொண்டாள்.

அவள் கூறியன வற்றைக் கேட்டான் அவ்வரசிளங் குமரன். அந் நிலையில் அவன் உள்ளமும் அக் கருத்தே கொண்டிருந்தது. மனைவியை விட்டு வெளிநாடு செல்வது விரும்பத் தக்கதன்று என்ற எண்ண முடையனாய், ஆங்கிருந்த அவன் உள்ளத்தில், தோழி கூறிய அறிவுரைகள் ஆழப் பதிந்து பயனளித்து விட்டன. நோயின் ஆற்றலை ஓர் அளவு இயல்பாகவே எதிர்த்து அழிக்க வல்ல வன்மை வாய்ந்த உடலில், மருத்துவன் அளிக்கும் மருந்து விரைந்து பயன் அளிக்கத் தொடங்கு வதுபோல், அவள் கூறிய அறிவுரையும் நற்பயன் அளித்தது. பிரிந்து போகும் எண்ணத்தைக் கைவிட்டான் அவன். அவன் முடிவு கேட்டு மகிழ்ந்த தோழி அந்நற் செய்தியை, அவன் மனைவிக்கு, விரைந்து சென்றறிவித்து, "இனி வருந்திக் கிடப்பது விடுத்து, மகிழ்ந்து மாண்புறு வாயாக!' என வாழ்த்தினாள்.

இளவரசனின் மன மாற்றத்திற்குக் காரணமாய் அமைந்தது, தோழி கூறிய அறவுரையேயாகவும், அவள் அதை மறைத்து, "இதில் என் பங்கு பெரிதன்று. நான் ஓரளவு துணை புரிந்தேன் என்பது உண்மை. ஆனால், நானே இதை முடித்துவிட்டேன் என எண்ணேன். அவன் உள்ளமும் அந்த அளவில் பக்குவப்பட்டிருந்தது. அதனால், என் முயற்சியும் எளிதில் பயன் தந்தது.

*அதுவல்லது என்னால் எதுவும் ஆகிவிடவில்லை!" எனக் கூறித் தன் தொண்டின் ஆற்றலை மறைக்க முயலும் அத் தோழியின் பணிவுடைமை, அடக்கமுடைமை அனைவரும் அறிந்து மேற்கொள்ளத் தக்க அருமை வாய்ந்ததாம்.*

"படைபண்ணிப் புனையவும், பாமாண்ட பயில்அணைப்
புடைபெயர்ந்து ஒடுங்கவும், புறஞ்சேர உயிர்ப்பவும்,
உடையதை எவன்கொல் என்றுஊறுஅளந்து, அவர்வயின்
நடைசெல்லாய், நனிஏங்கி நடுங்கல்! காண்நறுநுதால்!

தொல்லெழில் தொலைபு இவள்துயர் உழப்பத், துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன்; வலிப்பளவை,
நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது
நாளினும் நெகிழ்பு ஒடும் நலன் உடன் நிலையுமோ?

ஆற்றல்நோய் அடஇவள் அணிவாட அகன்றுநீ,
தோற்றம்சால் தொகுபொருள் முயறிமன்; முயல்வளவை
நாற்றஞ்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றம்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?

வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன்; முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ?

எனவாங்கு,
பொருந்தியான் தான்வேட்ட பொருள்வயின் நினைந்தசொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனன் உவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே."

*தலைவன் நாடு காவல் குறித்துப் பிரியக் கருதினனாக, அஃதறிந்து வருந்திய தலைவியைக் கண்ட தோழி, தலைவனை அடுத்து, அவள் ஆற்றாமையும், இளமையது அருமையும் கூற, அது கேட்டு அவன் செலவினைக் கைவிட, அதைத் தோழி தலைவிக்கு உரைத்தது இது.*

1. பண்ணி—புதியவாகப் பண்ணி; பாமாண்ட—பல்லாற்றாலும் சிறப்புடைய; 2. புடை—ஒருபால்; உயிர்த்தல்—பெருமூச்செறிதல்; 3. உடையதை—உள்ளத்தில் கருதியதை; ஊறு அளந்து—கேட்டின் அளவை அறிந்து; 4. நடைசெல்லாய்—அவள் கூறியவாறு ஒழுகாது; ஒடுங்கல்—நடுங்காதே; 5. தொல்லெழில்—இயற்கை அழகு; 6. வல்வினை—நாடு காவல்; வயக்குதல்—புகழ் பெறுதல்; வலித்தி—துணிந்தாய்; 7. அவிர்—ஒளிவீசும்; 8. நாளினும்—நாள்தோறும்; நெகிழ்போடும்—நிலைகுலைந்து கெடும். 9. ஆற்றல் நோய்—கொடிய காமநோய்; அட—வருத்த; 10. தோற்றம் சால்தொரு பொருள்—புகழ் பெறும் பொருள்; 11. நளிபொய்கை—பெருமை பொருந்திய குளம்; அடை முதிர்முகை—இலையினும் உயர்ந்த அரும்பு; 12. கூற்று—அழிவிற் காரணமாய அதன் மலர்ச்சி; 13. எஞ்ச—குறைய; 14. பயவினை—பயன்தரு தொழில்; 15. தகை—அழகு; 16. தடம்—குளம்; ஈண்டு அக்குளத்து நீர்; 21. மீளி—பாலைநிலத் தலைவன்.

# 17

## ஒன்றினார் வாழ்க்கை!

செல்வ வாழ்வில் சிறக்க வாழ்ந்திருந்தனர், இளங் காதலர் இருவர். இயற்கை அவளுக்களித்துள்ள இணையிலா அழகைக் கண்டும், தொய்யிற் குழம்பால் அவள் மார்பிலும் தோளிலும் கரும்பு முதலாம் ஓவியம் பல வரைந்து, அவ்வியற்கை அழகிற்கு மேலும் அழகூட்டியும் மகிழ்ந்தான் அவன். தன் பேரெழில் கண்டு பாராட்டும் அவன் இன்சொல் கேட்டும், அருகில் அமர்ந்து தொய்யில் புனையும் இன்பக் காட்சியைக் கண்டும் மகிழ்ந்தாள் அவள். அவர்கள் வாழ்க்கைத் தோணி, இவ்வாறு, இன்பக் கடலில் எல்லை காணாது ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள், அவனுக்குப் பொருள்மீது ஆசை பிறந்தது. அவ்வாசையால், அப்பொருள் பெறுதற்கரியது என்பதை மறந்தான்; பொருள் புகழ் தரும்; போக நுகர்விற்குப் பெருந்துணையாம்; அறத்தை வளர்க்கும்; அன்பிற்கும்,

அருளிற்கும் வழிகாட்டும்; பகையை அழிக்கும் என, அவன் உள்ளம் பொருளின் பெருமையைப் பாராட்டத் தொடங்கி விட்டது; அதனால், பொருள் தேடும் முயற்சி மேற்கொண்டு போவார் சிலரோடு அவனும் போகத் துணிந்தான்.

அவன் முடிவினை அவள் அறிந்து கொண்டாள். அவன் பிரியின், தனித்து வாழ்தல் தன்னால் இயலாது; பிரிவுத் துயரைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் தன் உடலிற்கு இல்லை; அவன் பிரிந்த அன்றே, தன் உயிர் தன்னை விட்டு அகன்று விடும் என்பதை அவள் உணர்ந்தாள். மேலும், "அவ்வாறே அவன் பிரிய, அது பொறாது என் உயிர் போகுநிலை வந்து வாய்க்குமாயின், ஊரார் என்ன உரைப்பர்! 'மனைவி மடிந்து போக, அவளை ஈங்கு விட்டு, இமைப் பொழுதும் நில்லாப் பொருள் தேடிப்போன அவனும் ஒரு மகனா!' எனப் பழியன்றோ கூறுவர்! என் கணவன் பழியுடையனாவதா?" என்ற இம்முறையில் சென்றது அவள் எண்ணம். அம்மட்டோ! "என் கணவன் என்பால் கொண்டுள்ள அன்பின் அளவும் ஆற்றலும் எத்தகைய என்பதை யான் அறிவேன். பொருள் மீது உண்டான ஆசையால், இன்று திடுமெனப் பிரிந்து போய்விடினும், என்னைவிட்டு நெடிதுநாள் வாழ்தல் அவனால் இயலாது; விரைவில் மீண்டு விடுவன். ஆனால், பொருளோ, இன்று சென்று நாளையே சேர்த்துக் கொண்டு வரலாம் அவ்வளவு எளிமையிற் கிடைப்பதன்று. அதைப் பெறப் பலநாள் காத்துக் கிடத்தல் வேண்டும். அந்நாள்வரை, இவனால் என்னைப் பிரிந்திருக்க முடியாது. பொருள்

சேர்க்காதே திரும்பி விடுவன். அந்நிலையில் அவனைக் காணும் ஊரார், 'எடுத்த வினையை இடையே கைவிடாது, கடைபோகளவும் முடிக்கலாகாக் கைத்திறன் அற்றவன்' என்றன்றோ பழிப்பர்? ஆகவே, புகழ் கருதிப் பொருள் தேடிச் செல்லும் இவன், பொருள் சேர்த்தும் புகழ் பெறான், மாறாக வறிதே மீண்டு பழியே பெறுவன். மனைவியின் கடமை தன் கணவனுக்குண்டாம் பழிச் சொல்லினைத் தடுத்தலன்றோ! 'தகைசான்ற சொல் காத்துச் சோர்விலாள் பெண்!' என்றன்றோ வள்ளுவரும் கூறினார். கடனறிந்த மனைவியாக யான் வாழ வேண்டின், இந்நிலையில், பொருள் தேடிப் போகும் அவனைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும்," எனவுந் துணிந்தாள்.

அவ்வாறு துணிந்தவள், உடனே தன் கணவன்பாற் சென்று, "காதல! யான் கூறும் சில சொற்களைக் கருத்தூன்றிக் கேட்குமாறு வேண்டுகிறேன். பொருள் தேடும் கருத்துடையாய் என அறிந்தேன். என் அழகைக் கண்டும், அவ்வியற்கை அழகை மேலும் அழகாக்க ஒப்பனை பல புனைந்தும் மகிழும் உன் காதலின் ஆற்றலைப் பொருள் கருதிப் பிரிய நினைக்கும் இந்நிலையில், சற்று எண்ணிப் பார்ப்பாயாக. அக்காதலின் ஆற்றல் முன், அப் பொருளாசை என்னாம்? அவ் வாற்றலை மீறி, அவ்வாசை எத்துணை நாட்களுக்கு வாழும்? அவ்வாசை, அவ்வாற்றலுக்கு விரைவில் பணிந்து போவது உறுதி. ஆகவே, அவ்வாசையின் துணையை நம்பிப் பொருள் தேடிப் போவது நன்றன்று. நிற்க. 'பொருளாசை காதலுக்குப் பணிந்து போய்விடும்

என்பதை யானும் அறிவேன். அவ்வாசை, அதற்குப் பணிந்து விடுவதற்கு முன்னரே, அப் பொருளை அடைந்து விடுவேன்' எனக் கூறுவையாயின், அதுவும் இயலாது. சென்றவுடனே சேர்த்துக் கொண்டு வருமாறு, அச் செல்வம், எங்குங் குவிந்து கிடக்கவில்லை. எங்குச் சென்றாலும், எவர் முயன்றாலும், பல நாள் பாடுபட்ட பின்னரே அப் பொருள் கிடைக்கும். ஆகவே, அத்துணை விரைவில் அதைப் பெற்றுத் திரும்பல் இயலாது. அதைப் பெறுகிறவரையிலும், காதலை மறந்து, அக் காதலுக்கு அடிமையாகாது, அதைத் தேடித் திரிதல் அதனினும் இயலாது. ஆதலின், பொருள் கருதிப் பிரிந்து போகும் நீ, அப் பொருள் பெற்றும் வாராய். மாறாக, மீளாப் பழியே பெற்று வருவை. ஆகவே அன்ப! பொருள் கருதிப் பிரிதல், இந்நிலையில் பொருந்தாது. நிற்க.

"அன்ப! பொருளீட்டி வாழாதார் வாழ்வும் ஒரு வாழ்வா? வாழ்க்கையை வளமாக்குவது அப் பொருளே யன்றோ? இளமைக்கு இன்பம் ஊட்டுவது பொருள்! காதலைப் பயனுடையதாக்குவது பொருள் எனப் பொருளின் பெருமை பாராட்டுகிறது நின் உள்ளம் என்பதை யான் அறிவேன். அன்ப! பொருள் தேடிப் போகும் கருத்துடையவராய்த் தம் மனையாரைப் பிரிந்து போகும் உங்களைப் போலாது, பொருள் தேடும் கருத்துற்று, ஊரை விட்டகலாது, தம் மனைவியரைப் பிரியாது வாழ்வார் ஊரில் பலர் உள்ளனர். அவர்கள் எல்லோரும் உண்ண உணவற்று உயிரிழந்து போய்விட வில்லை. அவர்களும் வாழ்கிறார்கள். ஆகவே, பொருளே வாழ்வளிப்பது என்பது பொய்யுரையாம்; பொருந்தாக்

கொள்கையாம் என அறிக. நிற்க. இன்பம் உளது; இளமைச் செல்வமும், இருவர் உள்ளமும் ஒன்றப் பிறக்கும் உயர்ந்த காதலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றார்க்குப் பேரின்பம் தர வல்லன. அவ்விளமையும், காதலுமே அவர் கருதும் இன்பம்; அவையல்லது வேறு இன்பத்தை அவர் அறியார்; இன்பம் என வேறு ஒரு பொருள் உளது என்றும் அவர் எண்ணார்; இன்பம் என்பது வேறு எங்கோ கிடைக்கும் பொருள் என்ற எண்ணம், இளமை கழிந்தார்க்கும், உள்ளம் ஒன்றிய காதல் வாய்க்கப் பெறாதார்க்குமே உண்டாம். ஆகவே, பொருளே காதற் பயனளிப்பது எனும் கருத்தும் பொருந்தாது என அறிக. நிற்க. பொருள் உடையார் வாழ்வே, பயன்மிக்க வாழ்வு, அவர் வாழ்வில் மட்டுமே இன்பம் இடையறாது எய்தும் என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. வாழ்வைப் பயனுடைய தாக்குவது, இன்பம் நிறைந்ததாக ஆக்குவது பொருள் அன்று; காதலரின் ஒன்றுபட்ட மனமே. காதலர் இருவர், உடுக்க முழு ஆடையும் கிடைக்கப் பெறாது, உடலின் ஒரு பாதியைக் கிழிந்த கந்தல் ஒன்று மறைக்க, மற்றொரு பாதியைத் தம் கைகளையே ஆடையாக் கொண்டு மறைத்து மானங் காக்கும் கொடிய வறுமை வாழ்வுடையராயினும், அவர் மனம் மட்டும் ஒன்று கலந்து விடுமாயின், அவ்வறுமை வாழ்வு அவர்க்கு வாட்டம் அளிக்காது; அவ்வறுமை வாழ்வினும் அவர்கள் இன்பமே காண்பர்; அவர் பெற்று வாழும் இன்பம் நிறைந்த அமைதி வாழ்வு, செல்வர்க்கும் வாய்க்காது; அதற்கு மாறாகச் செல்வம் கொழிக்கும் வாழ்வில் செம்மாந்து வாழும் கணவன் மனைவியர்க்கிடையே, உள்ள ஒற்றுமை இல்லா யின், அவர் மனம் அவன்பால் பிணைக்கப்படாதாயின்

அவர் வாழ்வில் இன்பம் இருக்காது. அவர்க்கு அச் செல்வம் இன்பத்தைத் தாராது; மாறாகத் துன்பமே தொடர்ந்து நின்று துயர் செய்யும். ஆகவே, இன்ப வாழ்விற்கு வேண்டுவது பொருள் அன்று; ஒத்த காதலே, ஒன்றிய மனமே என்ற உண்மையை நீ உணர்தல் வேண்டும். நிற்க. வாழ்வில் இன்பம் காண வேண்டின் ஒன்றிய மனம் வேண்டும் என உணர்ந்தவுடனே, 'என் அன்பே! நம் காதல் எளிதில் கருகி விடாது. ஒன்றிய நம் உள்ளங்களைப் பிரித்துப் பாழாக்குவார் எவரும் இலர். அவ் வொற்றுமை இறவாது. அது மறுமையிலும் தொடர்ந்து நம்மோடு வரும். ஆகவே, யான் சென்று பொருளீட்டி வரும்வரை பொறுத்திருந்து, பின்னர் அக் காதற் பயன் துய்ப்போமாக!' எனக் கூறிப் பிரியத் தோன்றும் உனக்கு, அன்ப! அது இயலாது. காதல் கருகாது என்பதை யானும் அறிவேன். ஆனால் அக்காதற் பயனைப் பெற வேண்டின், அதற்கு அவ்வொற்றுமை ஒன்று மட்டும் போதாது, அவ்வொற்றுமையோடு இளமையும் இணைந்த வழியே அது பயன்படும். ஆனால், கருகாது நெடிது நாள் வாழும் காதல் போன்றதன்று இளமை. அதன் வாழ்வு நிலையற்றது. நாளையே அது இறந்துவிடும். இறந்தால் அது இறந்ததே! அதை மீட்டும் பெறுதல் இயலாது. இளமையை இழந்துவிட்டுக், காதலை மட்டும் வைத்துக் கொண்டு, வாழ்விற் பயன் காணல் இயலாது. ஆகவே, அன்ப! எவ்வழி நோக்கினும், பொருள் தேடிப் போதல், இந்நிலையில் பொருந்தாது; பொருந்தாது என்பது மட்டுமன்று, இந்நிலையில் தேவையற்றதுமாம். இவற்றையெல்லாம் நன்கு எண்ணிப் பின்னர், விரும்பியவாறு செய்க!" என்று கூறி, மனைவியின்

*கடமையை மாண்புற முடித்த மகிழ்ச்சி கொண்டாள். அவள் கூறிய அவ்வறிவுரை இது:*

"அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்,
பிரிந்துறை சூழாதி ஐய! விரும்பி, நீ
என்தோள் எழுதிய தொய்யிலும், யாழ நின்
மைந்துடை மார்பில் அணங்கும் நினைத்துக்காண்;
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது;
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்;
இளமையும், காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்
ஒரோஒகை தமமுள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன்கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதரோ!
சென்ற இளமை தரற்கு."

*தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தலைவி, அவனுக்கு நாளது சின்மை, இளமையது அருமை, தாளாண் பக்கம், தகுதியது அமைதி, இன்மையது இழிவு, உடைமையது உயர்ச்சி, அன்பினது அகலல், அகற்சியது அருமை முதலாயின கூறிச் செலவழுங்குவித்தது இது.*

1. துரப்ப — வலிந்து துரத்த; 2. பிரிந்துறை — பிரிந்து வாழும் வாழ்க்கை; சூழாதி — எண்ணற்க; 3. யாழ — அசை; 4. மார்பில் அணங்கு — காதலன் அணைப்பால் காதலி மார்பிற்றோன்றும் தேமல்; 5. முகப்ப — வாரிக் கொள்ள; 8. வளமை விழைதக்கது — செல்வத்திடத்து; விரும்பத்தக்கதொரு சிறப்பு; 9. ஒரோஒகை — ஒருகை; 10. ஒன்றன் கூறாடை — ஓர் ஆடையை இரண்டாக்கிப் பெற்ற ஒரு பகுதி; 11. ஒன்றினார் — உள்ளத்தால் ஒன்றுபட்டவர்; அரிதரோ அரிது; அர், ஓ இரண்டும் அசை.

# 18

# என் திறம் வினவல்

அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஓர் ஆண் மகன், பெண்மைக் குணங்களைப் பெருகக் கொண்ட ஒரு பெண்ணைக் கண்டு காதல் கொண்டான். அவள்பாற் சென்று, "யான் நின்பால் கொண்டுள்ள அன்பு பிரிவறியாதது; பிரியின் வாழாப் பெருமை வாய்ந்தது!" என்பன போலும் அவள் உள்ளம் உவக்கும் உரைகள் பல கூறினான். அவளும் அவன் அறிவு, ஆண்மை, ஆற்றல் களின் உயர்வைக் கண்டும், "என் அன்பு பிரிவறியாதது!" என அவன் கூறியதை உண்மையெனக் கொண்டும், அவன் காதலை ஏற்றுக் கொண்டாள். சின்னாட்கள் கழித்து, அவர்க்கு மணமும் நிகழ்ந்தது. மணமக்களாக மாறிய அவர்கள் மனையற வாழ்வும் மாட்சிமையுற்று விளங்கிற்று.

அவர்கள் வாழ்க்கை, இவ்வாறு, எவரும் போற்ற இனிது நடைபெற்று வருங்கால், ஒரு நாள் அவன் யாதோ

ஒரு வினை கருதி, வெளிநாடு செல்லத் துணிந்தான். அவன் முடிவறிந்த அவன் மனைவி பெரிதும் வருந்தினாள். அவன் செயல் அறிந்து, "இத்துணை இளை யாளை இந்தக் கொடிய கோடை காலத்தில், பிரிந்து போகின்ற இவன் பேதைமையினை என்னென்பது!' என ஊரார் கூறிய அலர், அவள் துயரை அதிகமாக்கிற்று. அதைப் பொறாத அவள், அவன்பால் சென்றாள். இயல் பாகவே, சிறிது மிக்க சினம் உடையவள் அப்பெண். குற்றம் செய்தவரை, அக் குற்றம் செய்தவர் யாவரே யாயினும், அக் குற்றத்தை, அவர் முன்னரே எடுத்துக் காட்டி, இடித்துரைத்துத் திருத்த முயலுந் துணிவுடையாள். அத்தகையாள் அவனைப் பார்த்து:

"அன்ப! என்னைக் கண்டு காதல் கொண்ட அன்று, 'பிரியேன்; பிரியின், உயிர் தரியேன்! அறம் அல்லன செய்தேனும் ஆவன்!' என்று, கூறிய நின் சொல்லும், செயலும் உண்மை அல்ல; பொய்யே என்பதை, நின் காதல் மயக்கத்தால், கருத்திழந்து போன யான், அப்போது அறியாது போயினேன். அவற்றின் இயல்பு இது என்பதை இன்றே யான் உணர்ந்தேன். பிரியேன் என்று கூறிய நீ, இன்று, என்னைப் பிரிந்து போதற்கு, அரிய கொடிய பாலை வழியிற் செல்லத் துணிந்து விட்டனை. ஊரார் அலர் கூறிப் பழிப்பதையும் பொருட்படுத்தாது போகும் நின்பால், மக்கட்டன்மை அறவே இல்லை கொல்? வானம் வழங்கித் துணை புரிதலை விடுத்து, வெங்கதிர் வீசி வாட்டுவதால், நீ செல்லும் பாலை நிலம், தன் வளம் இழந்து, வழங்கற்கு ஆகா வன்னிலமாய் மாறுதல் போல், உன் அன்பு உண்மையால் உயிர் வாழும் யான், அவ் அன்பைப் பெறேனாயின், உயிர் இழப்பேன் என்பதை

அறியாது போகும் நின்னை மக்கட்டன்மை உடையான் என எவரே மதிப்பர்? அன்ப! பிரிந்து போகும் உனக்கு, இறுதியாக ஒன்று கூறுகின்றேன், கேள்: நீ விரும்பியவாறே பொருள் தேடச் செல். அதை யான் தடை செய்யேன். ஆனால், ஆங்குச் சென்று பொருள் தேடும் பணி மேற்கொண்டிருக்குங்கால், ஈங்கிருந்து, ஆங்கு வருவார் யாரேனும் உளரேல், அவரைக் கண்டு, 'யான் அன்பின்றி விடுத்து வந்தமையால் வருந்தி வாழும் என் மனைவியைக் கண்டீரோ? அவள் நிலையினை அறிந்தீரோ?' என, என்னைக் குறித்த எதையும் கேளற்க. கேட்டால், அவர் நினக்கு நற்செய்தி தாரார். என் இறந்து பாட்டினையே அவர் கூறுவர். அது கேட்கும் நீ மேற்கொண்டு சென்ற வினையை முடிக்காது, வருந்தி, வாழ்விழப்பை. எடுத்த வினையை இடையிற் கைவிட்ட பெரும்பழியும் உண்டாகும். பகல் விளங்கும் ஞாயிறுபோல், உலகெலாம் போற்ற வாழ வேண்டியவன் நீ. அதையே யானும் விரும்புகிறேன்; புகழ் பெற்று வாழ வேண்டிய நீ, பழியுற்று இறத்தல் கூடாது. ஆகவே, அன்ப! செல்லும் நீ சென்ற நின் வினை முடியும்வரை என்னை மறந்திருப்பாயாக. இதுவே என் வேண்டுகோள். இருந்து அன்பு காட்ட மறுக்கும் நீ, இதையாவது அருள்வையாக!" என வேண்டிக் கொண்டாள்.

தன் காதலன் பிரிவுத் துயர் பொறாது கலங்கும் அந்நிலையிலும், அவள் தன் துயர் கருதி வருந்தாது, அவன் புகழ்க் கேடு கருதியே வருந்தினாள். அவன் பிரிவால், தன் உயிரை இழக்கப் போகும் அவள், அந்நிலையிலும், 'என் இறப்பிற்குக் காரணமாகும் இவன், எக்கேடுறின் என்?' என எண்ணாது, 'யான் இறப்பினும், என்னை இழந்து

*நிற்கும் அந்நிலையினும், என் இறப்பிற்குக் காரணனாகிய அவன், பழியுடையனாதல் கூடாது!' என எண்ணும் அவள் உள்ளத் தூய்மையை உவந்து பாராட்டுவோமாக.*

"செவ்விய தீவிய சொல்லி, அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று அவைஎல்லாம்;
பொய்யாதல் யான் யாங்கு அறிகோமற்று ஐய!
அகனகா கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல்அறிந்தேன்;
மகன் அல்லை மன்ற, இனி;
செல்; இனிச்சென்று, நீ செய்யும் வினைமுற்றி
'அன்புஅற, மாறி யாம்உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ?' என்று, வருவாரை
என்திறம் யாதும் வினவல்; வினவின்,
பகலின் விளங்கும் நின்செம்மல் சிதையத்,
தவலரும் செய்வினை முற்றாமல் ஆண்டு, ஓர்
அவலம் படுதலும் உண்டு."

*பிரிவுணர்த்தப்பட்ட தலைவி, நீ பிரியின் யான் இறந்து படுவன் எனக் கூறித் தலைவனைச் செலவழுங்கு வித்தது.*

1. செவ்விய — நடுவு நிலைமையில் திரியாத; தீவிய — இனிய; 2. அஞ்ஞான்று — களவுக்காலத்தில்; 4. அகனகர் — பெரிய ஊர்; 5. பகல் — ஞாயிறு; முனிதல் — காய்தல்; உள்ளல் — கருதுதல்; 5. மன்ற — உறுதியாக; 8. அற — நீங்கும்படி; மாறி — மனம் வேறுபட்டு; 10. என்திறம் — என்னைப் பற்றிய செய்தி; வினவல் — வினவாதே; 11. பகலின் — ஞாயிறு போல்; செம்மல் — தலைமை; 12. தவல் அரும் — கேடு அடைதல் கூடாத; 23. அவலம் — துன்பச் செய்தி; படுதல் — உண்டாகல்.

# 19

# கலையும் பிணையும்

குறைவறப் பெய்யும் மழை உடைமையால், ஆறும் குளமும் நீரால் நிறைய, மரமும் செடியும் மல்கி, நிழலும் நிறையயனும் தரச் சிறந்து விளங்கும் வளம் மிக்க நாட்டில் மனையறத்திற்குரிய மாண்புகளைக் குறைவறக் கொண்ட ஒருத்தியை மணந்து, மகிழ்ந்து வாழ்ந்திருந்தான் ஓர் இளைஞன். அவன் அருகில் இருந்து அன்பு செய்ய, வருவார்க்கு விருந்தளித்தல் முதலாம் மனையறக் கடமைகளை மகிழ்ந்து செய்து வாழ்ந்தாள் அப் பெண். இவ்வாறு அவர்கள் இல்லற வாழ்க்கை இனிது நடை பெற்று வருங்கால், ஒரு நாள், அவன், தன்னையொத்த ஏனைய இளைஞர்களைப் போன்றே, பொருளீட்டி வர விரும்பினான். பொருள் விரும்புவார், அப்பொருள் தாம் பிறந்த நாட்டில் பெரும் அளவில் இல்லாமையால், வெளி நாடுகட்குச் சென்றே ஈட்டி வந்த காலம் அந்தக் காலம். அதனால், அவ்விளைஞனும் வெளிநாடு போதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கினான்.

அந்நிலையில் அதை அறிந்து கொண்டாள், அவன் மனைவி. பொருளின் இன்றியமையாமையினை அவளும் உணர்வாள். அதனால், அவன் அது குறித்துப் போவதைத் தடுத்திலள். ஆனால், மனையற வாழ்வு மாண்புற வேண்டின், தம் வாழ்வில் செல்வம் கொழிக்க வேண்டும் என்பதை அறிந்த அவள், இவனைப் போக விடுத்துத் தன்னால் தனித்திருந்து வாழ்தல் இயலாது என்பதையும் உணர்ந்தாள். அதனால், அவன் போதற்கு இசைவாள், தன்னையும் உடன் கொண்டு போகுமாறு வேண்டிக் கொண்டாள்.

அவள் வேண்டுகோள் கேட்டு அவன் கலங்கினான். அவளை உடனழைத்துச் செல்ல விரும்பாமையன்று அதற்குக் காரணம். அவளையும் உடன் கொண்டு செல்வதில் அவனுக்கும் மகிழ்ச்சியே. அவள் உடன்வரின் அவளைப் பற்றிய கவலை, அவன் கருத்தினின்று ஒழிவதால், எடுத்த காரியமே கருத்தாய் நின்று, அதை விரைவில் முடித்தலும் கூடும். அதனால், அவளை அழைத்துச் செல்ல அவனும் விரும்பினான். ஆனால், அவர்கள் கடந்து செல்ல வேண்டிய நாடு, தன்னையொத்த ஆடவர்க்கும் கடத்தற்கு அருமை வாய்ந்தது. வளம் கொழிக்கும் விளை நிலங்களெல்லாம் வறண்டு, தம் பயன் குன்றுமாறு, ஞாயிறு நின்று காயும் கோடை காலம் அவன் செல்லும் காலம். கோடையின் கொடுமையால், உணவும் உண்ணுநீரும் பெறாது வருந்திய காட்டு யானைகள் அனைத்தும், ஒன்று சேர்ந்து வரினும், அவற்றிற்கு அவை வேண்டுவனவற்றை அளித்துப் புரக்க வல்ல பெருவளம் பொருந்திய மலைகளும், தம் பயன்

குன்றி மடியுமாறு கொடுமை செய்யும் காலம் அக் காலம். செல்லும் வழியில் நிலங்கள் வெப்ப மிகுதியால் வெடித்துக் கிடக்கும். நீர்நிலைகள், சேறும் உலர்ந்து, செந்தூள் பறக்கும். அத்தகைய கொடுமை மிக்க வழியில் அடிவைத்த அப்போதே, அவள் அதன் வெம்மை தாளாது இறப்பள். அந்நிலை உண்டாயின், அவனுக்கு இன்பம் ஊட்டும் அவள் கிளிமொழி, அமிழ்தம் ஊறும் அவள் எயிறு, மலைவளர் மூங்கிலின் எழில்மிக்க அவள் தோள் — இவ்வாறலாம் பயனைப் பெற இயலாது போகுமே என வருந்தினான். அதனால் அவளை உடனழைத்துச் செல்ல அஞ்சினான்.

அஞ்சியவன் அவளை நோக்கி, "அன்பே! கடந்து செல்ல வேண்டிய காட்டு வழி, மழைத் துளிகளையே பார்த்தறியாதது. ஆங்கு வரும் நின் அடிகள், அந்நிலத்தின் கொடுமை பொறாது தளரும். நின் துயர் நிலையினை யான் எவ்வாறு தாங்கிக் கொள்வேன்? ஆங்கு வரும் நீ, நீர் வேட்கையுறின், ஆங்குள்ள ஆறு குளங்களெல்லாம் சேறுபட்டுக் கிடக்குமாதலின், நீ உண்டற்குச் சிறிது நீரும் ஆங்குக் கிடைக்காது. தண்ணீர் வேட்கை தணியப்பெறாது தளரும் நின் துயர்க் காட்சியை என் கண்கள் எவ்வாறு காண வல்லவோ? ஆங்கு வரும் நீ வெய்யிலின் வெம்மை தாளாது தளரின், நின்று அத்தளர்ச்சி போக்கும் நிழல்தரும் மரம் ஒன்றுகூட ஆங்கில்லை. அம் மரங்களெல்லாம், கோடையின் வெம்மையால், வறண்டு உலர்ந்து போய் விட்டனவே! நிற்க நிழலும் பெறாது தளரும் நின் நிலை கண்டு வருந்துவதல்லது, வந்த வினை முடித்து விரைந்து மீள்வது எவ்வாறு? ஆகவே, என் ஆருயிரே! உன்னையும்

உடன் கொண்டு செல்வது இயலாது. ஆதலின் அவ் வெண்ணம் விடுத்து விடை தந்து அனுப்புவாயாக!" என்று கூறி வேண்டிக் கொண்டான்.

காட்டின் கொடுமை கேட்டுக் கலங்கி விடுவள்; ஆங்கு வர அஞ்சிப் போக விடை தருவள் என எண்ணினான் அவன். ஆனால் அவள் கொண்ட முடிவோ வேறு. கணவன் உள்ள இடமே நாடு. அது வறண்ட பாலையேயாயினும், அதுவே மழையும், ஆறும், மர நிழலும் வாய்ந்த மருத நிலமாம். அதற்கு மாறாக, மழையாலும், மாநதிகளாலும், மரங்களின் செறிவாலும் மாண்பு மிக்க மருத நிலமேயாயினும், கணவன் உடன் இலனேல், அதுவே வறண்ட பாலையாய்ப் பெருந்துயர் செய்யும் எனும் கருத்தினள் அவள். அதனால், காட்டின் கொடுமை கூறி மறுத்த தன் கணவனை நோக்கி, "அன்ப! இன்ன இடத்தில், இத்துணைக் காலம் இருக்கும் எனும் வரையறையற்றது காற்று. அதைப் போன்றது என் வாழ் நாள். அவ்வாழ்நாள், இங்குப் பெய்யும் வற்றா மழையினை அரணாகக் கொள்வதில்லை. நின்னைப் பிரியாது, நின் அகத்தைத் தழுவிக் கிடக்கும் அவ் அன்பினையே அரணாகக் கொண்டுள்ளது. அவ் அரணை இழந்து என் வாழ்நாள் வாழாது. அன்ப! ஆற்றில் ஓடிக் கடலுள் புகுந்த நீர், மீளவும் அவ்வாற்றுள் புகுவதில்லை. அதைப் போன்றது என் இளமை. கழிந்தால், அதை மீட்டும் பெறுதல் இயலாது. அவ்விளமை, ஈங்குப் பாயும் ஆற்றுநீர் உண்டு வாழ்வதினாலேயே அழியாது நிலை பெற்றுள்ளது என எண்ணற்க. அது, உன் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பாயும் அன்பெனும் தெளி நீரையே அடிப்படையாகக் கொண்டு வாழ்கிறது. அவ் அன்பு அழியின், அவ்

விளமையும் அழியும். மேலும் அன்ப! மரத்தின் நிழல் மனத்திற்கு மகிழ்ச்சி தரும்; மகிழ்ச்சி தரும் அம் மரநிழல் ஆங்கு இல்லை என்று கூறுகின்றனை. ஆனால், அன்ப! எனக்கு மகிழ்ச்சி தருவது அம்மர நிழலன்று. அம் மரங்கள் மிக்க ஈங்கு என்னை விட்டுப் பிரியின், மரத்து நிழலில் வளரும் மரம் செடி கொடிகள் வளம் கெட்டு நிறம் இழத்தல் போல், யானும் பசலை பெற்றுப் பொலி விழப்பள்; அவ்வாறு என்னை அழிய விடாது, காக்க வல்லது நின் தாள் நிழலே. நின்னை விட்டுப் பிரியாதிருக்கச் செய்யும் நின் அருளே. அம்மர நிழலன்று. ஆகவே, அன்ப! என்னையும் உடனழைத்து செல்க!" என்று கூறி வேண்டிக் கொண்டாள்.

அவள் அத்துணை வேண்டிக் கொண்ட பிறகும், அவளை அழைத்துச் செல்ல அவன் உள்ளம் அஞ்சிற்று. அத்துணைக் கொடுமை மிக்கது அக்காடு; அதனால், அவள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாதே, "என் ஆருயிர்க் காதலி! காடு அடுக்கடுக்கான மலைகள் போலும் கற்களைக் குவியல் குவியல்களாக, ஆங்காங்கே கொண்டிருக்கும். அம் மலைக் காட்டைக் கடந்து செல்வார், நுழைந்து நுழைந்து செல்ல வேண்டி யிருத்தலின், தனித்துச் செல்வார்க்கும் அதைக் கடந்து செல்லுதல் அரிதாம். எய்த அம்பும் ஓடிப் பாயாது, வழியடைத்துக் கிடக்கும் கற்களிற் பட்டு ஒடிந்து வீழும் அக் காட்டு வழியில், உன்னை எவ்வாறு அழைத்துச் செல்வேன்?" என்று கூறி வருந்தினான். அவன் அவ்வாறு கூறக் கேட்டும் அடங்கி விடாது, "ஐய! அம்பு ஓடா அருமையுடையது எனக் கூறும் நீவிர், அக்காட்டில், கலை ஓட, அக் கலையினைப் பிரியாது பின் தொடர்ந்து

*ஓடும்பிணையும் உண்டே! அதைக் கண்டிலீர்கொல்லோ? காட்டின் கொடுமையால், பிணை கலையைப் பிரிந்து கலங்கி நிற்கும் காட்சியை யாண்டேனும் கண்டதுண்டோ? காட்டில் வாழும் இயல்பினவேனும், பிணை கலையைப் பிரியாப் பண்பு வாய்ந்துள்ளது. அப்பண்பு, நாகரிகம் அறிந்த நாட்டில் வாழும் என்பாலும் இருக்கும் என்பதை மறவற்க. ஆனால், காட்டின் கொடுமை கருதிப், பிணையைப் பிரிந்து போய்விடாது, உடனிருந்து அழைத்துச் செல்லும் அக் கலையின் பண்பு, அக் கலையும் பிணையும் கலந்து வாழக் கண்ட நும்பால் பொருந்தவில்லையே என்றே யான் வருந்துகின்றேன்!" என்று கூறி வருந்தினாள்.*

"பல்வளம் பகர்பு ஊட்டும் பயன்நிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சொரிதலின்,
தணிவில்வெம் கோடைக்குத் தண்நயந்து அணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற்று இனம்தாங்கும்
மணிதிகழ் விறன்மலை வெம்ப மண்பகத்
துணிகயம் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்;

'கிளிபுரை கிளவியாய்! நின்னடிக்கு எளியவோ?
தளிஉறுபு அறியாவே காடு' எனக்கூறுவீர்;
வளியினும் வரைநில்லா வாழும்நாள் நும்ஆகத்து
அளிஎன உடையேன் யான் அவலங்கொண்டு
அழிவலோ?

'ஊறுநீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய்! நீ உணல்வேட்பின்
ஆறுநீர்இல்' என அறன்நோக்கிக் கூறுவீர்!
யாறுநீர் கழிந்தன்ன இளமைநும் நெஞ்சுஎன்னும்
தேறுநீர் உடையேன்யான் தெருமந்து ஈங்குஒழிவலோ?

'மாண் எழில் வேய்வென்ற தோளாய்! நீவரின்தாங்கும்
மாண்நிழல்இல ஆண்டைமரம்' எனக்கூறுவீர்;
நீள்நிழல் தளிர்போல நிறன்ஊழ்த்தல் அறிவேன்நும்
தாள்நிழல் கைவிட்டு யான் தவிர்தலைச் சூழ்வலோ!

எனவாங்கு,
அணையரும் வெம்மையகாடு எனக்கூறுவீர்!
கணைகழி கல்லாத கல்பிறங்கு ஆரிடைப்
பணையெருத்து எழில்ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ? பிரியுமோ அவையே?"

*காட்டின் கடுமை கூறித் தன்னைத் தனியே விடுத்துப் பிரிய நினைந்த தலைவனுக்குத் தலைவி, நாளது இன்மை, இளமையது அருமை முதலியன கூறி, என்னையும் உடன் அழைத்துச் செல்க என்றது.*

1. பகர்பு — விளைந்து கொடுத்து; பைதுஅற — ஈரம் புலருமாறு; 3. தண் நயந்து — குளிர்ச்சியை விரும்பி; 4. பிணி — பசிப்பிணி; தெறல் உயக்கத்த — வருத்துவதால் பிறந்த வருத்தத்தை உடைய; அணி கொள்ளும் மலை, மணி திகழ்மலை, விறன்மலை எனக் கூட்டிப் பொருள் செய்க. 5. பக — பிளவுபட; 6. துணிகயம் — தெளிந்த நீரால் நிறைந்த குளம்; தூங்குஅழல் — மிக்க வெப்பம்; 7. கிளவி — சொல்; 8. தளி — மழைத்துளி; உறுபு அறியா — பெய்தலை அறியாத; 9. வளி — காற்று; வரை நில்லா — ஓர் எல்லையில் நில்லாத; ஆகம் — மார்பு; 10. அளி — அணைப்பால் பிறக்கும் அருள்; அவலம் — துன்பச் சூழ்நிலை; 11. ஏய்க்கும் — ஒக்கும்; 12. ஆறுநீர்இல — வழி, நீரைப் பெற்றிருக்கவில்லை; 14. தேறுநீர் — தெளிந்த தன்மை; உடன் கொண்டு அருள் செய்வோம் எனும் எண்ணம்; தெருமந்து — செய்வது அறியாது தடுமாறி; 17. நீள் நிழல் தளிர் — நீண்ட நிழலில் நின்ற மரஞ்செடி கொடிகளின் தளிர்; நிறன் ஊழ்த்தல் — நிறம் கெடல்; 18. தாள்நிழல் — தாளாகிய நிழல், அதாவது பிரியாப் பேரருள்; 21. கல்பிறங்கு — கற்கள் நிறைந்த; 22. பணை எருத்து — பருத்த கழுத்து.

# 20

## நின் இன்று வாழாள்

கடமை உணர்ச்சிகளில் வழுவாத காளை யொருவன், ஒரு நாள், ஒரு பெண்ணைக் கண்டு காதல் கொண்டான். தன் காதலுக்கு உரியன் அவன் என உணர்ந்து அவளும் அவனைக் காதலித்தாள். ஆயினும், அவன் கடமை யுணர்ச்சி மிக்கவன், மேலும் புதியன், அதனால், என்றேனும் ஒரு நாள் தன்னைத் தனியே விடுத்துப் பிரிந்து விடுவனோ என அஞ்சினள் அப் பெண். அஃதறிந்தான் அவன். அவள் அண்மையிற் சென்று, அன்போடு, நெற்றியிற் படர்ந்து வீழ்ந்திருக்கும் அவள் தலை மயிரைக் கோதியவாறே, "உன்னைப் பிரிந்தால் என் உயிர் வாழாது. ஆதலின், உன்னை விட்டு இமைப் பொழுதும் பிரியேன். இது உறுதி. ஆகவே, பிரிந்து விடுவனோ என அஞ்சற்க!" எனக் கூறித் தேற்றினான்.

சின்னாட்களில், அவர்கள் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. மனையற வாழ்வில் மகிழ்ந்தனர் அவர்கள்.

மேலும் சில நாட்கள் இவ்வாறே சென்றன. ஒரு நாள், கடமை யுணர்ச்சி அவன் கருத்தைக் கவர்ந்தது. பொருள் ஈட்டிவரத் துணிந்தான் அவன். துணிந்தவன் அதைத் தன் மனைவியைக் கண்டு, காதலிக்கத் துணை புரிந்து, அந்நாள் முதலாகத், தங்கள் வாழ்க்கையோடு பிரிவறியாப் பெருந் தொடர்பு கொண்டு வாழ்பவளாய தோழிக்கு உணர்த்த விரும்பினான். உடனே அவளை அழைத்துக் "காட்டில் பிடியொடு பிரிவறியாப் பெருவாழ்வு வாழ்ந்த களிறுகள், தம் பிடிகளை மறந்து, பிரிந்து வந்து காக்கும் நம் நாட்டின் எல்லைகளைக் கடந்து போய்ப் பொருளீட்டி வருதல் வேண்டும் என என் நெஞ்சம் வற்புறுத்துகிறது. அதன் ஆணையை மீறுதல் அறமாகாது. இதற்கு என் செய்வேன்?" என்றான். காட்டில் பிடியொடு வாழும் இயல்பினவேனும், அவ்வாழ்க்கையைக் காட்டிலும், பிரிந்து வந்து நாட்டைக் காத்து நிற்பதிலேயே பெருமை யுளதாகக் கருதும் களிறுகள் போல், யானும் மனைவியோடிருந்து வாழும் வாழ்க்கையில் மகிழ்ச்சியுளது எனினும், பிரிந்து போய்ப் பொருளீட்டி வாழும் வாழ்விலேயே பெருமை யிருப்பதாகக் கருதுகிறேன். அவ்வாறு, யான் கருதுகிறேன் எனினும், அதைக் கூற, எந்நா, அவள்பால் கொண்ட அன்பின் காரணமாக அஞ்சுகிறது. ஆகவே, என் நெஞ்சு கருதுகிறது' என அந் நெஞ்சுமீது பழி போட்டான்.

அவன் கூறிய சொல்லின் பொருள் வழியே, அவன் கடமை யுணர்ச்சியையும், காதல் பெருமையையும் கண்டு மகிழ்ந்த தோழி, அதை அவன் அறியக் காட்டிக் கொள் ளாது, மாறாக, அவன்பால் கடுஞ்சினம் உடையாள்

போல், அவனைப் பார்த்து, "அன்ப! 'பிரியேன், பிரியின் உயிர் தரியேன்!' என்ற சொற்களை, அன்று கூறியவனும் நீ. 'பொருள் தேடிப் பிரிதல் வேண்டும் என என் நெஞ்சு கூறுகிறது,' என இன்று கூறுபவனும் நீ. அதையும் நீயே கூறினாய்; இதையும் நீயே கூறுகின்றனை. இவ்விரண்ட னுள் உண்மை எது? பிரியேன் என்ற அதுவா? பிரியக் கருதுகிறது என் நெஞ்சம் என்ற இதுவா? இவ்வாறு முன்பின் முரண்படக் கூறும் மனத்தெளிவற்றவனே! இப் போது, யான் கூறுவனவற்றையும் கேட்டு, மனம் தெளிந்து, பின்னர் நீ கருதுமாறு செய்க. 'இவர் சிறந்தவர்; ஆகவே இவரோடு சேர்ந்து வாழலாம்! இவர் பிழையுடையர்; ஆகவே இவர்பால் பொருந்தாது அகல்வாம்!' என அவரவர்தம் தகுதி-தகுதியின்மைகளை அறிந்து அடையும் ஆற்றல், நீ தேடிச் செல்லும் செல்வத்திற்கு இல்லை. அது ஒருவர், இப்பிறவியில் பெற்றிருக்கும் தகுதி தகுதியின்மை களை நோக்காது, அவர் முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப சேர்ந்தும் சேராதும் செல்லும். இப் பிறவியில் தீயோராய் வாழினும், அவர்க்கு முற்பிறவியின் நல்வினை உண்டேல், அவர்பால் அது அளவிறந்து சேர்ந்து வாழும். ஒருவர், இப்பிறவியில் நனிமிக நல்லோ ராய் வாழினும், அவர்க்கு அம் முற்பிறவி நல்வினை இன்றேல், அவர்பால் அச் செல்வம் அணுகுவதும் செய்யாது. அத்தகைய இழிந்த இயல்புடையது செல்வம். அம்மட்டோ! ஒரு காலத்தே, ஒருவரை, அவர் செய்த நல்வினை காரணமாகச் சேர்ந்து வாழ்ந்த செல்வம், அவர்க்கு அந் நல்வினைப் பயன் அற்ற அப்பொழுதே, அவரை வருந்த விடுத்துப் பிரிந்து போய்விடும் பிழைநெறி

*யும் உடையது. அத்தகையள் அல்லள் நின் மனைவி. நின்னைப் பிரிந்து, அவள் ஓர் இமைப் பொழுதும் உயிர் வாழாள். என்றும் இணை பிரியாது வாழ நினைக்கும் இவளை மறந்து—மூங்கில் போலும் மென்மையும் அழகும் மிக்க இவள் தோள் இன்பத்தை வெறுத்து, எவரிடத்தும் நிலைத்து வாழும் இயல்பற்ற பொருளைத் தேடி, அதன் பின் ஓடும் நின் பேதைமையினை என்னென்பது! பெருமையை விடுத்துச் சிறுமையைக் கைப்பற்றத் துடிக்கும் நின் அறியாமை அகல்க. அவளைப் பிரிய எண்ணாது, அவளோடு கூடி வாழ்க!" என்று கூறினாள்.*

"பால்மருள் மருப்பின், உரல்புரை பாவடி
ஈர்நறும் கமழ்கடாஅத்து இனம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து,
பொருள்வயின் பிரிதல் வேண்டும் என்னும்

அருளில் சொல்லும் நீசொல் லினையே!
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
'நின்னிற் பிரியலென்; அஞ்சலோம்பு!' என்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே!
அவற்றுள், யாவோ, வாயின? மாஅன் மகனே!

கிழவர் இன்னோர் என்னாது, பொருள்தான்
பழவினை மருங்கின், பெயர்புபெயர்பு உறையும்;
அன்ன பொருள்வயின் பிரிவோய்! நின்இன்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே."

*தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, களவுக் காலத்தில் அவன் கூறிய சூளுரை, பொருளின் நிலை*

*யாமை, தலைவியின் ஆற்றாமை முதலாயின கூறிச் செலவு மறுத்தது.*

1. பால்மருள் — வெண்ணிற மிகுதி கண்டு பாலும் மயங்கும்; மருப்பு — யானைக்கொம்பு; 2. ஈர்நறும் கமழ்கடாம் — ஈரமும், நாறும் மணமும் கொண்ட மதநீர்; ஒருத்தல் — யானைத் தலைவன்; 3. ஆறு கடிகொள்ளும் — வழியைக் காவல் புரியும்; 5. நன்னர் நறுநுதல் — நன்மையை உடைய நல்ல நெற்றி; நீவி — கையால் தடவிக் கொடுத்து; 7. அஞ்சல் ஓம்பு — அஞ்சுதலைக் கைவிடுக; 8. நன்னர் — நன்மை அமைந்த; 9. வாயின — உண்மை உடையன; மாஅன்மகன் — மயக்கத்தைஉடைய மகனே; 10. கிழவர் — தனக்கு உரியார், 11. மருங்கில் — காரணமாக; பெயர்பு பெயர்பு — மீண்டு மீண்டு; மாறி மாறி; 12. நின் இன்று — உன்னை இல்லாமல்; 13. இமைப்புவரை — இமைப்பளவும்; 14. அமைக்கவின் — மூங்கிலின் அழகை.

## 21

# புதுவது அன்றே!

அழகெல்லாம் திரண்டு ஓர் உருவு கொண்டு வந்தாலன்ன ஒரு பெண்ணைக் கண்டு, அவள் பேரழகிற்கு அடிமையாகித், தன் அறிவிழந்து மயங்கினான் ஓர் இளைஞன். அவ்விளைஞன் தன்பால் காட்டிய ஆர்வம் கண்டு, அவனைக் காதலித்தாள் அப் பெண்ணும். அவ் விருவர் உள்ளமும் காதலால் கட்டுண்டமை கண்ட அவர் பெற்றோர், அவர்க்கு முறைப்படி மணமும் செய்து முடித்தனர். இருவரும் மனையற வாழ்க்கையை மகிழ்ந்து மேற்கொண்டனர். அவன், அவளை இமைப் பொழுதும் பிரியாது, இணைந்து வாழ்ந்தான். அவள் அழகை அள்ளிப் பருகி விடுவான் போலும் ஆர்வம் மிக்குடையனாம். அதைப் பலப்பல வகையால் பாராட்டிப் பேரின்பம் கொள்வன். “நறுமணம் நாறும் முல்லை அரும்புகளை நிரல் பட வைத்தாற் போல், நின் வெண்ணிறப் பற்கள் வரிசையாக அமைந்த வனப்பே வனப்பு! மணப்பொருள் கலந்த எண்ணெய் இட்டு நீவி, நீலமணி ஒளி விட்டாற்

போல், ஒளி விடுமாறு வாரி, ஐவகை வனப்பும் அமைய முடித்த உன் கூந்தலின் அழகே அழகு! குளத்திற்கு அணி செய்யும் தாமரையின் முற்றாத இளைய முகைபோல், நின் மார்பில் முளைத்தெழுந்த இளங்கொங்கைகளின் எழிலே எழில்!" என, இவ்வாறெல்லாம் அவள் நலங்களை நாவாரக் கூறிப் பாராட்டி நயந்து மகிழ்ந்தான். அவளும், அவ்வாறு பாராட்ட, அது கேட்டுப் பெருமிதம் அடைந்து பேரின்பம் உற்றாள். அவர்கள் இல்லற வாழ்க்கை இந் நெறியில் இனிதே நடைபெற்று வந்தது.

சில ஆண்டுகள் கழிந்தன. அவர்களும் ஆண்டால் முதிர்ந்தனர். ஆண்டின் முதிர்வால் அவள் உடலும் சிறிதே தளர்ந்தது. அம்முதிர்ச்சி அவள் உடல் உறுப்புக்களிலும் புலனாகத் தொடங்கிற்று. பற்களுள் ஒரு சில தேய்ந்து, தம் பண்டை வனப்பை இழந்தன. கூந்தல் இயற்கை அழகினை இழந்து விட்டமையால், அதற்குச் செயற்கை எழிலூட்டும் சில ஒப்பனைகளை வலிந்து மேற்கொள்ள வேண்டியதா யிற்று; தாமரை முகையெனத் தோன்றிய கொங்கைகள் சற்றே தளர்ந்து தோன்றின. ஆண்டின் முதிர்வால், காதல் இன்பம், அவனுக்கும் ஒரு சிறிது தெவிட்டிற்று. அதுகாறும் அடங்கியிருந்த பொருளாசை, அந்நிலை நோக்கி, அவன் உள்ளத்தில் மீண்டும் வேர்விடத் தொடங்கிற்று. அதனால் பொருள் ஈட்டி வரும் கருத்துடையவனாகி, அப்பொருள் கிடைக்கும் வெளிநாடுகட்குப் போகத் திட்டமிட்டான். அஃதறிந்தாள் அவன் மனைவி. மணம் கொண்ட நாள் முதலா அவனை அவள் பிரிந்தறியாள். அதனால், அவன் பிரிவன் என்பதறிந்து பெரிதும் வருந்தினாள். அவ்வருத்தம் அளவிறந்து பெருகலாயிற்று. அவ் வருத்த மிகுதியால் அவள் இறந்து விடுவளோ என அஞ்சினாரும் உளர்.

அந்நிலை அறிந்தாள் அவள் தோழி. பொருள் தேடிச் செல்லும் அவனைத் தடுத்து நிறுத்தினாலல்லது செல்லும் அவள் உயிரைக் காப்பாற்றுதல் இயலாது என்பதை உணர்ந்தாள். அதனால், பொருள் வேட்கை உடைய னாய்ப் பிரிந்து போகக் கருதி நிற்கும் அவன்பால் சென்றாள். சென்று, "ஐய! யான் கூறுவன சில உள. அவற்றைச் சிறிது கருத்தூன்றிக் கேட்குமாறு வேண்டிக் கொள்கிறேன். கடன் வாங்கி உயிர் வாழ்வார், அக்கடன் கொடுப்பார் முன், அக் கடனைப் பெறுங்கால் நிற்கும் நிலை வேறு. அப்போதைய அவர் முகத் தோற்றமே வேறாம். தாயைக் காணும் சேய்களின் முகம்போல் மலர்ந் திருக்கும் அப்போது. ஆனால், கடன் தந்தவர், தாம் தந்ததைத் தருமாறு கேட்குங்கால், கடன் பெற்றவர் நிற்கும் நிலையே வேறு. அந்நிலையில் அவர் முகம், பேயைக் கண்டார் முகம் போல், பேதுற்றுத் தோன்றும். இது உலகியல். இன்று மட்டும் காணக் கூடியதன்று. உலகம் தோன்றிய நாள் முதலாக இதுவே நியதி. உலகில் பிறந்தார் அனைவர்க்கும் ஒத்த இயல்புடையதாய அப்பண்பு, நின்பாலும் இருப்பதில் வியப்பில்லையன்றோ? ஆதலின், நல்ல மலர்களில் உள்ள நறுந்தேனைத் தேடிச் சென்று உண்ணும் வண்டே போல், மகளிரின் நலத்தை, அம் மகளிரைத் தேடிச் சென்று நுகரும் நீ, அம்மகளிர் மகிழு மாறு அவரைப் பலப்பல கூறிப் பாராட்டி நலம் நுகர்ந்து விட்டு, இப்போது பொருள் மேற்கொண்ட வேட்கை மிகுதியால், அவரை மறந்து போவதோடு அமையாது, அவர்க்கு இறப்பையும் தந்து செல்லும் நின் செயல் கண்டு, ஒரு காலத்து உனக்கு வேண்டியவராய் வாழ்ந்து,

இப்போது வேண்டாதாராகிய நாங்கள் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆயினும், ஐய! ஒன்று மட்டும் கூற விரும்புகின்றேன். ஓவியம் வல்லான் ஒருவன், உள்ளம் உவந்து ஆக்கிய ஓவியத்தின், தன் உயிரையே அளித்து ஆக்கிய ஓவியத்தின் உயிர்ப்புத்தன்மையும், அதன் அழகும் அருமையும், அவ்வோவியம் அழியுங்காறும் அழியாது நிற்கும். அதேபோல், நல்லவர்கள் ஒரு காலத்தே, உள்ளம் உவந்து கூறிய ஒரு சொல், அவர் இறக்கும் வரையிலும் அழியாது நிற்கும். அவர், அச்சொல்லைத் தாம் இறக்கும் வரையும் காத்துக் கிடப்பர். அந் நற்பண்பு நின்பாற் பொருந்தக் காணேம். அன்று இவள் இளமை அழகு உன் காம உணர்ச்சிக்கு உரம் ஊட்டிற்று. அதனால், அவ் வழகைப் பலவாறு பாராட்டி மகிழ்ந்தாய். அவ்வழகு கெடாது இருந்தவரை, அவளைப் பிரியாது இருந்து, அவள்நலம் நுகர்ந்தாய்; இன்று, அவள்பால் அப்பண்டை அழகு இல்லை; இளமையும் அவளை விட்டு அகன்று விட்டது. ஆகவே, பிரியேன் என அன்று கூறிய நின் ஆணையையும் அழித்து விட்டுப் பிரிந்து போகின்றனை. அன்ப! பேரொளி வீசும் பொன்னின் நிறத்தை வெல்லும் இவள் மாமை நிறம் மங்கிப் போமாறு, இவளைப் பிரிந்து, ஞாயிறு நின்று காயும் கொடுமைமிக்க பாலைக் காட்டைக் கடந்து போக எண்ணுகின்றனை. நின் நலம் நுகரும் நல்வினை அற்றுப் போனமையால், நின்னைப் பிரியா திருக்கப் பெற்று, அந்நலன் நுகர மாட்டாது வருந்தும் இந் நிலையில், நின்னைப் போக விடாது தடுத்து நிறுத்தவல்ல நன்மைகள் எதுவும் எம்பால் இல்லை. ஆதலின் உன்னைப் பிரிய விடுத்து, அப்பிரிவுத் துயரால் பிறவாப் பெருநிலை

*யுறுதலல்லது, நினக்குக் கூறுவதொன்றும் எம்பால் இல்லை!" எனக் கூறி வருந்தினாள்.*

"உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும், தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறுஆகுதல்
பண்டும் இவ்வுலகத்து இயற்கை; அஃது இன்றும்
புதுவது அன்றே; புலனுடை மாந்திர்!
தாய், உயிர் பெய்த பாவை போல,
நலன்உடையார் மொழிக்கண்தாவார்; தாம்தம்நலம்
தாதுதேர் பறவையின் அருந்து இறல்கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவது எவனோ, நின் பொருள் வேட்கை?
நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய்; மற்றுஎம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ? ஐய!

நெய்இடை நீவி, மணிஒளி விட்டன்ன
ஐவகை பாராட்டினாய்; மற்றுஎம் கூந்தல்
செய்வினை பாராட் டினையோ? ஐய!
குளண்அணி தாமரைப் பாசரும்பு ஏய்க்கும்
இளமுலை பாராட்டினாய்; மற்றுஎம் மார்பின்
தளர்முலை பாராட் டினையோ? ஐய!

என வாங்கு,
அடர்பொன் அவிர்ஏய்க்கும் அவ்வரி வாடச்,
சுடர்காய் சுரம்போகும் நும்மை; யாம் எங்கண்
படர்கூற நின்றதும் உண்டோ, தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை?"

*தலைவன் பிரிவுக் குறிப்புணர்ந்த தோழி, இளமையிற் பாராட்டி முதுமையிற் கைவிடல் பொருந்தாது எனக் கூறி அவன் போக்கினைத் தவிர்த்தது.*

1. வழிமொழிந்து – வணங்கிய சொற்களைக் கூறி; 4. புலன்உடை மாந்திர் – அறிவுடைய மக்களே; 5. தாய் – தாவி (விரும்பி); 6. தாவார் – உறுதி கெடார்; 7. அருந்து – ஆர்ந்து என்பதன் திரிபு; உண்டு என்பது பொருள்; இறல் – இறப்பு, இறந்துபாட்டினை; இறல் கொடுக்குங்கால், நின் பொருள் வேட்கை இடத்து ஏதிலார் கூறுவது எவன் என முடிக்க; ஏதிலார் – அன்பை மறந்து அவன் விட்டுச் செல்வதால் அவனுக்கு அயலாராகிய தோழியும் தலைவியும்; 9. நேர்முகை – வரிசையான அரும்புகள்; நிரைத்த – வரிசையாக அமைந்த; செறிமுறை – செறிந்துநிற்கும் பற்களை; 11. பறிமுறை – வீழ்ந்து போகும் நிலை; 12. நெய் – எண்ணெய்; மணி – நீலமணி; 13. ஐவகை – ஐவகையாய் அமையும் கூந்தல்; 14. செய்வினை – கூந்தலுக்குச் செய்யும் அழகு; 15. பாசரும்பு – முற்றாத இளைய அரும்பு; ஏய்க்கும் – ஒக்கும்; 19. அடர்பொன் – தகட்டுப்பொன்; அவிர் – ஒளி; அவ்வரி – அழகிய அணங்கு; 21. படர் கூற – துன்பத்தைச் சொல்ல; தொடர்கூர– நின் அன்புத் தொடர் மிக வேண்டிய காலத்தில்; 22. துவ்வாமை – நுகராமைக்குக் காரணமாய தீவினை; தொடர் கூரத் துவ்வாமை வந்தக்கடை – எங்கட் படர்கூற நின்றதும் உண்டோ என, மாற்றிப் பொருள் கொள்க.

22

# சூடி எறிந்த மலர்!

ஒரு பொருள் தனக்குரிய இயல்பை இழக்காமல் இருக்கும்வரையே, அது மக்களால் போற்றப்படும்; பேணிப் பெருமை செய்யவும் படும். அது, அவ்வியல்பை இழந்து விடின், அந்நிலையே, அது கழித்து ஒதுக்கப் பெறும்; இழித்துப் பழிக்கப் பெறும். இவ்வுண்மையை உலகினர்க்கு உணர்த்த விரும்பிய புலவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ, தம் புலமை நலத்தால் ஒரு பெண்ணைப் படைத்து, அவளைப் பேரறிவுடைய ளாக்கி, அவள் வாய்ச் சொல் வழியே அதை உணர்த்தியுள்ளார்.

உலகியல் உணர்ந்தவள் ஒரு பெண். ஊரின் இயல்பு இது, அவ்வூர்வாழ் மக்களின் இயல்பு இது, மரம் செடி கொடிகளின் இயல்பு இது என உணர்ந்தவள். உலகியல் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தானே நேரிற் கண்டும், அஃதறிந்தார் கூறுவன கேட்டும் பெற்றுப் பரந்த பேரறி வுடையளாய் விளங்கினாள் அப்பெண். அவள் பேரழகும் உடையளாதல் அறிந்து, அவளை விரும்பி மணந்து

கொண்டான் ஓர் இளைஞன். அவளும் அவன்பால் பேரன்புடையளாயினள். இருவரும் இல்லற வாழ்க்கை மேற்கொண்டு இனிது வாழ்ந்திருந்தனர். அவள்பால் பெறலாகும் பேரின்பங்களைத் தன் உள்ளம் வெறுக்கு மளவு நுகர்ந்தான் அவனும். சின்னாட்கள் சென்றன. ஒரு நாள், பொருள் தேடி வருதல் ஆடவர் கடமை என அறிந்து, அப் பொருளீட்டி வர வெளிநாடு செல்ல விரும்பினான்.

புகழ் பெறுவான் வேண்டிப் பொருள் தேடிச் செல்லத் துணிந்துள்ளான் கணவன் என்பதை அவள் அறிந்து கொண்டாள். அவன் பிரியின், தன்னிலை தாழும். கணவன் உடனிருந்து வாழும் வாழ்வே, மனைவிக்கு உயிர் ஊட்டுவதாகும். அவனோடு வாழாத வாழ்வு, வாழ் வாகாது. அறவோர்க்களித்தல் முதலாம் இல்லறப் பயன், அவன் உடன் இருக்கும்பொழுதே உண்டாம். அவன் இல்லாவிடத்து, அவ்வில்லறம் பயன்தராது. அவள்மட்டும் இருந்து வாழும் இல்லறம், இல்லறம் என அழைக்கவும் உரிமையற்றதாகி விடும் என்ற இல்லற இயல்பு உணர்ந்த அவள், அவன் பிரிவு கேட்டுப் பெரிதும் வருந்தினாள். அத்தகைய நிலை ஒன்று வந்து வாய்த்து, அதை ஊரார் உணரும் வாய்ப்பும் கிடைக்குமாயின், அவ்வூரார், வழுக்கிய தன் நிலை கண்டு எள்ளி நகைப்பரே என எண்ணி வருந்தினாள். பின்னர் வருந்திப் பயனில்லை; அவ் வாட்டத்தைத் தவிர்க்க வழி தேடுவோம் எனத் துணிந்தாள்.

அவ்வாறு, துணிந்தவள், உடனே தன் கணவன்பாற் சென்று, "காதல! நீர் வேட்கையுற்ற மக்கள், அந்நீரை உண்டற்குரிய உண்ணுநீர்க் கலங்களைப் பெற இயலாத

இடத்தே, பனைஓலையைத் தேடிப்பெற்று, அதைக் குடை போல், உள்வளையுடையவாகப் பண்ணி, அதில் நீர் மொண்டு பருகுவர். நீர் பருகுவதன் முன்னர்ப் பலபட முயன்று அக்குடையைப் பண்ணியவர், நீர் உண்டு ஒழிந்த வுடனே, அதன் பயனற்றுப் போனமையால், அதை, ஊரின் ஒதுக்கிடம் பார்த்து எறிந்து விடுவர். அந்நிலையில் அதைப் போற்றார் எவரும். காணுவார் பலரும் காலால் எற்றி எறிவர். அன்ப! அதை நீ கண்டிலையோ? 'கடல்படு பொருள், மலைபடு பொருள் போலும் பல்வகைப் பொருள்களைக் குவித்து வைத்து விற்கும் வாணிப வளம் உடைமையாலும், பேரரசின் தலைநகராய்ப் பெருமை யுறுவதாலும், பலநாட்டு மக்களும் ஒருங்கே கூடி வாழும் ஓர் ஊர், அந்நிலையில் பலரும் பாராட்டும் பெருமை வாய்ந்து விளங்கும். அவ்வூரே, அவ்வாணிப வளம் அற்றுப் போனமையாலோ, பகைவர் படையால் பாழுற்றமை யாலோ, தன்கண் வாழ்வாரை இழந்துவிடின், அந்நிலை யில் அவ்வூரைக் காணும் எவரும், அதன் பாழ்நிலை கண்டு, வாழ்வோர் போகிய பாழூர் எனப் பழிப்பர். அவ்வூரை அணுகச் செல்லவும் அஞ்சுவர். பேரன் புடையாய்! இதை நீ பார்த்ததிலையோ? பல்வேறு நிறமும், பல்வேறு மணமும் கலக்கக் கட்டிய மலர் மாலையைக் காணும் மகளிர் கண்கள் மகிழ்ச்சியால் மலரும். அதன் நிறம் கண்டும், அதன் மணம் நுகர்ந்தும், மகிழ்ச்சியால் துள்ளும் அவர் உள்ளம். அவ்வாறு பாராட்டிப் பெரும் பொருள் கொடுத்து, வாங்கிச் சூட்டிக் கொண்ட அம் மாலையைச், சூட்டிக்கொண்ட மறுநாளே, அதன் வாடிய நிலை கண்டு வெறுத்துக் களைந்து எறிவர். அந்நிலையில், அதைக் கையால் தீண்டவும் நாணிக் குப்பையொடு

குப்பையாகக் குவித்துத் தள்ளுவர். அன்ப! இதை நீ அறிந்ததிலையோ? காதல! கணவனால் கைவிடப்பட்ட மகளிர் நிலையும் அன்னதே. அவ்வாறு, யானும் அவ்விழி நிலையுற்று அழிவதோ நின் கருத்து?" எனக் கூறி வருந்தினாள்.

அவள் அத்துணையும் கூறி அழுது நிற்பதைக் கண்டும், அவன் தன் முடிபின்னை மாற்றிக் கொண்டா னல்லன். அதனால் அவள் சினம் கொண்டாள். பொருளின்மையால், தன்னை நோக்கிப், 'பொருளிலா வறியன்; வருந்தி வருவார்க்கு வழங்கி வாழும் வகை யற்றவன்!' என ஊரார் உரைக்கும் பழிச் சொல்லைப் போக்குதல் வேண்டிப் பொருள் தேடிச் செல்கிறான் இவன். ஆனால், இவனால் அப் பழியைத் துடைத்து வாழ்தல் இயலாது. அதற்கு மாறாகப் பழி துடைக்க மேற் கொள்ளும் முயற்சியால், தன் வாழ்க்கைத் துணையென வந்த தன் மனைவியையே இழந்து வருந்துவன். இதை அறியும் அறிவுதானும் இவனுக்கில்லையே என வருந்தினாள். வருந்துவதால் பயனில்லை, அதை அவனுக்கு விளங்க உரைத்து அறிவூட்டல் வேண்டும் என விரும்பினாள். அவ்வாறு விரும்பியவள், அதை அத்துணை வெளிப்படையாகக் கூறல், அவன் விழுமிய வாழ்க்கைக்கு இழுக்காம் என உணர்ந்தவள், அதை அவ்வாறே கூறாது, 'ஐய! கானவர் தம் புனத்தை அழிக்கும் யானையை ஓட்ட எறியும் கவண்கல், அவ் யானையை ஓட்டாது, அப்புனத் தினிடையே நிற்கும் வேங்கை மரத்தின் மலர்களால் நிறைந்து மாண்புற விளங்கும் கிளைகளைச் சிதைக்கும் கானம், நீ செல்லும் கானம்!" எனக் கானவர் அறியாமை மேல் வைத்துக் கூறி அறிவுறுத்தினாள்.

அது கேட்டும் பொருள் தேடிப் போவதை அவன் கைவிட்டானல்லன். அவன் முடிவறிந்து வருந்தினாள் அவளும். ஆயினும், அவன்பால் கொண்ட காதல், அந் நிலையிலும் குறைந்திலது. அவள் நெஞ்சம் அவனையே நினைந்து வருந்தலாயிற்று. தன் நெஞ்சம் அவன்பால் காட்டும், அப்பற்றினைக் கூறியாவது, அவனைத் தடுத்து நிறுத்த விரும்பினாள். அவ்வாறு விரும்பியவள், மீண்டும் அவனை நோக்கிக், "காதல! கானவன் வேட்டைக்குப் போவுழி, அவன் உடன் செல்லும் நாய், அவ்வேட்டையில் அகப்பட்ட மானைக் கொன்று, தனதாக்கிக் கொண்டு, தானே உண்ண வேண்டும் எனும் வேட்கையால், விரைந்து ஓடிக் கைப்பற்றுமேனும், அம்மான், அந்நாயை விரும்பாது, அக் கானவன்பாலே விரும்பிச் செல்வது போல, யான் எனக்குத் துணையாய், என்பாலே நிற்பாயாக என வலித்து நிறுத்தினும், என் நெஞ்சம் என்பால் நில்லாது உன்னிடமே ஓடி வருகிறது. என்னைப் புறக்கணித்துப் போகும் நீ, அவ்வாறு ஓடிவரும் என் நெஞ்சையாவது பேணிக் காப்பாற்றுவாயாக!" எனக் கூறி, அவனைப் பிரிந்து வாழ மாட்டாத தன் நிலையினை, அவனை மறந்து வாழாத தன் நெஞ்சின் நிலையினை எடுத்துக் காட்டி, வருந்தி வழி மறித்தாள்.

"இலங்குஒளி மருப்பின் கைம்மா உளம்புநர்,
புலங்கடி கவணையின் பூஞ்சினை உதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
தனியே இறப்ப யான்ஒழிந் திருத்தல்,
நகுதக்கன்றுஇவ் அழுங்கல் ஊர்க்கே;
இனியான் உண்ணலும் உண்ணேன்; வாழலும் வாழேன்,

ர்நலம் உண்டு துறக்கப் பட்டோர்,
ரீர் உண்ட குடை; ஓர் அன்னர்;

;நர் புரிந்து நலன்உணப் பட்டோர்,
தநர் போகிய ஊர்; ஓர் அன்னர்;

ணர் புரிந்து குணன்உணப் பட்டோர்,
ணர் இட்ட பூ; ஓர், அன்னர்;

பாங்கு
ும் நின்னகத்து அனையேன்; ஆனாது
லைவெம் கொள்கையொடு நாய்அகப் படுப்ப
லவர்க்கு அமர்ந்த மடமான் போல
ணாங்கு வரூஉம்என் நெஞ்சினை
ணாங்கு வாராது ஓம்பினை கொண்மே."

*பிரிவுணர்ந்து வருந்திய தலைவி, 'என்னையும் உடன் -ண்டு செல்க,' என, அவன் அது மறுக்க, 'நீ பிரியின் ன் இறந்துபடுவன்!' எனக் கூறிச் செலவழுங்குவித்தது.*

1. கைம்மா — கையை உடைய விலங்கு, யானை; உளம்புநர் ்புடித்து ஓட்டுவர்; 2. புலம்கடி — புலத்தினின்றும் ஓட்டும்; 3. ங்குமலை — குறுக்கே நிற்கும் மலை; 4. இறப்ப — பிரிந்துசெல்ல; தக்கன்று — நகைத்தற்கு உரியதாம்; அழுங்கல்ஊர் — இரங்கத் 5 இவ்வூரார்; 6. உண்ணலும் உண்ணேன் — உணவு ாணேன்; வாழலும் வாழேன் — உயிர் வாழேன்; 8. வேணீர் ணடோர் — வேட்கையால் நீர் உண்டோர்; குடை — பனை லயால் குடைபோல் செய்த நீர் உண்ணும் கலம்; குடை அன்னர் ான மாற்றுக; ஏனையவும் இவ்வாறே; ஓர் — ஆராய்ந்து பார்; 10. குநர் — வாழ்வோர்; 14. ஆறாது — அடங்கி இராது; 16. அமர்ந்த பிரும்பிய; 17. நின்னாங்கு — உன்னிடம்; 18. கொண்மே — ள்வாயாக.

# 23

## போயின்று சொல் என் உயிர்!

**கா**தலும் கடமையும் ஒத்த சிறப்புடைய. காதலை விடக் கடமை பெரிதன்று. கடமையை விடக் காதல் பெரிதன்று. காதல்பால் ஒருவர்க்கு எவ்வளவு பற்றுண்டோ, அவ்வளவு பற்று, கடமை மாட்டும் உள வாதல் வேண்டும் எனக் கருதும் உயர்ந்த உள்ளம் வாய்க்கப் பெற்றவன் ஓர் இளைஞன். கணவனே எல்லாம்; அவனே தன் உயிர்; அவனைப் பிரிந்து வாழ்தல் பெண்டிர்க்கு இயலாது; இயலாது என்பது மட்டுமன்று, அது கூடாது; அவனைப் பிரிந்து வாழும் நிலை வந்து வாய்க்குமாயின், அந்நிலையே உயிர் விடுதலே, உண்மைக் காதல் உடைய உயர்குல மகளிரின் உயர்ந்த ஒழுக்கமாம், எனக் கருதும் உள்ளம் உடையாள் ஒரு பெண். இவ்விரு வரும் எவ்வாறோ, ஒருவரை யொருவர் அறிந்து, அன்புடையராகி, மணந்து மனையறம் மேற்கொண்டனர்.

அவர்கள் வாழ்க்கை ஊரார் போற்ற, உயர்ந்தோர் வாழ்த்த, இனிது நடைபெற்று வந்தது. சின்னாள் வரை யிலும், தன் மனைவிபால் கொண்ட காதலால், தன் கடமையை மறந்திருந்த அவன், ஒரு நாள், அக் கடமை யுணர்ச்சிக்கு வயப்பட்டான். அதனால் பொருள் தேடிப் போகும் எண்ணம் கொண்டான். பொருள் தேடிப் போகக் கருதி விட்டானேனும், அவளைப் பிரிந்து போக அவன் உள்ளம் இசையவில்லை. தனியே விடுத்துச் செல்லின், அத்தனிமை பொறாது அவள் தளர்வளே எனக் கவலை கொண்டது அவ்வுள்ளம். அதனால், அவள்பால் முன்னினும் அன்பு மிகுந்தது. அதன் விளைவாய், அவளை முன்னினும் அதிகமாகப் பாராட்டத் தொடங்கினான்.

தன் கணவன்பால் நிகழும் அம் மாறுதலைக் கண்டாள் அப்பெண். அம் மாற்றத்திற்கு யாதோ காரணம் உளது எனக் கூறிற்று அவள் உள் உள்ளம். அக் காரணம் யாது என்பதை ஆராய்வதில் அவள் சிந்தனை சென்றது. ‘கல்வி, பொருள், காவல் முதலாயின கருதி, அவன் பிரிந்து விடுவனோ? அப் பிரிவுணர்ச்சியின் விளைவுதானோ அவன் பாராட்டில் காணும் புதுமை?’ என்றெல்லாம் ஓடிக் கொண்டிருந்தது அவள் சிந்தனை. அந்நிலையில் ஒருநாள் இரவு, இருவரும் உறங்கச் சென்றனர். அவள் தோளிற் கிடந்தவாறே அவன் உறங்கி விட்டான். அவன் போக்கில் காணும் புதுமைக்காம் காரணத்தைக் காணும் ஆர்வமிகுதியால், அவள் உறக்கம் கொண்டிலள். விழித்துக் கொண்டே அவன் அருகிற் கிடந்தாள் அவள். அந்நிலை யில், திடுமென, அவன் வாயினின்றும் சொற்கள் சில வெளியாம் ஒலி கேட்டு, உற்று நோக்கினாள். பொருளின்

இன்றியமையாமை உணர்ந்து, பிரியத்துணிவதும், பிரியின் இவள் வருந்துவளே எனும் கவலையால் அப் போக்குத் தவிர்வதுமாகக் கிடந்த அந் நினைவோடே உறங்கச் சென்றவனாதலின், அவன் வாய் அச் சொற்களையே கூறின. அவன் உள்ள உணர்வை அவன் வாய் உணர்த் திற்று. "நீர் வேட்கையுற்ற யானை, ஆங்குக் காணும் பேய்த் தேரின் பின் ஓடும் பாலை வழியைக் கடந்து சென்று பொருளீட்டி வருமளவும், ஈங்குத் தனித்திருந்து வருந்தாது வாழ்தல், இவளுக்கு இயலுமோ? நாங்கள் மேற்கொண்ட இல்வாழ்க்கை இடையறவு படாது இனிது நடைபெறுங் கொல்?" என்ற சொற்களை அவன் வாய் அவனை அறியா மலே அரற்றி விட்டது. அது கேட்டாள் அப் பெண். எது நிகழும் என அஞ்சினாளோ அது நிகழ்வது உறுதி. அவன் பிரிந்து போதல் தவறாது என்பதறிந்தாள். அவள் துயர் மிகுந்தது. பொழுது புலரும்வரை புலம்பினாள்.

காலையில் அப் பெண்ணைக் கண்ட அவள் தோழி, அவள் கண்ணின் நிலை அழிந்து, 'கலங்கியது ஏன்?' என வினவினாள். அவளை எதிர்நோக்கியிருந்த அப் பெண், அவளைக் கண்டவுடனே, கண்களில் நீர் மல்க நின்று கலங்கிக் கடுந்துயர் உற்றாள். பின்னர் ஒருவாறு தேறித், 'தோழி! உள்ளம் நடுங்கும் ஒரு செய்தியைக் கேட்டு, அச் செய்தி உண்மையோ, பொய்யோ என ஐயுற்று, அது நம்பால் நிகழ்ந்து விடுமோ என அஞ்சியவிடத்து, அவ் வச்சம் உண்மையாகி, அவ்வாறு அஞ்சினாரைத் துயர்க்கு உள்ளாக்கும் என உலகத்தார் உரைப்பர். அவ்வுரை உண்மையாதலைத், தோழி! இன்று யான் உணர்ந்து கொண்டேன்," என்று கூறிச் சின்னாட்களாகத் தன்

கணவன் தன்பால் நடந்துகொள்ளும் புதுமை, அப் புதுமை கண்டு தான் அஞ்சிய அச்சம், அவன் கனவில் அரற்றியது ஆகியவற்றைக் கூறித், "தோழி! நம் கணவர், அவர் கருதியவாறு பொருள் தேடிப் போயின பின்னர், உயிர்கொண்டு வாழ்தல் நம்மால் இயலுமோ? அவர் பிரிந்து போகத் தனித்திருந்து வாழும் ஆற்றலும் நமக்கு உளதோ? அவ் வாற்றலை ஒருவாறு பெற்று உயிர் வாழினும், 'இவள் கணவன், இவளை விட்டுப் பிரிந்து போயது, இவளிடத்து அவனுக்கு அன்பில்லாமையால் போலும்!' என இவ்வூர் வாழ் இழிமக்கள் கூறும் சொல் கேட்டு உயிர் வாழ்தல் எவ்வாறு இயலும்? அது நம்மால் இயலாது. அவர் பிரியின், நம் உயிரும் அவரோடே போய்விடும். இது உறுதி. ஆகவே, தோழி! அவர்பால் சென்று, 'உன் பிரிவுச் செய்தி கேட்ட இந்நிலையே, அவள் உயிர் அவளை விட்டுப் பிரிந்தது!' என அறிவித்து விடுவாயாக!" என்று கூறி வருந்தி வாடினாள்.

"நெஞ்சு நடுக்குறக் கேட்டும், கடுத்தும், தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னும்சொல்
இன்தீம் கிளவியாய்! வாய்மன்ற; நின்கேள்;
புதுவது பன்னாளும் பாராட்ட, யானும்
'இதுஒன்று உடைத்து' என எண்ணி, அதுதேர,
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்,
பாயல்கொண்டு என்தோள் கனவுவார்; 'ஆய்கோல்,
தொடிநிரை முன்கையாள்; கையாறு கொள்ளாள்,
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ?
இடுமருப்பு யானை, இலங்கு தேர்க்கு ஓடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி, நடுநின்று

செய்பொருள் முற்றும் அளவு’ என்றார்; ஆய்இழாய்!
தாமிடை கொண்டது அதுவாயின், தம்மின்றி
யாம்உயிர் வாழும் மதுகை இலேமாயின்,
தொய்யில் துறந்தார் அவர்எனத் தம்வயின்
ஒய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்என் உயிர்.”

*தலைவன் செயல்கண்டு, பிரிவன் என ஐயுற்ற தலைவி, அவன் கனவில் அரற்றினமையால், பிரிவன் எனத் துணிந்து, ஆற்றாளாய்த் தோழிக்கு உரைத்தது.*

1. கடுத்தும் – ஐயுற்றும்; 2. அணங்கு – வருத்தம்; 3. வாய் மன்ற – உறுதியாக உண்மை; நின் கேள் – உன் உறவினனாய தலைவன்; 5. தேர – ஆராய; 6. மணந்த – புணர்ந்த; 7. கனவுவார் – கனவு காண்பார்; கோல் – சித்திர வேலைப்பாடு; 8. கையாறு – ஒன்றை இழந்து துயர்உறல்; கொள்ளாள் – கொள்ளாளாய்; 10. இடுமருப்பு – குத்தும் கொம்பு; தேர் – பேய்த்தேர்; செய்பொருள் முற்றுமளவு ஓம்பவல்லுவள்கொல் என மாற்றுக. 14. மதுகை – ஆற்றல்; 10. ஒய்யார் – இழிமகளிர்; 17. போயின்று என் உயிர், சொல் என மாற்றுக.

## 24

# நீநற்கு அறிந்தனை!

"நல்லினத்தின் ஊங்குந் துணை இல்லை; தீ இனத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்" என்பது திருக்குறள். பழந்தமிழ் மக்கள் பண்பாடறிந்தவர். நல்லதன் நலனை யும், தீயதன் தீமையையும் உள்ளவாறு உணர்ந்தவர். நற்பண்புகளையும், அப்பண்புகளைப் பெற்ற நல்லோரை யும் பாராட்டியவர். தீய பண்புகளையும், அவற்றைப் பெற்ற தீயோரையும் பழித்தவர். முன்னையோர் நெறி நின்றவர். பின்னையோர் பின் செல்லாதவர். அதனால், இவர் நல்லோர்; இவரை இனமாக் கொள். இவர் தீயோர்; இவர் தொடர்பு ஆகாது என அறிவுறுத்தியவர். இந்நெறி யில், ஒரு தமிழர், தீயோர் சிலரை நமக்குத் தெரியக் காட்டி, அவர்களின் கண்ணிற்கும் தெரியாத தூரத்தே நீங்கிச் சென்று நெறி நிற்பீராக எனக் கூறிய முறையினை எடுத்துக் காட்டுகிறாள் ஒரு பெண்.

## 24

# நீநற்கு அறிந்தனை!

"நல்லினத்தின் ஊங்குந் துணை இல்லை; தீ இனத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்" என்பது திருக்குறள். பழந்தமிழ் மக்கள் பண்பாடறிந்தவர். நல்லதன் நலனை யும், தீயதன் தீமையையும் உள்ளவாறு உணர்ந்தவர். நற்பண்புகளையும், அப்பண்புகளைப் பெற்ற நல்லோரை யும் பாராட்டியவர். தீய பண்புகளையும், அவற்றைப் பெற்ற தீயோரையும் பழித்தவர். முன்னையோர் நெறி நின்றவர். பின்னையோர் பின் செல்லாதவர். அதனால், இவர் நல்லோர்; இவரை இனமாக் கொள். இவர் தீயோர்; இவர் தொடர்பு ஆகாது என அறிவுறுத்தியவர். இந்நெறி யில், ஒரு தமிழர், தீயோர் சிலரை நமக்குத் தெரியக் காட்டி, அவர்களின் கண்ணிற்கும் தெரியாத தூரத்தே நீங்கிச் சென்று நெறி நிற்பீராக எனக் கூறிய முறையினை எடுத்துக் காட்டுகிறாள் ஒரு பெண்.

கருநீல மலரை யொத்த கண்கள்; வளை விளங்கும் முன் கை; ஒளி வீசும் நெற்றி முதலியவற்றால் பேரழகுடையளாய பெண்ணொருத்தியை மனைவியாகப் பெற்று மகிழ்ந்து வாழ்ந்திருந்தான் ஓர் இளைஞன். அவள் அழகைக் கண்டு அக மகிழ்ந்து, அவள்பால் பேரன்பு கொண்டு, அவளைப் பிரியாது வாழ்ந்திருந்த அவன் ஒரு நாள், ஒரு வினையை முன்னிட்டு வெளியூர் செல்ல விரும்பினான்.

விரும்பியவன், தன் விருப்பத்தைத் தன் காதலிக்கு உணர்த்தினான். அவன் பிரிவன் என்பதை அறிந்தவுடனே, உடலும் உள்ளமும் தளரப் பெருந்துயருற்றாள் அப்பெண். கருநீல மலரை யொத்த அவள் கண்கள், கலங்கிக் கண்ணீர் சொரியத் தொடங்கின. அவள் முன்கையிற் கிடந்து, தானும் அழகுற்று, அவளுக்கும் அழகு தந்த அவள் கைவளை, கவலையால் தோள் தளரவே, அவள் கையை விட்டுக் கழன்று ஓடின. பேரொளி வீசிய நெற்றி, பசலை படர்ந்து, அவள் உள்ளத்துயரை ஊரார்க்கு உரைக்கத் தொடங்கி விட்டது. அந்நிலையில் அவளைக் கண்டாள் தோழி. அந்நிலைக்குக் காரணம் யாது என்பதை அறிந்தாள். அதனால், அவள் கணவனைக் கண்டு, அவன் போக்கினைத் தடுக்க விரும்பினாள்.

உடனே அவன்பால் சென்று, “ஐய! உலக அறிஞர்கள், 'ஒருவர் தம் அண்மையில் இருக்கும்வரை, அவர்க்குச் சிறப்புப் பல செய்து, அவரைப் பல்லாற்றானும் புகழ்ந்து வாழ்த்திவிட்டு, அவர் அவ்விடம் விட்டுச் சென்றவுடனே, அவரைப் பலரறியப் பழித்துரைக்கும்

பண்பிலார் தொடர்பும், ஒருவர் செல்வம் உடையராய்ச் சிறக்க வாழும் காலத்தில், அவரை இமைப் பொழுதும் பிரியாதிருந்து, அவர் செல்வத்தையும் நுகர்ந்துவிட்டு, அவர் அச் செல்வத்தை இழந்து, வறியராயினர் என்பதை அறிந்த அக்கணமே, அவர்க்கு உதவ வேண்டும் எனும் உணர்வற்று, அவரை விட்டுப் பிரிந்து போய்விடும் பழியுடையார் தொடர்பும், ஒருவர், எவர்க்கும் உரைக்க லாகா ஓர் அரிய மறைப் பொருளை, ஒன்றிய உள்ளம் உடைமையால், தன்பால் கூறின், அவர் அப்பாற் சென்றவுடனே, அம்மறைப் பொருளை, ஆங்கு வருவார் பலர்க்கும் உரைக்கும் உணர்விலார் தொடர்பும் கூடாது, அவரால் நமக்குக் கேடே உண்டாம்!' என்று கூறுவர். இந்த உண்மையை நீ உணராதது ஏனோ? அத்தகைய இழிந்தாரொருவரோடு தொடர்பு கொளினும், அவரால் உண்டாம் கேடு அளவிறந்து பெருகும் என்றால், நீ அத்தகைய இழிந்தார் பலரோடு தொடர்பு கொண் டுள்ளனையே! என்னே நின் பேதைமை! அவரால் உனக்கு எத்துணைப் பெரிய கேடு வந்துறுமோ?

"அன்ப! நீ பிரியாது கூடியிருக்கும் காலத்தில், கருநீல மலரை யொத்துக் கவின் மிகுந்து காட்சியளித்த நின் காதலியின் கண்கள், நீ பிரிவை என்பதை அறிந்தவுடனே, கண்ணீர் கசிந்து, உன் பழியைப் பலர் அறியத் தூற்றத் தொடங்கி விட்டனவே! நீ பிரியாது கூடியிருக்கும் காலத்தில், அவள் கையிற் கிடந்து, அழகு பெற்ற அவள் கைவளைகள், நின் பிரிவால் அவள் தோள் தளர்ந்து விட்டதை அறிந்தவுடனே, அவள் கையினின்றும் கழன்று ஓடி நின் கொடுமையினைக் காட்டிக் கொடுக்கின்றனவே!

நீ பிரியாது கூடியிருக்குங்கால், நின் கூட்டத்தால் மகிழ்ந்து ஒளி வீசிய அவள் நெற்றி, நீ பிரிவை என்பதை அறிந்தவுடனே, பசலை படர்ந்து நின்னைப் பழிதூற்றத் தொடங்கி விட்டதே! இத்தகைய கொடுமை வாய்ந்த அவற்றின் இயல்பு அறியாது, அவற்றோடு பகை கொள்வது உனக்குப் பண்பாகாது. நிற்க.

"அன்ப! இப்பகையின் கொடுமை எத்தகைத்து என்பது இப்போது நினக்குத் தெரியாது. நீ செல்லும் காட்டில், தானும் தன் இனமும் கூடி வாழும் இடத்தைச் சூழக், காட்டுத் தீப் பற்றிப் பரவி எரியக் கண்ட யானைத் தலைவன், அப்பெருந் தீயைத் தன் கால்களால் மிதித்து அழித்துப் புதுவழி பண்ணி, அவ்வழியே, தன் இனக் களிறுகளை வெளியேற்றி அழைத்துச் செல்லும் காட்சியைக் காணும் அவ்வளவில், அப் பகைவரின் கொடுமை நினக்குப் புலனாம். அக்காட்சி, துரியோதனன், சூழ்ச்சியால் தன்னையும் தன் உடன்பிறந்தார்களையும், அரக்கு மாளிகையுள் அடைத்து, அம்மாளிகைக்குத் தீ வைத்து விட்டது கண்ட வீமசேனன், அம்மாளிகையுள் பதுவழி செய்து, அதன் வழியே தன் உடன் பிறந்தாரையும் மீட்டுத் தானும் பிழைத்த நிகழ்ச்சியை நினைப்பூட்டிப் 'பகைவன் ஒருவன் செய்யும் கொடுமையே இவ்வளவு பெரிதாயின், பகைவர் பலர் சேர்ந்து செய்யும் கொடுமை எவ்வளவு பெரிதாம்! அக் கொடுமைகளை யான் எவ்வாறு, தனித்து நின்று தாங்க வல்லேன்?' என வருந்துவை. ஆகவே, அன்ப, இவளைப் பிரிந்து போய அப்பிரிவால், அவள் கண், கைவளை, நுதல் இவற்றின் பகையைப் பெற்று வருந்தாதே. மேலும், இவள், மழை

*மறுத்த மாநிலம் மடிந்து வருந்துவதுபோல், நின் அன்பு அறல் காணின் வருந்துவள் பெரிதும். ஆகவே, போக்கினைத் தவிர்வாயாக!" என வேண்டிக் கொண்டாள்.*

*கணவன் பிரிவால் காதலிக்கு உண்டாம் கலக்கத்தை, அக் கணவனின் பகைவர்களாக்கிக் கூறும் தோழியின் அறிவுடைமை கண்டு அகமகிழ்வோமாக.*

"வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர்என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்குஇல்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு, அகத்தவா,
முளிகழை உயர்மலை முற்றிய முழங்கு அழல்
ஒள்ளுரு அரக்குஇல்லை, வளிமகன் உடைத்துத், தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான்போல,
எழுஉறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில்வேழம்,
அழுவம்சூழ் புகைஅழல் அதர்பட மிதித்துத், தம்
குழுவொடு புணர்ந்துபோம் குன்றுஅழல் வெஞ்சுரம்
இறத்திரால், ஐய! மற்று இவள்நிலைமை கேட்டீமின்;

மணக்குங்கால் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்புஆனாக் கண்ணெனவும்
உளவன்றோ?
சிறப்புச்செய்து, உழையராப், புகழ்போற்றி, மற்றுஅவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்;

ஈங்குநீர் அளிக்குங்கால், இறைசிறந்து, ஒருநாள் நீர்
நீக்குங்கால் நெகிழ்போகும் வளை எனவும் உளவன்றோ?

செல்வத்துள் சேர்ந்து,அவர் வளன்உண்டு, மற்றவர்
ஒல்கிடத்து உலப்பிலா, உணர்விலார் தொடர்புபோல்;

ஒருநாள்நீர் அளிக்குங்கால், ஒளிசிறந்து ஒருநாள் நீர்
பாராட்டாக் கால்பசக்கும் நுதல்எனவும் உளவன்றோ?
பொருந்திய கேண்மையின் மறைஉணர்ந்து அம்மறை,
பிரிந்தக்கால் பிறர்க்குஉரைக்கும் பீடிலார் தொடர்புபோல்;

எனவாங்கு
யாம் நிற்கூறுவது எவன்உண்டு? எம்மினும்
நீநற்கு அறிந்தனை; நெடுந்தகை! வானம்
துளிமாறு பொழுதின்இவ் வுலகம் போலும், நின்
அளிமாறு பொழுதின்இவ் ஆய்இழை கவினே."

*பிரிவுணர்த்தப்பட்ட தோழி, பிரியின், பீடிலார் போல், உன்னை அலர் தூற்றிப் பழிப்பனவும் உள எனக் கூறுமுகத்தான், தலைவியது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.*

1. வயக்குறு மண்டிலம்...முகத்தவன் — திருதராட்டிரன்; 2. முதியவன் — துரியோதனன்; 3. புணர்ப்பு — சூழ்ச்சி; 4. கதழ்எரி — மிக்க நெருப்பு; 6. முளி கழை — உலர்ந்த மூங்கில்; முழங்கு அழல் — பேரொலியோடு எரியும் நெருப்பு; 7. வளிமகன் — வீமசேனன்; 8. உயப்போகும் — உய்யப்போகும்; 9. எழுஉறல் — தண்டாயுதத்தை ஒத்த; 12. இறந்திரால் — இறந்திராயில் — போவதானால்; 13. மணக்குங்கால் — சேர்ந்து வாழும் பொழுது; 14. தணக்குங்கான் — பிரியும் பொழுது; 15. உழையரா — அருகில் இருக்க; 16. புறக்கொண்ட — இல்லாத போது; 20. ஒல்கிடத்து—வறுமை உற்றக்கால்; உலப்பிலா—உதவாத; 28. துளி — மழை; 29. அளி — அன்பு.

25

# வந்தது இளவேனில்!

நம் பைந்தமிழ் நாட்டினைப் பண்டு ஆண்டிருந்த அரசர்களுள் பாண்டியரும் ஒருவர். அவர் வழி வந்த ஓர் இளைஞன், நாட்டு மக்கள் நலம் பல பெற்று நன்கு வாழுமாறு நாடாள வல்ல நல்லறிவும், பகைவர் பலர் ஒன்று கூடி வரினும் அழித்து வெல்லவல்ல ஆற்றலும் பெற்று, உலகெலாம் போற்ற வாழ்ந்திருந்தான். அறிவும் ஆற்றலும் பெற்று, அரசர்க்குரிய பண்புகளைக் குறைவறப் பெற்றிருந்த அவன்பால் அன்பு அருள் முதலாம் மக்கட் பண்புகளும் குடி கொண்டிருந்தன. ஏனைய அரசர்கள் போல், என்றும், நாடு, நாடு காவல் என்றே இருந்து விடுவானல்லன் அவன். மலைவளம் காணல், புதுப்புனல் ஆடல், வேனில் விழா முதலாம் இன்ப நிகழ்ச்சிகளில், மக்களோடு மக்களாய்க் கலந்து, மனைவியையும் உடனழைத்துச் சென்று மகிழும் இயல்புடையன். அவன் தன் நற்பண்புகளுக்கேற்ற நங்கை யொருத்தியே, அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்திருந்தாள். இருவரும்

இணைபிரியா அன்றிற் பறவைகள்போல், ஒன்றி ஒருமனப் பட்டு வாழ்ந்திருந்தனர்.

ஒரு நாள், அப் பாண்டி நாட்டின் அண்டை நாடொன்று அரசிழந்து விட்டது. அந்நாட்டு அரசன், அரசியல் நெறியறியாதவன். தனக்கும், தன் நாட்டிற்கும் தேவையாகும் பொருள்களை, நல்வழியில் ஈட்டும் வகையறியாது, தன் குடிகளை வருத்தி வரி வாங்கி வாழத் தொடங்கினான். அவர்கள்பால் உள்ள பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு சென்றான். தர மறுப்பாரைக் கொன்றான். தமக்குக் காவலனாக வந்தவன், கொள்ளையடிக்கும் கொடியோனாக மாறினமை கண்ட அந்நாட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். அவர் எழுச்சிமுன் நிற்க மாட்டாது, அந்நாட்டைத் துறந்து ஓடினான். நாடு அரசிழந்து விட்டது. நாட்டு மக்கள் காவலற்றவராயினர். அந்நிலையைப் பயன் கொண்டு கொலைகாரரும், கொள்ளைக்காரரும் தம் கொடுமை களைக் கோலோச்ச முனைந்தனர். அவர் கொடுமை தாளாது, மக்கள் அல்லற்பட்டனர்.

மக்கள் அல்லற்படல் கண்ட அந்நாட்டு ஆன்றோர் சிலர், அண்டை நாட்டை அறநெறி பிறழாது ஆண்டு வரும் அவ்விளைஞன்பால் சென்று சரண் புகுந்தனர். தங்கள் நாட்டின் ஆட்சியை மேற்கொண்டு, அல்லல் கடிந்து அமைதி காக்க வேண்டினர். இயல்பாகவே மண்ணாசை மிக்க அரசர் குடியிற் பிறந்த அவ்விளைஞன், அண்டை நாட்டின் மக்கள், தாமே வலுவில் வந்து, அந் நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை அளிக்கின்றனர்

என்றால், அதை ஏற்றுக் கொள்ள மறுப்பனோ? அவன் அவர் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான். துயர் உறுவாரைக் காணின், உடனே ஓடி, உற்ற துணை செய் எனத் துரத்தும் இயல்புடைய அவன் உள்ளம், அண்டை நாட்டு மக்கள் அரசிழந்து அல்லற்படுகின்றனர் என்பதை அறிந்தவுடனே, ஆங்கு விரைந்து செல்லத் துடித்தது. அதனால், தன் மனைவியை உடனே அழைத்து, அவளுக்கு ஆங்குள்ள நிலைமையைக் கூறிப் போக விடை தருமாறு வேண்டினன். அவன் உள்ளம் வேறு, அவள் உள்ளம் வேறு என்ற நிலையற்றவர் அவர்கள். அவன் எண்ணியதையே எண்ணுவாள் அவள்; அவள் எண்ணுவதையே எண்ணு வான் அவன். அதனால், அவள் அவ் வேண்டுகோளை ஏற்று விடையளித்தாள். ஆயினும், அவள் காதல் உள்ளம் கணவனைப் பிரிந்து வாழவேண்டியுளதே எனக் கவன்றது. அவள் உள்ளக் கவலையை உணர்ந்தான் அவன். "என் அன்பே! நீ சிறிதும் வருந்தற்க. சென்று ஆங்கு சேணெடும் நாட்கள் தங்கிவிடேன். விரைந்து வந்து சேர்வன். வையையாற்று வேனில் விழாவிற்கு வந்து விடுவேன்!" என்று கூறி அவள் கவலை போக்கிப் போனான்.

அவன் சென்ற நாள் தொடங்கி, அவனைப்பற்றிய செய்திகள் வந்து கொண்டே இருந்தன. ஆங்குச் சென்றவன், அந்நாட்டில் தன்னை வந்து எதிர்த்தார் அனைவரையும் வென்று துரத்திய வெற்றிச் சிறப்பும், அந் நாட்டின் உட்புகுந்து கேடு விளைத்து வாழ்ந்த கொடியோர்களை அறவே களைந்து துரத்திய பின்னர், அந் நாட்டு மக்களின் செல்வ நிலை செழிக்கச் செய்த வினைச் சிறப்பும், கொடியோர் அந் நாட்டுப் பொருள்

களுக்கும் அந் நாட்டு மக்களுக்கும் விளைத்த கொடுமை களைந்து அமைதி காண ஆற்றிய அருந் தொண்டும், அவ்வப்போது ஆங்கிருந்து வருவார்வழிக் கேட்டுக் கேட்டுக் களிப்புற்றாள் அவன் மனைவி.

அந்நிலையில் பின்பனிக் காலம் கழிய, இளவேனிற் காலம் தொடங்கும் அறிகுறிகள் தோன்றலாயின. அது சென்ற ஆண்டில், அவளும் அவனும் ஒன்று கூடிச் சென்று கண்டு மகிழ்ந்த வேனில் விழா நிகழ்ச்சிகளை நினைப் பூட்டிற்று. நகரில் ஆனேற்றைக் கொடியாகக் கொண்ட சிவன் முதலா மீனைக் கொடியெனக் கொண்ட காமன் ஈறாகவுள்ள கடவுளர்க்கு, வேனில் விழாக் குறித்துச் செய்யும் சிறப்புக்களை நினைந்து சிந்தை நொந்தாள். அந் நினைவோடே, வையையாற்றில், வேனில் விழா நிகழும் திருமருதத் துறையினைக் கண்டாள். ஆங்கு, வெண்கடம்பு, செருத்தி, காஞ்சி, ஞாழம், இலவம் முதலாம் மரங்களும், வேனிற்காலத்தே மலரும் இயல்பினவாய பிற மரங்களும் மலர்ந்து நிற்கும் மாண்பு மிக்க மரக் காட்சியையும், வெண்கடப்ப மலரின் வெண்ணிறம் பலதேவனையும், செருத்தி மலரின் செந்நிறம் ஞாயிற்றையும், காஞ்சி மலரின் கருஞ் செந்நிறம் காமனையும், ஞாழல் மலரின் பகஞ் செந்நிறம் காமன் தம்பி சாமனையும், இலவ மலரின் பொன்னிறம் கலந்த செந்நிறம் சிவனையும் நினைப்பூட்ட மலர்ந்து மணக்கும் மலர்க் காட்சியையும், புதியவாக மலர்ந்த அம் மலர்களில் நிறைந்து வழியும் தேனைக் குடிக்கும் வண்டுகளும், தேனீக்களும் செய்யும் ரீங்கார ஒலியையும், புதுப்புனல் அற்றுப்போகத் தெளிந்து, சிறிது சிறிதாக, ஆங்காங்கே ஒழுகும் ஆற்றின் அறல் நீர்

ஓட்டத்தையும் கண்டு, கண்ட அக் காட்சிகள், சென்ற ஆண்டு வேனில் விழாவை நினைப்பூட்ட, "எதிரே வரவிருக்கும் வேனில் விழாவை உடனிருந்து களிக்க அவர் வந்து சேர வேண்டுமே! அவர் அதற்குள் வந்து சேர்வரோ, சேராரோ!" என எண்ணி ஏங்கினாள்.

"கணவன் சென்ற நாடோ, சேணெடும் தொலைவில் உள்ளது. மேற்கொண்டு சென்ற வினையோ அருமையும், பெருமையும் வாய்ந்தது. அவர் அதை உரிய காலத்தில் முடிப்பதே அரிது. ஒருவாறு, அதை அக்காலத்தில் முடித்து விடுவாராயினும், இடைவழியைக் கடந்து வந்து சேரல், அத்துணை எளிதில் இயலாதே! அவர் வாராதே நின்று விடின், வேனில் விழா, இன்பம் ஊட்டுவதற்கு மாறாகத் துன்பமன்றோ தரும்?" என எண்ணினாள். அவ் வெண்ணம் அவள் உள்ள உறுதியை உருக்குலைத்து விட்டது. கவலை பெரிதாயிற்று. கண்களும் சிறிதே கண்ணீர் சிந்தத் தொடங்கின. அந்நிலையில் ஆங்கு வந்த தன் தோழியை அழைத்துத், "தோழி! பிரிந்து சென்று, புதிய நாட்டில் சிறப்பெய்தி நிற்கும் நம் கணவர், வண்டுகள் தேன் உண்டு மகிழும் இவ்வேனிற் காலத்து இன்பத்தைப் பெற மாட்டாது வருந்தி வாடும் என் தோள்களின் தளர்ச்சியைப் போக்க வருவாரோ? வாராரோ? தன் புகழ் உலகெலாம் பரவுமாறு பகைவர் நாட்டில் பணியாற்றும் நம் கணவர், எங்கும் 'இம்' எனும் ஒலியோடு, தேனைத் தேடிப் பறக்கும் தேனீக்களின் ஒலியே கேட்கும் இவ்வேனில் விழாவின் பயனைப் பெற மாட்டாது வருந்தும் என் வாட்டத்தை ஒழிக்க, தோழி! வருவாரோ? வாராரோ? கொடுங்கோல் ஆட்சியைக்

கொன்று, குடியோம்பி, அவ்வயல் நாட்டில் வாழும் நம் அன்பர். ஆற்றில், தெளிந்த புனல் அருவிகளாக ஓடும் இளவேனிற் பருவத்தின் இன்பத்தைப் பெற மாட்டாது என் பேரழகு பாழாகாவாறு பாதுகாக்க வருவாரோ? வாராரோ? என எண்ணி எண்ணி ஏங்குகிறதே என் உள்ளம்! இதற்கு யான் என் செய்வேன்!" எனக் கூறி வருந்தினாள்.

வருந்தும் அவள் நிலை கண்டு வருந்தினாள் அவளும். ஆயினும், சென்றவன் சொன்ன சொல் தவறாதவன். எதிர்த்தார் எவரையும் எளிதில் அழிக்க வல்ல ஆற்றல் வாய்ந்தவன், என்பதை அவள் அறிவாளாதலின், அவன் கூறிச் சென்றவாறே இவ்வேனிற் பருவத்தில் வந்து சேர்வன் என உறுதியாக நம்பினாள். அதனால், அவள் அப் பெண்ணை நோக்கிப், "பெண்ணே! வேனிற் பருவம் வந்து விட்டது என்பது உண்மை. ஆனால் அது நின் வருத்தத்தை வளர்க்க வந்திலது; யானையின் வருகையை முன்கூட்டி அறிவிக்க வரும் மணி யொலிபோல், விரைவில் வரவிருக்கும் நம் அன்பரின் வருகையை அறிவிக்கும் தூதாகவே வந்துளது. இதை அடுத்து அவர் வருவர். மேலும் வருகின்றவர் பகை வென்ற பெரும் புகழோடு வருவர். ஆக, இவ்வாண்டு வேனில் விழா, சென்ற விழாக்களிலும் சிறப்பளிக்கும் நினக்கு. ஆகவே, வருத்தம் ஒழிக! அவரை வரவேற்க வேண்டுவனவற்றை விரும்பி மேற்கொள்வாயாக!" என்று கூறித் தேற்றினாள்.

"ஒருகுழை யொருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்,
பருதியம் செல்வன்போல் நனைஊழ்த்த செருந்தியும்,

மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறுஆர்க்கும் காஞ்சியும்,
ஏனோன்போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்,
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும்,
ஆங்குஅத்,
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்
போதுஅவிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக;

பல்வரி இனவண்டு புதிதுஉண்ணும் பருவத்துத்
தொல்கவின் தொலைந்தஎன் தடமென்தோள்
உள்ளுவார்?
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க்கு உலையாது காத்துஓம்பி,
வெல்புகழ் உலகத்தே விருந்துநாட்டு உறைபவர்;

திசைதிசை தேன்ஆர்க்கும் திருமருத முன்துறை
வசைதீர்ந்த என்நலம் வாடுவது அருளுவார்?
நசைகொண்டு தம்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந்து உலகுஏத்த ஏதில்நாட்டு உறைபவர்;

அறல்சாஅய் பொழுதோடு எம்அணிநுதல் வேறாகித்,
திறல்சான்ற பெருவனப்பு இழப்பதை அருளுவார்?
ஊறுஅஞ்சி நிழல்சேர்ந்தார்க்கு, உலையாது காத்துஓம்பி
ஆறின்றிப் பொருள்வெஃகி அகன்றநாட்டு உறைபவர்;

எனநீ,
தெருமரல்; வாழி, தோழி! நம் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந்து எழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வரும்என வந்தன்று அவர் வாய்மொழித் தூதே.

*நாடு காவல் குறித்துப் பிரியும் தலைவன், இளவேனிற் பருவத்து மீள்வன் எனக் கூறிப் பிரிந்தானாக, அப்பருவம் வரவும் அவன் வாராமை கண்டு வருந்திய தலைவிக்கு, அவர் வருவர் எனக் கூறித் தோழி ஆற்றுவித்தது.*

1. ஒருகுழையொருவன் — பலதேவன்; இணர் — பூங்கொத்து; மராஅம் — வெண்கடம்பு; 2. பருதியம் செல்வன் — ஞாயிறு; நனை — அரும்பு; ஊழ்த்த — மலர்ந்த; 3. மீனேற்றுக் கொடியோன் — காமன்; மிஞிறு — வண்டுகள்; 4. ஏனோன் — தம்பி; காமன் தம்பி சாமன்; கிளர்பு — விளங்கி; கஞலிய — பூக்கள் நெருங்கிய; 5. ஆனேற்றுக் கொடியோன் — சிவன்; எதிரிய — காலத்தை ‘எதிர்நோக்கி மலர்ந்த; 7. பொருகரை — நீர் அலைக்கும் கரை; இளவேனில், நோதக, மேதக வந்தன்று என மாற்றி, கணவனைப் பிரிந்தார் வருந்தவும், கணவனோடு வாழ்வார் மகிழவும் இளவேனில் வந்தது எனப் பொருள் கொள்க. 9. புதிது — புதிய தேன்; 10. ஒல்குபு — ஆள்வோரால் அலைக்கப் பெற்று; உலையாது — அவர் வருந்தாவாறு; 12. விருந்து நாடு — புதிய நாடு; 13. தேன் — தேனீக்கள்; திருமருத முன்துறை — வையை ஆற்றின் அமைந்த திருமருதத்துறை; 14. வசைதீர்ந்த — குற்றம் அற்ற; 13. நசைகொண்டு — தன்னை விரும்பி; 17. அறல் — சிறுக ஓடும் அருவி, சாஅய் — நீர் ஓடுதல் அற்றுப்போன; 18. திறல் சான்ற — பெருமைமிக்க; 19. ஊறு — கேடு; 20. வெஃகி அகன்ற — வெஃகிய அரசன் அகன்ற; தாழிசைகளில், உள்ளுவார், அருளுவார் என்பனவற்றை ஐய வினாக்களாகக் கொண்டு, உறைபவர் உள்ளுவரோ? உறைபவர் அருளுவாரோ? எனக் கொண்டு கூட்டிப் பொருள் செய்து கொள்ளுக. 22. தெருமரல் — மனம் கவலாதே; பொரு முரண் — போர் செய்யும் மாறுபாடு; எழுந்தவர் செரு மேம்பட்ட — எழுந்த பகைவரோடு மேற்கொண்ட போரில், மேன்மை யுற்ற; வென்றியராய் வரும் என அவர் வாய்மொழித் தூது வந்தன்று.

**26**

# விரைந்தே துணை தந்தார்!

**பா**ண்டி நாட்டு அரியணையில் அரசனோடு அமரும் உரிமையுடையாள் அவள். அரச வாழ்வில் வாழ்பவளேயெனினும் அவள் முகத்தில் மகிழ்ச்சியில்லை. ஒரு பொருளைப் பெற விரும்பி, அது கிடைக்கப் பெறாமையால் ஏமாந்து, அவ்வேமாற்றத்தின் விளைவால் தன் உள்ளம் கொள்ளும் கொடுந்துயரைக் காட்டிக் கொண்டிருந்தது அம்முகம். காரணம், அவள் கணவன், அந் நாடாளும் அரசன், அப்போது அவள் அருகில் இல்லை. அவளைப் பிரிந்திருந்தான். அவன் அவளைப் பிரிந்திருந்தது, அவள்மீது அன்பில்லாமையாலன்று. அவள், அவன் உயிர். அவளின்றி அவனால் வாழ்தல் இயலாது. அவள் மாட்டு அவ்வளவு பேரன்புடையன் அவன். அத்தகையான் அவள் வருந்துமாறு, அவளைத் தனியே விடுத்துப் பிரிந்து போயினன். அவளன்பை மறக்கச் செய்ய வல்லதும் ஒன்று இருந்தது. அதுவே அவன் கடமை யுணர்ச்சி. அரச குலத்தில் வந்த தான், தன்

நாட்டைக் காக்கும் கடமை யுடையன். தந்நாட்டு மக்களுக்குப் பகைவரால் உண்டாம் கேட்டினைப் போக்கி நல்வாழ்வளிக்கும் பணி, மனைவியோடிருந்து மகிழ்ந்துறை வதினும் சிறந்தது என எண்ணும் அவன் செவ்விய உள்ளம், அவளை ஒருவாறு மறக்கச் செய்தது. அதனால், அவளைப் பிரிந்து போய், நாடு காவலில் நாட்டம் உடையவனாய் வெளிநாட்டில் வாழ்ந்திருந்தான். செல்லுங்கால், "காதலி! கருதிச் செல்லும் வினை எவ்வளவு பெரிதாயினும், எதிர்க்கும் பகைவர் எவ்வளவு பெரும் படை யுடையராயினும், அவர் அனைவரையும் அழித்து, அவ்வினையை விரைவில் முடித்துக் கொண்டு வீடு திரும்புவேன். தலைநகரில் வேனில் விழாத் தொடங்குவதற்கு முன்னர் வந்து விடுவேன். வருந்தற்க!" என உறுதி உரைத்துச் சென்றிருந்தான்.

மன்னவர் குலத்து வந்த மகளாதலின், அவளும், அவன் மேற்கொள்ள விரும்பும் வினை வேண்டுவதே என உணர்ந்து, அவனைப் பிரிந்து வாழ்தற்கு ஒருவாறு உளம் தேறி உவந்து விடை தந்தாள். ஆனால், அவன் சென்று விட்ட பின்னர்த் தனிமை அவளை வருத்திற்று. நாள் ஆக ஆக, அவ்வருத்தம் வளர்ந்து கொண்டே வந்தது. அதனால், அவன் சென்றது நன்று எனும் நினைவு அற்றுப் போகத், தான் தனித்துக் கிடந்து வருந்த விடுத்துச் சென்றது, கொடுமையினும் கொடுமையாம் என எண்ணி அவன்மீது சினங்கொண்டு வாழ்ந்திருந்தாள்.

அந் நிலையில், அவன் வருவதாகக் கூறிச் சென்ற இள வேனிற்காலம் வந்துவிட்டது. வையையாற்றின் இரு மருங்கிலும் நிற்கும் மரங்களெல்லாம், புத்தம் புதிய

தளிர்களை விட்டுப் பொலிவு பெற்றுத் தோன்றின. வறுமையால் வாடி வந்தார்க்கும், வந்து தன் புகழ் பாடி நிற்பார்க்கும் வரையாது வழங்கி வாழும் அறநெறி யறிந்தான்பால் பொருந்திய செல்வம் போல் சிறந்து தோன்றின அம்மரங்கள். மரங்களை அடுத்து முளைத்துப் படர்ந்த முல்லைக் கொடிகள், அரும்பீன்று கிடந்தன. கேட்டார் அறிவை மயக்கும் இனிய சொல்லும், அழகிய பிணை மானின் பார்வை போலும் மருண்ட கண்ணும், கனிந்த காதலும் உடைய இளம் பெண்ணின் அழகிய பல் வரிசை போல் வனப்புற்றன அம் முல்லை முகைகள். ஆற்றின் கரைக்கண் பரந்து கிடக்கும் கருமணல்மீது மாந்தளிரும், முல்லை மலரும் வீழ்ந்து மணம் வீசின. தம் காதலரைப் புணர்ந்த மகளிரின் கூந்தலில் மலரும், தாழையும் கிடந்து மணம் நாறும் காட்சியை நினைப் பூட்டிற்று அம் மணற்பரப்பு. இவ்வாறு கரைக்கண் நிற்கும் மரங்கள், தம் காதலனை யொத்த ஆடவரையும், முல்லைக் கொடிகள், தன்னை நிகர் மகளிரையும், மணற்பரப்பு இளங்காதலர்களின் இணைபிரியாப் பெரு வாழ்வையும் நினைப்பூட்டவே, 'இவ்வின்பச் சூழ்நிலையில் இருந்து இன்பம் துய்க்கக் காதலர் இவண் இல்லையே!' என எண்ணி வருந்தினாள். வாடிற்று அவள் நலம். இன்பம் தரும் தென்றல் துன்பம் தந்தது. ஆளும் முறையறியா அமைச்சன் ஏவிய வழிநின்று நாடாளும் நல்லறிவிழந்த அரசன் நாட்டில், அவன் பகைவர் படை, எளிதிற்புகுந்து, இன்னல் விளைத்து இருத்தல் போல், இளமையின் அருமை, அன்பின் பெருமை, செல்வத்தின் சிறுமை ஆகியவற்றின் இயல்பறியாத நெஞ்சம் வழி காட்ட, அதன்

ஆணைக்கு அடங்கி, அன்புடை மனைவியைப் பிரிந்து அவன் போய்விட்டனாக, பிரிந்த காதலர்க்குப் பெருந் துயர் தரும் இளவேனிற் பருவம், நிலைபெற வந்து நீள் துயர்தரத் தொடங்கி விட்டது கண்டு, நிலை குலைந்து வருந்தினாள்.

அப்பெண்ணின் துயர்நிலை கண்ட அவள் தோழி, அவளருகிற் சென்று, "பெண்ணே! பிரிந்து சென்றவர் நம்மை மறந்து விடார். அவர் இயல்பறியாது, பேதாய்! நீ இவ்வாறு வருந்துதல் நின் பெண்மைக்கு அழகன்று. 'நம்மைப் பிரிந்து தனித்து வாழ்வளாயின், பிரிந்தாரை வருத்தும் பருவம் பிறந்து விடுமாயின், காதலரோடு கண்டு களிக்கவல்ல காமவேள் விழாத் தொடங்கி விடுமாயின், அவள் பெரிதும் வருந்துவள் என உன்னையே எண்ணி இருக்கும் அவர் விரைந்திவண் வந்து சேர்வர், வருந்தற்க!" என்று கூறித் தேற்றத் தொடங்கினாள்.

'வருவர்' எனத் தோழி கூறினும், அப்பெண்ணின் உள்ளம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால், அவளை நோக்கித், "தோழி! நாடு நலம் பெற்றுச் சிறக்கு மாறு மலர்களால் நிறைந்து நிற்கும் மரங்களின் மீது இருந்து, குயில்கள் இகழுமாறு நலன் இழந்து பசலை படர்ந்து பாழுற்ற நம்மை மறக்கினும் மறக்குக! நம் பொருட்டு வாராதொழியினும் ஒழிக! அறிவால் சிறந்து, அறிவுடைப் பெருமக்கள் வாழ்வால் சிறந்து, பெரும்புகழ் பெற்று விளங்கும் நம் மதுரைமா நகரில் நடைபெற விருக்கும் வேனில் விழாவில், அழகிய அணி பல அணிந்து ஆடரங்கேறி, ஆடிப்பாடி மகிழ் செய்யும் ஆடல் மகளிரை நினைந்தாவது வாராரோ? தோழி! அவர் பிரிவால் நம்

சாயல் அழிய, அவ்வழிவு கண்டு அகம் மகிழும் மயில்கள், அம்மகிழ்ச்சியால் நின்று ஆரவாரிக்கவும், ஊர்ப் பெண்க ளெல்லாம் ஒன்றுகூடி நின்று பழி தூற்றிப் பரிகசிக்கவும், நம் பண்டைப் பேரழகு அறவே அழிந்துபோமாறு நம்மை மறக்கினும் மறக்குக! நம் பொருட்டு வாராதொழியினும் ஒழிக! பகைவரை வென்று, அப்பகைவர் உயிர் தாங்கி நின்ற மாமரத்தை வெட்டி வீழ்த்தி வென்றி தந்த வேலேந்திய செவ்வேள் வீற்றிருக்கும் பரங்குன்றிற்கு, மகளிரோடும் சென்று, மகிழ்ந்து விளையாடும் வேனில் விழா விளையாடல் குறித்தாவது வாராரோ? தோழி! மை தீட்டப் பெற்றுக் கருநீல மலர் நிகர்க்கும் கவினுடைய வேனும், பண்டு அவர் காட்டிய பொய்யன்பால் மயங்கி மதியிழந்து போன கண்களை யுடையேமாகிய நம்மை மறக்கினும் மறக்குக! நம்பொருட்டு வாராதொழியினும் ஒழிக! வையை ஆற்றில் மணல் பரந்த கரைக்கண், ஆடை அணிகளால் தம்மை ஒப்பனை செய்து கொள்ளும் பரத்தை மகளிரோடு சென்று, அவரோடு ஆடிப்பாடி அகமகிழும் வேனில் விழாவில், தாம் நுகரும் அப் பேரின்பம் கருதியாவது வாராரோ?" என்றெல்லாம் கூறி, "இளவேனிற் பருவம் வந்து வருத்துகிறது. அவ்வருத்தத் தைப் போக்க அவர் வந்திலர்; அவர் வரினும், தாம் விரும்பும் பரத்தை மகளிரோடு சென்று விழாக் கண்டு மகிழ்வரே அல்லால், அவர் வரவால் எனக்கு இன்பம் இல்லை. எனக்குப் பயனில்லை யாயினும், அவருக்குப் பயன்படல் கருதியாவது அவர் வாராரோ?" என ஏங்கி நின்றாள் அப்பெண்.

அப் பெண்ணின் துயர் அறிந்தும், அத் துயரைப் போக்கும் வகை அறியாது, வாய் திறவாதே வருந்தி நின்ற

*தோழி, பகைவரை வென்று வீறுகொள்ளும் தன் தேரை விரைந்து செலுத்தி, அவள் காதலன் ஊர் திரும்பியதையும், ஊர் திரும்பியவன், சென்ற ஆண்டுகள் போல், பரத்தையர் சேரி தேடிப் போகாது, தங்கள் மனைக்கண்ணே வந்து நிறுத்தியதையும் கண்டு மகிழ்ந்து, அவ்வருகையை, அவளுக்கும் காட்டி, அவள் துயர் துடைத்து அக மகிழ்ந்தாள்.*

"ஈதலிற் குறைகாட்டாது அறன்அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்தப்,
பேதுறு மடமொழிப் பிணைஎழில் மான்நோக்கின்,
மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகை ஊழ்ப்பக்,
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல், கழல்குபு
தாதொடும் தளிரொடும் தண்ணறல் தகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன்நாட்டு
ஏதிலான் படைபோல இறுத்தந்தது இளவேனில்;

நிலம்பூத்த மரமிசை நிமிர்புஆலும் குயில்எள்ள
நலம்பூத்த நிறம்சாய நம்மையோ மறந்தைக்க;
கலம்பூத்த அணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்ஆனாக் கூடலும் உள்ளார்கொல்?

கல்மிசை மயில்ஆலக் கறங்கிஊர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க;
ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்
கொல்?

மையெழில் மலர்உண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினாற் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க;

தைஇய மகளிர்தம் ஆயமோ டமர்ந்தாடும்
வையவார் உயர்எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்?

எனவாங்கு,
நோய்மலி நெஞ்சமொடு இனையல்; தோழி!
'நாமில்லாப் புலம்பாயின், நடுக்கம்செய பொழுதாயின்,
காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிது' என
ஏம்உறு கடுந்திண்தேர் கடவி
நாம்அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே."

*இளவேனிற் பருவம் வரவும், தலைவன் வாராமை கண்டு வருந்திய தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்ந்து கூறி மகிழ்ந்தது இது.*

2. தீங்கரை — இனிய நீரை உடைய ஆற்றங்கரை; நந்த — தழைக்க; 3. பேதுறு — கேட்டார் அறிவை மயக்கும்; பிணைஎழில் — மான்பிணை போலும் அழகுடைய; 4. ஊழ்ப்ப — அலர; 5. கதுப்பு — கூந்தல்; குழல்குபு — கழன்று உதிர்ந்த; 7. பேதையோன் — அறிவிலா அமைச்சன்; 8. ஏதிலான் — பகைவன்; இறுத்தந்தது — வந்து தங்கிற்று; 9. நிமிர்பு — செருக்குற்று; ஆலும் — மகிழ்ந்து ஆரவாரிக்கும்; 10. மறந்தைக்க — மறக்குக; 11. கலம்பூத்த — அணிகளால் அழகு பெற்ற ; 12. புலம் பூத்து — அறிவால் மிக்கு; புகழ்பு ஆனா —புகழ் குறையாத; 13. கல்மிசை — மலைமேல்; கறங்கி — பேரொலி செய்து; 15. ஒன்னாதார் — பகைவர்; கடந்து அடூஉம் — வென்று அழிக்கும்; உரவு நீர்மா — கடலிடையே நின்ற மாமரம்; 18. புரிவுண்ட — அன்பு கொண்ட; 19. தைஇய — ஆடை அணிகளால் அழகு செய்து கொண்ட; 22. நோய்மலி — நோய்மிக்க; இனையல் — வருந்தற்க; நாமில்லாப் புலம்பாயின் — நாம் இன்றித் தனித்து வருந்துவளாயின்; 25. ஏம் உறு — பகைவர்க்கு அச்சம் தரும்; 26. துணை தந்தார் — துணையாக வந்து சேர்ந்தார்.

# 27

## வேண்டா தூது!

மக்கள் உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளத்துள் ஆழ்த்தும் வேனிற்காலம் வந்துவிட்டது. வையையாற்றின் கரைக்கண் மரங்கள் தளிர்விட்டு மலரத் தொடங்கி விட்டன. மதுரை மகளிர் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ முதலாம் மலர்களைத் தேடிச் சென்று அலையா வாறு, அவர் விரும்பும் மலர்களைக் கண்ணி போலவும், கைச் செண்டு போலவும் கட்டித் தருவனபோல் கொத்துக் கொத்தாகப் பூத்துத் தந்தன, தாழ்ந்த அம்மரக்கிளைகள். வையை யாற்றின் கரைவளர் மரங்களின் வனப்பு இது என்றால், இவ் வையை யாற்றின் இடைநிலைக் காட்சி, அதனினும் இன்பம் மிக்கது. ஆற்றின் இடையே, திருமகள் மார்பிற் கிடந்து மாண்பு தரும் முத்தாரம் போல், பளிங்கெனத் தெளிந்த நீர் கொண்டு ஓடிற்று அருவி. அவ்வருவி ஊடறுத்து ஓடுவதால் வளையம் வளையமாக ஒதுங்கிக் கிடந்த கருமணலுக்கு இடையிடையே, செம்மண் குழம்பு தோய்ந்து தோன்றும் காட்சி மகளிரின் கருங்

கூந்தலிடையே, செந்நிறக் கற்கள் இழைத்துச் செய்த தலைக்கோலம் வைத்து அணிசெய்தாற் போல் தோன்றிப் பேரழகு தந்தது.

வையை யாற்று மணலின் வனப்பு, அவ் யாற்றின் இடை ஓடும் அருவியின் அழகு, ஆற்றின் இருகரையிலும் நிற்கும் மரங்களின் மாண்பு ஆகிய இக் காட்சிகளைக் கண்டு, மதுரை வாழ் மக்கள் மகிழ்ந்திருக்குங்கால், அக் காட்சிகள், தான் அதுகாறும் அடக்கி வைத்திருந்த தன் துயரைக் கட்டவிழ்த்துவிடக் கலங்கி நின்றாள், ஒரு பெண். அப்பெண்ணின் கணவன் அப்போது அவ்வூரில் இல்லை. கடமை மேற்கொண்டு, காடுமலைகளைக் கடந்து, சேணாடு சென்றிருந்தான். அதனால், மக்களெல்லாம் மகிழ்ந்திருக்கும் அக்காலத்தில், தான் மட்டும் வருந்தி வாட விடுத்துச் சென்ற அவன் கொடுமையினை எண்ணி எண்ணிக் கலங்கினாள், அப்பெண். அவன் அன்பற்றவன்; அருள் உள்ளம் இல்லாதவன்; ஆற்றவும் கொடியன் எனக் குற்றம் கூறிற்று அவள் உள்ளம். இவ்வாறு தன் கணவன் கொடுமை கூறி வருந்தும் அப் பெண்ணைக் கண்ட அவள் தோழி, “நின் கணவர் நீ கருதுவது போல் கொடியவரல்லர். ஆகவே, இப்பிரிவு அன்பில்லாமையால் சேர்ந்ததன்று. நின்பால் நிறைந்த அருள் உடையவர் அவர். ஆகவே, அன்பற்றவர் எனக் கொண்டு அவரைக் குறை கூறாதே!” என்று கூறினாள்.

“கணவர் அன்புடையவர். அவரைக் குறை கூறுதல் அறமாகாது!” எனத் தோழி கூறக் கேட்ட அப் பெண், “தோழி! புணர்ந்து இருந்தார்க்குப் பேரின்பமும், பிரிந்து இருப்பார்க்குத் தீராத் துயரமும் தரும் இளவேனிற்பருவம்

வந்துவிட்டது. மாமரம் தளிர் ஈன்றது. ஏனைய மரங்கள் மலர்ந்தன. மரங்களேயல்லால், செடி கொடிகளும் மலர் ஈன்று மாண்புற்றன. மரக்கிளைகளிலும், மலர்ச்சோலை களிலும் தும்பியும் வண்டும் தேனைத் தேடி ஆரவாரிக்கத் தொடங்கி விட்டன. மரங்களில் அமர்ந்து குயில்கள் கூவுகின்றன. ஆற்றில் அறல் ஒழுகலாயிற்று. இக்காட்சி களைக் காணும் என் கண்கள், பூப்போலும் தம் பேரழகு இழந்து, புலப்பத் தொடங்கி விட்டன. உறக்கம், அக் கண்களின் உறவை அறுத்துக் கொண்டது. என் நெற்றி ஒளி இழந்தது. பசலை படர்ந்து பாழ் செய்து விட்டது அந்நெற்றியை. தளர்ந்த என் நிலை கண்ட ஊர்ப் பெண்கள், இல்லாதனவும் போல்லாதனவும் உரைத்துப் பழிதூற்றலாயினர். ஒரு பற்றுக்கோடாக யான் பெற்றிருந்த என் நெஞ்சம், என்னைக் கைவிட்டு, அவர் பின் சென்று விட்டது. இவ்வளவையும் கண்டு கலங்காது, இறவாது உயிர் தாங்கி நிற்கும் ஆற்றலை இழந்து விட்டேனே நான்! என் நிலை காணும் நீயும், கொடுமை செய்யும் இப்பிரிவுத் துயரை இவள் பொறுத்துக் கொள்வாள் அல்லளே எனக் கூறி வருந்துகின்றனை. என் நிலை இதுவாகவும், பிரியின் என் நிலை இதுவாம் என்பதை அறிந்தும் பிரிந்து போயினர். போனவர், என்னை மறவாது விரைந்து வருதலையாவது செய்தனரோ எனில், அதுவும் இல்லை. என்னை அறவே மறந்து விட்டார் அவர். என்னையோ, என் துயர் நிலையையோ, நினைத்துப் பார்ப்பதும் செய்திலர். அத்தகைய கொடுமைக் குணம் நிறைந்தது அவர் உள்ளம். உண்மை இதுவாகவும், 'அவருக்கு நின் பால் அன்புண்டு; நிறைந்த அருள் உண்டு!' என்றெல்லாம்

கூறுகின்றனையே, என்னே நின் பேதைமை!" என்று கூறி வருந்தினாள்.

இவ்வாறு கூறியவள், சிறிது நாழிகை வாய்திறவாது இருந்து, மீண்டும் தொடங்கித், "தோழி ஒன்று கூறுகின்றேன். அவர் என்பால் அருளுடையராயின், இவ்வாறு என்னை வருந்த விடுத்து வாராது இரார். என் வருத்த நிலையினை அறியாமையினாலேயே வந்திலர் என்பையேல், வேண்டுமாயின், என் நிலையை அறிவிக்கும் தூதுவர் ஒருவரை அவர்பால் அனுப்பு. தூது கண்டாவது விரைந்து மீள்கின்றனரா எனக் காண்போம்!" எனக் கூறினாள். அப் பெண் அவ்வாறு கூறக் கேட்ட தோழி, அவளைப் பார்த்துப், "பெண்ணே! அவர் பிரிந்தமையால் பெற்ற துயர்க் கொடுமையால், அறிவிழந்து என்ன காரியம் செய்யத் தூண்டுகின்றனை! அவர் நின்பால் அன்பிலா தார் போவும், நின்னை ஈங்கு வருந்த விடுத்து, அவர் மட்டும் ஆங்கு மகிழ்ந்திருப்பார் போலவும் கருது கின்றனையே! என்னே நின் பேதைமை! பிரிவால் வருந்துவாள் நீ மட்டுமன்று. அவரும் நின் பிரிவால் வருந்தி வாடுவர். நின்னைப் பிரிந்து வாழ்தல் அவராலும் இயலாது. ஆகவே, அவர் விரைந்து வருவர். தூது அனுப்ப வேண்டுவதின்றியே வந்திவண் நிற்பர். வருந்தற்க!" என்று கூறித் தேற்றினாள்.

"பாடல்சால் சிறப்பின் சினையவும், சுனையவும்
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாம் கொடுப்பபோல்
தோடுஅவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுஉறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்,
செய்யவள் அணி அகலத்து ஆரமொடு அணிகொள்பு

தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல் துவர்மணல்
வையைவார் அவிர்அறல் இடைபோழும் பொழுதினான்;

விரிந்துஆனா மலராயின், விளித்துஆலும் குயிலாயின்,
பிரிந்துஉள்ளார் அவராயின், பேதுறூஉம் பொழுதாயின்,
அரும்படர் அவலநோய் ஆற்றுவள் என்னாது
வருந்தநோய் மிகுமாயின், வணங்குஇறை! அளிஎன்னோ!

புதலவை மலராயின், பொங்கர்இன வண்டாயின்,
அயலதை அலராயின், அகன்றுஉள்ளார் அவராயின்,
மதலையில் நெஞ்சொடு மதன்இலள் என்னாது,
நுதல்ஊரும் பசப்பாயின் நுணங்குஇறை! அளிஎன்னோ!

தோயின அறலாயின், சுரும்பார்க்கும் சினையாயின்,
மாவின தளிராயின், மறந்துஉள்ளார் அவராயின்,
பூஎழில் இழந்தகண் புலம்புகொண்டு அமையாது
பாயல்நோய் மிகுமாயின், பைந்தொடி! அளிஎன்னோ!

எனவாங்கு,
ஆயிழாய்! ஆங்கனம் உரையாதி; சேயார்க்கு
நாம்தூது மொழிந்தனம் விடல்வேண்டா; நம்மினும்
தாம்பிரிந்து உறைதல் ஆற்றலர்;
பரிந்து எவன் செய்தி? வருகுவர் விரைந்தே."

*இளவேனிற் பருவம் வரக் கண்டும், தலைவன் வாரானாக, வருந்திய தலைவி, தூதுவிடக் கருதத் தோழி, 'நம்மினும் வருந்துயர் அவர், விரைந்து வருவர்!' எனக் கூறி ஆற்றுவித்தது இது.*

1. சினைய, கனைய – கோட்டுப்பூவும், நீர்ப்பூவும்; 2. நாடினர் – தேடிச் சென்று; கொயல் – கொய்தல்; நயந்து – விரும்பி; 3. தோடு அவிழ் – இதழ் விரிந்த; கண்ணி – தலைமாலை; தையுபு – கட்டி;

புனைவார் – அணியும் மகளிர்; தோடுஉற – திரட்சி உற; மிகவும்; 5. செய்யவள் – திருமகள்; அகலம் – மார்பு; 6. தொய்யகம் – தலைக்கோலம் எனும் அணி; கதுப்பு – கூந்தல்; துவர்மணல் – சிவந்த மணல்; 7. மலர்விரிந்து ஆனாவாயின் என மாற்றுக; ஆனா – அமையாது மேலும் மேலும் மலர; ஆலும் –கூவும்; பேதுறூஉம் – மயக்கம் செய்யும்; 10. படர் – துன்பம்; அவலநோய் – துயர்மிகும் காம நோய்; 11. அளி – அருள்; என்றோ – என்ன பயனைத் தரும்? அல்லது எத்தன்மையதோ? 12. புதல் – சிறிய சிறிய புதர்கள்; பொங்கர் – பூஞ்சோலை; 13. அயல் – அயலார்; 14. மதலை – பற்றுக் கோடு; மதன் – ஆற்றல்; 18. புலம்பு – பிரிவுத்துயர்; 24. பரிந்து – வருந்தி.

# 28

# வந்தனர் திரும்பி!

பசுமையும் பல வண்ணமும் உடையவாய்ப் பேரழகு மிக்க மரம், செடி, கொடிகளால் நிறைந்து, பார்க்கப் பேரின்பம் தந்த மாநிலம், பனிப் பருவகாலம் வரவே, செந்நெல் மணியும், சிவந்த கனியும் போலும் வகை வகையான உணவுப் பொருள்களை வையகத்தார்க்கு வழங்கி, அவ்வாறு வழங்கியதன் செயலால், பசுமையும், பன்னிறமும் இழந்து பொன்னிறம் பெற்றுப் பசந்து காட்டிவிட்டு, மீண்டும் இளவேனிற் காலம் வந்தமை கண்டு இழந்த தன் பண்டைப் பேரழகை மீண்டும் பெற்றது. வளையலிடும் பருவத்தராய இளைய மகளிர் ஒன்றுகூடிச் சென்று, மணல் வீடு கட்டிப் பாவை மணம் செய்து ஆடும் ஆடிடம்போல் தோன்றின. கரைவளர் மாமரத்தின் மலர்களும் வடுக்களும் உதிர்ந்து கிடக்கும் ஆற்றின் கரைக்கண் அமைந்த மணற்பரப்பு; ஐவகை வனப்பும் தோன்ற வாரி முடித்த அப்பெண்களின் தலைமயிரை நினைப்பூட்டுவது போல், ஆற்றின் இடை

ஓடும் அருவி, அவ்வாற்றின் கொய்மணலை ஊடறுத்து ஒதுக்கி ஒதுக்கிச் செல்லத் தொடங்கிற்று. சிறிதே முற்றிய மாவின் தளிர்மீது, அம் மாவின் மகரந்தம் படிந்து, மாமேனியாள் மேனியிற் படர்ந்திருக்கும் தேமல் போலும் தோற்றம் தரலாயிற்று. இவ்வெழில் மிக்க இளவேனிற் பருவத்தின் வருகையினைக் கண்டாள் ஒரு பெண். கணவன் பொருள் தேடிப் போயிருக்கவே, 'எம் குடி விளக்கும் மகவீன்று, யான் மாண்புறுதற்கும், மகவை அணைத்துக் கிடக்கும் மாண்புமிக்க அக்காட்சியைக் கண்டு, அவன் இன்புறுதற்கும் வாய்ப்பளித்து, உடனிருந்து வாழ எண்ணாது, பொருள் கருதிப் பிரிந்து போயினனே!' என்ற எண்ணமுடையளாய் ஏங்கியிருந்தாள் அப்பெண். அதனால், அவள் கண்ட அவ்வியற்கைக் காட்சியிடத்து, கருவுற்ற காலத்தில் உண்டாகும் வயா எனும் வேட்கை நோயால், தாயும், தந்தையும், தமரும் போற்றிய தன் இளமைக் காலத்து எழிலை அவர் கண்டு வருந்துமாறு அறவே இழந்து, இழக்கலாம் அளவிற்கு மேலும் இழந்து, தன் குடி விளக்கும் வீறுசால் புதல்வனைப் பெற்று, அப்புதல்வனோடு கிடந்த ஒரு பெண், பின்னர், அப் புனிறு போகப் பசப்பு நீங்கிப் புது நலம் பெற்றுப் பொலிவுற்றுத் தோன்றும் காட்சியைக் கண்டு, அந்நல்வாய்ப்புத் தனக்கு வாய்த்திலதே என வருந்தினாள்.

அவள் நெஞ்சு அவளை விட்டு அவன் பின் சென்று அலைந்தது. அந்நினைவு மிகுதியால், அவள் மேனி தளர்ந்தது; தோள் மெலிந்தது; தொடி கழன்றது. இவ்வாறு வருந்துவாளைக் கண்டாள், அவள் தோழி. பொறையும் நிறையும் பெண்களின் பேரணிகலன்களாம். துயர்

பொறுத்தலும், அத்துயரைப் பிறர் அறியாவாறு காத்துத் தம் மனத்தகத்தே நிறுத்தலும், பெண்டிர்பால் நீங்காது நிற்றல் வேண்டும் என அறிந்தவள் அத் தோழி. அதனால், தன் கணவன் பிரிவு கண்டு வருந்தி, அவ் வருத்தம் பிறர்க்குப் புலனாகுமாறு வாடி நிற்கும் அப் பெண்ணை நோக்கிப், "பெண்ணே, நாள் முழுதும் அவனையே நினைந்து நினைந்து, நின் நஞ்சை அவன்பின் அலைய விடுதல் அழகாகாது. அதை அடக்கி ஆளுதலே அறிவுடைமை. நின் மனத் துயரைப் பிறர் அறியாவாறு மறைத்துக் காத்தல் வேண்டும். அதுவே, மகளிர்க்கு மாண்பு!" என அறிவுரை கூறித் தேற்றத் தொடங்கினாள்.

அவள் அறிவுரை கேட்ட அப் பெண், "தோழி! நம்மைப் பிரிந்து சேணெடுந் தூரம் சென்று வாழும் நம் காதலர்ப் பின் சென்ற என் நெஞ்சினை, நீ கூறும் அளவிற்கு மேலும் அடக்கி ஆளுதல் என்னால் இயலும். ஆனால், வாய் விரிந்தும், பனித்துளி ஏற்றும் மணம் நாறும் மலர்களிற் படிந்து பிரிந்தார்க்குப் பெருந்துயர் செய்யும் இவ்விளவேனிற் பருவத்தே, ஈங்கு வந்து வீசும் வாடைக் காற்று, என் வருத்தத்தை மிகுத்து, அடக்கி ஆளும் என் ஆற்றலை அழித்துச் செல்கின்றதே, அதற்கு யான் என் செய்வேன்? தோழி! இருந்து இன்பம் துய்க்க வேண்டிய இளவேனிற் பருவம் இது என எண்ணாது, பிரிந்து சென்று மறந்து வாழும் நம் காதலர்பால் கொண்ட அன்பின் மிகுதியால் வாடும் என் வாட்டத்தைப் பிறர் அறியாவாறு மறைத்து வாழ்தல் என்னால் இயலும். ஆனால், மலை வாயிலில் வீழ்ந்து மறையும் மாலை ஞாயிற்றின் ஒளி பெற்று மலர்ந்த மலரகத்துத் தேனை உண்ணத் தேடித் திரியும் வண்டுகள் எழுப்பும் யாழ் ஓசை போலும் இனிய

ஓசை, பிரிந்தாரைத் துயர் செய்யும் மாலைக் காலத்தே வந்து, துயர்மறைத்து வாழும் என் உள்ளத்துணிவின் உரன் அழித்துச் செல்கின்றதே, அதற்கு யான் என் செய்வேன்? தோழி! துயர்மிகுந்து, தொடிகழலுமாறு, தோள்நெகிழ்ந்து போகத் துயர் செய்து போன நம் காதலருயிரோடு ஒன்றி விட்ட என் உயிரை, அவ்வாறு ஓடி ஒன்றிவிடாது கட்டிப் பிடித்துக் காத்தல் என்னால் இயலும். ஆனால், நெடுந் தொலைவில் உலாவும் நிலா, திறந்து உண்ணுவான் வேண்டி, மூடிக் கிடந்த இதழ்கள் வாய்விட்டு மலர்ந்த மலர்களின் மணம், தனித்துக் கிடப்பாரைத் துயர்க்கு உள்ளாக்கும் இரவுக் காலத்தே வந்து, வருத்தி, உயிரைக் கட்டிப் பிடிக்கும் என் ஆற்றலை அழித்து அலைக்கின்றதே, இதற்கு யான் என் செய்வேன்?" எனக் கூறி, வாடைக் காற்றும், வண்டோசையும் மலர் மணமும் இளவேனிற் காலத்து இன்பத்தினை நினைப்பூட்டுவதால், அவனை நினைந்து வருந்தும் தன் வருத்தம், அடக்கி ஆளும் தன் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு விட்டது என அறிவித்து வருந்தினாள்.

அது கேட்ட தோழி, அப்பெண்ணின் வருத்தத்தைப் போக்க வல்லது அவன் வருகையேயல்லது, தன் அறவுரை யன்று என்பது உணர்ந்தாள். அதனால், சென்றவன் விரைந்திவண் வாரானோ என வருந்தி, அவன் வரும் வழி நோக்கி நின்றாள். அந்நிலையில், கைவளை கழன்று கலங்குமாறு காதலியைக் கைவிட்டுச் சென்ற அவன், அவள் பல்லழகும், அப் பற்களிடையே எழும் தேன் போலும் சொல்லழகும் நினைந்து, அந்நினைவு மிகுதியால், சோம்பியிருப்பதோ, தளர்ந்து பின்னிற்பதோ செய்யாது, விரைந்து முன்னேறிச் சென்று, எடுத்த வினையை

விரைந்து முடித்து மீண்டு வந்தான். வருவானைத் தெருக் கோடியில் வரும்போதே கண்டு கொண்ட தோழி, உள்ளே ஓடிப், "பெண்ணே! நின் துயர் துடைப்பான் வேண்டி அவரும் வந்துவிட்டார். விரைந்திவண் வந்து வரவேற்பாயாக!" எனக் கூறி அழைத்துச் சென்று காட்டி அகம் மகிழ்ந்தாள்.

"தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்,
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கைபோல்,
பல்பயம் உதவிய பசுமைதீர் அகன்ஞாலம்
புல்லிய புனிறுஒரீஇப், புதுநலம் ஏர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள,
இளையவர் ஐம்பால்போல் எக்கர்போழ்ந்து அறல்வார,
மாஈன்ற தளிர்மிசை மாயவள் திதலைபோல்
ஆயிதழ்ப் பன்மலர் ஐயகொங்கு உறைத்தர,
மேதக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்:

சேயார்கண் சென்றஎன் நெஞ்சினைச், சின்மொழி!
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன்; நிறைநீவி,
வாய்விரிபு, பனிஏற்ற, விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந்து அலைத்தரூஉம்;

போழ்துஉள்ளார் துறந்தார்கண் புரிவாடும் கொள்கையைச்
சூழ்பு ஆங்கே, சுடரிழாய்! கரப்பென்மன்; கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணும் இருந்தும்பி
யாழ்கொண்ட இமிழிசை இயன்மாலை அலைத்தரூஉம்;

தொடிநிலை நெகிழ்ந்தார்கண் தோயும்என் ஆருயிர்
வடுநீங்கு கிளவியாய்! வலிப்பென்மன்; வலிப்பவும்

நெடுநிலாத் திறந்துண்ண நிரைஇதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றம் கங்குல்வந்து அலைத்தரூஉம்;

எனவாங்கு,
வருந்தினை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்நோக்காது ஏகி, நம்
அருந்துயர் களைஞர் வந்தனர்,
திருந்துஎயிறு இலங்கும்நின் தேமொழி படர்ந்தே."

*இளவேனிற் பருவங் கண்டு ஆற்றாத தலைவியைத், தோழி ஆற்றுமாறு கூற, அவள் ஆற்றமாட்டாமை அறிவிக்கத், தோழி அவன் வரவுணர்ந்து உவந்து கூறியது.*

1. தொல்லெழில் — பண்டைப் பேரழகு; வயவு — கருவுற்ற மகளிர்க்கு உண்டாகும் வேட்கை நோய்; நலிதல் — வருத்துதல்; 2. அல்லாந்தார் — அவள் நோய் கண்டு வருந்திய சுற்றத்தார்; 4. புல்லிய — பற்றிய; புனிறு — மகளிர்க்குக் கருவுயிர்த்த காலத்து உண்டாம் தூய்மைக் குறைபாடு; ஓரீஇ — தீர்ந்து; ஏர்தர — அழகுண்டாக; 5. வளையவர் — சில்வளையிடும் இளைய மகளிர்; வண்டல் — மணல் வீடு கட்டி ஆடும் ஆடிடம்; வடு — மாவடு; 6. எக்கர் — ஆற்றுநீர் கொண்டுவிட்ட மணல்மேடு; போழ்ந்து — பிளந்து பாய்ந்து; 8. ஐயகொங்கு — நுண்ணிய மகரந்தப் பொடிகள்; உறைத்தர — உதிர; 12. விரிபு — விரிந்து; 13. நோய் சேர்ந்த வைகல் — துன்பம் தரும் இளவேனில்; 14. போழ்து — இளவேனிற் காலம்; உள்ளார் — நினையார்; புரிவாடும் — மனம் விரும்புவால் வாடும்; 15. சூழ்பு — வாடுதல் நன்றன்று என்பதை எண்ணி; 16. வீழ்கதிர் — மறையும் ஞாயிற்றின் ஒளி; விடுத்த — மலர்த்திய; 17. இயன்மாலை — ஒலிக்கும் மாலைக்காலம்; 18. தோயும் — படியும்; வலிப்பென் — போகாவாறு தடுத்து நிறுத்துவன்; 20. வாய்விட்ட — மலர்ந்த; 21. கங்குல் — இரவு; 24. பின்னோக்காது ஏகி — விரைந்து தொழிலாற்றி; 24. களைஞர் — போக்குதற் பொருட்டு; 25. எயிறு — பற்கள்.

## 29

# நடுங்கினள் பெரிது!

அவனோர் அரசன். பேரரசு அமைத்து ஆளும் பேராசை உடையவன். அவ்வாசை நிறைவேறாவண்ணம், பகைவர் யாரேனும் பணியாது பகைத்து நிற்பரேல், அவரை வென்று அடிபணிய வையாது மீளாப் பெரும் படையுடையவன். அது முடியுங்காறும், பாசறையே அவன் வாழ்விடமாம். இவ்வாறு போர் வேட்கை யுடையனாதலோடு, பிறிதொரு பண்பும் அவன்பால் பொருந்தியிருந்தது. தன் நாட்டை விடுத்துப் பகைநாடு புகுந்து பாசறை வாழ்வு மேற்கொண்டு வாழும் அவன், ஆங்குத் தன் உடன் வந்து, ஆடல் பாடல்களால் தன் உள்ளத்திற்கு அமைதியும் ஆனந்தமும் அளிப்பதாரும், தன்பால் பேரன்புடையாரும், தன்னையல்லது வேறு ஆடவரை அறியாதாருமாய பரத்தையரோடு மகிழ்ந் துறையும் ஒழுக்கமும் அவன்பால் பொருந்தியிருந்தது. ஆனால், இவ்வாழ்வு, அவன் வாழ்க்கையில் எப்பொழு தேனும் ஒரு சில காலங்களில் மட்டுமே காணப்படுவ

தல்லது, எப்பொழுதும் பாசறை, பரத்தையர் என்றே இருந்து விடுவானல்லன். எழில் மிக்க தன் இளம் மனைவிபால் இணையிலா அன்பு கொண்டு வாழும் மனையற மாண்பையும் அவன் உணர்ந்திருந்தான். அதனால், மேற்கொண்டு செல்லும் வினை முடிந்த பின்னர், ஆண்டு ஒருபொழுதும் நில்லாது, அப்பொழுதே விரைந்து வீடு சேர்ந்து மனைவியை மகிழ்விப்பன்.

அவனைப் போன்றே அவன் மனைவியும் அவன்பால் குன்றா அன்பு கொண்டிருந்தாள். அது மட்டுமன்று. அரசர்க்குரிய கடமை இது, இவ்வரசர்க்கு மனைவியாக வந்து வாய்ப்பார்க்கு உரிய கடமை இது என்பனவற்றை உணர்ந்த பேரறிவும் உடையவள். அதனால், தன் கணவன், பகைவர் நாட்டைப் பாழ் செய்யும் பணி மேற்கொண்டு பிரிந்து வாழ்வதை, ஒருவாறு தாங்கிக் கொள்ளும் உள்ளுறுதி பெற்றிருந்தாள். பாசறை வாழ்வில், இரவிலும், பகலிலும் எந்நாழிகையிலும் போர் பற்றிய எண்ணமே உடையனாய், அமைதி இழந்து கிடக்கும் அவன், தன் உள்ளத்திற்குச் சிறிது ஆறுதல் வேண்டி, ஆடல் மகளிரின் ஆடல் பாடல்களில் அறிவு மயங்குவதோ, அவரோடு ஆடி மகிழ்வதோ பெரும் பிழையாகாது. அதனால், என்பால் கொண்டுள்ள அவன் அன்பு குறைந்து விடாது எனக் கொள்ளும் குணநலனும் உடையவள் அப்பெண்.

இத்தகைய எழில்மிக்க, இனிய இயல்புடையாளைப் பிரிந்து, அவன் பகை மேற்சென்றிருந்தான். சென்றவன் திங்கள் பல ஆகியும் திரும்பி வந்திலன். இந்நிலையில் இளவேனிற் பருவம் வந்து விட்டது. மரங்களெல்லாம்

மலர்களால் நிறைந்து மணம் வீசின. தாம் விரும்பும் அம் மலர்களிற் படிந்து வேண்டுமளவு தேனை உண்டு மகிழ்ந்து கிடந்தன வண்டுகள். அரிய பல தவம் செய்து பெற்ற நல்வினைப் பேறுடையார், அந்நல்வினைப் பயனாய்த், தாம் விரும்பும் பொன்னும் பொருளும், புகழும் போகமும் பெற்று மகிழும் செயலை அவ்வண்டின் செயல் நினைப்பூட்டக் கண்டு மகிழ்ந்தாள் அப்பெண். அவ் வண்டே போல் தன் கணவனை அடைந்து, பேரின்பம் நுகரவல்ல பெருந்தவப் பயன் தனக்கு வாய்த்திலதே என வருந்தினாள். வருந்தியவள், நல்வினைப் `பயன் நினைத்தபோதே வந்து வாய்ப்பது இல்லை; வண்டுகள் இன்பம் துய்க்குமாறு, மலர்கள் தேன்நிறைதல் இளவேனிற் பருவத்தே நிகழ்வதுபோல், தான் இன்பம் நுகருமாறு கணவன் மீண்டும் வந்து மனை புகுதலும் இளவேனிற் பருவத்தே வாய்க்கும் என உணர்ந்தாள்.

அவ் வுணர்வால், அப் பருவம் வருந்துணையும், அவன் பிரிவை ஒருவாறு ஆற்றியிருந்தாள். அப்பருவம் வந்து விட்டது. அதனால் அவன் வரவினை எதிர் நோக்கினாள். ஆனால் அவன் வந்திலன். அவன் வாராமையால் அவள் வருத்தம் அளவிறந்தது. ஆயினும் அந்நிலையிலும், அவளுக்கு அவன் சொல்லில் மாறா நம்பிக்கையிருந்தது. இளவேனிற் பருவம் வந்து விட்டது என்பதை அறியின், அவன் ஒரு பொழுதும் அவண் நில்லான். விரைந்திவண் வந்து சேர்வன். ஆனால், அப் பருவம் வந்து விடவும், அவன் வாராமைக்குக் காரணம், தன்பால் அன்பின்மையன்று; கருமமே கண்ணாயிருக்கும் அவன், வினை மிகுதியால், வேனிற்பருவம் வந்து

விட்டதை அறிந்திரான். அதனாலேயே அவன் வந்திலன் எனக் கருதினாள். அதனால், அவனுக்கு அப் பருவம் வந்து விட்டமையினை அறிவிப்பர் யாரேனும் உளரேல் நன்றாம் என நினைந்தாள். அந்நிலையில் அவள் மனை புகுந்தான் பாணன் ஒருவன். அவள் கணவனின் இன்ப நுகர்ச்சிக்குப் பெருந்துணை புரிவானும், பாடிப் பிழைக்கும் வழக்குடையானுமாய அப் பாணனைக் கண்டவுடனே, வேற்று நாடு சென்று வாழ்வார்க்கு வேனிற் பருவ வருகையினை அறிவிக்க ஏற்றவன் அவனே என உணர்ந்தாள். உடனே அவனை அழைத்துப்,

"பாண! நின் தலைவர், என் கணவர், அவருடனிருந்து இன்பம் நுகரவல்ல இனிய வாய்ப்பினைப் பெற மாட்டாமையால், யான் உறக்கம் அற்று, இரவின் இடையாமத்தும் தனித்துக் கிடந்து துயர் உறவும், அத்துயர் மிகுதியால், என் உடல் ஒளி இழந்து வருந்தி வாடவும் என்னை விடுத்து மறந்து சென்று, மயில்போலும் சாயலும், பணையின் எழிலும், அணையின் மென்மையும் வாய்ந்த தோள்களும், மான் போலும் மருண்ட பார்வையும், விலை மதிக்க வொண்ணா அணிகளும் உடையராய், இயற்கை செயற்கைகளானாய இருவகை அழகாலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பரத்தையர் பின் சென்று, புதுப்புனலாடியும், வேனில் விழாக் கண்டும் மகிழ்ந்து வாழும் மாண்பிலார் என்பதை அறிந்தும், அவர் நட்பையே நாடுகிறது என் உள்ளம். அவர் வருகையை எதிர் நோக்குகின்றன என் விழிகள். ஆனால், அவரோ வந்திலர். வேனிற் பருவமோ வந்து விட்டது. அது வந்து விட்டதை அவர் அறிந்திலர் என்றே யான் எண்ணுகின்றேன். அதனால், அவர்பால் சென்று, 'அன்ப!

வெய்யிலின் ஒளியும் உட்புகாவாறு மலர்களால் நிறைந்து மணம் நாறும் மலர்ச் சோலையிலிருந்து குயில்கள் கூவும் இளவேனிற் பருவமன்றோ இது? குறையாத புகழ் கொண்ட நம் கூடல் மாநகரின் நெடிய தெருக்கள் அரும்பற மலர்ந்த முல்லை மலர்களின் மணத்தால் நிறையும் இளவேனிற் காலமன்றோ இக்காலம்? ஆற்றிடைக் குறையில் மரங்கள் மலர்களால் நிறைந்து மாண்புற்றுத் தோன்ற, அவ்வழகை மேலும் அழகுடைய தாக்குமாறு தெளிந்த நீர் ஒழுகும் அருவிகள், அவ்வாற்றிடைக் குறையைச் சூழ்ந்தோடும் இளவேனிற் பருவமன்றோ இது?' என எடுத்துக் கூறுவார் யாரேனும் உளரேல் நன்றாம். அவர் செய்ந்நன்றியை யான் என்றும் மறவேன். அவரால், இளவேனிற் பருவம் இஃது என அறிந்து வரும் என் கணவர், ஈண்டு வந்தும், என் மனையகத்தே வாழாது, என்னை மறந்து, அவர் விரும்பும் அப் பரத்தையர் பின் சென்று விழாக் கண்டு மகிழினும் கவலேன். அவர் வரக் காணின் அதுவே எனக்கு ஆறுதலாம். அதனால் அமைதியுறும் என் உள்ளம். ஆனால் அவ்வாறு சென்று கூறுவார் யாரையும் காணேனே! என் செய்வேன்?" என்று கூறிக் கலங்கினாள்.

அவள் கூறியன கேட்டான் பாணன். அவள் அன்பின் பெருமையும், அகத் துயர்க் கொடுமையும் அறிந்தான். அவள் நிலைக்கு இரங்கினான். அந்நிலையே அவண் நில்லாது அவள் கணவன் சென்ற நாட்டிற்குச் சென்று, ஆங்கு, அவன் தங்கியிருக்கும் பாசறை அறிந்து, உட்புகுந்தான். புகுந்து அவன் அடிபணிந்து, "நின்னைப் பணியாது பகைத்து நின்ற பகைவர், நின் படையால் பாழுற்றுத் துடிக்கும் துன்ப நிலை கண்டு மகிழும் எம்

*தலைவ! இப் பகைவரே போல் வருந்துவாள் ஒருத்தியை நம் ஊரில் கண்டேன். அவளை வருத்தினார் வேறு எவரும் இல்லை. அவளை வருத்தியோனும் வருத்து வோனும் நீயே! அவ்வாறு நின்னால் நின் பகைவர் போல் வருந்துவாள் நின்னை விரும்பாதவளோ, நின்னால், வெறுக்கப்பட்டவளோ அல்லள்! நின் ஆருயிர் மனைவியே அவ்வாறு வருந்துகிறாள்! நின்னைப் பெற மாட்டாது, நின் அன்பைப் பெறமாட்டாது, காமநோயால் கலங்கி வாடுறாள் அவள். அன்ப! அவளை அவ்வாறு வருந்த விடுவது நின் அன்புள்ளத்திற்கு அழகன்று. பகைவரை அழ விடுதல் ஆண்மை. ஆனால் பேரன்புடை யாளை அழ விடுதல் ஆண்மையன்று என்பது மட்டுமன்று; அஃது அறமும் ஆகாது. தன் அவல நிலை நீங்கி, அவள் அழகு பெற்று அகம் மகிழுமாறு, நின் அழகிய தேரை, இன்றே ஊர் நோக்கித் திருப்புவாயாக!" என வேண்டிக் கொண்டான்.*

"அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள,
விரிந்துஆனாச் சினைதொறூஉம் வேண்டும்தாது அமர்ந்து
புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந்து எவ்வாயும் [ஆடிப்
இருந்தும்பி இறைகொள எதிரிய வேனிலான்:

துயிலின்றி யாம்நீந்தத், தொழுவையம் புனலாடி
மயில்இயலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயில்ஒளி அறியாத விரிமலர்த் தண்காவில்
குயில்ஆலும் பொழுதுஎனக் கூறுநர் உளராயின்;

பானாள்யாம் படர்கூரப் பணைஎழில் அணைமென்தோள்
மானோக்கி னவரோடு மறந்துஅமைகு வான்மன்னோ

ஆனாச்சீர்க் கூடலுள் அரும்பவிழ் நறுமுல்லைத்
தேன்ஆர்க்கும் பொழுதுஎனத் தெளிக்குநர் உளராயின்;

உறலியாம் ஒளிவாட, உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரொடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்து
அறல்வாரும் வையைஎன்று அறையுநர் உளராயின்;

எனவாங்கு,
தணியாநோய் உழந்துஆனாத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி, பணிபுநின்
காமர் கழல்அடி சேரா
நாமம்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே."

*வேனிற் பருவ வரவின்கண், தலைவி, 'எம்மாட்டு அன்பிலாராயினும், இளவேனிற்பருவம் இஃது என அவர்க்கு உரைப்பார் உளரேல் பரத்தையரொடு கூடி மகிழும் விளையாட்டைக் கருதியாவது வருவர்!" எனக் கூறி வருந்தக் கண்ட பாணன், பாசறை புகுந்து தலைவனைக் கண்டு கூறியது.*

1. விரிந்து – மலர்ந்து; ஆடி – உண்டு; 3. புரிந்து – விரும்பி; புலம்பு – தனிமை; எவ்வாயும் – எங்கும்; 4. இருந்தும்பி – கரிய தும்பி; இறைகொள – தங்க; தொழுவை – நீர்நிலை; 9. பானாள்– இடையாமம்; படர்கூர – துன்பம்மிகுமாறு; பணை – மூங்கில்; அணை – தலையணை; 11. ஆனார்சீர்க் – கூடல்; புகழால் மிகுந்த மதுரை; 12. தேன் – தேனீக்கள்; 13. உறலியாம் – அவனை அடைதற்குரிய யாம்; 15. பிறங்கு – பெருமை மிக்க; 16. அறையுநர் – சொல்லுவார்; 18. தகையவள் – தகுதியால் மிக்கவள்; நகை பெற – அழகு பெறும்படி; 19. அயர்மதி – செலுத்துவாயாக; 21 தெவ்வர் – பகைவர்.

# 30

## கூடல் புகுந்தார்!

"ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்" என்றார் வள்ளுவர். தம் நாட்டு மக்களின் நல்வாழ்விற்குப் பிறர் நாட்டு வளங்களை வாரிக் கொணர்தல் வல்லரசு களின் வழக்கமாம். அத்தகைய பேரரசர் வழிவந்த அரசன் ஒருவன் தன் நாட்டு எல்லைக்கண் உள்ள நாடுகளை வென்று, தன் நாட்டு எல்லையை விரிவாக்கவும், அந் நாட்டுச் செல்வங்களைக் கைப்பற்றிக் கொணரவும், பகைநாட்டு அரசரெல்லாம் தன் பேராண்மை கண்டு பணிந்து ஏவல் கேட்கவும் விரும்பினான். அது தன் விருப்ப மாதலோடு, அரசர்க்குரிய அறமுமாம் என்பதறிந்தான். அதனால், தன் ஆருயிரனைய மனைவியை, தன் அன்பே துணையாய் உயிர் வாழும் உயர்வு உடையாளைப் பிரிந்து போகத் துணிந்தான். அவன் முடிவறிந்து வருந்தினாள், அவன் மனைவி. வருந்தி நிற்பாளின் விழிநீர் துடைத்து, "அன்பே! இது வேந்தர்க்குரிய கடமை. இக் கடமையில் வழுவுதல்

அறமாகாது. நின் கணவன் 'அறநெறிபுகா அறிவிலி' என்ற பழிச்சொல் நினக்கு உண்டாதல் கூடாது. அது கருதியே செல்கின்றேன். சென்று சேணெடும் நாட்கள் இரேன். விரைந்து வினை முடித்து வந்து சேர்வேன். நகரெல்லாம் போற்ற நான் வரும் காட்சியை நீ கண்டு மகிழுமாறு, இளவேனிற் பருவத் தொடக்கத்தே வந்திவண் நிற்பன். கார் காலத்தும், கூதிர் காலத்தும் பெய்த பெருமழையால் பெருக்கெடுத்தோடும் ஆறுகள், அந்நீர் முற்றும் அறவே வற்றிப் போகத், தெளிந்து சிறு சிறு அருவிகளாக ஓடி அழகு பெறவும், நெடிய பல நீர் நிலைகளெல்லாம் நீர் குறைந்து நுண்மணல் பரக்கவும், இண்டைக் கொடிகளின் வாடிய மலர்கள் உதிர்ந்து அழகு செய்யவும், தம் கணவரைப் பிரிந்து, தனித்துக் கிடந்து துயர் கொள்ளும் மகளிரின் முகத்தில் படர்ந்த பொன்னிறப் பசலையின் நிறம் வாய்ந்த மலர்களை மலர்ந்தளித்த பீர்க்கங் கொடிகள் மலரும் பருவம் மாறி வாடவும், தம் கணவரைப் பிரியாதிருக்கப் பெற்ற பேரன்பு வாய்ந்த மகளிரின் மகிழ்ச்சி ததும்பும் முகம்போல், தாமரை மலரவும், பிறக்கும் இளவேனிற் பருவத் தொடக்கத்தே, முன்பனியும், பின்பனியும் கழிய வந்து நிற்கும் இளவேனிற் பருவத் தொடக்கத்தே, யானும் வந்து நிற்பன். வருந்தற்க!" என்றெல்லாம் கூறித் தேற்றிப் பிரிந்து சென்றான்.

அரசர் குலத்து வந்த அவளும், அது அரசர்க்குரிய கடமையாதல் உணர்ந்து, ஒருவாறு உள்ளம் தேறி, அவனுக்கு விடை தந்து அனுப்பினாள். விடைதந்து அனுப்பி விட்டாளேனும், அவன் பிரிந்தவுடனே, தனிமை அவளைப் பெரிதும் வருத்திற்று. அவ் வருத்தத்தை

ஒருவாறு தாங்கி உயிர் வாழ்ந்திருந்தாள். "பல படையும் இடைமயங்கும் கொடும்போர் நிகழும் களத்தின் நடுவே நின்று, பகையரசர்களை வென்று, அவர் நாட்டைக் கைப்பற்றி, அவ் வெற்றிப் புகழ் விளங்கப், பட்டத்து யானைமீது பவனிவரும் அவ்வழகிய காட்சியை, என் கண் குளிரக் காணும் நாள் எந்நாளோ? தன் அழகிய குதிரைமீதமர்ந்து, களம் புகுந்து, வந்த பகைவரைத் தன் வாட்படையால் வென்று, தன் ஆண்மையை, ஆற்றலை, அரும்போர்த் திறமையை அவர் அறியக் காட்டிவரும் என் கணவர் அழகைக் கண்டு அகமகிழும் அந்த நாள் எந் நாளோ? பகைவரை வென்று, அவர் பணிந்து தந்த திறைப் பொருளைக் கைக்கொண்டு, அப் பொருள்களோடும், பாய்ந்தோடவல்ல தேர்மீதமர்ந்து, உலா வரும் அச் சிறந்த காட்சியைக் கண்டு களிகூரும் நாள் எந்நாளோ?" என அவள் உளத்தே எழுந்த வேட்கையும், அவன் வெற்றிப் புகழ் கேட்க விரும்பும் அவள் ஆர்வமும் பிரிவுத் துயரை ஒரு சிறிது மறக்கச் செய்ய, ஓரளவு மனந்தேறி வாழ்ந்திருந்தாள்.

ஆனால், முன்பனிக் காலத்து வாடையும், சிறு மழையும், பின்பனிக் காலத்துக் கடும் பனியும், அவள் பொறுமையை நிலைகுலையச் செய்தன. அதனால் அவள் துயர் மிகுந்தது. அஃதாற்றாது அவள் வருந்தினாள். அவள் துயர் கண்டாள் அவள் தோழி. அவள்பால் சென்று, "பெண்ணே, முன் பனிக் காலமும் பின் பனிக் காலமும் கழியவரும் இளவேனிற் பருவமன்றோ, வருவேன் என அவர் கூறிச் சென்ற காலம்? அவர் அக்காலத்தே நில்லாது வருவர். அவர் உரை பொய்யாகாது. ஆகவே, அதுகாறும்

ஆற்றியிருத்தலே நின் பெண்மைக்கு அழகாவதல்லது, இவ்வாறு அழுது வாடுதல் அறிவுடைமை யாகாது. வெற்றிப்புகழ் விளங்க வரும் நம் தலைவரை, நகரை நன்கு அணி செய்து, நம் நகர் மக்கள் வரவேற்கும் அவ்வரவேற்புக் காட்சியைக் கண்டு மகிழக் கருதாது, கலங்கி நீர் சொரிவது நின் கண்ணிற்கும் அழகன்று!" என்று கூறித் தேற்றினாள்.

தன் வருத்த நிலை அறியாது, தன்னைத் தேற்ற முன் வந்து நிற்கும் தோழியை நோக்கித், "தோழி! நீ கூறியன யாவும் உண்மை. அவர் சொல் பிழைபடாது. கூறிச் சென்றவாறே, இளவேனிற் பருவத்தே அவர் வந்துவிடுவர். அதை நான் அறிவேன். அவர் வரும் அவ் வெற்றித் திருக் கோலத்தைக் கண்டு மகிழத் துடிக்கிறது என் உள்ளமும். அவ்வார்வ மிகுதியினாலேயே இதுகாறும் உயிர் வாழ்ந்தேன். ஆனால், காலத்தின் சூழ்நிலை என்னை வாழ விடவில்லையே! யான் என் செய்வேன்? உயிர்கள் அனைத்திற்கும் தன் ஒளியால் உரம் ஊட்டி வளர்க்கும் முழுநிலா உலா வரும் இரவுகள் என்னை வாழ விட்டனவா? அணிந்திருக்கும் அணிகளும் குளிர் மிகுதி யால் சில்லிட்டுப் போமாறு வீசிய வாடைக் காற்று, என்னை வாழவோ, அவர் வெற்றித் திருவுருவைக் காணவோ விட்டதா? நீண்டு வளர்ந்த கரும்பின் வெண்ணிறப் பூக்கள், தம் நிறம் கெட்டு வாடவும், குளிரால் நம் தோளும் மார்பும் நடுங்கவும் வந்து தூற்றிய மழைத்தூவல் நம்மை வாட்டாது வாழவிட்டதா? புதர்கள் மீது புகை படிந்தாற்போல் படிந்து நின்ற, பெண்களின் வெண்பல் வரிசை போல் தோன்றி, உள்ளே தேனும்

தோன்றா-இளமையோடிருக்கும் மெல்லிய முல்லை அரும்புகளை, அவை முற்றி மலராதே, கருகிப்போமாறு கொடுமை செய்யும் இப் பின்பனிதான் முல்லை முகைகளை யொத்த என் பற்கள், குளிர் மிகுதியால் நடுங்கி, ஒன்றோடொன்று மோதிப் போமாறு செய்யும்-இப்பின்பனிதான் என்னை வாழவிடுகிறதா? இவை ஒன்று கூடிச் செய்யும் இக்கொடுமைகளை, யான் ஒருத்தியாகவே நின்று தாங்கி, எவ்வாறு உயிர் வாழ்வேன்? அவர் வருகை யைக் காண வேண்டும் எனும் ஆர்வ மிகுதியால், ஓரளவு உரம் கொண்டு வாழும் என் உயிரைக், கூரிய பருவங்களின் கொடுமைகள் கொன்று விடுகின்றனவே! அக் கொடுமை களை அகற்றி ஆற்றி வாழ்தல் எவ்வாறு இயலும்?" என்று கூறி வருந்தினாள். அவ்வாறு வருந்து வாளுக்கு ஆறுதலாக உரைக்கலாம் உரையேதும் உணராதே, தோழி அவளை அவ்வருத்த நிலையிலேயே விடுத்து வெளியே சென்றாள்.

வீட்டை விடுத்து வெளியே வந்தவள், மதுரை மக்கள், வென்று மீளும் தம் மன்னன் வருகை குறித்து வெற்றிக் கொடிகளை நாட்டி மகிழும் காட்சியையும், தொலைவில், வென்ற வெற்றிப்புகழ்மிக்க வேற்படை வீரர் புடை சூழ்ந்து வர, வேந்தன் தேர் விரைந்து வருவதையும் கண்டாள். உடனே அகமும் முகமும் மலர, விரைந்து உள்ளே சென்று, "பெண்ணே! 'அவர் வாராமை கண்டு வாழேன் யான். வாழ விரும்பினும் வாழ விட்டில இக் காலத்தின் கோலங்கள்!' என்பன போலும் பயனில் சொற்களை, இனிச் சொல்லாதே. காலம் நீட்டிப்பின் கலங்குவை நீ எனக் கருதித், தாம் கூறிச் சென்ற

*காலத்திற்கு முன்பே, இளவேனிற் பருவத் தொடக்கத்தே வருவேன் என்ற தன் சொல் பொய்யாகிப் போமாறு, அப் பருவம் வருவதற்கு முன்பே, பின்பனிக் காலத்தின் கடைநாட் காலத்திலேயே, வினை முடித்து வந்து சேர்ந்தார். நின் ஆசை அடங்க, அவர் வரும் வெற்றித் திருவுலாவை, வேண்டு மட்டும் கண்டு களி மகிழ் கொள்வாயாக!" எனக் கூறி அழைத்துச் சென்று காட்டிக் களிகூர்ந்தாள்.*

"கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற;
நெடுங்கயத்து அயல்அயல் அயிர்தோன்ற, அம்மணல்
வடுத்தூர வரிப்பபோல் ஈங்கைவாடு உதிர்புஉகப்,
பிரிந்தவர் நுதல் போலப் பீர்வீயக், காதலர்ப்

புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதூஈன,
மெய்கூர்ந்த பனியொடு மேல்நின்ற வாடையால்,
கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுதுமன்
பொய்யேம் என்று ஆயிழாய்! புணர்ந்தவர் உரைத்ததை;

மயங்குஅமர் மாறுஅட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ,
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தஇவ் அசைவாடை?

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பு ஆர விடுவதோ,
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோள்அதிர்பு அகம்சேரத் துவற்றும்இச் சின்மழை?

பகைவென்று திறைகொண்ட பாய்திண்தேர் மிசையவர்
வகைகொண்ட செம்மல்நாம் வனப்புஆர விடுவதோ;

புகைஎனப் புதல்சூழ்ந்து பூவம்கள் பொதிசெய்யா
முகைவெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனி?

எனவாங்கு;
வாளாதி; வயங்கிழாய்! வருந்துவள் இவள்என
நாள்வரை நிறுத்துத், தாம் சொல்லிய பொய்யன்றி
மீளிவேல் தானையர் புகுதந்தார்
நீள்உயர் கூடல் நெடுங்கொடி எழவே."

*வேனிற்காலத் தொடக்கத்தே வருவேன் என்று கூறித் தலைவன் சென்றானாக, முன்பனிக் காலமும் பின்பனிக் காலமும் வருத்த வருந்திய தலைவியைத் தோழி, ஆற்றியிரு என வற்புறுப்பவும், அவள் வருந்தி நின்றக்கால், தலைவியின் ஆற்றாமை உணர்ந்து, பின்பனிக் காலத்தே தலைவன் வந்துவிடத் தோழி மகிழ்ந்து கூறியது.*

1. கால்பட்டு – சிறுசிறு கால்வாய்களாகி; கலுழ்தேறி – கலக்கம் தெளிந்து; 2 கயம் – குளம் 3. வரித்தல் – கோலம் செய்தல்; வாடு – வாடிய மலர்; 4. வீய - மலர்தல் அற்றுப்போக; 5. கூர்ந்த – நடுங்கிய; 7. கையாறு – செயலற்றுப் போதல்; 14. ஆர் – நுகர, 5. கழை – கரும்பு; 16. அதிர்பு – நடுங்கி; 18. செம்மல் – வீரத்தால் பிறந்த அழகு; 19. பூவம்கள் பொதிசெய்யா முகைவெண்பல் – இனிய தேன் உள்ளே பெறுதல் அற்ற அரும்பாகிய வெண்பல்; 20. பொர – நடுங்க; 22. வாளாதி – வாளா வருந்தாதே; 24. மீளிவேல்தானை – எமனையொத்த வேற்படை வீரர்.

# 31

## தூது வந்தன்றே!

கல்வி கேள்விகளால் நிறைந்து, அவற்றால் தாம் பெற்ற அறிவுடைமை கண்டு, செருக்கித் திரியாது, வேண்டும் காலத்தல்லது, அவ்வறிவுடைமையினைப் பிறர்க்குப் புலனாக்காது அடக்கி அடங்கி வாழும் ஆன்றோர்களும், உலகம் வாழ்த்துவது தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெரியோர்களால் என்ற உணர்வுடையராய், வருவார்க்கு வாரி வழங்கும் வள்ளல் களும் வாழ்வதால் பெருமை மிக்க பெருநகரில் பிறந்து, இசைநூல் வல்லார் எழுப்பும் இனிய யாழோசை கேட்டும், மகளிர்க்குரிய மாண்பெலாம் பெற்று, அரங்கேறி ஆடுவதிலும் வல்லராய அழகிகளின் ஆடல்களைக் கண்டும், அகம் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர் தோழியும், அவள் துணைவியுமாய இரு பெண்கள்.

அவருள் ஒருத்தி, மணமகளாம் தகுதியை அண்மையில் பெற்றவள். அவள்மீது அள்ளிச் சொரியும்

அன்புடையவன் அவள் கணவன். மேலும் உலகியல் உணர்ந்தவன்; ஈகையால் புகழ் பெற்று வாழ்தலே இவ்வுலகப் பயனாம் என்பதறிந்தவன். அவ்வறிவுடைமை யால் தானும், தன் மனைவியும் புகழ்நிறை வாழ்வினராதல் வேண்டும் என விரும்பினான். அதனால், அப்புகழ் பயக்கும் பொருளீட்டி வர எண்ணினான். அதனால், மனைவிமீது கொண்ட அன்பை ஒரு சிறிது மறந்து, அப் பொருள் பெரும் அளவில் கிடைக்கும் வெளிநாடு சென்றிருந்தான்.

உருவாலும், உணர்வாலும் ஒத்த இயல்புடையவர் அக் காதலர் ஆதலின், அவனைப் போன்றே, அவன் மனைவியும், பொருளின் பெருந்துணை உணர்ந்து, அது ஈட்டி வரச் செல்லும் அவனைத் தடுத்திலள். அவனைப் பிரிந்து வாழ வேண்டிய பெருந்துயர் மறந்து, அவனுக்கு விடையளித்து அனுப்பினாள். ஆனால், அவன் போனதும், தனிமை அவளைப் பெரிதும் வருத்திற்று. அவ்வாறு வருந்திடுவாளை மேலும் வருத்துமாறு வேனிற் பருவம் வந்துற்றது.

ஒருசில குறுகியும், ஒருசில நீண்டும் இராது, எல்லாம் ஒரு நிகராதற்பொருட்டும், விரைந்து வளர்தற் பொருட்டும் கத்திரியால் கத்தரிக்கப் பெற்றுக், கார் மேகத்தை வெல்லும் கருநிறம் வாய்க்கப் பெற்ற மகளிர் கூந்தல், ஐவகை வனப்பும் விளங்க வாரி முடிக்கப் பெற்றதுபோல், மணல், ஈரம் புலர்ந்து, மாசு தீர்ந்து பரவிக் கிடந்தது; பிடித்து விட்டு நுண்ணிய நெய் போலாக்கிய அக் கருமணல் மேல், மகளிர் கூந்தலில், அணிகளுக்கிடையே இட்டு முடிக்கும் அழகிய பொன்னாரம் போல், பன்னிற

மலர்களோடு, வேங்கையின் பொன்னிற மலர்களும் உதிர்ந்து கிடந்தன. ஆற்றில் வெள்ளம் வடிந்து போக, நீர் தெளிந்து ஓடிற்று. வெண்மதி, வானவெளியுள், தன்னை மறைக்கும் மேகம் இன்மையால், தூய தன் பேரொளி வீசி விளங்கிற்று. மா முதலாம் மரங்கள், மகவீன்றவள் மேனியிற்றோன்றி அழகு தரும் திதலைகள் போலும் இனிய தளிர்களை, எண்ணெய்ப் பசை விளங்க ஈன்றன. ஆன்றோர்கள் அடக்கி வைத்துள தம் அறிவு ஆற்றல்களை உரிய காலத்தே வெளிப்படுப்பது போல், அதுகாறும் இலையோ, மலரோ பெறாதிருந்த மரக் கிளைகளெல்லாம் மலர் ஈன்று மணம் நாறின. தேன் உண்ணும் வண்டுகள், வல்லவர் இசைக்கும் யாழ் ஒலி போலும் இனிய ஓசை உண்டாகுமாறு, மலர்களால் நிறைந்து மறைப்புண்டு கிடக்கும் புதர்களை வளைய வளையப் பறந்து திரிந்தன. அரங்கேறி ஆடும் ஆடல் மகளிர் போல், மலர்க் கொடிகள், காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்குமாறு, காற்றில் மெல்ல ஆடி அசையத் தொடங்கின. ஈகையே இறவா நிலைதரும் என உணர்ந்து கொடுக்கும் உயர்ந்தோர் போல், மரங்கள் கொத்துக் கொத்தாக மலர் ஈன்று மாண்புற்றன. அன்பால் பிணைக்கப்பட்ட காதலர்கள் பிரிவின்றி வாழ்தல் போல், சில மலர்க் கொடிகள் ஒன்றோ டொன்று முறுக்குண்டு பின்னிக் கிடந்து பேரழகு தோற்றின.

இளவேனிற் பருவத்தின் எழில்மிக்க இக்காட்சியைக் கண்டாள் அப் பெண். இக் காட்சியைக் கண்டு மகிழக் கணவன் உடனில்லையே என எண்ணித் துயர் உற்றது அவள் உள்ளம். அவள் அவ்வாறு துயர் உற்றுக் கிடக்குங்கால், ஆங்கு வந்தாள் அவள் தோழி. வந்த தோழி,

வாடிக் கிடப்பாளின் வருத்தத்தைப் போக்கக் கருதாதே, அவ்விளவேனிற் பருவக் காட்சிகளைக் கண்டு, களிமகிழ் கொண்டு, "ஏ, இளவேனிற்காலமே! எம்மை விரும்பும் எம் காதலர்க்கு யாம் இனியராதல் போல், நின்னை விரும்பி நோக்குவார்க்கு, விருந்தூட்டும் வனப்புடையை நீ. வாழ்க நின் வனப்பு!" என்று கூறி வாழ்த்தினாள்.

கணவன் அன்பைப் பெறமாட்டாது கலங்கி நிற்கும் தனக்கு, இன்னல் விளைக்கும் இவ் விளவேனிற் பருவம், இவளுக்கு மட்டும் இன்பமாதல் யாங்ஙனம்? இப்பருவ வரவால் யான் வருந்தி வாட, இவள் மட்டும் களித்துக் கவின் பெறுவது எதனால் எனச் சிந்திக்கத் தொடங்கி னாள் அப் பெண். அவ்வாறு சிந்தித்துக் கிடப்பாளின் அருகிற் சென்ற தோழி, "பெண்ணே! மகிழ்ந்து நிற்கும் என் நிலை கண்டு மருளாதே. 'அருவி நீர் ஊட்ட வளர்ந்த அழகிய முல்லைக் கொடிகள், மகளிரின் வெண்சிறு பற்களின் வரிசை யொப்ப மலர்ந்த அலரும் பருவத்து அரும்புகளை, நீ நின் கூந்தல் நிறையச் சூட்டிக் கொள்வாயாக! என்று என் காதலிபால் சென்று உரைத்து மீளுக!' என நம் காதலர் கூறிவிட்ட தூது இதோ வந்து நிற்கிறது காண். அவர் விடுத்த இத்தூது, பகையொழித்து வெற்றி கொள்ளும் அவர் போல், பிரிவால் நெற்றி பசந்து வருந்தும் நம் நோயை அழித்து, நம் ஆருயிரைக் காக்கும் அருமருந்தாய் அமைந்தது. இவ்வாறு வந்து வாழ்வளித்த இத்தூதை விரும்பி வரவேற்காது வருந்திக் கிடத்தல், விருந்தோம்பி வாழக் கடமைப்பட்டுள கற்புடை மகளிர்க்கு மாண்பாமோ? நம் துயர் ஒழித்து, மகிழ்ந்து முக மலர்ந்து, இன்னுரை வழங்கி, இனியன அளித்து,

*விருந்தோம்புவோமாக!" என்று கூறி அவள் துயர் மாற்றி மகிழ்ந்தாள்.*

"எஃகுஇடை தொட்ட, கார்க் கவின்பெற்ற ஐம்பால்போல்,
மையற விளங்கிய துவர்மணலது; அது
ஐதாக நெறித்தன்ன அறல்அவிர் நீள்ஐம்பால்
அணிநகை இடை இட்ட ஈகையம் கண்ணிபோல்
பிணிநெகிழ் அலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்,
துணிநீரால், தூய்மதி நாளால், அணிபெற,
ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யும் தளிரொடும்,
ஆன்றவர் அடக்கம்போல் அலர்செல்லாச் சினையொடும்,
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடும்,
நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த கொம்பொடும்,
உணர்ந்தவர் ஈகைபோல் இணர்ஊழ்த்த மரத்தொடும்,
புணர்ந்தவர் முயக்கம்போல் புரிவுற்ற கொடியொடும்
நயந்தார்க்கோர் நல்லைமன், இளவேனில்! எம்போலப்
பசந்தவர் பைதல்நோய், பகைஎனத் தணித்துநம்
இன்னுயிர் செய்யும் மருந்தாகிப், பின்னிய
காதலர், 'எயிறு ஏய்க்கும் தண்அருவி நறுமுல்லைப்
போதுஆரக் கொள்ளும் கமழ்குரற்கு' என்னும்
தூது வந்தன்றே, தோழி!
துயர்அறு கிளவியொடு அயர்ந்தீகம் விருந்தே."

*வேனிற் பருவ வரவு கண்டு தலைவி வருந்த, அதைத் தலைவிக்கு அறிவிக்கும் தூது வரக்கண்டு மகிழ்ந்த தோழி, அதைத் தலைவிக்கு அறிவித்தது.*

1. எஃகு – கத்தரிகை; கார் – மேகம்; 2. துவர் மணல் – புலர்ந்த மணல்; 3. நெறித்தன்ன – பிடித்துவிட்டாற் போன்ற; 4. ஈகை அம் கண்ணி – பொன்னால் செய்த அழகிய கண்ணி; 5. அலரும் – விரிந்த

பூவும் என்க; நெறிகொள — ஒழுங்காக வீழ்ந்து கிடக்க; 6. துணிநீர் — தெளிந்த நீர்; 7. ஈர்பெய்யும் — எண்ணெய்ப்பசை கொண்ட; 8. அலர் செல்லா — பருவம் வருந்துணையும் அலராத; 9. புதல் — புதர்; 10. நல்லவர் — நல்ல மகளிர்; நுடக்கம் — அரங்கு ஆட்டம்; நயம்வந்த — விரும்பத்தக்க; 11. இணர் ஊழ்த்த — மலர்க் கொத்துகளை ஈன்ற; 14. பைதல் நோய் — வருத்தம் செய்யும் காமநோய்; 16. ஏய்க்கும் — ஒக்கும்; 17. போது — மலரும் பருவத்தில் உள்ள பேரரும்பு; குரற்கு — கூந்தலுக்கு; 19. அயர்ந்தீகம் — விருந்தேற்றுப் போற்றுவம்.

# 32

## குயிலைப் பழியேல்

மலைமேற்பெய்த மழைநீரைப் பெற்றுவந்து அளித்து விளைவித்தமையால், பிற நாடுகளில் இல்லாப் பெருவளம் பெற்ற பெருமை மிக்க தன் நாட்டின் பேரழகைக் காண விரும்பிய யாறு, தன் கண்களை அகல விரித்து நோக்கினாற் போல், அவ் யாற்றின் கரைக்கண் அமைந்த குளங்கள், நீராலும் மலர்களாலும் நிறைந்து மாண்புற்றன. பளிங்கு மணி போலும் தூய வெள்ளிய கண்ணாடிக் கிடையே, அழுத்தி இழைத்தது போல், அவ்வழகிய குளத்தின் தெளிந்த நீரில், கரைநிற்கும் முறுக்கின் மலர்கள், அரும்பற மலர்ந்து காம்பற்று உதிரலாயின. கயத்தின் கரைக்கண் நிற்கும் மரங்களெல்லாம், பல மணிகளை அணிந்து தோன்றுவது போல் மலர்ந்து நிற்கும் காட்சி, பளிங்கெனத் தெளிந்த அக்குளத்து நீரில் தோன்ற, ஆங்குத் தோன்றும் அந் நிழலை, நிழல், என உணர மாட்டாத வண்டுகள், மரமும் மலருமாம் என மயங்க உணர்ந்து, ஒன்று கூடிச் சென்று மொய்த்து ஆரவாரித்தன. தாம்

விரும்பும் காதலரைப் பிரியாது பெற்று வாழ்வார், இடைவெளி யின்றி இணைந்து செல்லலாயினர். இத்தகைய இன்பச் சூழ்நிலையை உண்டாக்கும் இளவேனிற் பருவம் வந்து விட்டது. அக் காட்சிகளைக் கண்டாள் ஒரு பெண். அவ்விளவேனிற் பருவத்தே வருவதாக வாக்களித்துச் சென்ற அவள் கணவன் வந்திலன். அதனால் கலங்கிற்று அவள் உள்ளம். நிலப்பூவை நிகர்க்கும் அவள் கண்கள், நீரைச் சொரிந்து கலங்கி, அழுது அழகிழந்தன.

அப் பெண் அவ்வாறு வருந்தி வாடியிருக்குங்கால், ஆங்கு வந்தாள் அவள் தோழி. தோழியைக் காணவே, அடங்கியிருந்த அவள் அழுகை உருப்பெற்றது. "தோழி! நெருப்பின் செந்நிறம் தோன்ற இலவம் மலர்ந்தது. நெற் பொரியின் வெண்ணிறம் விளங்கப், புன்கு பூத்து உதிர்ந்தது. பொன்னிறத் தாதுக்கள் உதிருமாறு புதிய பூக்களைக் கோங்கம் ஈன்றது. இளவேனிற் பருவத்து இவ்வினிய காட்சிகள், தனித்துக் கிடந்து துயர் உறும் எம்போலும் எளிய மகளிரைப் புறத்தே இழுத்துக் கொணர்ந்து எள்ளி நகைப்பது போல் உளதே! இளவேனிற் பருவத்திற்கு எளியளாய்ப் போன என் அழகை அழித்து, அவ்வழகின் இடத்தைத் தான் கைப்பற்றி வருத்துகிறதே பசலை. வேனிலும் பசலையும் கூடி விளைக்கும் இக் கொடுமைகளைத், தோழி! யான் எங்ஙனம் ஆற்றுவேன்?

"தோழி! அழகில் நமக்குத் தோற்று, நம் தாழ்நிலை கண்டு தருக்கி, நம்மை எள்ளி நகைக்கும் காலம் வாய்க்காமையால் வருந்திய மலர்க் கொடிகள், இவ்விள

வேனிற் பருவத்தே அது வாய்த்தமையைப் பயன்கொண்டு, நம்மை நோக்கி, அழகிழந்த நம் தாழ்நிலை கண்டு, எள்ளி நகைத்தல் போல், மலர் ஈன்று மாண்புற்றன. மலர்க்கொடி மகிழுமாறு துயர்உறும் நம் நிலையினை எண்ணி எண்ணி உருக்குலைந்து உருகுகிறது என் உள்ளம். நம் சாயலுக்குத் தோற்ற மயில்கள், அச்சாயல், இப்பொழுது நம்மைவிட்டு அகன்றமை கண்டு அக மகிழ்ந்து, அம் மகிழ்ச்சியின் மிகுதியால், காலமல்லாக் காலத்திலும், தம் தோகை விரித்து ஆடி, நம்மை ஆறாத்துயர்க்கு உள்ளாக்குகின்றன. அது கண்டு கலங்கி நிற்கும் என்னைக் கைவிட்டு, என் கைவளைகளும் கழன்று ஓடுகின்றன. இக் கொடுமைகளை யெல்லாம் கண்டு என் கண்கள் கலங்கி நீர் சொரிகின்றன. இடைவிடாது ஒழுகும் என் கண்ணீர் போல், ஆறுகள் அறல் ஒழுகும் இவ் விளவேனிற் பருவத்தும் நம் கணவர் வந்திலர். அவர் வாராமையால், என் அகத்துறு துயரம் அளவின்றிப் பெருகுகிறதே, தோழி! யான் என் செய்வேன்?

“தோழி! வேனிற் காலத்தே விரிந்த மலர்களில் நிறைந்து கிடக்கும் தேனைத் தேடிப் பறக்கும் தும்பிகள் எழுப்பும் இனிய யாழின் குரல், அதோ ஒலிப்பதை, நீ கேட்டிலையோ? அவ்வொலி, நம் காதலர் காதுகட்குக் கேளாதோ? அது கேட்டு அவர் வாராது போயினும், தம் வருகை உணர்த்தும் ஒரு தூதையும் அனுப்பிலரே! தோழி! தூதனுப்பவும் தவறிய அவர், நம்மை அறவே மறந்து துறந்து விடுவார்கொல் என்று அஞ்சுகிறது என் உள்ளம். இந்நிலையில், என் நிலை கண்டு இரங்கி வாயடைத்துக் கிடக்காது, கூவத் தொடங்கிவிட்டனவே குயில்கள்!

அதோ கேள், அவற்றின் கொடிய குரலை. இவற்றை யெல்லாம் கண்டு, இவை செய்யும் கொடுமைகளை யெல்லாம் தாங்கி எவ்வாறு என் உயிர் வாழும்" எனப் பலப்பல கூறிப் புலம்பினாள்.

அவள் அவ்வாறு புலம்பி நிற்கும் அந்நிலையில், காற்றெனக் கடுகி ஓடவல்ல தன் நெடிய தேரை, விரைந் தோட்டி வந்து, அப் பெண்ணின் தலைவாயிற்கண்ணே நிறுத்தினான் அவள் கணவன். அத்தேரையும், அத்தேர்மீது அமர்ந்திருக்கும் அப் பெண்ணின் கணவனையும் முதற் கண் கண்ட தோழி, "பெண்ணே! குயிலையும் அவரையும் குறை கூறி நிற்பதற்குக் காலம் இல்லை. இனி அதற்குத் தேவையும் இல்லை. வினை முடித்து வெற்றி மாலை விளங்க, அவர் அதோ வந்து விட்டார். வருத்தம் விடுத்து, வாரி முடித்த நம் கூந்தல் பின்னால் பிரிந்து போமாறு, விரைந்து ஓடி ஓடி, அவரை வரவேற்க வேண்டுவன புரிவோமாக. வருக!" எனக் கூறி அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு புறத்தே ஓடினாள்.

"வீறுசால் ஞாலத்து வியல்அணி காணிய
யாறுகண் விழித்தபோல், கயம்நந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுள் துப்புஎறிந் தவைபோலப்,
பிணிவிடும் முருக்கிதழ் அணிகயத்து உதிர்ந்துஉகத்,
துணிகயம் நிழல்நோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப,
மணிபோல அரும்பூழ்த்து, மரமெல்லாம் அலர்வேயக்,
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதுஅவிழ் வேனிலோ வந்தன்று; வாரார், நம்
போதுஎழில் உண்கண் புலம்ப நீத்தவர்;

எரிஉரு உறழ, இலவம் மலரப்,
பொரிஉரு உறழப் புன்குபூ உதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்துஎறிந்து எள்ளி முனியவந்து,
ஆர்ப்பது போலும் பொழுது; எண்ணி அந்நலம்
போர்ப்பது போலும் பசப்பு;

நொந்து நகுவனபோல் நந்தினகொம்பு; நைந்துள்ளி
உகுவது போலும்என் நெஞ்சு;எள்ளித்
தொகுபு உடன் ஆடுவ போலும் மயில்; கையில்
உகுவன போலும், வளை, எண்கண்போல்
இகுபு, அறல்வாரும் பருவத்தும் வாரார்;
மிகுவது போலும் இந்நோய்;
நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்கினர் மிஞிறொடு தும்பிதாது ஊதத்,
தூதுஅவர் விடாராய்த்; துறப்பார்கொல்? நோதக
இருங்குயில் ஆலும்அரோ!

எனவாங்கு
புரிந்துநீ, எள்ளும் குயிலையும் அவரையும் புலவாதி;
நீலிதழ் உண்கண்ணாய்! நெறிகூந்தல் பிணிவிட,
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன் மார்பர் துணைதந்தார்;
கால்உறழ் கடுந்திண்தேர் கடவினர் விரைந்தே.”

*வேனிற் பருவ வருகை கண்டு ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி, தலைவன் வரவுணர்த்தி ஆற்றியது.*

1. வீறுசால் — பிறவற்றிற்கில்லாத பெருமை பொருந்திய; ஞாலம் — உலகம்; 2. நந்தி — நிறைந்து, 3. மணி — பளிங்கு; புரை — ஒக்கும்; வயங்கல் — கண்ணாடி; துப்பு — பவளம்; 4. பிணிவிடும் —

மலரும்; 5. துணிகயம் – தெளிந்த குளம்; துதைபு – நெருங்கி; 6. வேய – சூட; 7. கவவுக்கை – பிரிவின்றிப் பற்றிப் பிணிப்புண்ட கைகள்; 9. போது – பேரரும்பு ; 10. உறழ – ஒப்ப; 13. எள்ளி – நகைத்து; இகழ்ந்து; 15. நொந்து – அழகிற்குத் தோற்றமையால் வருந்தி; நந்தின – மலர்களால் நிறைந்தன; தைந்து – வருந்தி; 17. உகுவதுபோல் – அழுவதுபோல்; 20. இகுபு – வற்றி; 24. மிஞிறு – தேன் வண்டின் இனம்; 25. ஆலும் – கூவும்; அரோ – அசை; 27. புரிந்து – மனம் வேறுபட்டு; 28. நீல் – நீலமலர்; நெறிகூந்தல் – பின்னிய கூந்தல்; பிணிவிட – பின்னல் அவிழுமாறு; 31. கால்உறழ் – காற்றுப் போலும் விரைந்த செலவுடைய; கடவுதல் – விரைந்து ஓட்டுதல்; கூந்தல் பிணிவிட துணைதந்தார் – கூந்தல் அவிழுமாறு வரவேற்பிற்காம் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு செய்தார்.

33

# நாள்வரை கடந்திலர் காதலர்!

இளவேனிற் காலம் தொடங்கி விட்டது. மாரிக் காலத்தில் மழை பெய்த நீர், பலப்பல வாய்க்கால்களாய் வந்து கூடப் பெருகிப் பெரு வெள்ளமாய்ப் பாய்ந்து பரவி, உயிர்களுக்கு உணவும் உண்ணுநீரும் அளித்துப் புரந்த பேராறு தன் கண் நீரெலாம் வற்றிப் போகத் தெளிந்து ஓடும் சிறு சிறு அருவிகளை, ஆங்காங்கே உடையதாகி விட்டது. மாரிக் காலத்தில் அவ் வாற்றின் நீர் உண்டு வளர்ந்த, அவ்வாற்றின் கரைவாழ் மரங்கள், அந்நன்றியை மறவா மாண்புடைய போல், தம் கிளையிடத்து மலர்களை, அவ்யாற்று மணலில் உதிர்த்து அழகு செய்யத் தொடங்கி விட்டன. வருந்தி நிற்பார்க்கு வாரி வழங்கும் வள்ளலாய் வாழ்ந்த ஒருவர், பின்னர், அச் செல்வம் அற்றுப் போக வருந்திய காலத்தில், அவர்பால், அவர் செல்வ வாழ்வில் சிறந்திருந்த காலத்தில், பொருள் பெற்றுப் பிழைத்த நல்லோர் ஒருவர், அவர் செய்த அந்நன்றியை மறவாது, அவர்க்கு உறுபொருள் அளித்து

உயிர் காக்கும் பெருஞ்செயலை, அவ்வியற்கைக் காட்சி நினைப்பூட்டக் கண்டு மகிழ்ந்தனர் மக்கள். அவ்வாறு மகிழ்ந்தாருள், ஒரு பெண், அந் நினைவால் சிறிது நேரம் தன்னை மறந்து இருப்பினும், அக்காட்சி, வேனிற் பருவத்தின் வருகை அது என்பதை நினைப்பூட்டவே, அவ் வேனிற் காலத் தொடக்கத்தே வருவேன் என்று கூறிச் சென்ற தன் காதலன், அங்ஙனம் வாராமை அறிந்து வருந்தினாள். "இயற்கையிடத்துக் காணும் இந்நன்றியறி உணர்வு, என் காதலன் மாட்டு இல்லையே! இளமைச் செல்வத்தைக் குறைவறப் பெற்றிருந்த காலத்தே, என் நலன் நுகர்ந்து, மகிழ்ந்து மாண்புற்ற அவன், அந் நலன் குறைந்து வருந்தியிருக்கும் இக் காலத்தே, தன் தலையளி யால், எனக்கு மகிழ்ச்சி தர மனம் கொண்டிலனே!" என எண்ணி மனம் நொந்தாள்.

வருந்தி நிற்கும் அவள் நிலை கண்டனர் ஊரார். "இவளை இவ்வாறு வருந்த விடுத்து, வினைமேற் சென்ற அவன் அறியாமையினை என்னென்பது!" எனப் பழி தூற்றினர். அந் நிலையில் ஆங்கு வந்த அப் பெண்ணின் தோழி, வருந்தி நிற்கும் அவளையும், அவள் வருத்தம் கண்டு, அவள் கணவனைப் பழி தூற்றும் ஊர்ப் பெண் களையும் பார்த்தாள். உடனே அப்பெண்ணை அடுத்துத் 'தோழி! கணவன் புகழில் கருத்துடையராதல் கற்புடை மகளிர்க்கு அழகு. கணவர் பழிக்குத் தாமே காரணராதல் அவர்க்குப் பொருந்தாது. கணவன்மார்க்குப் புகழ் தேடித் தரும் கற்புடை மகளிர் வழி வந்தவள் நீ. அத்தகைய நீ, அவன்பால் பிழை காணினும், அப் பிழை பொறுக்க லாகாப் பெரும் பிழையேயாயினும், அதைப் பிறர் அறியக்

காட்டி, அதனால், அவனுக்குப் பழியுண்டாக வழி செய்தல், நின் பெருமைக்குப் பொருந்தாது. கணவன் பிரிந்து சென்று கொடுமை செய்து விட்டான் என்பது உண்மை. ஆனால், அதைப் பலரும் அறிந்து, அவனைப் பழிக்குமாறு, இவ்வாறு வெளிப்படுத்தி வருந்தி நிற்றல் கூடாது. அவன் கொடுமையே செய்யினும், அதை மறைந்து வாழ்வதே மனைவிக்கு மாண்பாகும்!" என அறிவுரை கூறினாள்.

அது கேட்ட அப் பெண், "தோழி! தோட்டத்தில் காஞ்சி மரம் மலர்ந்திருக்கும் காட்சியைக் காண்கிறேன். அக்காஞ்சி மலரின் மகரந்தப் பொடி படியப் பொன்னிறம் பெற்ற கருங்குயிலின் குரலைக் கேட்கிறேன். இளவேனிற் காலம் இது என உணர்கிறது என் உள்ளம். உடனே, இவ் விளவேனிற் காலத்தில், உடனிருந்து இன்பம் நுகர எண்ணாது, பிரிந்து வாழும் அவர் கொடுமையினை நினைந்து வருந்துகிறது என் நெஞ்சம். அவ்வாறு அவன் கொடுமை கூறி வருந்தாது, மறைத்து வாழலாம் எனினும், அதனால் பெரும் பயனில்லை. அதை யான் மறைப்பினும், மன்றில் பொய்ச் சான்று பகர்ந்த கொடியோன் ஒருவன், நிழல் கருதி நின்ற மரமும், அக் கொடியோன் கொடுமை யால் கரிந்து, கவின் இழத்தல் போல், 'பிரியேன்' எனத் தான் கூறிய சூளுரை பொய்யாகப் பிரிந்து சென்ற அவன் கொடுமை, அவனைச் சேர்ந்து வாழ நினைக்கும் என் உள்ளத்தைச் சுட்டெரித்து, என் உடல் அழகைக் கெடுத்து விடுகிறதே, அதற்கு யான் என் செய்வேன்? தோழி! மரங்கள் தம் கிளைகள் பொறை தாங்காது தளர்ந்து வளையுமாறு மலர்களால் நிறைந்து நிற்கும் காட்சியைக் காணுகிறேன். அம் மலர்களில் உள்ள தேனைப் பருக,

அம்மலர்களைச் சூழ்ந்து மொய்க்கும் வண்டுகள் எழுப்பும் 'இம்' எனும் ஒலியைக் கேட்கிறேன். இளவேனிற் காலம் இது என உணர்ந்து உறுதுயர் அடைகிறது என் உள்ளம். யான் அதை மறைப்பினும், இன்ன காலத்தில், இன்னவாறு முயன்றால், இதை முடிக்கலாம் எனும் முறைமை அறியாத மன்னவனால், அவன் நாட்டு மக்கள், கொடுமை பல பெற்றுக் கேடடைதல் போல், பிரியாதிருந்து பேரின்பம் நுகர வேண்டிய பருவம் இது, பிரிந்து போய்ப் பொருள் ஈட்ட வேண்டிய பருவம் இது, எனும் செய்ம்முறை அறியா அவன் செயலால், என் கண்கள் கலங்குகின்றனவே, அதற்கு யான் என் செய்வேன்? தோழி! மரமும், செடியும், மலர்க்கோடியும் அரும்புகள் புரி நெகிழ, மலர்ந்து மணக்கும் காட்சியைக் காண்கிறேன். அம் மலர்த் தேனைக் குடிக்க வரும் வண்டுகள் எழுப்பும் யாழ் ஓசை போலும், இனிய ஓசையைக் கேட்கிறேன். இளவேனிற் காலம் இது என உணர்ந்து துயர் அடைகிறது என் உள்ளம். யான் அதை மறைப்பினும், செல்வர்க்கழகு தன் செழுங்கிளை தாங்குதல் எனும் செந்நெறி மறந்து, அவ்வுறவினர் அழுது வாடக் கண்டும் வாளா இருப்பவன் செல்வம், நாளடைவில் நலிந்து போவது போல், உடனிருந்து பேண வேண்டிய அவன், அது செய்யாது, வருந்த விடுத்துப் பிரிந்து சென்ற பிழையால், அவன் பெருஞ் செல்வமாய என் தோள்கள் தாமே மெலிந்தன. அதற்கு யான் என் செய்வேன்?" எனப் பலப்பல கூறி வருந்தினாள்.

அவ்வாறு வருந்தி உரைப்பாளுக்கு, விடையளித்து, அவள் துயர் போக்கும் வழியறியாது விழித்தாள் தோழி. அந்நிலையில், கண்களுக்கு வரும் நோயைக் கை சென்று

*களைவதுபோல், பிரிந்து வாடும் அப்பெண்ணின் துயரும், அவள் துயர் போக்கும் வழி யறியாது வாடும் தோழியின் துயரும் ஒருங்கே கெடுமாறு, விரைந்தோடி வரவல்ல தன் குதிரையும் தானுமாய் அவண் வந்து சேர்ந்தான் அவன். அவன் வரவினை முதற்கண் அறிந்த தோழி, அப் பெண்ணிடம் விரைந்து சென்று, "தோழி! உள்ளத் துயரை ஊரார் உணர வருந்தும் வருத்தம், இனி நினக்கு இல்லை. நம் தலைவன் வரும் நாள் இது என எண்ணிக் கண்ட அந் நாளைத் தவற விடாது அவனும் வந்து சேர்ந்தான். வாடுக நின் வருத்தம்! வளர்க நின் வனப்பு!" எனக் கூறி வாழ்த்தி நின்றாள்.*

"மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவீன்று,
பன்னீரால் கால்புனல் பரந்து ஊட்டி; இறந்தபின்
சின்னீரால் அறல்வார, அகல்யாறு கவின்பெற
முன்ஒன்று தமக்குஆற்றி, முயன்றவர் இறுதிக்கண்
பின்ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடை யாளர்போல்,
பன்மலர் சினைஉகச், சுரும்புஇமிர்ந்து வண்டுஆர்ப்ப,
இன்னமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினான்;

விரிகாஞ்சித் தாதாடி, இருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்
கரிபொய்த்தான் கீழ்இருந்த மரம்போலக் கவின்வாடி
எரிபொத்தி என்நெஞ்சம் சுடுமாயின், எவன்செய்கோ?

பொறைதளர் கொம்பின்மேல் சிதர்இனம் இறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்,
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாரும் கண்ணாயின், எவன்செய்கோ?

தளையவிழ்பூஞ் சினைச்சுரும்பு யாழ்போல இசைப்பவும்,
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்
கிளைஅழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று
வளையானா நெகிழ்போடும் தோளாயின், எவன்செய்கோ!

எனவாங்கு,
நின்நோய் நீஉரைத்து அலமரல்; எல்லா! நாம்,
எண்ணிய நாள்வரை இறவாது; காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந்தாங்கே."

*பருவங் கண்டு ஆற்றாது அழிந்த தலைவிக்குத் தோழி, அவன் வரவுணர்ந்து உவந்து கூறியது இது.*

1. மன்உயிர் — நிலைபெற்ற உயிர்கள்; ஏம்உற — வாழுமாறு; ஞாலம் — உலகம்; புரவீன்று — ஒரு சொல், பாதுகாத்து என்பது பொருள்; 2. பன்னீர் — பலநீர், கால் — வாய்க்கால், இறந்தபின் — நீர்வற்றியபின்; 3. சின்னீர் — சில நீர்; அறல் — அருவி; வார — ஒழுகி ஓட; 4. ஆற்றி — செய்து 5. பெயர்த்து ஆற்றும் — மீண்டு செய்யும்; 6. இமிர்ந்து — ஒலித்து; 7. இறுத்தந்த — வந்துதங்கிய; 8. தாதுஆடி — மகரந்தத் தூள்களிற் படிந்து; இருங்குயில் — கரிய குயில்; 10. கரி பொய்த்தான் — பொய்ச்சான்று கூறியவன்; 11. எரிபொத்தி — காமத்தீமூண்டு; 12. பொறைதளர் — மலர்ப்பாரம் தாங்காது தளரும்; சிதரினம் — வண்டுக்கூட்டம்; இறைகொள — தங்க; 13. நிறை தளராதவர் — நிறையெனும் குணத்தில் குன்றாதவர்; 15. பனிவாரும் — நீர் ஒழுகும்; 16. தளை — அரும்பின் முறுக்கு; பூஞ்சினை — பூங்கொம்பு; சுரும்பு — வண்டு; 17. கொளை — கொள்கை; ஒழுக்கம்; 19. ஆனா — அமையாது; நெகிழ்பு — கழன்று; 21. அலமரல் — வருந்தற்க; எதிர்மறை வியங்கோள்; எல்லா — ஏடி! எனும் பொருட்டு; 22. இறவாது — கடவாது; 24. பூசல் — துன்பம்.

34

# வாய்மை வழுவாது வந்து சேர்ந்தார்

பாண்டி நாடு, அப்பாண்டியர் வழிவந்த ஓரரசர் ஆட்சியின் கீழ் வாழ்ந்த காலம் அது. அவர் வழிவந்து, பறவைகள் போல் பறந்து பாய்ந்தோட வல்ல குதிரைகள் பூண்ட தேர்ப்படை முதலாம் நால்வகைப் படைத் துணையால் பேரரசு அமைத்து, பொதிய மலை யளிக்கும் பெரு வளத்தால், நாட்டு மக்களுக்கு நல்வாழ்வளித்து, வாய்மையில் வழுவாத் தன் ஆட்சி நலத்தால், நாட்டு மக்களை நன்னெறிக்கண் நிறுத்தி நாடாண்டிருந்தான் ஒரு வழுதி. அத்தகைய நல்லோன் நாடாண்டிருந்த காலத்தில், அரசனைப் போன்றே, அன்பும், அறனறியுள்ளமும் வாய்ந்த இளங் காதலர் இருவர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் அண்மையில் மணம் முடித்துக் கொண்டவராத லாலும், ஒருயிரும் ஈருடலுமாய் இணைந்து வாழும் ஒன்றிய அன்புடையராதலாலும், நாட்டின் நல்வாழ்வு, நாட்டு மக்களின் தளரா உழைப்பால் உண்டாம்

என்பதைச் சில காலம் மறந்து, காதல் வாழ்வில் கனிந்து மகிழ்ந்திருந்தனர்.

பிரிவறியாப் பெருவாழ்வு, அவர்க்கு நெடிது நாள் வாய்த்திலது. அந்நாட்டு அரசனின் கடமை தவறா ஒழுக்கம் அவர்கள் கடமையை அவர்க்கு உணர்த்தி விட்டது. கடமை யுணர்ச்சி வரப்பெற்ற காதலன், அக்கடமையைக் கைக்கொள்வான் வேண்டி, வெளிநாடு செல்லத் துணிந்தான். அவன் முடிவு அவன் காதலிக்குப் பெருங் கலக்கத்தைத் தந்தது. அவன் மேற்கொண்டு செல்லும் பணியின் பெருமை, அதை முடித்து மீள ஆகும் காலம், கடந்து செல்ல வேண்டிய காட்டின் கொடுமை, அவனைப் பிரிந்தறியாத தன் பேரன்பு ஆகிய இவற்றை யெல்லாம் எண்ணி எண்ணித் துயர் உற்றது அவள் உள்ளம். நிறுத்தினும் நில்லாது நீரைச் சொரிந்தன அவள் கண்கள். ஆயினும், வெளிநாடு சென்று வினை முடித்து வருதல் கணவன் கடமையாம் என்பதை யுணர்ந்த அவள் உள்ளம், அவன் பிரிவிற்கு ஒருவாறு ஒருப்பட்டது. அந்நிலையில் அவனும் போகப் புறப்பட்டான். விடைபெற்றுச் செல்ல வருவான் முன், வருந்தி நிற்றல் நேர்மையாகாது என நினைந்து, மனத்துயரை ஒருவாறு மறைத்துக் கொண்டு, "வினை மேற்கொண்டு செல்வோய்! அவ் வினைக்கண் வெற்றி பெற்று, விரைவில் மீள்க!" என வாழ்த்தி வழியனுப்பினாள். விழிநீர் துடைத்து நின்று வழியனுப்பினும், அவள் அகத்துயரை முகக் குறிப்பால் அறிந்து கொண்ட அவன், "என் ஆருயிரே! நின்னைப் பிரிந்து நெடிது நாள் வாழ்தல் என்னாலும் இயலாது. ஆகவே, விரைந்திவண் வந்து சேர்வன். வேனிற் பருவ வருகைக்கு முன்னரே, நின் மனை வந்து நிற்கும் என் தேர்.

வருந்தாது வழியனுப்புவாயாக!" எனக் கூறித் தேற்றிப் பிரிந்து சென்றான்.

நாட்கள் பல ஆயின. கடமையை எண்ணிக் காதலை அடக்கி வாழ்ந்திருந்தாள் அவள். ஒருநாள், அவள் தோட்டத்து மரம் ஒன்றில் அமர்ந்து கூவிய குயிலின் குரல் கேட்டாள். அக்குரல் வேனிற்கால வரவினை அவளுக்கு நினைப்பூட்டி விட்டது. அவன் பிரிந்த நாள் முதலா, மனையகத்தே அடங்கியிருந்த அவள், புறம் போந்து நோக்கினாள். ஊரின் நடுவே நிற்கும் உண்ணு நீர்க் கேணியைச் சூழ வளர்ந்து நிற்கும் மரங்களெல்லாம், புத்தம் புதிய தளிர்களாலும் மலர்களாலும் நிறைந்து தோன்றும் கவின் மிகு காட்சியைக் கண்டாள். அக்காட்சி, சிறிது பொழுதும் சோம்பியிராது, எப்போதும் ஊக்கம் கொண்டு உழைக்கும் உரவோனாய தன் கணவன் உழைப்பின் பயனாய் மனையகத்தே மண்டிக் கிடக்கும் மாநிதிக் குவியலை நினைப்பூட்ட நினைந்து மகிழ்ந்தாள். செல்வம் கொழிக்கும் தன் வீடு நோக்கி வரும் விருந்தினர், வேண்டிய பொருள்களை வேண்டியவாறே பெற்று விரும்பியுண்ணுவார்போல், தேனீக் கூட்டம் அம்மரத்து மலர்களில் படிந்து தேன் உண்டு ஆர்க்கும் ஆரவாரம் கேட்டு அகம் மகிழ்ந்தாள். இவ்வரிய காட்சிகளை உடன் இருந்து காண அவன் இல்லையே என எண்ணினாள்; மகிழ்ச்சி மறைந்தது; மனத்துயர் மிகுந்தது; மாயோள் மேனிபோல், கறுமை சிறிதே கலந்த பசுமை நிறம் பெறுமாறு சிறிதே முற்றிய அம் மாந்தளிர்களும், அம்மாயோள் மேனியில் தோன்றி அழகுதரும் தேமல்கள் போல், அத் தளிர்கள் மீது உதிர்ந்து படியும் மலர்களின் பொன்னிற மகரந்தப் பொடிகளும், உதிர்ந்து கிடக்கும்

மலர்களைப் பரந்து கிடக்கும் சிறு மணல்மீது, ஓவியம் வல்லான் தீட்டும் உயிர் ஓவியங்கள் போலும் உருவு பல பெறுமாறு ஒதுக்கி அழகு செய்து ஓடும், சிறு சிறு அருவிகளைக் கொண்ட ஆறும், அது இளவேனிற் காலத்தின் தொடக்க காலம் என்பதை உணர்த்த, உணர்ந்து வருந்தினாள். குயில் குரல், 'இளவேனிற்பருவம் இளங் காதலர்க்கு இன்பம் தருவது; அக்காலத்தில், மனையகத்தே இருந்து மகிழ்ந்து வாழாது பிரிந்து கிடந்து வருந்தி வாழ்வார், வாழும் வகையறியாதாராவர்!' எனத் தன்னை நோக்கி எள்ளி நகைப்பதாக எண்ணி இடருற்றாள். கைவிட்டுச் சென்ற கணவன், தன்னைக் கனவினும் நினைந்திலன் போலும் என எண்ணிக் கலங்கிற்று அவள் உள்ளம்.

அந்நிலையில் ஆங்கு வந்த தோழி, கலங்கிய அவள் நிலையைக் கண்டு, "அன்புடையாய்! வாய்மை வழுவாத வழுதி நாட்டில் வாழ்பவர் நின் கணவர். ஆதலின், அவர், தாம் கூறிய சொல் பொய்யாகாவாறு குறித்துச் சென்ற நாளன்று நில்லாது வந்து சேர்வர். வருந்தாதே!" என்று கூறித் தேற்றினாள். அது கேட்ட அப்பெண், "தோழி! வண்ணத்தாலும் வடிவாலும் பல்வேறு வகைப்பட்ட வண்டுகள், கூடி ஆரவாரித்து, இயற்கைக் காட்சிகளால் இன்பம் மிக்க இவ்வையையாற்றின் இருமருங்கும், அவ்யாற்றின் ஊற்று நீர் ஊட்டி வளர்க்க வளர்ந்த முல்லை மலர்களிற் படிந்து, தேன் உண்ணும் காலமன்றோ நம் கணவர் வருவதாக வாக்களித்துச் சென்ற காலம்? அதோ பார், அவ்வாற்றின் கரைக்கண் எழும் அவ் வண்டோசையினை! அவர் கூறிய காலம் வந்து விட்டது. அவர் வந்திலர். இனி, வருந்தாது எவ்வாறு வாழ்வேன்?

தோழி! கணவன்மார் கைவிட்டுப் போகாராக, அவரோடு கூடி வாழும் பெரும் பேறு பெற்ற மகளிர், அக் கணவரோடு சென்று, வையை யாற்றின் நடுவே அமைந்த வளம் பெருகும் ஆற்றிடைக் குறைக்கண் நிகழும் காமவேள் விழாக்கண்டு களி மகிழும் காலமல்லவோ, நம் கணவர் 'வருவேன்' எனக் கூறிச் சென்ற காலம்? விழாவிற்குச் செல்வார்போல், விளங்கும் அணி பல அணிந்து நிற்கும் தோழி! அதோ காண், இளங் காதலர் இணை இணையாகச் செல்லும் காட்சியை. நம் கணவர் கூறிச் சென்ற காலம் இதுவே. அக் காலம் வந்து விட்டது. அவர் வந்திலர். வருந்துகிறது என் உள்ளம். யான் என் செய்வேன்? தோழி! 'வருவேன்' என்று அவர் கூறிச்சென்ற காலம், உலகத்தார் அனைவரும் ஒருங்கே புகழ்ந்து பாராட்ட வல்ல பெருமை மிக்க நம் கூடல் நகர் வாழ் மக்கள், வேனில் விழவின் ஒரு பகுதியாய், நம் மாநகர்ப் புலவர்கள் கூட்டும் பேரவைக் கண் இருந்து, அப்புலவர் பெருமக்கள் ஆக்கிய புதுப்புதுப் பாடல்களைக் கேட்டும், அவற்றின் பொருள் நயம் அறிந்தும் மகிழும் காலமன்றோ? தோழி! அதோ பார், அப் புலவர் பேரவையில் பாட்டோசையும், பாராட் டோசையும் மாறி மாறி எழுகின்றன. அவர் கூறிச் சென்ற காலம் வந்து விட்டது. அவர் வந்திலர். யான் என் செய்வேன்? எங்ஙனம் வாழ்வேன்?" எனப் பலப்பல கூறிப் புலம்பினாள்.

'குயிலின் குரலும், வண்டுகளின் ஆரவாரமும், புலவர் பேரவையும், ஆற்றிடைக் குறையின் அழகிய காட்சியும் அவர் கூறிச் சென்ற காலத்தை நினைப்பூட்டி வருத்த, யான் ஆற்றியிருத்தல் எவ்வாறு இயலும்?' எனக் கூறி வருந்துவாளைத் தேற்றும் வழி காணாது கலங்கி

*நின்றாள் தோழி. அந்நிலையில், தெருவில் ஒலியொன்று கேட்க, ஓடிச் சென்று கண்ட தோழி, அது அவன் ஏறிவந்த தேரின் ஒலியாதல் அறிந்து, அகம் மிக மகிழ்ந்து, உள்ளே விரைந்து வந்து, "தோழி! எண்ணி எண்ணி வருந்தும் நின் இன்னலெல்லாம் ஒழிய, நின் கணவர் தாம் கூறிச் சென்றவாறே, தம் வார்த்தை பிழையாது வந்து சேர்ந்தனர். வருந்தற்க! வாழ்க நின் அன்பு!" என வாழ்த்தினாள். அதுவே இச் செய்யுள்.*

"மடிஇலான் செல்வம்போல் மரன்நந்த, அச்செல்வம்
படிஉண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுஆர்ப்ப,
மாயவள் மேனிபோல் தளிர்ஈன; அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஉக,
மலர்தாய பொழில்நண்ணி, மணிநீர்க் கயம்நிற்ப,
அலர்தாய துறைநண்ணி, அயிர்வரித்து அறல்வார,
நனிஎள்ளும் குயில்நோக்கி; இனைபுகு நெஞ்சத்தால்
துறந்துஉள்ளார் அவர்எனத் துனிகொள்ளல், எல்லா! நீ;

வண்ணவண்டு இமிர்ந்துஆனா வையைவார் உயர்எக்கர்த்
தண்அருவி நறுமுல்லைத் தாதுஉண்ணும் பொழுதன்றோ,
கண்நிலா நீர்மல்கக், கவவிநாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால்! நமக்குஅவர் வருதும்என்று உரைத்ததை?

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ,
'வலனாகவினை' என்று வணங்கி நாம் விடுத்தக்கால்,
ஒளிஇழாய்! நமக்கு அவர்வருதும் என்று உரைத்ததை?

நிலன்நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுஉண்ணும் பொழுதன்றோ,

பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்,
சுடர்இழாய்! நமக்குஅவர் வருதும்என்று உரைத்ததை?

எனவாங்கு;
உள்ளுதொ றுடையும்நின் உயவுநோய்க்கு உயிர்ப்பாகி
எள்ளறு காதலர் இயைதந்தார், புள்இயல்
காமர் கடுந்திண்தேர்ப் பொருப்பன்,
வாய்மை அன்ன வைகலொடு புணர்ந்தே.”

*‘வருவர்; வருந்தற்க’ எனத் தோழி வற்புறுக்க, ‘அவர் கூறிச் சென்ற காலம் இது அல்லவோ’ எனக் கூறிக் காலத்தைக் காட்டித் தலைவி வருந்த, அந்நிலையில் தலைவனும் வந்து சேர்ந்தானாக. அஃதறிந்த தோழி, ‘வருந்தற்க, அவரும் வந்து விட்டார்!’ எனக் கூறியது இது.*

1. மடி – சோம்பல்; இலான் – இல்லாதவன்; நந்த – வளம்பெற; 2. படி – இருந்து முறையாக உணவு கொள்ளுதல்; சினை – கொம்புகளில்; 3. ஈன – துளிர்க்க; 5. நண்ணி – அடுத்து; 6. அயிர் – நுண்மணல்; வரித்து – அழகு செய்து; அறல்வார – அருவி ஓட; 7. நனி – மிகவும்; எள்ளும் – நகைக்கும்; இனைபு – வருந்தி; உகும் – கெட்டழியும்; 8. உள்ளார் – நினையார்; துனி – வெறுப்பு; 9. இமிர்ந்து – ஆரவாரித்து; ஆனா – இன்பம் குறையாத 11. கண்நிலா நீர் – கண்ணில் நிறுத்தவும் நில்லாது விழும் நீர்! கவவி – தழுவி; 13. துருத்தி – ஆற்றிடைக்குறை; 14. வில்லவன் – கரும்பு வில்லோனாய காமவேள்; 15. வினைவலனாக – வினைக்கண் வெற்றி பெறுக; 17. நிலன் – நிலத்தில் உள்ளார்; நாவில் திரி தரும் – நாவால் புகழப்படும்; 18. புலன் நாவில் – புலவர்களுடைய நாவில்; 19. நாடு – எண்ணி எண்ணி வருந்தும்; 21. உயவுநோய் – வருத்தம் மிக்க காமநோய்; 23. இயை தந்தார் – வந்து சேர்ந்து கூடினார்; புள் – பறவை; புள் இயல் – பறவை போல் பறந்து பாயும் இயல்பு; 24. பொருப்பன் – பொதிய மலைக்குரிய பாண்டியன்.

35

# வந்தது வேனில்! வந்திலர் கணவர்!

நம் வீடு நோக்கி வருவாரை, எதிர்நின்று வரவேற்று, அவர் வேண்டும் பொருள்களை வாரி வழங்கி வாழ்வதே இல்வாழ்க்கை மேற்கொண்டாரின் இன்றியமையாக் கடமையாம் என்பதையும், அவர் அக்கடமையை நன்கு ஆற்ற வேண்டின், அவர் பெரும் பொருள் உடையராதல் வேண்டும் என்பதையும், அப்பொருளை ஈட்டி வருதல் அவருள் ஆண்மகனாய கணவன் கடமையாம் என்பதை யும், அவன் சென்று பொருளீட்டி வரும்வரை, தனிமை தாங்கி, மனையின்கண் ஆற்றி இருத்தல் மனைவியின் கடமையாம் என்பதையும் உணர்ந்த உணர்வுடையராய ஓர் ஆண்மகனும், ஒரு பெண்மகளும், ஒருவரையொருவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். காதல் மிகுதியால், சில நாள்காறும், தம் கடமைகளை மறந்து, மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். ஒருநாள் அக்கடமை உணர்ச்சி நினைவிற்கு வரவே, கணவன் செல்வம் சேர்க்க, வெளிநாடு செல்ல விரும்பினான். கடமையறிந்த அவன்

காதலி அதற்குத் தடை செய்திலள். ஆயினும், அவனைப் பிரிந்து, தனித்து வாழ வேண்டுமே என்ற கவலையால், அவள் சிறிதே கலங்கினாள். மனைவியின் மனக் கலக்கத்தை அறிந்த அவன், "காதலி! கலங்கற்க! இளவேனிற் காலத் தொடக்கத்தே இவண் வந்து சேர்வன்; அதுகாறும் கடமையைக் கருதிக் கலக்கம் ஒழிந்து இருப்பாயாக!" எனக் கூறித் தேற்றிச் சென்றான்.

அவளும் அவன் கூறியவாறே, தம் மனையற வாழ்வு மாண்புற வேண்டும் எனும் வேட்கை மிகுதியால், அவன் பிரிவை ஒருவாறு மறந்து மனம் தேறி இருந்தாள். சில நாட்கள் சென்றன. இளவேனிற் காலம் கால்கொளத் தொடங்கிற்று. அதை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் சில ஆங்காங்கே தோன்றின. பலதேவனின் வெண்ணிற மேனிபோல் வெண்கடம்பு மலர்ந்தது. அவன் வெண்ணிற மேனியிற் கிடந்து அசையும் பசுந்துளப மாலைபோல், அவ்வெண் கடம்பின் கிளைகளில், மயில்கள் கூடித் தம் தோகை விரித்து ஆடின. வண்டும், சுரும்பும் ஒரு பாலும், தும்பி ஒரு பாலுமாகத் தேனைத் தேடிப் பறந்து திரியலாயின. தேனீக்கள் தாமரை மலர்களைத் தேடிச் சென்று மொய்த்தன. எங்கு நோக்கினும், மலர்கள் மலர்ந்து மணம் வீசின. மரக் கிளைகளில் அமர்ந்து குயில்கள் கூவின. இக் காட்சிகளை அவள் கண்டாள். இளவேனிற் பருவத்தின் தொடக்கமே அது என்பதையும், வேனில் விழா நிகழும் காலம் அண்மையிலேயே உளது என்பதையும் அவை அறிவுறுத்தின.

இளவேனிற் காலத்து இயற்கையின் மலர்ச்சி, அவளுக்கு வேனில் விழாக் காட்சிகளை நினைப்பூட்டிற்று;

அதனால் வெண்கடம்பு, வெண்மணல் பரந்த அரங் காகவும், அவ் வெண்கடம்பின் மீது அமர்ந்து ஆடும் மயில்கள், அரங்கின் இடைநின்று ஆடும் ஆடுமகளாகவும், வண்டும், சுரும்பும் செய்யும் ஆரவாரம், யாழ் ஓசை யாகவும், தும்பியின் ரீங்காரம், வாரம் பாடும் விறலியரின் கானப் பாடலாகவும், தேனீக்களின் பேரொலி, ஆடல் பாடல்களை அணி செய்யும் பின்னணி இசைகளாகவும், மரங்களின் கண்ணைப் பறிக்கும் பன்னிற மலர்கள், 'ஆடல் பாடல் காண வாரீர்!' என வழிப்போவாரை வருந்தி அழைக்கும் வரவேற்பாளராகவும் அவள் கண்ணிற்குக் காட்சியளித்தன. 'இயற்கையின் எழிலோவிய மாய இவ்வாடலை இன்று கண்டேன். ஆனால் அவர் உடன் இல்லை; அவர் இல்லாமையால் அக்காட்சி மகிழ்ச்சி தந்திலது. மனத்துயரையே தந்தது. அவருடன் இருந்து காணும் அந்நல் வாய்ப்பை இன்று இழந்தது போன்றே, வரவிருக்கும் வேனில் விழா இன்பத்தையும் இழக்க நேரிடுமோ!' என எண்ணினாள். அந்நிலையே அவள் உறுதி தளர்ந்தது. கவலை மிகுந்தது. கவலை மிகவே, அவள் உடலும் தளர்ந்து தன் நலன் இழக்கத் தொடங் கிற்று. நெற்றி, சிறிது சிறிதாகப் பசந்து பசந்து, முழுதும் பசந்தே விட்டது; தோள்கள் சிறிது சிறிதாகத் தளர்ந்து தளர்ந்து முற்றும் தளர்ந்தே விட்டன. தண்ணீர் தெளிந்தும், குளிர்ந்தும், சிறு சிறு அருவிகளாகப் பிரிந்தும் ஓடும் ஆற்றைக் கண்டவுடனே, அவள் கண்களினின்றும், கண்ணீர், வெந்நீரின் வெள்ளமென விழலாயிற்று; அவள் உள்ளக் கலக்கம் உடலைத் தாக்கவே, அவ்வுடல், வெப்பம் மிகுந்து, வியர்க்கத் தொடங்கிற்று.

இவ்வாறு, உள்ளக் கவலையால் உடல் சோர்ந் திருக்குங்கால், ஆங்கு வந்த அவள் தோழியும், அவள் நிலை கண்டு பெரிதும் வருந்தினாள். தோழியைக் கண்ட வுடனே, அவள் துயர் முன்னினும் அதிகமாயிற்று. அதுகாறும் தனிமையிற் கிடந்தமையால் வாய் திறவாதே வருந்தியிருந்தவள், துணையாகத் தோழியைக் கண்ட வுடனே, அவளை ஆரத் தழுவிக் கொண்டு, "தோழி! நம் கணவர், நம்பால் அன்பு இல்லாமையால் சென்று விட்டாரோ? அன்பிருக்கவும், தம் நிலை அறிவித்து, ஒரு தூது விட வேண்டும் என்பதை, வினை மிகுதியால் மறந்து விட்டாரோ? அவர் நம்மிடத்தில் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்பதைத் தோழி! அவர் வருங்காறும் வாழ்ந்திருந்து காண்பது இயலுமோ? ஒருகால், பிரிந்து சென்றவர், நம்மை மறந்து மீண்டு வாராது, ஆங்கேயே இருந்தும் விடுவரோ? எதையும் என்னால் துணிதற்கு முடியவில்லையே! என்ன செய்வேன், தோழி?" எனப் பலப்பல கூறி வாய்விட்டு அரற்றினாள்.

பெண்ணின் துயர்நிலை கண்டு வருந்திய அத் தோழி, "அன்புடையாய், யானும் ஒரு பெண்-உன்னோடு வாழ்பவள். உனக்குத் தெரிந்ததைவிட, அதிகமாக எனக்கு யாது தெரியும்? நின் நிலை கண்டு யானும் வருந்து கின்றேன். சிலர், சென்றவிடத்திலேயே சேணெடுங்காலம் நின்று விடுதலும் உண்டு, எனச் சென்று வந்தவர் சிலர் கூறக் கேட்டுள்ளேன். அதை நினைக்க, என் உள்ளம், வேள்விப் புகையேபோல், வெந்து பெருமூச்செறிகிறது. என் செய்வேன்?" எனக் கூறி, அவளும் வருந்தினாள். கணவனைப் பிரிந்து தனித்திருப்பாள் துயர் நிலை

*காணின், தமிழ் நாட்டு மகளிர் தாமும் துயர் உறுவர் என்பதற்கு, இத் தோழி ஒரு நல்ல எடுத்துக்காட்டு.*

"கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழும் மயில்ஆலும் சீர,
வடிநரம்பு இசைப்பபோல், வண்டொடு சுரும்புஆர்ப்பத்,
தொடிமகள் முரற்சிபோல் தும்பிவந்து இமிர்தர,
இயன்எழீஇய வைபோல எவ்வாயும் 'இம்' எனக்,
கயன்அணி பொதும்பருள் கடிமலர்த் தேன்ஊத,
மலர்ஆய்ந்து வயின்வயின் விளிப்பபோன், மரன்ஊழ்ப்ப,
இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின்பெறக்
குழவிவேனில் விழவு எதிர்கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று;
வாரார், தோழி! நம் காதலோரே;

பாஅய்ப் பாஅய்ப், பசந்தன்று நுதல்;
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்;
நனிஅறல் வாரும் பொழுதுஎன, வெய்ய
பனிஅறல் வாரும் என்கண்;
மலையிடைப் போயினர் வரல்நசைஇ, நோயொடு
முலையிடைக் கனலும்என் நெஞ்சு;

'காதலிற் பிரிந்தார்கொல்லோ? வறிதோர்
தூதொடு மறந்தார்கொல்லோ? நோதகக்
காதலர் காதலும் காண்பாம் கொல்லோ?


துறந்தவர் ஆண்டாண்டு உறைகுவர் கொல்லோ?'
யாவது நீளிடைப் படுதலும் ஒல்லும்; யாழநின்
வாள்இடைப் படுத்த வயங்கீர் ஓதி!

நாள்அணி சிதைத்தலும் உண்டு எனநயவந்து
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்கும் என் நெஞ்சு."

*காலம் கண்டு ஆற்றாத தலைவியது நிலைமை கண்டு ஆற்றாத தோழி, தன் ஆற்றாமையை அவட்குக் கூறியது.*

1. கொடுமிடல் நாஞ்சில் – கொடிய, வலிய கலப்பை; நாஞ்சிலான் – பலதேவன்; தார் – மாலை; 2. நெடுமிசை – உயர்ந்த இடத்தே; சீர – சிறப்பினை உடைய; 3. வடிநரம்பு – முறுக்கற வடித்த நரம்பு; 4. முரற்சி – கானப்பாட்டு; இமிர்தர – ஒலிக்க; 5. இயன் – இசைக்கருவி; இம் என – "இம்" எனும் ஒலி எழ; 6. கயன் – குளம்; பொதும்பர் – பூஞ்சோலை; 7. ஊழ்ப்ப – மலர; 9. குழவிவேனில் – இளவேனில்; 12. பாஅய் – பரவி, 13. சாஅய் – தளர்ந்து; 14. அறல் – வடிகால் நீர்; வாரும் – ஒழுகும்; 15. பனி – கண்ணீர்; அறல் வாரும் – ஒழுகும் ஒருசொல்; 17. கனலும் – வேகும், காந்தா நிற்கும்; 24 நாள் – வருவேன் என அவர் குறித்துச் சென்றநாள்; 25. கேள்வி – நூலைக் கற்றுப்பெற்ற கேள்விச் செல்வம்; கடவும் – செய்யும்.

பாலைச் செல்வி முற்றும்


பாலைச்
செல்வி
புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.,